# T. N. L. A. Debates

## OFFICIAL REPORT

VOL: XLII NO: 3 and 4

FEB. 14 and 15 1983

D
V211,31 'N83
N83.42.344
135985

## உள்ளடக்கம்


பக்கங்கள்.

விளாக்கள்—விடைகள் : 245—287
உடுக்குறியிட்ட வினாக்கள்

தகவல் கோரல் :
(அ) மதுரையிலுள்ள நீரேற்று நிலையங்களுக்கு மின்சாரம் வழங்கப்பெறாதது. 288—289
(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள். 289—291

. ஒத்திவைப்புத் தீர்மானம் :
மயிலாடுதுறை அருகே அறுவடையின்போது ஏற்பட்ட வன்முறைச் செயல். 291—298

4. கவன ஈர்ப்பு :
கோடுவள்ளி கிராமத்தில் நவீன இறைச்சிக் கூடம் நிறுவ ஆயத்தம். 299—301

5. அரசினர் சட்ட முன்வடிவு :
கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1980—தொடர்ச்சி. 301—355

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்: 35

# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1983 பிப்ரவரி 14,

மாசி 2, துந்துபி—திருவள்ளுர் ஆண்டு 2014

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;**

*'' அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து*
*இன்புற்றார் எய்தும் சிறப்பு.''*

*இவ்வுலகில் இன்பமுடன் வாழுகின்றவர் அடையக்கூடிய சிறப்பு, அன்புடன் பழகுவதனால் அமைவதாகும் எனச் சான்றோர் கூறுவர்.*

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கோயில் நிலங்களை தனி நபர்கள் விவசாயத்திற்கு வைத்துக் கொள்வதற்கான உச்சவரம்பு.

*வினா எண் 264—திரு. செ. செம்மலை: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயில் நிலங்களை தனி நபர்கள் விவசாயத்திற்கு வைத்துக்கொள்வதற்கு உள்ள நில உச்சவரம்பு எவ்வளவு ?*

*(ஆ) அதிகமாக வைத்திருக்கும் குத்தகையாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?*

*(இ) திரும்பப் பெறப்பட்ட நிலங்கள் எவ்வளவு ?*

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** *(அ—இ) விவரமான அறிக்கை *சட்டப்பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

திரு. செ. செம்மலை ; *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற கோயில் நிலங்கள் கடவுளின் பெயரில் பட்டாக்களாக இருந்த நிலைமை மாறி இப்பொழுது தனி நபர்களே அந்தப் பட்டாக்களை மாற்றிக் கொண்டிருப்பதாகத்*

---

*357—ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது,

தெரிகிறது. அப்படி மாற்றப்பட்டதாகப் புகார்கள் ஏதேனும் அரசுக்கு வந்ததா? தனி நபர்களுக்கு மாற்றப்பட்ட அந்தப் பட்டாக்களை மீண்டும் அந்தக் கடவுளர் பெயருக்குக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை ஏதேனும் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோயில் நிலங்களை தனியார் பட்டா போட்டுக் கொண்டார்களேயானால் அதைப்பற்றிக் கோயிலை மேற்பார்வை இடுகின்றவர்கள் தகுதியான நடவடிக்கையை எடுத்து அதை கோயில் வசப்படுத்திக் கொள்வதற்கான முயற்சியை எடுக்கவேண்டும். அப்படிப்பட்டவை என்னுடைய கவனத்திற்கு வரவில்லை.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற பொதுப்பொறுப்புக் கழகங்கள் விதியின்படி 5 தர ஏக்கர்கள்தான் நிலம் வைத்திருக்க வேண்டுமென்ற உச்சவரம்பு இருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதற்கு மேலேயும் பினாமி பெயரால் நிலங்கள் வைத்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமய நிறுவனங்களும், பொதுப் பொறுப்புக் கழகங்களும் 20 தர ஏக்கர் நிலம் வைத்துக் கொள்ளலாம். ஆனால், சமய நிறுவனங்களிலும், பொதுப் பொறுப்புக் கழகங்களிலுமிருந்தும் குத்தகைக்கு நிலம் விடுபவர்கள் 5 தர ஏக்கர்கள்தான் வைத்துக் கொள்ளலாம். அப்படி 5 தர ஏக்கர் நிலங்களுக்கு அதிகமாக வைத்திருப்பவர்கள் அல்லது நிலத்தைத் தானே குத்தகை இல்லாமல் பினாமியாக குத்தகைக்கு விடுபவர்கள் இவைகளையெல்லாம் அரசு கண்டுபிடித்து அவர்கள் மீது தக்க நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகின்றபொழுது 5 தர ஏக்கர்களுக்கு மேல் நிலம் வைத்திருந்தால் எடுக்கப்படும் என்று கூறுகிறார்கள். மதுரை மாவட்டத்தில் ஒருவருக்குச் சொந்தமாக 20 ஏக்கர்கள் இருந்தும், கோயில் நிலங்கள் 34 ஏக்கர்களைக் குத்தகை என்ற பெயரால் எடுத்து, அது சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டு, அவருக்கே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின்கீழ், 5 தர ஏக்கர்களுக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தை எடுத்து உழவடை செய்கின்ற ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, 5 தர ஏக்கர்களை குத்தகைதாரர்கள் வைத்துக் கொள்ளலாம். அதற்கும் அதிகமாக வைத்துக் கொண்டிருந்தால், அது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி நடவடிக்கை எடுக்கப் பட்டவைகள் இன்றைக்கு 1, 41, 420 ஏக்கர்கள் வைத்திருப்ப தாகக் கண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, கோயில் நிலங்களை மடாதிபதிகளும், மற்ற குறிப்பிட்ட பெரும் பணக்காரர்களும் கிராமங்களில் ஆக்கிரமித்துக்கொண்டு நெய்யும், சோறும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். லேண்ட் சீலிங்கில் எடுக்கப்பட்ட நிலங்களை 15, 20 ஆண்டுத் தவணை களில் கொடுப்பது மாதிரி, கோயில் நிலங்களை அரசுடைமை யாக்கி, வெறுங்கையோடு இருக்கின்ற ஏழை விவசாயிகளுக்கு அரசே இன்றைக்கு உள்ள மார்க்கெட் நிலவரப்படி மலிவு விலையில் பிரித்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குத்தகைதாரர்களுடைய விஷயங் களில் அரசு கவனிப்பாக அவர்களுக்கெல்லாம் எப்படி உதவி செய்வது என்பதை எண்ணிக்கொண்டிருக்கிறது. அந்தக் குத்தகைதாரர்களுக்கு நிலம் கொடுக்கும்பொழுது, இதை உச்ச வரம்புச் சட்டத்தில் நிலம் எடுக்கும்பொழுது நிலம் அதிகமாக உள்ளவர்களிடமிருந்து நிலம் எடுக்கப்படுகிறது.

நிலம் அதிகமாக உள்ளவர்களிடம் இருந்து எடுக்கிறபோது உச்சவரம்பு சட்டத்தில் நட்ட ஈடு எவ்வளவு கொடுப்பது என்று கணக்கிட்டு நட்ட ஈட்டைக் கொடுக்கிறோம். அதே முறையில் நில குத்தகைதாரர்களுக்குக் கொடுக்கிறபோது சிலர் 4 ஏக்கர், 5 ஏக்கர். 3 ஏக்கர் வைத்திருப்பவர்கள்கூட குத்தகைக்கு விடுகிறார்கள். அவர்களுக்கு நிலஉச்சவரம்பு சட்டத்தை மீது நட்ட ஈடு கொடுத்தால் பாதிக்கப்படுவார்கள். நில உச்சவரம்புச் சட்டத்தின்படி 10 தவணைகளில் கொடுக்கிறோம். 4 ஏக்கர் 5 ஏக்கர் நிலம் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு 10 தவணை களில் கொடுத்தால் அவர்கள் எதிர்காலம் பாதிக்கப்படும். நிலம் எடுக்கும்போதே மார்க்கட் விலைக்கு குறைவாக நிலம் வைத் திருப்பவர்கட்கு ஒரே மொத்தமாக கொடுத்தால்தான் எதிர்காலம் பாதிக்கப்படாமல் இருக்கும். ஒரே மொத்தமாக கொடுத்தால் பல்லாயிரக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் கொடுக்க அரசிடம் பணம் இல்லை. குத்தகைதாரர்களும் ஒரே மொத்தமாக வாங்கி கொள்வதற்கும் வசதி இல்லை. எனவே என்ன செய்வது என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

[1983 பிப்ரவரி 14

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் நிலங்களைப் பயிரிடுகின்ற விவசாயிகள், அரசு போடக் கூடிய பல்வேறு சட்டங்களின் பயன் காரணமாக அந்தக் கோவிலுக்குச் சேரவேண்டிய குத்தகையைச் சரியாகக் கொடுக்காத காரணத்தினாலே கோவில்கள் சரியாக நிர்வகிக்கப்பட வில்லை என்ற கருத்து நிலவுகிறது. அந்தக் குத்தகையைச் சரியாக கோவிலுக்கு செலுத்தவேண்டும். அல்லது ஒரு விலைக்காவது அந்த நிலத்தை வாங்கிக்கொள்ளவேண்டும். அதல் ஏதாவது அரசு பரிசீலித்து இது சம்பந்தமாக முடிவு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி கேட்ட கேள்விக்கு நான் சொன்ன பதிலிலேயே பதில் இருக்கிறது. அரசைப் பொறுத்தவரையில் சமய நிலங்களானாலும் சரி, பொதுப் பொறுப்புக்கழக நிலங்களானாலும் சரி, தனிப்பட்ட நிலங்களானாலும் சரி. அரசின் பார்வையில் அவையெல்லாம் ஒன்றாகத்தான் எடுத்துக்கொள்ளப்படும். குத்தகைதாரர், தனியாரிடத்திலே வாங்கியிருந்தாலும், கோவில் நிலங்களை வாங்கி இருந்தாலும், சமய நிலங்களை குத்தகைக்கு வாங்கியிருந்தாலும் சரி, எல்லா குத்தகைதாரர்களுக்கும் கிடைக்கும் நன்மை ஒரே சீராகத்தான் இருக்கும். சட்டத்தின் முன்னால் கோவில்நிலம், தனியார்நிலம், பொதுநிலம், அல்லது அரசுக்குச் சொந்தமான நிலத்தை குத்தகைக்குக் கொடுத்திருந்தாலும் சரி, எல்லாம் சட்டத்தின் முன்னாலே ஒரே சமமாகத்தான் கணக்கிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிலத்தைக் கொடுத்துப் பணம் வாங்கலாமா என்று கேட்டார்கள். இன்றைக்குக் குத்தகைக்கு வெள்ளாமை விடுகிறபோது, நிலங்களை ஒரே மொத்தமாக வாங்கிக்கொண்டு பணம் கொடுக்கும் வசதி உடையவர்களாக அவர்கள் இல்லை. அதற்கு என்ன செய்வது என்றால் நாமே எங்கோ இருக்கின்ற ஒரு நிறுவனத்திலே பணத்தை வாங்கி அவர்களிடத்திலே கொடுத்து திருப்பி சரி செய்யலாமா என்று யோசித்துக்கொண்டு இருக்கிறோம். அதற்குக் கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த கோவில் நிலங்களை சில தனி நபர்கள் 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று வைத்திருப்பது உண்மைதான். அதை உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கூட எடுக்கமுடியாமல் இருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்காக அந்தந்த வட்டாரமோ அல்லது ஒன்றியமோ, இப்படிப்பட்ட பகுதியாகப் பிரித்து, ஆங்காங்கே இருக்கக்கூடிய அனைத்துக் கட்சியைச் சார்ந்த தலைவர்களைக் கொண்ட குழு அமைத்து, அதன் மூலம் கோவில் நிலங்களை கைப்பற்றக்கூடிய ஏற்பாட்டைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?



1983 பிப்ரவரி 14]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, தனியார் நிலமானாலும் சரி, சமய நிலமானாலும் சரி, பொறுப்பு கழகத்து நிலமானாலும் சரி, குத்தகை விடுவதிலும், குத்தகை வசூலிப்பதிலும், இருப்பதை சரி செய்வதற்காக, இருப்பதைப் பாதுகாப்பதற்காக பினாமி இல்லாமல் பார்த்துக் கொள்வதற்காக, தவறான நடவடிக்கை இல்லாமல் இருப்பதற் காக, ஒரு குழு அமைக்கவேண்டும் என்பது மிகமிக அவசியமும், அவசரமும் என்று அரசு உணர்கிறது. உறுப்பினர்கள் நினைக் கின்ற வேகத்தைவிட மிகவேகமாக குழு அமைக்கப்படும்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தனிநபர் அடிப்படையில் குத்தகையை வைத்துக்கொள்ளலாம் என்று சட்டம் இருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திலும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பினாமியாக வைத்திருக்கிறார்கள். ஆனால் நான் கேட்பது, குடும்ப அடிப் படையில் வரையறுத்து 5 ஏக்கர்தான் என்று சட்டம்கொண்டு வரப்படுமா ? அப்படி கொண்டுவரப்படும்போது, எடுக்கப்படும் நிலங்களை நிலமற்ற தொழிலாளர்களுக்கு அளிக்க துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற சட்டத்தில் ஒரு குடும்பம் என்பது 5 நபர்கள் என்றும், அதற்கு இவ்வளவு நிலம் தான் வைத்துக்கொள்ளலாம் என்றும் வரையறை வைத்திருக் கிறது. இதை மீறுகிறபோதுதான் தவறு நடக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொன்னதுபோல், அதை நிறைவேற்றிவிட்டால் இந்தத் தவறு நடக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கோவில் நிலத்தைப் பொறுத்தவரையில ஒரு கொள்கை வகுக்கவேண்டும். ஏற்கனவே அவர்கள் சிவன் சொத்து குல நாசம் என்று சொல்கிறார்கள். ஆனால் எந்தக் குலமும் நாசம் ஆனதாகத் தெரியவில்லை. ஆகவே அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கோயில் நிலங்களை எல்லோருக்கும் எடுத்துக்கொடுக்கிற மாதிரி கேள்விகள் இருப்பது நல்லதல்ல. மற்றவர்கள் நிலத்தை வேண்டுமானால் எடுத்துக்கொள்ளுங்கள். கோயில் நிலத்தில் கைவைக்காதீர்கள்.

### விருத்தாசலம் வட்டத்தில் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்த வழங்கப்படும் கடன் தொகை.

*வினா எண். 265—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டத்தில் விவசாயிகள் பாசனக்கிணறுகளை ஆழப்படுத்திக்கொள்ள அரசு அனுமந்தித்து பாதி பணம் வழங்கப்பட்டு ஆழப்படுத்தும் பணியினை முடித்து பாக்கி தொகைக்காக அரசை அணுகியபோது வட்ட ஆட்சியாளரால் தொகை வழங்கப்பட மாட்டாது என்று தெரிவிப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் பணியினை முடித்த விவசாயிகளுக்கு பாக்கித் தொகையை வழங்க உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அமற்றும் ஆ) வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின் கீழ் தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்திக்கொள்வதற்கு தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலம் வட்டத்தில் 266 பேர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 3.91 ஆயிரம் முதல் தவணையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது தவணையாக 53 பேர்களுக்கு ரூ. 53,000 கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வறட்சியின்போது தனியார் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக அரசாங்கம் கடன் வழங்கும் என்று கிராமங்களிலே எல்லாம் டாம் டாம் மூலமாக அறிவிக்கப்பட்டது. விருத்தாசலத்தில் மட்டுமல்ல. தமிழகத்திலே பல்வேறு இடங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தக் கடனுக்காக விண்ணப்பம் செய்தார்கள். அவர்களுக்கு முதல் தவணை கொடுக்கப்பட்டது. அவர்கள் கிணற்றை ஆழப்படுத்தி விட்டு மேலும் கிணற்றை ஆழப்படுத்த இரண்டாவது தவணை கேட்கின்றபோது பணம் இல்லை என்று சொல்லி மறுத்துவிட்டார்கள். எனவே அவர்களுக்கு எல்லாம் அரசாங்கம் 2வது தவணை கொடுக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே. 1981—ஆம் ஆண்டு வறட்சி நிலவியபோது விவசாயிகளுக்கு தனியார் கிணறுகளை ஆழப்படுத்தவேண்டுமென்று தக்காவிக் கடன் கொடுக்கப்பட்டது. ஒரு தவணையில் கொடுக்காமல் 2, 3 தவணைகள் கொடுக்கப்பட்டது. தவணை வாங்கியவர்கள் கிணற்றை ஆழப்படுத்தியிருந்தால், 2வது 3வது தவணை கொடுக்கப்பட்டிருக்கும். அப்படி எங்கேயாவது தவறு ஏற்பட்டிருந்தால் அதை என்னிடத்தில் தெரிவித்தால் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.





திரு. வேடசந்தூர் வி. பி.பாலசுப்பிரமணியன்:பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தக்காவிக் கடன் என்று கிணற்றை ஆழப்படுத்துவதற்காக அரசு கடன் கொடுக்கிறபோதும், மற்ற நிலவள வங்கிகள் மூலமாக கடன் கொடுக்கிறபோதும் 300 மீட்டர்க்கு இடையில் இருந்தால் அந்தக் கடன் இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அந்த விதியை மாற்றாததால் பக்கத்திலே இருக்கின்ற வசதியானவர்கள் கிணற்றை வெட்டுகிறார்கள். அரசு கடனை எதிர்பார்க்கின்றார்கள் இந்த விதியின் காரணமாக தங்கள் கிணற்றை ஆழப்படுத்த முடியவில்லை. எனவே வறட்சியை கருத்தில் கொண்டு அரசு இந்த விதியை தளர்த்தி நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண காலங்களில் கடன் பெறும்போதுதான் அதற்கு முன்னாலே அவர்கள் நிலவள வங்கியிலே கடன் வாங்கியிருந்தால் அந்தக் கடனைப் பெற்று, அந்தக் கடனைச் செலுத்தாதவர்களுக்கு கடன் கொடுப்பது மறுக்கப்படுகிறது. வறட்சி நிவாரணக் காலத்தில் தக்காவிக் கடனாக இருந்தாலும் சரி, நிலவள வங்கிக் கடனாக இருந்தாலும் சரி, விதியை தளர்த்திக் கொடுக்கப்படுகிறது. இப்போதுகூட வறட்சியாலே, நிலவள வங்கிகளில் குறிப்பாக இந்த விதியை தளர்த்தி 1½ கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.

### தேனிவால்கரடு பகுதியில் ஆதிதிராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம்

*வினா எண். 266—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனிவால்கரடு பகுதியில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா பெறுவதற்குத் தகுதியற்ற அனைத்து ஆக்கிரமிப்புதார்களையும் காலி செய்யுமாறு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வீடற்ற தகுதி பெற்ற ஆதி திராவிடர்களுக்கு மட்டும் நிலப்பட்டா கொடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தேனி பகுதியில் அரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்களா என்பது கேள்வி. அமைச்சர் அவர்கள் புறம்போக்கு நிலங்கள் அத்தனையும்

(அ) மைய அரசின் சட்டங்கள் இதுவரை எத்தனை தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன?

(ஆ) அப்பணியை விரைவு படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) மற்றும் (ஆ) அவை முன் ஒரு விவர ** அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-20)

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, மத்திய அரசு ஒருபுறம் மத்திய அரசினுடைய சட்டங்களை தமிழிலே மொழி பெயர்க்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கச் சொல்கிறார்கள். அதே நேரத்தில் வேறு பிராந்திய மொழி தெரியாத பயணிகளிடத்திலும் விமானத்தில் விமானப் பணிப் பெண்கள் இந்தியில்தான் பேசுகிறார்கள்; பிரயாணிகளுக்கு அது புரியவில்லை. அவர்கள் எந்த மாநிலத்திலும் இந்தியில்தான் பேசுகிறார்கள். மத்திய அரசு எந்த அடிப்படையில் மாநிலத்தில் அந்த மாநில மொழி வரவேண்டும், மாநில மொழியைப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்களோ, அதே கொள்கையை வற்புறுத்தி, அந்த மாநிலத்தில் மற்ற மொழிகள் இருக்கக்கூடாது; மாநில மொழிதான் இருக்க வேண்டுமென்று சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, மத்தியச் சட்டங்களும் மாநிலச் சட்டங்களும் மாநில மொழியில் இருக்க வேண்டுமென்று சொல்லி ஒருபுறம் மத்திய அரசு மொழி பெயர்ப்புக்காக பண உதவி கூட செய்கிறது. மறுபுறம் மத்திய அலுவலகங்களிலும் விமானங்களிலும் இந்தி மொழிதான் இருக்க வேண்டுமென்று மைய அரசு வற்புறுத்துகிறது. அது இந்தி பேசாத மக்கள்மீது மத்திய அரசின் இந்தித் திணிப்பைக் காட்டுகிறது. அதைக் கண்டித்து மத்திய அரசுக்கு மாநில அரசு ஏற்ற தருணத்தில் எழுதும்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, உயர்நீதி மன்ற அளவிலும் தமிழே ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று மாநில அரசு செயல்பட்டு வருகிறது, மத்திய அரசின் சட்டங்களை மொழி பெயர்க்க மத்திய அரசு பண உதவி கூட செய்வதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் சில தினங்களுக்கு முன்பு மாண்புமிகு சட்ட அமைச்சர் உயர்நீதி மன்றத்தில் தமிழ்தான் ஆட்சி மொழியாக இருக்கும் என்று சொல்லி, அதற்கு அடுத்த நாள் நாங்கள் வேறு

** 358-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





மாநில நீதிபதிகளை தமிழ்நாட்டின் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகளாக நியமிக்கும் சூழ்நிலை இருக்கிறது. அதில் மாற்ற மில்லை; எனவே ஆங்கிலம் நீடிக்கும் என்ற முறையிலே மத்திய அரசு சொல்லியிருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு உயர்நீதி மன்றத்திற்கும் உச்ச நீதி மன்றத்திற்கும் இணைப்பு மொழி யாக தமிழ் இருக்கும்; உயர்நீதி மன்றத்தில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கும் என்ற நிலைமையை ஏற்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியாக இருந்தாலும் சரி, வேறு எந்த நீதிபதியாக இருந்தாலும் சரி, தமிழ் மொழி தெரிந்தவர்தான் இருக்க வேண்டுமென்பது இந்த அரசின் கொள்கை. இந்த நிலைமை மத்திய அரசுக்கு வற்புறுத்தியிருக்கிறோம்; தொடர்ந்து வற்புறுத்துவோம். உயர்நீதி மன்றத்தில் தமிழ் நடைமுறைக்கு வரும்; உச்ச நீதி மன்றத்தில் தொடர்பு மொழி யாக கட்டாயம் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்பதை தமிழக அரசு மட்டுமல்ல; அனைத்து மாநிலங்களும் வற்புறுத்தும்; அதற்கு ஆவன செய்யும் என்று நான் உறுதி கூறுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, அரசியல் சட்டத்தினுடைய சரத்துக்கள்கூட உயர்நீதி மன்றமாக இருந்தாலும் உச்ச நீதி மன்றமாக இருந்தாலும் இந்தியில் இருக்கலாம் அல்லது ஆங்கிலத்தில் இருக்கலாம் என்ற பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவு இருக்கும் வரையில் நம்முடைய வீர முழக்கம் பயன்படாது. எனவே அந்தப் பிரிவை மாற்றுவது சம்பந்தமாக ஒரு தீர்மானத்தை இந்த சட்ட மன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்ற அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ;** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒரு வழக்கறிஞர். இந்தியிலும் இருக்கலாம் ஆங்கிலத்திலும் இருக்கலாம் என்று இருப்பதாக அவரே சொன்னார். நான் அதையும் சுட்டிக் காட்டினேன். ஆங்கிலத்தில்தான் இருக்க வேண்டும். அதற்கான தீர்மானத்தை தமிழ் மாநிலம் மட்டுமல்ல; இந்தி பேசாத மாநிலங்கள் எல்லாம் நிறைவேற்றுகின்ற ஒரு சூழ்நிலை விரைவில் வரலாம்.

**திரு. மி. வின்சென்ட் :** தலைவரவர்களே, தமிழாக்கம் செய்யப்பட்ட அரசியல் சட்டங்கள் தூய தமிழ் சொற்களாக இல்லாமல் வடமொழி அதிகமாக கலந்ததாக இருக்கின்றன. வடமொழி கலப்பதை தவிர்க்க சட்டம் தெரிந்த தமிழறிஞர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டு, வடமொழி இல்லாத தூய தமிழ் சொற்களாகவே இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

அகற்றுவதற்காக உத்திரவு இட்டு இருப்பதாகவும், அரிஜனங்ளுக்கு மட்டும் பட்டா கொடுப்பதாகவும் சொல்கிறார்கள். இங்கே இருக்கிற கேள்வி அரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் சம்பந்தப்பட்டது. ஆகவே அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும். அரிசனங்கள் என்று சொல்லாமல் இனிமேல் 'ஆதித்திராவிடர்கள்' என்று சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேனி பகுதியில் அல்லி நகரத்தில் 203 பேர் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். 203 பேர்களில் ஒரே ஒருவர் தான் மருத்துவர் வகுப்பைச் சேர்ந்தவர். மற்ற அத்தனைபேரும் ஆதிதிராவிடர்கள். (குறுக்கீடு) ஆதிதிராவிடர்களில் பல இனத்தவர் இருக்கின்றனர். அவர்களில் யாருக்கு இதற்கு முன்னாலே வீடு இருக்கிறதோ, அல்லது இதற்கு முன்னாலே நிலம் இருக்கிறதோ அவர்களைத் தவிர மற்றவர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டு, பட்டா செய்யப்படும். முதலிலேயே நிலம் வைத்துக்கொண்டு, ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, தகுதியுள்ள இன்னொரு ஆதிதிராவிடருக்கு கிடைப்பதைத் தடுக்கவோ அல்லது அவர்களே அந்த வீட்டுமனையையும் கூடுதலாக வைத்துக்கொள்ளவோ நினைக்கின்றவர்களை மட்டும் அந்த ஆக்கிரமிப்புகளில் இருந்து நீக்கிவிட்டு, மற்றவர்களுக்கு அது பட்டா செய்து கொடுக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரிசனங்கள் என்று சொல்லக்கூடாது. ஆதிதிராவிடர்கள் என்று சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இங்கே அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளதிலேயே 'அரிசனங்கள்' என்று தான் அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் அறிந்து கொள்ள விரும்புவது, அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம்என்று சொன்னால், அந்த இடத்தில் அவர்களைத் தவிர இன்னொருவருக்கு மற்றவர்கள் எப்படி பட்டா கொடுக்கமுடியும் அந்த இடத்தில் மற்றவர்கள் எப்படி ஆக்கிரமித்தார்கள்? உரிமை பெற்றவர்கள் தானே அந்த இடத்தில் இருக்கமுடியும்? மற்றவர்கள் அதிலே எப்படி உள்ளே நுழைந்தார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கே தவறு நடந்து விட்டாலும், அந்தத் தவறு இனிமேல் நிகழாமல் இருக்கவேண்டும் என்பதற்குத்தான் நாம் நடவடிக்கைகள் எடுக்கமுடியுமே தவிர நடந்ததையே மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டு இருப்பதில் பயன் இல்லை. இப்போது நான் 'ஆதிதிராவிடர்கள்' என்று மாற்றிச்சொல்லவேண்டும் என்று திரும்பத் திரும்ப சொல்லிவந்ததால், மாண்புமிகு உறுப்பினர்களும் மாற்றிச் சொல்லி வருகிறார்கள். அதற்காக என்னுடைய மகிழ்ச்சி. அதேபோல அதிகாரிகளிடத்திலும் சொல்லியிருக்கிறேன். அவர்களும் கொஞ்சம் கொஞ்சமாக





இதிலே மாற்றம் செய்து கொண்டு வருகிறார்கள். அங்கேயிருந்து பதில் எழுதி அனுப்புகின்ற நேரத்திலும் ஆதிதிராவிடர்கள் என்று திருத்தி எழுதி அனுப்பவேண்டும் என்று சொல்லி, அவர்களும் அவ்விதம் செய்து வருகிறார்கள்.

இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் உள்ள நிலம் காடு புறம்போக்கு என்ற அளவில் காலம் காலமாக இருந்தது. அந்தக் காட்டுப் புறம்போக்கை ரெவின்யு துறை எடுத்துக்கொள்வது என்று எடுத்துக்கொண்ட பிறகு அதிலே மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்தார்கள். ஆக்கிரமிப்பு செய்த 203 பேரும்—ஒருவரைத் தவிர—அவர் மருத்துவர் வகுப்பைச் சேர்ந்தவர்—ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த பல இனத்தவர் அதிலே இருக்கின்றனர். பெயரைச் சொல்ல வேண்டுமானாலும் சொல்கிறேன். (குறுக்கீடு) அது யாருக்கும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிலம் அல்ல. அங்கே ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு அதை ஒதுக்க இருக்கிறோம். அதை ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்க முடிவு செய்துள்ளதால், அங்கேயுள்ள அத்தனைபேரும்—ஒருவரைத் தவிர—ஆதிதிராவிடர்களாக இருப்பதால், அவர்களுக்கு அந்த இடம் நான் ஏற்கனவே குறிப்பிட்ட அடிப்படையில் ஒப்படை செய்யப்படும்.

## புயல் பாதுகாப்பு இல்லங்கள்

*வினா எண் 267—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையாளிப்பாரா—

புயல் பாதுகாப்பு இல்லங்களில் இயற்கை சீற்றம் இல்லாத காலங்களில் பொது மக்களுக்கு கல்வி, தையல் ஆகியவைகள் கற்றுத் தரப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, இயற்கை சீற்றம் இல்லாத காலங்களில் புயல் பாதுகாப்பு இல்லங்கள், பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத இடங்களில் பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்கும், முதியோர் கல்வி போதிப்பதற்கும், குடும்ப நலக் கூட்டங்கள், கல்யாணங்கள் நடத்துதல் போன்ற சமுதாய நிகழ்ச்சிகளுக்கு இந்தக் கட்டிடங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள மைய அரசின் சட்டங்கள்

வினா எண். 268—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1983 பிப்ரவரி 14

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஏற்கெனவே மொழிபெயர்க்கப்பட்ட சில சட்டங்களில் வடசொல் சற்று அதிகமாக இருப்பது உண்மைதான். அதை மாநில அரசினுடைய செலவிலேயே முழுமையாக மாற்றி, மக்களுக்கு எளிதாகப் புரியக்கூடிய நல்ல தூய தமிழ் சொற்களிலேயே அந்தச் சட்டங்கள் அமைய வேண்டுமென்று அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துவிட்டது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, ஏற்கனவே தமிழாக்கம் செய்யப்பட்டிருப்பது மிகக் குறைவுதான். 161 மத்திய சட்டங்களில் 16 சட்டங்கள் மட்டுமே தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த கால தாமதத்திற்கு என்ன காரணம்? எல்லா சட்டங்களையும் உடனடியாக தமிழாக்கம் செய்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, 180 மத்திய சட்டங்கள் தற்போது தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. 21 சட்டங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பட்டுள்ளன. 11 சட்டங்கள் தற்போது பிரிண்டில் இருக்கின்றன.

திரு. மா. சின்னராசு ; தமிழ் மொழியில் தீர்ப்புகள் எழுதுவதற்கு பலயிடங்களில் நீதிபதிகளுக்கு பழக்கமில்லாத காரணத்தால் சிரமப் படுகிறார்கள். ஆகவே அதைப் போக்குகிற விதத்தில் கோடை விடுமுறையில் அவர்களுக்கு தமிழ்ச் சொற்களை தீர்ப்புகளில் கையாளுவதற்கான பயிற்சியை அளிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆங்கிலத்தில் தீர்ப்புகள் எழுதக்கூடிய அளவிற்கு அனுபவமிக்க, திறமைமிக்க நம் நீதபதிகளுக்கு தாய்மொழியாம் தமிழ்மொழியில் தீர்ப்புகள் எழுதக் கற்றுக் கொள்ள அவர்களுக்கு கண்டிப்பாக சிரமம் இருக்காது என்று அரசு நம்புகிறது, இருப்பினும் ரிப்ரஷர் கோர்ஸ் அதற்காகக் கொடுக்க வேண்டுமென்று கூட உயர் நீதி மன்றத்தின் மூலம் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி ; இந்திய அரசிலமைப்புச் சட்டம் மற்றும் சிவில் கிரிமினல் சட்டங்கள் உட்பட அனைத்துச் சட்டங்களும் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் தமிழாக்கம் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் ஏற்கனவே சொன்னேன், சாதாரண மக்கள் மட்டுமல்ல, வழக்குறைஞர்களே சில நேரங்களில் புரியாத முறையில், வடமொழி கலப்பு இருக்கிற காரணத்தால் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்



1983 பிப்ரவரி 14]

கள். அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நல்ல தமிழ்ச் சொற்கள் ஏராளம் இருக்கின்றன. அத்தகைய நல்ல, எளிய, புரிந்து கொள்ளக்கூடிய தமிழ்ச் சொற்கள் சட்ட மொழி பெயர்ப்புகளில் அமையும்.

### சிறைச் சாலைகளில் முதியோர் கல்வித் திட்டத்தை அமுல்படுத்தும் திட்டம்.

* வினா எண் 269—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் அறியாமையைப் போக்க எல்லா சிறைச் சாலைகளிலும் முதியோர் கல்வித் திட்டத்தை அமுல் செய்ய மாநில அரசு எண்ணியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; (அ) எல்லா மத்திய சிறைகளிலும் உள்ள கைதிகளுக்கு ஏற்கனவே முதியோர் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தற்பொழுது 1251 சிறைவாசிகள் முதியோர் கல்வி வகுப்புகளில் கல்வி பெற்று வருகின்றார்கள்.

திரு. என். பழனிவேல் : நம் தமிழகச் சிறைகளில் இன்றைய தினம் பல்லாயிரக்கணக்கான கைதிகள் ஆயுள் கைதிகளாகவும் பலாண்டு தண்டனைக் கைதிகளாகவும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி உள்ள நிலையில் 1251 பேர்கள் மட்டுமே முதியோர் கல்வி பெற்று வருகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் முழுமையாக அனைவருக்கும் கல்வி கற்றுக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சிறையில் இருக்கிற கைதிகள் கல்வி கற்கிறபோது அவர்கள் பண்பட்ட உள்ளம் பெறுவதற்குக் கூட அதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்த முடியும் என்று அரசு கருதுகிறது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு இன்னும் அதிகமான பேர்கள் இந்த முதியோர் கல்வியால் பயன்பெறக்கூடிய அளவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : சிறைச் சாலைகளின் உள்ளே இருக்கும் கைதிகளில் முதியோர்கள் எனப்படுவோர் ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள கணக்குப்படி பார்த்தால் ஒரு சிறிய பகுதிக்கு மட்டும் கல்வி, எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு—எழுத்தறிவு அளிப்பது

(அ) மைய அரசின் சட்டங்கள் இதுவரை எத்தனை தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன?

(ஆ) அப்பணியை விரைவு படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) மற்றும் (ஆ) அவை முன் ஒரு விவர ** அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-20)

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, மத்திய அரசு ஒருபுறம் மத்திய அரசினுடைய சட்டங்களை தமிழிலே மொழி பெயர்க்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கச் சொல்கிறார்கள். அதே நேரத்தில் வேறு பிராந்திய மொழி தெரியாத பயணிகளிடத்திலும் விமானத்தில் விமானப் பணிப் பெண்கள் இந்தியில்தான் பேசுகிறார்கள்; பிரயாணிகளுக்கு அது புரியவில்லை. அவர்கள் எந்த மாநிலத்திலும் இந்தியில்தான் பேசுகிறார்கள். மத்திய அரசு எந்த அடிப்படையில் மாநிலத்தில் அந்த மாநில மொழி வரவேண்டும், மாநில மொழியைப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்களோ, அதே கொள்கையை வற்புறுத்தி, அந்த மாநிலத்தில் மற்ற மொழிகள் இருக்கக்கூடாது; மாநில மொழிதான் இருக்க வேண்டுமென்று சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, மத்தியச் சட்டங்களும் மாநிலச் சட்டங்களும் மாநில மொழியில் இருக்க வேண்டுமென்று சொல்லி ஒருபுறம் மத்திய அரசு மொழி பெயர்ப்புக்காக பண உதவி கூட செய்கிறது. மறுபுறம் மத்திய அலுவலகங்களிலும் விமானங்களிலும் இந்தி மொழிதான் இருக்க வேண்டுமென்று மைய அரசு வற்புறுத்துகிறது. அது இந்தி பேசாத மக்கள்மீது மத்திய அரசின் இந்தித் திணிப்பைக் காட்டுகிறது. அதைக் கண்டித்து மத்திய அரசுக்கு மாநில அரசு ஏற்ற தருணத்தில் எழுதும்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, உயர்நீதி மன்ற அளவிலும் தமிழே ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று மாநில அரசு செயல்பட்டு வருகிறது, மத்திய அரசின் சட்டங்களை மொழி பெயர்க்க மத்திய அரசு பண உதவி கூட செய்வதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் சில தினங்களுக்கு முன்பு மாண்புமிகு சட்ட அமைச்சர் உயர்நீதி மன்றத்தில் தமிழ்தான் ஆட்சி மொழியாக இருக்கும் என்று சொல்லி, அதற்கு அடுத்த நாள் நாங்கள் வேறு

** 358-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



தமிழ்நாட்டின் உயர்நீதிமன்ற தலைமை மாநில நீதிபதிகளை இருக்கிறது. அதில் மாற்ற நீதிபதிகளாக நியமிக்கும் சூழ்நிலை முறையிலே மத்திய மில்லை; எனவே ஆங்கிலம் நீடிக்கும் என்ற நம்முடைய அரசு உயர்நீதி அரசு சொல்லியிருக்கிறது. ஆகவே, இணைப்பு மொழி மன்றத்திற்கும் உச்ச நீதி மன்றத்திற்கும் தமிழ் ஆட்சி யாக தமிழ் இருக்கும்; உயர்நீதி மன்றத்தில் ஏற்படுத்த மாநில மொழியாக இருக்கும் என்ற நிலைமையை விரும்புகிறேன். அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியாக இருந்தாலும் சரி, வேறு எந்த நீதிபதியாக இருந்தாலும் சரி, தமிழ் மொழி தெரிந்தவர்தான் இருக்க வேண்டுமென்பது இந்த அரசின் கொள்கை. இந்த நிலைமை மத்திய அரசுக்கு வற்புறுத்தியிருக்கிறோம்; தொடர்ந்து வற்புறுத்துவோம். உயர்நீதி மன்றத்தில் தமிழ் நடைமுறைக்கு வரும்; உச்ச நீதி மன்றத்தில் தொடர்பு மொழி யாக கட்டாயம் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்பதை தமிழக அரசு மட்டுமல்ல; அனைத்து மாநிலங்களும் வற்புறுத்தும்; அதற்கு ஆவன செய்யும் என்று நான் உறுதி கூறுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, அரசியல் சட்டத் தினுடைய சரத்துக்கள்கூட உயர்நீதி மன்றமாக இருந்தாலும் உச்ச நீதி மன்றமாக இருந்தாலும் இந்தியில் இருக்கலாம் அல்லது ஆங்கிலத்தில் இருக்கலாம் என்ற பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவு இருக்கும் வரையில் நம்முடைய வீர முழக்கம் பயன்படாது. எனவே அந்தப் பிரிவை மாற்றுவது சம்பந்தமாக ஒரு தீர்மானத்தை இந்த சட்ட மன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்ற அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ;** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒரு வழக்கறிஞர். இந்தியிலும் இருக்கலாம் ஆங்கிலத்திலும் இருக்கலாம் என்று இருப்பதாக அவரே சொன்னார். நான் அதையும் சுட்டிக் காட்டினேன். ஆங்கிலத்தில்தான் இருக்க வேண்டும். அதற்கான தீர்மானத்தை தமிழ் மாநிலம் மட்டுமல்ல; இந்தி பேசாத மாநிலங்கள் எல்லாம் நிறைவேற்றுகின்ற ஒரு சூழ்நிலை விரைவில் வரலாம்.

**திரு. மி. வின்சென்ட் :** தலைவரவர்களே, தமிழாக்கம் செய்யப் பட்ட அரசியல் சட்டங்கள் தூய தமிழ் சொற்களாக இல்லாமல் வடமொழி அதிகமாக கலந்ததாக இருக்கின்றன. வடமொழி கலப்பதை தவிர்க்க சட்டம் தெரிந்த தமிழறிஞர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டு, வடமொழி இல்லாத தூய தமிழ் சொற்களாகவே இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மட்டும் தான் நோக்கமா? சமுதாயத்தில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய குறைந்த பட்சக் கல்வி கிடைக்காமல் இருப்ப தால் அது கிடைக்கக்கூடிய அளவிற்கு கொடுக்க ஏற்பாடு உள்ளதா? ஆகவே முதியோர் அத்தனை பேர்களுக்கும் அந்தக் கல்வியைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** எழுதப் படிக்க சிறை வாசிகள் கற்றுக்கொண்டு அதன் மூலமாக உள்ளத்தைப் பண் படுத்தக்கூடிய அளவிற்கு நல்ல சில புத்தகங்களைப் படிக்கக் கூடிய அளவிற்கு அவர்கள் உயர வேண்டும் என்பதுதான் நோக்கம். லைப் ப்ரிஸினேர்ஸைப் பொறுத்த வரையில் கிட்டத் தட்ட 14 ஆண்டுகள் அவர்கள் சிறையில் இருக்க வேண்டி யிருக்கிறது. எனவே அந்தக் கல்வி அவர்கள் நல்ல மறுவாழ்வு பெறக்கூடிய அளவிற்கு பலன் உள்ள கல்வியாக அமைய வேண்டும் என்பதுதான் நல்லது. அந்த அடிப்படையில் பிரச்னைகளை அரசு அணுகும்.

**திரு. என். பழனிவேல் :** சிறைச் சாலைகளில் தற்போது 1,251 பேர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுமார் எவ்வளவு பேர்கள் இப்போது கல்வி கற்கக்கூடிய தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள் என்ற கணக்கை அரசு எடுத்துள்ளதா? அதே போல் இன்று சாதாரண துணைச் சிறைச் சாலைகளில் கூட ஆறு மாதம், ஒரு ஆண்டு என்று தண்டனை பெற்ற கைதிகளில் கல்வி அறிவு இல்லாத வர்கள் இருக்கிறார்கள். அவர்களுச்கு கையெழுத்து போடக் கூடிய அளவிற்காவது சொல்லிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அந்தத் தகுதி படைத் தவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பது பற்றி விவரக் குறிப்பு என்னிடமில்லை. ஆனால் குறிப்பிட்டதொரு காலத்திற்கு மேல் சிறையில் இருக்கிறவர்கள் எல்லாம் கல்வி அறிவை குறைந்த பட்சமேனும் பெறவேண்டும் என்ற அணுகு முறையை மேற் கொள்வது நல்லது என்ற அடிப்படையில் திரு. ரமணி அவர்கள் கேட்ட கேள்விக்குக்கூட அந்தப் பதிலைச் சொன்னேன். எனவே சிறையிலுள்ள கைதிகள் குறைந்தபட்சக் கல்வியினைப் பெறவேண்டும், எந்தத் தரப்பு கைதியாக இருந்தாலும்—என்ற நோக்கத்தோடு பிரச்சனையை அரசாங்கம் அணுகும்.



**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச் சாலைகளிலே கைதிகளுக்கு வாழ்க்கை வளம்பெற, கல்வி கற்பிக்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த சிறைச் சாலைகளிலே, எத்தனை பேர்களுக்கு, எந்த நேரத்தில் கல்வி கற்பிக்கப்படுகின்றது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை சிறைச்சாலையிலே 149 பேர்களும், மதுரையிலே 336 பேர்களும், சேலத்தில் 97 பேர்களும், வேலூரில் 213 பேர்களும், கடலூரிலே 29 பேர்களும், திருச்சியில் 138 பேர் களும், கோவையில் 110 பேர்களும், பாளையங்கோட்டையில் 135 பேர்களும், மாநில மகளிர் சிறைச்சாலையில் 44 பேர்களும், ஆக மொத்தம் 1251 பேர்கள் கல்வி பெறுகிறார்கள். எந்த நேரம் என்ற தகவல் என்னிடத்திலே இல்லை.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலை கைதிகள் கல்வி கற்பதோடு மட்டுமல்ல. பொது அறிவு, மற்றும் அரசியல் விவகாரங்கள் தெரிந்து கொள்வதற்காக காலை நேரத்தில் ஒரு மணி நேரம் அவர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு வகுப்பு நடத்த வழிவகைகளை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

### தூத்துக்குடி மீனவர்களுக்கு ஏற்பட்ட சேதம்.

* வினா எண் 262—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அருகில் 1982ம் ஆண்டு ஜூன். ஜூலை மாதங்களில் 10-க்கு மேற்பட்ட தைவான் நாட்டு மீன்பிடி படகுகள் வந்து மீன் பிடிப்பதாகவும், இதன் காரணமாக தூத்துக்குடி மீனவர்களின் வலைகள் சுமார் பல லட்ச ரூபாய்க்கு சேதம் ஏற்பட்டுள்ளதென்பதை தமிழக அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ), (ஆ) மற்றும் (இ) விவரமான அறிக்கை ** சட்டப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

** 359-ம் பக்கத்தில் இணைப்பு III-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே ஊடுருவல் நடை
பெற்றும், யாரும் அகப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்
கிறது. நடைமுறையில் என்னவென்று சொன்னால், அண்மை
யிலேகூட ஒரு மீன்பிடி படகு கைப்பற்றப்பட்டிருக்கிறது. அவர்
கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை
நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் ? 1982-ஆம் ஆண்டு
ஜூலைத் திங்கள் 7-ஆம் நாள் அன்று தந்தி மூலம் தெரிவிக்கப்
பட்டிருக்கின்றது. ஆனால், அவர்கள் எப்போது சென்று தேடு
வதற்கு ஆரம்பித்தார்கள்? அதற்குப் பிறகு, 1982-ஆம்
ஆண்டு ஜூலைத் திங்கள் 10-ஆம் நாள் அன்றும் ஒரு தந்தி
போயிருக்கிறது, இதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்
பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, காலம் கடந்த
நடவடிக்கை எடுக்கப்பட்டதால், அவர்கள் தப்பித்து விட்டார்
களா ? காலங்கடந்து சென்றதற்கு என்ன காரணம் என்பதை
யும், காலாகாலத்தில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா
என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 1982-ஆம் ஆண்டு ஜூலைத்
திங்கள் 7-ஆம் நாள் செய்திப்படியும், 1982-ஆம் ஆண்டு ஜூலைத்
திங்கள் 10-ஆம் நாள் செய்திப்படியும் இப்படிப்பட்ட ஊடுருவல்
கள் நடைபெற்றதாகப் பத்திரிகைகளிலே பரபரப்பான செய்தி
கள் அனுப்பப்பட்டன ; தந்திகள் அனுப்பப்பட்டன. மீனளத்
துறையினரும், மற்றும் காவல் துறையினரும் சென்று அதற்கான
பணிகளை மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல், கடற்கரைக்
காப்பாளர்களுக்கும், மத்திய அரசின் சார்பாக இராணுவக் காப்
பாளர்களுக்கும் நாம் தெரிவித்து, அவர்கள் படகுகளின் மூலம்
சென்று ஆராய்ந்து பார்த்தபோது, இப்படிப்பட்ட படகுகள்
எதுவும் அங்கு வரவில்லை என்ற செய்தி வந்தது. ஆனால்,
தைவான் நாட்டுப் படகுகள் 1980—81-ஆம் ஆண்டில் ஊடுருவல்
நடத்தியதால், பல்வேறு சேதங்கள் ஏற்பட்டன. அப்போது
அந்த இரண்டு தைவான் நாட்டுக் கப்பல்களை 1980—81-ஆம்
ஆண்டிலே பிடித்துவைத்து, ஏராளமான மீன்களை நாம் கைப்
பற்றி, பிறகு இந்திய அரசுக்கும், தைவான் நாட்டிற்கும் ஏற்
பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், அந்தக் கப்பல்கள் திருப்
பித் தரப்பட்டன. ஆனால், இப்போது 1982-ஆம் ஆண்டு,
ஜூலைத் திங்கள் 7-ஆம் நாள் செய்தியை அடிப்படையாக
வைத்து, பிறகு, 1982-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 10-ஆம்
நாள் செய்தியையும் அடிப்படையாக வைத்து, பல்வேறு ஆய்வு
கள் நடத்தப்பட்டன. அப்போது இந்த ஊடுருவல் நடைபெற
வில்லை என்ற செய்திதான் கிடைத்தது. அதற்குப் பிறகும்
கூட, அந்தத் தந்திகளையெல்லாம் கொடுத்த, அந்த மீனவர்
களின் சங்கத் தலைவர் திரு. சம்சு முகம்மது அவர்கள்கூட அதற்
கான விளக்கம் அளித்து, நன்றி தெரிவித்திருக்கிறார்கள். அதற்
குப் பிறகு, மீனவர்கள் அச்சமின்றி மீன்பிடிக்கும் தொழிலில்
ஈடுபட்டிருக்கிறார்கள்.



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத்
தலைவர் அவர்களே, அச்சமின்றி மீனவர்கள் இத்தொழிலில்
ஈடுபட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். அண்மையில்கூட, தைவான் நாட்டுப் படகு
கள் பிடிக்கப்பட்டு, சில சாமான்கள் கைப்பற்றப்பட்டதாக அர
சுக்குத் தகவல் வந்ததா ? ஏற்கெனவே சேதம் ஏற்படுத்திய
தாக அறிக்கையிலேகூட ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஊடு
ருவல் நடத்தி, சேதம் விளைவித்ததற்காக, இந்த மீனவர்
களுக்கு அரசு ஏதாவது நிவாரணம் செய்திருக்கிறதா ? சேதம்
விளைவித்ததாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.
சேதம் எவ்வளவு என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஊடுருவல் நடைபெற்றதாக
வந்தச் செய்திகள், பத்திரிகைகளிலே வந்தவைகளை வைத்துக்
கொண்டு, அரசு ஆய்வில் இறங்கியது. 1982 ஜூன், ஜூலை
யிலே இப்படிப்பட்ட ஊடுருவல் எதுவும் நடக்கவில்லை என்று
நமக்குத் தெரியவந்தது. 1980—81லே ஊடுருவல் நடைபெற்
றது. அப்போது நாம் அந்தக் கப்பல்களை பிடித்து வைத்
தோம். அண்மையில் இப்படி ஊடுருவல் நடைபெற்றதாக
உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். அது பற்றிய விவரம்,
என்னிடம் இல்லை. உண்மையில் அப்படி நடைபெற்றிருக்கு
மானால், தனிக் கேள்வி போட்டால், விவரம் முழுவதும் அவைக்கு
வைக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இது வெறும் ஊடுருவல் பிரச்சினை மட்டுமல்ல.
நம்முடைய கடலிலே இருக்கின்ற வளத்தை மிகப் பெரிய அள
விலே கொள்ளை அடிக்கின்ற விஷயம். திட்டமிட்டு செய்யக்
கூடியது. சமீபத்திலே நடைபெற்ற Sea Fo d Conference
யிலே கூட ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள்—மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். நம்
முடைய வியாபாரிகள் வெளிநாட்டு சிறு படகுகளை காண்டி
ராக்ட் முறையில் எடுக்கிறபோது—காண்டிராக்ட் சார்ட்டட்
வெஸல்ஸ் என்று சொல்வார்கள்—அவர்கள் போடும் நிபந்தனை
யில் மொத்த மீன்களில் 15 சதவீதம் அந்த வியாபாரிகளுக்கு—
பாரின் எக்ஸ்சேஞ்சாக—85 சதவீதம் படகினுடைய சொந்தக்
காரர்களுக்கு என்று. ஆனால், நடப்பது என்னவென்றால்,—200
நாட்டிகல் மைல்கள் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிற எல்லை.
ஆனால், மதர்ஷிப் என்று சொல்லப்படும் பெரிய கப்பல், அந்த
200 நாட்டிகல் மைல்களுக்கு அப்பால் வெளியே நின்றுக்கொண்டு
இருக்க, நம் வியாபாரிகள் வாங்கக் கூடிய படகுகள் அந்த 200
மைல்களுக்குள்ளே மீன்களைப் பிடித்து திருட்டுத்தனமாகக்
கொண்டுபோய் அந்த மதர்ஷிப்பிலே போட்டுவிட்டு, கடைய
யில் கொஞ்சம் கொண்டுபோய் கொடுத்து அதில் நம்முடைய

ஆட்களுக்கு 15 சதவீதம் என்று கொடுக்கிறார்கள். இப்படிப் பட்ட மிகப் பெரிய பயங்கரமான கொள்ளை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. It is a systamatic, planned Conspiracy to loot our country இதை நிறுத்துவதற்கு அரசாங்கம் என்ன செய்யப் போகிறது ? இது குறித்து இதுவரை அரசாங்கத்தின் கவனத் திற்கு வந்ததா? வந்தது என்றால் இதற்கு இந்தக் கொள்ளையை நிறுத்துவதற்கு என்ன ஏற்பாடு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற விவரக் குறிப்புகள் என் னிடத்திலே இல்லை. அவர் குறிப்பிடுவது போன்ற நிலைமை இருக்குமேயானால் அதைத்தடுக்க தக்க நடவடிக்கையை எடுக் கத்தான் வேண்டும். அயல்நாட்டுப் படகுகள் மீன் பிடிப்பதற் கான உரிமையை வழங்கும் பணியைச் செய்வதை மத்திய அரசு தான் கவனித்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறுவதுபோன்று, பிடிக்கப்படும் மீன்கள் 200 மைல்களுக்கு அப்பால் இருக்கிற பெரிய ஷிப்பிற்குப் போய்ச் சேருகின்ற நிலைமை இருப்பதை வேண்டுமானால் மத்திய அர சுக்கு தெரிவித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளலாம்.

இந்தப் படகுகள் மீன் பிடிப்பதற்காகத்தான் வருகின்றனவா அல்லது மீன் பிடிப்பு என்ற பெயரில் உளவு பார்க்க வரு கின்றனவா என்பது சந்தேகமாக இருக்கிறது. இதுபோன்ற, சந்தேகங்கள் முன்னாலே ஏற்பட்டபோதெல்லாம், கடற்படை யின் ரோந்துப்படையை அனுப்பிவைக்க வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறோம். அவர்களும் அவ்வப்போது அனுப்பி, மறுபடியும் திருப்பி அழைத்துவிடுவார்கள். ஆகவே, அந்த இடங்களில் நிரந்தரமான ரோந்துப் படையை ஏற்படுத்த வேண்டும், இல்லாவிட்டால் மீன் பிடிப்பு என்ற பெயரில் எந்த நாட்டு உளவுப்படைகள் வருகிறார்கள் என்றே தெரிவதில்லை என்று தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் கூறுவதையும் கருத்திலே கொண்டு அதற்கான நடவடிக்கை யை அரசு எடுக்கும்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான், தைவான் நாட்டுக்காரர்கள் பசிபிக்கடலை விட்டு விட்டு, வங்கக் கடலிலேயும், அரபிக் கடலிலேயும் மீன் பிடிக்க வருவதைப் பார்த்தால், நம்முடைய கடலிலே அதிகமான மீன் வளம் இருப்பதாகத் தெரிகிறதே. ஏன் நம்முடைய அரசே அதிக அளவில் படகுகளை வாங்கி விட்டு மீன்களைப் பிடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடக்கூடாது ?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாம் மீன்பிடிப்பதற் காக பெரிய இரண்டு டிராலர்களை வாங்கிப் போட்டிருக்கிறோம். அவைகள் நல்ல பலனை அளித்து வருகின்றன. அதைப் போல மேலும், டிராலர்களை வாங்குவதற்காக மத்திய அரசின் அனு மதியைக் கேட்டிருக்கிறோம். அப்படி அதிக அளவில் டிராலர் களை பெருக்குவதன் மூலமாகத்தான், நம்முடைய மீன்பிடித் தன்மையையும் பெருக்க முடியும், அதன் மூலமாக வெளிநாட்டு படகுகள் இங்கே வந்து மீன் பிடிப்பதையும் தடுக்க முடியும். அதைப்பற்றிய நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

அரசு நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் திட்ட .

*வினா எண். 263—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்பு மிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நிர்வாகத்தில் சிக்கனத்தை கடைப்பிடிக்க புது பதவிகளை உருவாக்குவது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) எந்தெந்த இலாகாவில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) மிகப் பெரிய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டி யுள்ளதன் அவசியத்தை கருத்தில் கொண்டும், அரசு செலவினங் களில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்காக கூடுதல் புதுப்பணி இடங்களை ஏற்படுத்தல் கூடாது என்று ஆணைபிறப்பித்து உள்ளது. ஆனால், புதிய திட்டப்பணிகளுக்கு இத்தடை பொருந்தாது.

(இ) மேற்கண்ட தடை உத்தரவு தமிழ்நாடு அனைத்து அரசு துறைகளிலும் நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, புதிய திட்டப்பணிகளை செயல்படுத்துவது தவிர மற்ற எல்லா இடங்களிலும் சிக்கனம் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பல்வேறு இலாக்காக் களில் இந்த உத்தரவினால் புதிய பதவிகளை ஏற்படுத்தாததோடு

[1983 பிப்ரவரி 14

—அது நிறுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் — ஏற்கனவே பதவி உயர்வு பெற்று காலியாகிற இடங்களிலும், ஓய்வு பெற்று காலி யாகிற இடங்களிலும் கூட, அந்தப் பதவிகள் நிரப்பப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிற காரணத்தினால், வேலை பளு அதிக மாகி, வேலைகளின் நிலைமை பாதிக்கப்பட்டிருப்பது அரசாங் கத்திற்கு தெரியுமா ? அப்படிப்பட்ட இடங்களில் அந்தப் பதவி கள் நிரப்பப்படுவதற்கு அரசாங்கம் உத்தரவளிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

[முற்பகல் 9—40]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு துறையினரும் வேலை செய்கிறவர்கள் அங்கே உள்ள எண்ணிக்கையினை அதிகரித்துக்கொண்டு போவ திலேயே கவனம் அதிகம் செலுத்துகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு இடம் கொடுக்காமல் முக்கியமாக நிரப்பப்படவேண்டிய இடங்களாக இருந்தால் அப்படிப்பட்ட இடங்களுக்கு அதிகாரிகளையும் மற்றவர்களையும் நாம் நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அப்படிப்பட்ட இடங் களைத் தடுத்து நிறுத்துவதில்லை. தலைமைச் செயலாளர், இரண்டாம் செயலாளர், நிதித்துறைச் செயலாளர் ஆகிய மூன்றுபேர்களைக் கொண்ட குழு அது பற்றிப் பரி சீலனை செய்வது என்ற வகையிலே ஒரு நார்ம்ஸ் வைத்திருக் கிறோம். ஆகவே, ஏதேனும் துறைகளுக்குக் கூடுதலாக ஆட் களை நியமிக்கும்படி வந்தால் அப்படிப்பட்ட துறைகளில் இக் குழுவினுடைய ஆலோசனையின் பேரில் புதிய அலுவலர்களையும் மற்றவர்களையும் நியமிக்க நாம் அனுமதி வழங்குகிறோம். ஆனால் துறையிலே பணியாற்றுகிறவர்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்த வேண்டும், பெருக்கிக்கொண்டே போக வேண்டும் என்ற எண்ணத்தில் கேட்கப்பட்டால் அதுபற்றி பரிசீலித்து அது தடுத்து நிறுத்தப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று நிரந்தர இடமாக இருந்து அதிலே ஆக்டிங்-ஆக ஒருவர் வேலை செய்வாரேயானால் அதற்கெல்லாம் தடுத்து நிறுத்துவதில்லை. அப்படிப்பட்ட பணிகளுக்கு ஆட் களைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியினை நாம் மேற்கொண்டு இருக்கிறோம். ஏராளமாக எஸ்டாபிளிஸ்மெண்ட் செலவு ஆகக்கூடாது என்ற நோக்கத்தின் காரணமாகத்தான் இப்படிப் பட்ட நடவடிக்கையே தவிர வேலைகள் நடக்கக்கூடாது, சுணங்க வேண்டும், காலதாமதம் ஏற்பட வேண்டும் என்பது நோக்க மல்ல. எனவே, இதற்காகத்தான் குழு அமைக்கப்பட்டு அவர் கள் ஆராய்ந்து சொல்கின்ற யோசனையின் மீது தக்க நட வடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.



1983 பிப்ரவரி 14]

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்வது
போல் இலாக்காக்களில் நடைமுறையிலே இல்லை என்பதை
நான் தெரிவித்தாக வேண்டும். உதாரணமாக வடாற்காடு
மாவட்டம் கூட்டுறவு மத்திய வங்கியிலே நூற்றுக்கணக்கான
மேற்பார்வையாளர்கள் இடம் காலியாக நீண்ட காலமாக இருக்
கின்றது. இப்படிப்பட்ட நிலைமை காரணமாக பல்வேறு கூட்
டுறவுச் சங்கங்களின் பணிகள் பாதிக்கப்படுகின்ற நிலைமைகள்
இருக்கின்றன. மேலும் தற்போது இந்த அரசு குடும்பத்தில்
ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தைக் கொண்டுவந்திருக்
கின்றது. எனவே, இத்திட்டமும் நிறைவேறுகின்ற வகையிலே
காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்காக அரசு நடவடிக்கை
எடுக்க வேண்டும். எனவே அரசு பிறப்பித்துள்ள ஆணையினைத்
தளர்த்துவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்
பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தபடி இன்றியமையாத
பணிகளாக இருந்தால் அதுபற்றி கவனிக்கப்பட வேண்டும் என்ப
தற்காகத்தான் குழு வைக்கப்பட்டிருக்கின்றது. எனவே கூட்
டுறவுப் பணிகள் நடைபெற முடியாத நிலைமை இருக்குமே
யானால் அரசு அதைத் கவனிக்கும். ஆனால், பல துறைகளில்
நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினர் பரிந்துரை செய்ததன்படி கூடுத
லாக பலபேர் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே,
அப்படிப்பட்ட இடங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்
என்ற அடிப்படையில் இது நடைபெறுகின்றதே தவிர
வேறல்ல. பணியாட்கள் வேண்டிய இடத்தில் தேவையான
அளவுக்கு இல்லாமல் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கூறுவது போன்ற நிலைமைகள் இருந்தால் அதுபற்றி இந்தக்
குழுவினர் கவனித்து தக்க நடவடிக்கை எடுப்பார்கள். எனவே
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்தினை உள்ளத்
திலே வைத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்
துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் புதுப்பணி இடங்கள் ஏற்
படுத்துவது தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவசிய
மான இடங்களில் பணியாட்கள் நியமிக்கப்படும் என்றும் சொன்
னார்கள். நான் குறிப்பிட்டு ஒன்றை கேட்க விரும்புகிறேன்.
மதுரை இராஜாஜி மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவில்
தலைமைப் பதவியிலே இருந்தவர் ஓய்வுபெற்று 6 மாதங்களுக்கு
மேலாக ஆகின்றது. இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றது.
ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் உடனடியாக ஆட்களை
நியமிக்க அரசு காலதாமதம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க
முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் சொல்கிற மாதிரி அந்தத் துறையிலே நிலைமை இருக்குமேயானால் அங்கே என்ன இடர்ப்பாடு என்பது தெரியவில்லை. அந்த துறை அதுபற்றிய ப்ரப்போசலை அனுப்புமேயானால் அதுபற்றி ஆராய்ந்து அதற்கு அனுமதி அளிப்பதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் சிலபல இடங்களில் சில பணியிடங்களை நிரப்புவதிலே சிக்கல்கள் ஏதும் இருக்குமேயானால் அந்தச் சிக்கல்களைத் தீர்த்து அதன்பிறகு அனுப்பபடுமேயானால் அதுபற்றிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கன நடவடிக்கையாக பல்வேறு யோசனைகளை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தமிழகத்திலுள்ள மின் இலாக்காவுக்கு நாம் ஆண்டுக்கு ஆண்டு 3 கோடி ருபாய் ஒதுக்குகிறோம். அரசாங்கம் தருகின்ற புள்ளி விவரம் 2 கோடியே 88 இலட்சம் நிர்வாக செலவுக்காக செலவழிக்கப்படுவதாக இருக்கிறது. அப்படி பார்க்கிறப்போது 10 அல்லது 15 இலட்சம் தான் ஒரு ஆண்டுக்கு அந்த சமுதாயத்திற்காக அந்த தொழில் வளர்ச்சிக்காக செலவழிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அந்த தொகையை பிரித்து கொடுப்பதற்காக இருக்கக்கூடிய நிர்வாகத்திற்கு 2 கோடியே 88 இலட்சம் செலவழிக்கக் கூடிய அளவுக்கு அட்மினிஸ்டிரெஷன் இருக்கிறது. இதுபோன்றவற்றில் அரசு தனி கவனம் செலுத்தி நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் கருத்துக்களை தெளிவாக்கியிருக்கிறார்கள். சிக்கன நடவடிக்கையை மேற்கொள்வதற்காக அவர்கள் சொல்வது போன்று நிர்வாகச் செலவுகள் அதிகமாக இருக்கின்றன, அதனால் ஏற்படுகின்ற பலன்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் இந்தப் பலன்களை அதிகப்படுத்தி நிர்வாகச் செலவை குறைக்கவும் முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் கூறுவது போன்று எவ்வளவு மிச்சப்படுகிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் அந்த கருத்தின் அடிப்படையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



பெயர்ப்பலகை விளம்பரங்களில் தமிழுக்கு முதலிடம் அளிக்கப் பட வேண்டியதற்கான விதிமுறைகள்.

* வினா எண் 270—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெயர்ப்பலகை விளம்பரங்களில் தமிழுக்கு முதலிடம் தரப் படவேண்டிய அரசு சட்டத்தை முழுமையாக நடைமுறை படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 1948 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளின் 15 ஆவது விதியின்படியும், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதி 42பியின்படியும் தமிழ்நாட்டில் உள்ள கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களிலுள்ள பெயர்ப்பலகைகள் தமிழிலேயே எழுதப்படவேண்டுமென்றும் பிற மொழிகளில் எழுதப்படுமிடத்து அவை தமிழ்ப்பெயருக்குக் கீழ் அமைதல் வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை முழுமையாக நிறைவேற்ற தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று எல்லாத் தொழிலாளர் துறை ஆய்வாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. பாபு. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் பலகைகளில் விளம்பரங்களில் தமிழுக்கு முதலிடம் தரப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த விளம்பரங்களை கடைகளில் மட்டும் அல்லாமல், அலுவலகங்களில் மட்டும் அல்லாமல், மத்திய அரசு அலுவலகங்களிலும் தமிழுக்கு முதலிடம் தரவேண்டும் என்று சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த அரசு முயலுமா என்று அறியவிரும்பிகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே படித்த 2 சட்டத்தின் கீழ் அதை வலியுறுத்த இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உத்திரவை நிறைவேற்றுகிற வகையில் பல தொழில் நிறுவனங்களும், வியாபாரத் தலங்களும்—பல மாநிலத்தவர்கள்—ஏதோ தமிழை சிறிதாகவும் அவர்களுடைய மொழியை பெரியதாகவும் பெயர்ப்பலகைகளில் இன்றையதினம் போடுகிற நிலைமை இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நிலமையை மாற்றுவதற்கு இங்க அரசு முன்வருமா? அல்லது அப்படிப்பட்ட நிறுவனங்

களுக்கு அதை மாற்றுவதற்கு ஒரு காலக்கெடுவை கொடுத்து முதலில் தமிழை பெரிய எழுத்திலும் பிறகு மற்ற மொழிகளில் போட்டுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அப்படி நிலைமை மாறாவிட்டால் ஒரு காலத்தில் இந்தி எழுத்துக்களை அழிப்பதற்காக மக்கள் எழுச்சி கொண்டதைப் போல் அத்தகைய நிலைமைகள் உருவாகாமல் இருப்பதற்கு இந்த அரசு வழிவகைகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2 சட்டத்தின் கீழ் கடைகள், நிறுவனங்கள் அது மட்டும் அல்லாமல் உணவு நிறுவனங்கள் அது மத்திய அரசு வைத்துஇருந்தாலும், யார் வைத்து இருந்தாலும் வலியுறுத்தலாம், இல்லை என்றால் 'பிராசிக்குஷன் செய்யலாம். அந்த வகையில் இருக்கவேண்டும் என்பதற்காக அண்மையில் ஒரு நோட்டிபிகேஷன் கொடுத்து இருக்கிறோம் அந்த நோட்டிபிகேஷன் பிறகு கன்பார்ம் செய்யப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முழு மன நிறைவுதரும் என்று கருதுகிறேன். அந்த நோட்டிபிகேஷனை இப்போது படிக்கிறேன்.

(முற்பகல் 9.50)

1. நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் தமிழிலேயே எழுதப்படவேண்டும். மற்ற மொழிகள் பயன்படுத்துமிடத்து ஆங்கிலப் பெயர் இரண்டாவது இடத்திலும் பிற மொழிகள் ஏதாவது பயன்படுத்தப்பட்டால், அது மூன்றாவதாகவும் எழுதப்படவேண்டும். எனினும் இம்மூன்று மொழிகளும் ஒரே பெயர்ப்பலகையிலேயே எழுதப்படவேண்டும்.

2. பெயர்ப்பலகையில் தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளை உபயோகிக்குமிடத்து, அவைகள் 5:3:2 என்ற விகிதாச்சாரத்தில் எழுதப்படவேண்டும்.

3. பெயர்ப்பலகைகளில் தமிழ் எழுத்துக்கள் திருத்திய எழுத்துக்களில் எழுதப்பட வேண்டும். புதிதாகத் திருத்தியிருக்கிறோமே அண்ணா என்றால் எப்படி எழுதவேண்டுமென்று அப்படி எழுதவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இவ்வாறு நோட்டிபிகேஷன் கொடுத்திருக்கிறோம் அது விரைவிலே வெளியிடப்படும்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற மத்திய அரசுக் கட்டிடங்களிலேயும் இந்த சட்டத்தை அமல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ? சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்குப் பக்கத்திலே வானுயர்ந்த கட்டிடம் மிகப் பெரியதாக இருந்தாலும் அதிலே என்ன எழுதியிருக்கிறது என்று புரியாத நிலையில்





தமிழக மக்கள் இருக்கும்போது ஏன் இந்தச் சட்டத்தை அப்படிப் பட்ட இடங்களுக்கும் விரிவுபடுத்தக்கூடாது? மத்திய அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களிலும் தமிழ்தான் இருக்கவேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, (Catoring and Shops Establishment Act.) பொறுத்த வரையில் இதைத்தான் வலியுறுத்தி வருகிறோம். இதற்கு மேல் மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்றால் வேறு சட்டம்தான் அரசு கொண்டுவரவேண்டும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை மீறியவர்கள் எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா? காரணம் பல இடங்களிலே தமிழில் எழுதப்படாமல் இருப்பதை நாங்கள் பார்க்கிறோம். ஆகவே தமிழில் எழுதாதவர்கள்மீது நடவடிக்கை எடுத்து தண்டனை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மீறுகிறவர்கள் மீது நீதிமன்றத்திலே வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. எத்தனை பேர்கள் என்ற குறிப்பு என்னிடத்திலே தற்சமயம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, தூய தமிழ் என்று சொல்லிக்கொண்டு, சென்னை நகரத்திலே, அர்மீனியன் ஸ்ட்ரீட், என்பதற்கு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தூய தமிழ் என்று சொல்கிறீர்கள் ஆங்கிலத்திற்கு எதற்குப் போகிறீர்கள் ?

திரு. மு. அம்பிகாபதி : அர்மீனியன் ஸ்ட்ரீட் என்றால் அந்தக் காலத்திலே அர்மீனியர்கள் இருந்தார்கள் என்பதால் அந்தப் பெயர் இடப்பட்டிருந்தது, ஆனால் இப்போது அர்மீனியன் என்பதற்கு அரண்மனை என்று பொருள்கொண்டு அந்தத் தெருவுக்கு அரண்மனைக்காரத் தெரு எழுதக்கூடிய இவ்வளவு பெரிய ப்ளன்டர் சென்னையிலேயே நடந்திருக்கிறதே இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைப்பற்றி நடவடிக்கை எடுப்பார்களா? (விடை இல்லை).

## உப்பளங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான திட்டங்கள்.

★

*வினா எண். 271—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உப்பளங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு E.S.I. P.F. போன்ற திட்டங்களை அமுல்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** உப்பளங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தை நீட்டிக்க தொழிலாளர் ஈட்டுறுதி கழக மண்டல இயக்குநர் தேவையான புள்ளி விவரங்களை சேகரித்து வருகிறார். அவரது அறிக்கை கிடைத்ததும் ஈட்டுறுதி கழகம் மருத்துவ செலவிற்கு நிர்ணயித்த உச்சவரம்பின் கீழ் கிடைக்கக்கூடிய நிதி நிலையை பொறுத்து அரசு முடிவு எடுக்கும். லைசென்சு பெற்ற உப்பள நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு 1966ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ஆம் தேதி முதல் சேம நிதி திட்டம் அமுலில் உள்ளது.

**திரு. மு. அப்பாதுரை :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே, இன்றைக்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உப்பளங்களிலே பணிபுரிந்து வருகிறார்கள். இவ்வளவு காலமாகியும் இ.எஸ்.ஐ., பி.எப். போன்ற வசதிகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை, இப்போது ஆணையர் புள்ளி விவரம் சேகரித்துக் கொண்டு வருகிறார்கள் என்று அறிவித்தார்கள். அதற்காக நன்றி. எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இது அமலுக்கு வரும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, விரைவிலே அமலுக்குக் கொண்டு வர எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும். அது மட்டுமல்ல, இதுவரையில் கவர் ஆகாத மற்றத் தொழிலாளர்களுக்கும் இ.எஸ்.ஐ.யை விரிவுபடுத்த வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு உமாநாத், ரமணி போன்றவர்களின் உதவிகள் எல்லாம் இந்த அரசுக்குத் தேவைப்படுகிறது. ஏனென்றால் வேலைநிறுத்தம் செய்துவிட்டு உடனே இ.எஸ்ஐ.க்கு சென்று 91 நாட்கள் சிக் லீவில் இருந்துவிடுகிறார்கள். ஆல் இண்டியா ஆவரேஜ் 8 சதவீதம் என்று இருக்கிறபோது தமிழ் நாட்டிலே அந்த சதவீதம் 16.5 என்ற நிலையில் இருக்கிறது. அந்தத் தொகை எல்லாவற்றையும் தமிழக அரசே ஈ.எஸ்.ஐ.க்கு கொடுத்துக்கொண்டு வருகிறது. சென்ற ஆண்டு ரூ. 275 லட்சம் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தொகையை மெடிக்கல் பெனிபிட்ஸ் விரிவாக்கத்திற்கு பயன்படுத்தலாம். மிகப் பெரிய தலைவர்கள், தொண்டு செய்தவர்கள் எல்லாம் இங்கே இருக்கிறீர்கள். இந்த அரசின் சார்பாக பணிவோடு வேண்டிக் கொள்வது எல்லாம் வேலை நிறுத்தம் வேலை நிறுத்தமாக இருக்கவேண்டுமே தவிர, ஈ.எஸ்.ஐ. லீவாக மாறாமல் நீங்கள் பார்த்துக்கொள்வீர்களானால் எல்லாத் துறைக்கும் விரைவில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு எல்லா அவசர முயற்சிகளையும் அரசு எடுத்துக்கொள்ளும்.



**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் அறிவித்திருக்கிற குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தைக்கூட இந்த உப்பளத் தொழிலாளர்கள் பெறாமல் இருக்கிறார்கள். குறிப்பாக தமிழக அரசே நடத்துகிற தமிழ் நாடு சால்ட் கார்ப்பரேஷனில் கூட குறைந்தபட்சக் கூலியை கொடுக்காத நிலை இருக்கிறது. ஆகவே குறைந்தபட்சக் கூலியை கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தக்க முறையில் அரசிற்கு முறையீடு வருமானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

### கொடைக்கானல் தாலுகாவைச் சார்ந்த பூண்டி கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 272—**திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலுகா பூண்டியில் குடிநீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(ஆ) அத்திட்டம் எப்போது செயல்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) கொடைக்கானல் ஒன்றியத்தைச் சார்ந்த பூண்டி கிராமம் இரண்டாவது கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது, இக்கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான பூர்வாங்க ஆய்வு வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(ஆ) இத்திட்டம் 1983 ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதிக்குள் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### மதுரை பசுமலையிலுள்ள மீனாட்சி தியாகராசர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள வீடுகள்.

*வினா எண். 273—**திரு. கு. ரமணி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) மத்திய அரசு உதவியளிக்கின்ற தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின்கீழ், மதுரை தெற்கு தாலுகா பசுமலையில் உள்ள மீனாட்சி தியாகராசர்

குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 160 வீடுகளில் குடியிருந்து வரும் தொழிலாளர்களுக்கே அந்த வீடுகளை சொந்தமாக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) இத்திட்டம் குறித்து மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அனுமதியளித்து உத்தரவு தரப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில் அது குறித்த விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ). ஆம். தொழிலாளர் மானிய வீட்டு வசதி திட்டத்தின்கீழ் தனியார் துறையில் கட்டப்பட்டுள்ள வீடுகளை அவற்றில் குடியிருப்பவர்களுக்கு விற்பது விரும்பத்தக்கதல்ல என்று கருதி, இவ்வரசு, அவ்வாறு விற்கலாம் என்ற மத்திய அரசின் பரிந்துரையை ஏற்கத் தேவையில்லை என்று முடிவுஎடுத்து, இந்த முடிவை மத்திய அரசுக்கும் தெரிவித்துள்ளது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் மற்றுமுள்ள பொது மக்கள் மத்தியில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும், உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கும் கட்டப்படுகிற வீடுகளை பல இடங்களில் அவர்களுக்கு சொந்தமாக்குகிறார்கள். மத்திய அரசாங்கம் மானியம் தந்து தொழிலாளர்களுக்காக கட்டப்படுகிற இந்த வீடுகளை அவர்களுக்கு சொந்தமாக்குவதிலே என்ன தவறு இருக்கிறது ? ஏன் அப்படி சொந்தமாக்குவதை அரசு தடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் ஒரு உதாரணத்துடன் சொல்ல விரும்புகிறேன். சென்னையில் 100 வீடுகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த 100 வீடுகளை அங்கே குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கிவிட்டால் புதியதாக வரக்கூடிய தொழிலாளர்களுக்கு வீடு கொடுப்பது எப்படி? ரிடையர் ஆன தொழிலாளர்கள், ரெமூவ் ஆன தொழிலாளர்கள், டெர்மினேட் ஆன தொழிலாளர்கள், அத்தனை பேரும் அந்த வீட்டிலேயிருந்து வெளியே போகவில்லை. அந்த வீடு தங்களுக்குச் சொந்தமாக வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே அவர்கள் வெளியே போகாது, அங்கே குடியேறவேண்டுமென்று விரும்புகிற தொழிலாளர்களுக்கு எப்படி வீடு கொடுக்க





முடியும்? இன்றைய தினம் அவர்கள் வெளியே இருந்துகொண்டு 400 ரூபாய், 500 ரூபாய் என்று தங்கள் சம்பளத்தில் பாதியை கொடுத்துக்கொண்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை மனதில் வைத்து தான் அவர்கள் வெளியே போகிறபோது வேறு வேறு தொழிலாளர்களுக்கு கொடுக்கலாம் என்று ஒரு எண்ணத்தோடு இந்த அரசு மத்திய அரசிற்கு கடிதம் எழுதியது. ஆனால் இப்போது வெளியேறாத தொழிலாளர்கள் நிரம்ப இருக்கிற காரணத்தாலே ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் போகமாட்டேன் என்று அங்கேயே இருக்கிற காரணத்தாலே இந்த பிரச்சினை பற்றி மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் செயலாளருடன் பேசி, கோப்பை முதல்வர் அவர்களுக்கு அனுப்ப இருக்கிறேன். எனவே இந்தப் பிரச்சினை எந்த அளவிற்கு போகும் என்பதை பின்னால் பார்க்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெறுகிற தொழிலாளர்களுக்கும் அந்த வீட்டை சொந்தமாக்குவதினால், புதியதாக வருகிறவர்களுக்கு வீடு கொடுப்பதில் கஷ்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீடு கொடுப்பதற்கு, முதலாளிகளை, தொழிற்சாலை சொந்தக்காரர்களை—வீடு கட்டும் திட்டத்தை அவர்கள் கைவிட்டு இருக்கிறார்கள். அவர்களை நிர்ப்பந்தம் செய்து ஒவ்வொரு வருஷத்திற்கும் இவ்வளவு வீடுகளை கட்டவேண்டுமென்று தமிழகம் முழுவதும் அரசு நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தால், இப்படி வீட்டை சொந்தமாக்குவதில் எந்த ஆபத்தும் ஏற்படாது. புதியவர்களுக்கு வீடு கிடைக்காமல் போகாது ; ஆகவே இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டை செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு திட்டத்தை தமிழக அரசே கொண்டுவரவேண்டுமென்று, சட்டம் இயற்ற முன்வந்தால், தமிழ்நாட்டுக்கு தொழிற்சாலை வருவதே ஆபத்திலே முடிந்துவிடும். அகில இந்திய ரீதியில் மத்திய அரசு இவ்வளவு பேர்கள் கொண்ட ஒரு தொழிற்சாலை கட்டுவதாக இருந்தால், இத்தனை தொழிலாளர்களுக்காவது வீடு கட்டித் தரவேண்டுமென்று சட்டம் கொண்டு வர வேண்டுமென்று யோசனை செய்தார்கள் பல்லாண்டுகளுக்கு முன்னால். அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டார்கள். ஆனாலும், மூலக் கேள்விக்குச் சம்பந்தப் பட்டதைச் சொல்லி விடுகிறேன், இந்தப் பிரச்சினைபற்றி மறுபரிசீலனை செய்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தமிழ்நாடு கூட்டு றவு வீட்டுவசதி சங்கம் 1981-ம் ஆண்டு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 800 இலட்சங்களும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 96.19 இலட்சங் களும் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து ரூ. 600 இலட்சங்களும் கடனாகப் பெற்றுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டு நாம் பெற்ற கடனைப் பற்றிச் சென்னார் கள். இப்பொழுது கடனைப் பெறுவதிலே தாமதம் ஏற் படுவதன் காரணமாக, பல இடங்களிலே உள்ள வீடுகட்டும் சங்கங்கள் தங்களுடைய பணிகளைத் தொடர முடியாமல் இருக்கிறது. இன்று நகரப் பகுதிகளிலே அல்லது கிராமப் பகுதிகளிலே வீடு கட்டுவதன் மூலமாக நலிவுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கமுடிகிறது. வீடில்லாதவர்களுக்கு வீடும் கொடுக்க முடிகிறது. ஆகவே, இதை மானியமாக, அல்லது கடனாகத்தான் கொடுக்கிறோம். கடனும் ஒழுங்காக வசூ லாகிக் கொண்டிருக்கிறது. இந்த 1982-ஆம் ஆண்டு இதுவரை, மத்திய காப்பீட்டுக் கழகத்திடமிருந்தோ அல்லது ஹட்கோவிடமிருந்தோ எந்தவித நிதியும் பெறவில்லை. அந்த நிதியைப் பெறுவதற்குத் தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதோடு, வட்டி வீதம் அதிகமாக யிருக்கிறது. அந்த வட்டி வீதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இத்திட்டத்திற்கு 1982-ஆம் ஆண்டு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூபாய் பத்து கோடியை 11 சதவீத வட்டி வீதம் சொத்துப் பொறுப்பு உறுதியின் பேரில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்குக் கடனாக அளித்துள்ளது. ஆயுள் காப்பீடுக் கழகத்தின் கடன்களை இருபது வருடங்களில் திருப்பித் தர வேண்டும். வட்டி அதிகம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன், இந்த அரசும் ஒத்துக் கொள்கிறது. நானே பம்பாய் சென்று இதைப்பற்றிப் பேசினேன். ஆனால் அவர்கள் வட்டியை மேலும் உயர்த்துவதாக இருக்கிறார்களே தவிர குறைப்பதாக இல்லை என்பதை மிக வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்

திரு. சோ. அழகர்சாமி : தலைவர்களே, வட்டியை அவர்கள் குறைக்கவில்லை என்று சொன்னார்கள். 9 சதவீத மாக முன்னால் இருந்தது 11 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. வேறு மாநிலங்களுக்கெல்லாம் வட்டியைக் கொஞ்சம் குறைத்துத் தருவதாக நான் கேள்விப்படுகிறேன். அதோடு, கிராமப் பகுதியிலே வீடு கட்டுவதற்காக 3,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. 3,000 ரூபாயில் வீடு கட்ட முடியாது. கவென்றால் இப்பொழுது எல்லாவிதமான மூலப் பொருட் ஏளின் விலை உயர்ந்து விட்டதால் 3,000 ரூபாயில் கட்ட



முடியாது என்பதை அமைச்சரவர்களும் உணர்ந்திருப்பார் கள். எனவே, குறைந்தபட்சம் அதை, 5,000 ரூபாயாக வாவது உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மற்ற மாநிலங்களுக்குக் குறைந்த வட்டியில் கொடுக்கிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு உறுப் பினரவர்கள் சொன்னதை வைத்து, பரிசீலனை செய்து அப்படி யிருந்தால் அதற்காகப் போராடத் தயாராக இருக்கிறோம். அடுத்தபடியாக, கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாக கொடுக்கப்படும் தொகையை 4,000 ரூபாயாக உயர்த்தி யிருக்கிறோம். இப்பொழுது 5,000 ஆக உயர்த்த வேண்டுமென்று, தொழிற்சங்க பாணியிலே அது கேட்கப்படுகிறது. கோரிக்கை நியாயமற்றது என்று தள்ளிவிட முடியாது. நியாயமான கோரிக் கைதான். இந்த அரசே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எண்ணு வதற்கு முன்னதாகவே அதைப்பற்றி நினைத்துஅதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித் துக்கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, தமிழகத்தில் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் சிறப் பாகச் செயல்பட்டு வருகின்றன. ஆனாலும், கிராமீய கூட்டுறவுச் சங்கங்களிலும், நகரப் பகுதிகளிலேயும் செயல்படுகின்ற வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களிலே அதிகமான மனுக்கள் வந்துள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை தருகின்ற வகையில் இந்த நடப்பாண் டில் அதிக நிதியை ஒதுக்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்புடைய தாக இந்தக் கேள்வி இல்லை என்றாலும், அவர்களுடைய எண்ணத்தை வெளியிடுகிறார்கள். முயற்சி எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, கிராமங்களிலே இந்த வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களிலே யிருந்து அரிசன மக்கள் வீடு கட்டுவதற்கு ஏராளமானவர்கள் விண்ணப்பித்தார்கள். மனுக்களெல்லாம் பரிசீலனை செய்யப் பட்டு பணம் வழங்குகின்ற கால கட்டத்தில் பணம் இல்லை என்று அதிகாரிகள் சொல்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படி யென்றால் உடனடியாக போதிய நிதியை ஒதுக்கி அவர்களுக் கெல்லாம் பணம் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எல்லா முயற்சிகளும் விரைவிலே முழு மனதோடு, ஆர்வத்தோடு எடுக்கப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே சர்மா நகர் என்ற தொழிலாளர் பகுதியில் மத்திய அரசின் உதவியினாலும் பி. அண்ட். சி. அல்லது மற்ற மில் தொழிலாளர்களுடைய உதவியினாலும் நீண்ட நாட்களுக்கு முன்னாலே வீடுகள் கட்டப்பட்டன. ஏறக்குறைய 30, 35 ஆண்டுகாலமாக அந்த வீடுகளிலேயே குடியிருந்து இன்றையதினம் அவர்கள் வெளியேறக்கூடிய சூழ்நிலையிருக்கிற காரணத்தால் அந்த வீடுகளை அவர்களுக்கே கொடுக்கவேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டு வருகிறார்கள். மத்திய அரசுகூட மாநில் அரசு வற்புறுத்தினால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு கொடுக்கலாம் என்று தாக்கீது அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. மற்ற மாநிலங்களிலேகூட அப்படிப்பட்ட வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல், என்னுடைய தொகுதியிலே இருக்கிற சர்மா நகர் வீட்டுத் திட்டத்திற்கு மாநில சர்க்கார் எந்தவிதமான தொகையையும் செலழிக்காத காரணத்தால், அந்த சர்மா நகரில் வாழ்கிற தொழிலாளர்களுக்கு அந்த வீடுகளைச் சொந்தமாக்குவாரா என்று அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை.)

திரு. சு. பாலன் : அமைச்சர் பதில் சொல்லவில்லையே.

திரு. க. அன்பழகன் : பதில் இல்லை என்று அமைச்சர் எழுந்து சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மறுபரிசீலனை செய்கிறேன் என்று சொன்னாரே அதுதான் பதில்.

திரு. சு. பாலன் : அது முந்தைய கேள்விக்கான பதில், இதற்கல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி மதுரையில் இருக்கிற தொழிலாளர்களுக்கு வீடுகளைச் சொந்தமாக்குகின்ற திட்டம் பற்றியது. நீங்கள் உங்கள் தொகுதியிலே இருக்கிற வீடுகளைப் பற்றி கேட்டீர்கள். அமைச்சர் ஏற்கனவே என்ன சொன்னார் என்றால், புதிதாக வருகின்ற தொழிலாளர்களுக்கு வீடுகள் கொடுக்க வேண்டியிருப்பதால், ஓய்வு பெற்றவர்கள் அந்த வீடுகளைக் காலி பண்ண வேண்டுமென்று முதலிலே சொன்னோம். பாதிபேர்கள் காலி செய்யவில்லை. ஆகவே, திரும்ப மறுபரிசீலனை செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எல்லா இடங்களுக்கும் அதுவேதான் பொருந்தும்.



திரு. சு. பாலன் : நான் என்னுடைய தொகுதியில் சொன்ன அந்த இடத்தைப் பொறுத்தவரையில் மாநில சர்க்கார் எந்த உதவியும் செய்யவில்லை. மத்திய சர்க்கார் உதவியுடன் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தத் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்கப்படுமா என்று நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதிதாக வருகின்ற தொழிலாளர்களுக்கு வீடு கொடுக்க வேண்டியுள்ளது. ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் அந்த வீட்டை விட மறுக்கின்றார்கள் என்று அமைச்சர் ஏற்கனவே சொன்னார்.

திரு. சு. பாலன் : இதில் மாநில சர்க்கார் ஒரு தொகையும் செலவழிக்கவில்லை. மத்திய சர்க்கார்தான் செலவழித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் பிரச்சினை அல்ல, இது. வீடு கட்டுவதிலே பிரச்சினை வரவில்லை. யார் கட்டியிருந்தாலும் காலி செய்வதைப் பற்றிய பிரச்சினை.

திரு. சு. பாலன் : சொந்தமாக்கித் தருவதைப் பற்றிய பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; சொந்தமாக்கித் தருவதற்குத்தான் பதில் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். சொந்தமாக்குவது கஷ்டம். தொழிற்சாலைகளுக்கு வீடு சொந்தமாக இருந்தால்தான் அந்தத் தொழிலாளர்கள் அதிலேயே வந்து குடியிருக்க முடியும். புதிதாக வருபவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் விட்டார்கள். அது நடக்காது போல் இருக்கிறது. ஆகவே, வேறு என்ன செய்வது என்று யோசனை செய்கிறோம் என்று சொன்னார்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், விடையை என்னை விட மிக அழகாகச் சொல்லிவிட்டீர்கள். (சிரிப்பு).

### தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் 1981—ஆம் ஆண்டு பெற்ற மொத்த கடன் தொகை.

* வினா எண் 274—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்குவதற்காக ஆயுள் காப்பீடுக் கழகத்திடமிருந்தும் மத்திய ஹட்கோ ( HUDCO ) நிறுவனத்திடமிருந்தும் மற்றும் தேசிய வங்கிகளிடமிருந்தும் மாநில வீட்டு வசதி சங்கம் 1981-ம் ஆண்டு பெற்ற மொத்த தொகை எவ்வளவு?

[1983 பிப்ரவரி 11

திருமங்கலம் வட்டம், சந்தையூர் அருகே அமைக்கப்பட்ட ஏரி.

*வினா எண் 275—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம் சந்தையூர் அருகே 10 இலட்சம் செலவில் ஏரியொன்று புதிதாக அமைக்கப்பட்டதா ?

(ஆ) அந்த ஏரி தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

நிலத்தடி நீரியல் ஆய்வுகள் நடத்தும் திட்டம்.

*வினா எண் 276—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் இலவசமாக நிலத்தடி நீரியல் ஆய்வுகள் நடத்தித்தர அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இலவசமாக இல்லாமல் குறைந்த தொகைக்கு செய்து கொடுக்கலாமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏழை எளியவர்களுக்கு அல்லது ஆதி திராவிட மக்களுக்குக்கூட அவர்களுக்கு நீதி கிடைக்காது அல்லது அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்ல முடியாது என்ற நிலையிலே நாம் இலவசமாக அவர்களுக்கு அந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். ஆனால் விவசாயத்தைப் பொறுத்தவரையிலே குறைந்தபட்சம் இந்த நிலத்தடி நீரியலைப் பார்க்கின்றவர்கள் எங்கிருக்கிறார்கள் என்றுகூட சில விவசாயிகளுக்குத் தெரியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு மாதங்கள், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒருவரை அனுப்பி வைத்து அந்தத் தேவையின் அடிப்படையில் இலவசமாகச் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1983 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில் எந்தெந்தப் பகுதிகளில் எப்படி நிலத்தடி நீர் இருக்கின்றது என்கின்ற குறிப்புகளை இப்பொழுது வைத்திருக்கிறோம். ஒரு விவசாயி தன்னுடைய நிலத்திலே நிலத்தடி நீரைப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்பினால், ஆய்வு செய்து நிலத்தடி நீர் இருக்கிறதா என்பதைப் பார்த்துவிட்டு கிணறு தோண்டுவாரேயானால் அந்தக் கிணறு பொய்த்துப் போகாது. அவர்கள் ஏதோ மரபு வழியாக சிலரைப் பயன்படுத்தி கிணறு தோண்டுகிறார்கள். பலர் வெற்றி பெற்று விடுகின்றனர் ; சில பொய்த்துப் போகின்றன, கடன் வாங்கி பிறகு கட்ட முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அவர்களுக்கு ஒரு குறைந்த தொகையை வசூல் செய்து கொண்டு செய்யலாம். இல்லையென்று சொன்னால், இலவசம் என்று வருகின்றபொழுது எல்லோருக்குமே போய்ச் செய்ய வேண்டும். கிணறு வெட்ட விரும்புகிறார்களோ இல்லையோ எதற்கும் பார்த்து வைத்துக் கொள்ளலாமே என்ற எண்ணம் கூட வந்துவிடும். எனவேதான் குறைந்த தொகையாக வசூல் செய்யலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

[முற்பகல் 10-10]

நிலத்தடி நீரின் அளவை உயர்த்துவதற்கான திட்டம்.

*வினா எண். 277—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் நிலத்தடி நீர் குறைந்து வருவதால் எதிர் காலத்தில் குடிநீர் கிடைப்பது கடினம் என்பதை அரசு அறியுமா?

(ஆ) அக்குறையைப் போக்க ஏரிகள், குளங்கள், அமைக்க அரசிடம் Crash Programme திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) காட்டாறுகளின் குறுக்கே ஏரிகள், குளங்கள், சிறப்புச் சிறுபாசன திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்றன. அவைகளில் தேக்கப்படும் மழைநீர் நேரடிப்பாசனத்துக்கு பயன்படுவதுடன், அப்பகுதியைச் சுற்றிலும் நிலத்தடி நீர் உயரவும், ஏதுவாகிறது. நிலத்தடி நீரை உயர்த்தும் நோக்குடன் சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் ஆங்காங்கே பொருத்தமான இடங்களில் குட்டைகளும் அமைக்கப்படுகின்றன. இக்குட்டைகளில் தேக்கப்படும் மழை நீரால் குட்டையைச் சுற்றிலும் உள்ள பகுதியில் நிலத்தடி நீர் உயருகிறது. கசிவு நீர் குட்டைகள் அமைக்கும் திட்டத்தினால் நில நீர் அளவு ஏற்றம் ஏற்படுகிறது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி எவ்வளவு குட்டைகளுக்குத் திட்டம் தீட்டப் பட்டு இருக்கின்றது. அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட் டிருக்கிறது. எதிர்காலத்தில் எவ்வளவு குட்டைகளை ஏற் படுத்துவதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலே உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில் சுமார் 180 ஊராட்சி ஒன்றியங்கள் நிலநீர் அளவை விட அதிகமான அளவு பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற ஆபத்தான செய்தி தெரிந்ததற்குப் பிறகு, இப்படிப்பட்ட குட்டை களை அமைக்க விரைவு படுத்த வேண்டும் என்று அரசு முடிவெடுத் திருக்கிறது. புதிதாக தற்போது 50 ஏரிகளும், குளங்களும் அமைக்கும் திட்டத்திற்கு ரூ. 382 லட்சம் செலவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதோடு 14 ஏரிகளும், குளங்களும் 161 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரசுக்குத் திட்ட மதிப்பீடுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இவைகளைக் குறித்தும் நாம் இப் போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்த வேலை கள் எல்லாம் எந்தெந்த ஏஜன்சிகள் மூலம் செய்யப்படுகின்றன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, இது நிலத்தடி நீர் பிரிவைக் கவனிக்கின்ற பொதுப் பணித் துறை சார்பாகவும் வேளாண்மைப் பொறியியல் சார்பாகவும் கவனிக்கப்படுகிறது. இதற்கு முன்பு ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித் துறை சார்பாக செய்யப்பட்டு வந்திருக்கிறது. அதல்லாமல், வறட்சியால், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு புனர் நிர்மாணப் பணிகள் செய்யப்படும் திட்டத்தின்கீழும், ஒருங் கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும், அவைகளைத் தனித்தனிய க பிரித்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர் களுடைய பதிலில் காட்டாற்று தண்ணீரைத் தடுத்து, அங்கே எல்லாம் புதிய கண்மாய்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்



கப்படுகிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே பல ஆயிரக் கணக்கான கண்மாய்கள், குளங்கள், இன்றைக்கு வறண்டு இருக் கின்றன. அப்பேற்பட்ட இடங்களில், பெரிய பெரிய ராட்சத கிணறுகளை அமைத்து தண்ணீரைத் தேக்கி வைத்து, பக்கத்து கிணறுகளுக்கு கொடுக்க வேண்டும். அதோடு கால்நடைகளுக் கும், ஆடு மாடுகளுக்கும் தண்ணீர் கொடுக்க வாய்ப்பாக இருக்கும். இந்தத் திட்டத்தை ஏற்கெனவே தெரிவித்ததைப் போல 'கிரஷ்' ப்ரோகிராமாகப் போட்டு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, முதலாவது கட்டமாக முன்னாள் ஜமீன் குளங்களாக இருந் ததை இப்போது பொதுப்பணித்துறை நேரடியாக எடுத்து, கிட்டத் தட்ட 3,000 பெரிய ஏரிகள், கண்மாய்கள் போன்ற வற்றை நவீனப்படுத்தி, ஆழப்படுத்த வேண்டும் என்ற அடிப் படையில் 10 கோடி ரூபாய் செலவில் அரசு ஒரு திட்டத்தை எடுத்திருக்கிறது. ஏற்கெனவே பொதுப்பணித் துறையினரால், இருக்கக் கூடிய ஏரிகளையும், கண்மாய்களையும் வாய்ப்பு ஏற்படுகின்ற நிலைமைக்கேற்ப பணம் ஒதுக்கி, இன்றைக்கு அந்த ஏரிகளின் கரைகளைப் பலப்படுத்தி, ஆழப்படுத்தும் நடவடிக்கை நடந்து வருகின்றது. மூன்றாவதாக, இப்போது, ஏரி குளங் களை ஆக்கிரமிப்பு செய்து நீர் வரத்து அதிகமாக இருந்தாலும் கொள்ளளவை குறைத்து விடுகிறார்களே அதைத் தடுப்பது எப் படி என்பதை அரசு தீவிரமாக ஆராய்ச்சி செய்து கொண் டிருக்கிறது. அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்தால் மாண்பு மிகு உறுப்பினர் கருதுகின்ற பல்வேறு எண்ணங்கள் திட்டங் களாக நடைமுறைப்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது.

### விளவங்கோடு தாலுகா மடிச்சல் கால்வாய் திட்ட வேலைகள்.

*வினா எண் 278—திரு. டி. மணி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகாவில் மடிச்சல் கால்வாய் திட்ட வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கேரள அரசு நெய்யாறு அணையிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஒப்பந்தப்படி 150 கன அடி தண்ணீர் விடும் போது இத் திட்டம் எடுத்துக் கொள்ளப் படும்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மடிச்சல் கால்வாய்த் திட்டம் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் இதுவரையிலும் இந்த 150

(ஆ) ஒவ்வொரு காலாண்டிலும் மாநிலத்திற்கென ஒதுக்கப் படும் சிமெண்ட்டில் ஒரு குறிப்பிட்ட அளவு சிறுதொழில்களுக் கென ஒதுக்கப்படுகிறது.

திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இதற்கு முன்னாலேயிருந்த ஆட்சிக் காலத்திலே சிமெண்ட் டை மூலப் பொருளாகக் கொண்டு நடத்தும் தொழிற்சாலைக்கு சிமெண்ட் பெர்மிட் வழங்கப்பட்டுள்ளதா ? அப்படியானால், எத்தனை தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என் பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, இதற்கு முன்னாலே சுமார் 13 ஆயிரம் டன்கள் வரைக்கும் சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு சிறுதொழில்களுக்கு ஒவ்வொரு காலாண்டும் வழங்கப்பட்டு உள்ளது. எத்தனை தொழில்களுக்கு என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. அதற் கென தனிக்கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

[முற்பகல் 10—20]

திரு. ச. அங்குசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழிலாக நடத்திக்கொண்டு இருக்கும் மொசைக்கல் தயாரித் தல், சிமெண்ட் கிராதி தயாரித்தல், சிமெண்ட் ஸ்லாப் தயாரித் தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் நடத்துபவர் களுக்குப் பர்மிட் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலை வர் அவர்களே, ஏற்கெனவே கொடுத்துக்கொண்டுதான் வருகி றார்கள்.

### திருச்சி மாவட்டத்தில் சிமெண்ட் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம்.

*வினா எண். 280—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் சிமெண்ட் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஆம். திருச்சி மாவட்டம் மாயனூரில் சுமார் 8 கோடி மதிப்பீட்டில் ஒரு சிமெண்ட் குழாய் தயாரிக்கும் தொழிற் சாலை நிறுவப்படவிருக்கிறது.



பேரவைத் தலைவர்
திரு. இரா. தாமரைக்கனி : அமைக்கப்படவிருக்கும்
அவர்களே, திருச்சி மாவட்டத்தில் பணி எப்போதும்
தொழிற்சாலையின் கட்டுமான அடையும் ? அதனால்
துவங்கப்படும். எப்போது அது முடிவு கிடைக்கும் என்பதை
எத்தனை பேருக்கு வேலைவாய்ப்புக்
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு
மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாதங்களில்
பேரவைத் தலைவர் அவர்களே, மே—ஜூன் இருக்கின்றன. பணி
அதனுடைய பணிகள் துவங்கப்பட 30 மாதத்திற்குள்
துவங்கப்பட்ட காலத்தில் இருந்து இதனால் சுமார் 500
அந்தத் திட்டம் முடிக்கப்படும்.
பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

தலைவர் அவர்களே,
திரு. இரா. தாமரைக்கனி : அமைக்கப்படவிருக்கும் அந்தத் தொழிற்
திருச்சி மாவட்டத்திலே குடும்பத்தில் உள்ளவர்களுக்கு
சாலைக்கு நிலங்கள் கொடுத்த முன்னுரிமை அளிக்கப்படுமா
வேலை வாய்ப்பு அளிப்பதில்
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு
மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தொழிற்சாலையில்
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் ஆரம்பித்தாலும்
மட்டுமல்ல, எந்தத் தொழிற்சாலை முன்னுரிமை கொடுத்து
அதற்கு நிலம் கொடுப்பவர்களுக்கு என்ற அரசு ஆணை
வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும்
ஏற்கனவே அமலில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத்
திரு. இரா. கருப்பையா : மாவட்டத்தில் அமைக்கப்பட
தலைவர் அவர்களே, திருச்சி தொழிற்சாலையில் 500
விருக்கின்ற இந்த சிமெண்ட் என்று அமைச்சர்
பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் அந்தத் தொழிற்சாலை
அவர்கள் சொன்னார்கள். அதில் முன்னுரிமை கொடுக்கப்
நிறுவ நிலம் கொடுத்தவர்களுக்கு அதுபோக, மீதமுள்ள
படும் என்றும் தெரிவித்தார்கள். இருக்கின்ற வேலை
இடங்களில் அந்த மாவட்டத்தில் செய்து, வேலையின்றி
வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு கொடுத்து வேலை
இருக்கும் இளைஞர்களுக்கு முன்னுரிமை விரும்புகிறேன்.
வாய்ப்பு அளிக்கப்படுமா என்று அறிய

மாண்புமிகு
மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அமலில்
பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் ஏற்கனவே துவங்கப்பட
இருக்கிறது. எந்த மாவட்டத்தில் தொழிற்சாலை வேலை
விருக்கிறதோ அந்த மாவட்டத்தில் இருக்கும் செய்துள்ளவர்களுக்குத்
வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு மாவட்டத்தில்
தான் முன்னுரிமை தரப்படுகிறது. அந்த ஏற்படுகிற
போதுமான ஆட்கள் இல்லை என்கிற நிலைமை வேலைவாய்ப்ப
போதுதான் அருகில் உள்ள மாவட்ட தேர்தெடுக்கிறார்கள்
அலுவலகத்தில் உள்ள ஆட்களைத்

கனஅடி தண்ணீர் தருவதாக ஒரு ஒப்பந்தம் 2 அரசுகளுக்கும் இல்லை என்பதாகும். அதற்கு மத்தியிலே கடந்த காலத்திலேயிருந்த அரசாங்கத்திடமிருந்து. அதனுடைய அதிகாரிகளிடமிருந்து—இன்னொரு 80 கன அடி முதல் 110 கன அடி வரை தண்ணீர்தான் தரமுடியும் என்ற ஒரு குறிப்பை ஏற்கெனவே நான் மாண்புமிகு அமைச்சருடைய கையிலே கொடுத்திருக்கிறேன். இருந்தாலும்கூட, இப்போது இந்தத் திட்டம் 1977-க்கு முன்னாலே சிரணிப் படையினராலே வெட்டப்பட்டு அந்தக் கால்வாய் இருக்கிறது. அந்தக் காலக்கட்டத்திலே 9 குளங்களுக்கு நிரந்தரமாக தண்ணீர் கொடுத்து வந்தார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இப்போது இருக்கின்ற கால்வாயை கொஞ்சம் அகலப்படுத்தி, இந்த 9 குளங்களுக்கும், ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கின்ற அளவில், வருகின்ற தண்ணீரிலே ஒரு சின்னப் பகுதியை மட்டும் கொடுக்கின்ற நிலையை உருவாக்கி திட்டத்தை அமுலாக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்குத் தரப்பட்ட குறிப்பின்படி தமிழக அரசு 1978-ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்ற அடிப்படையில் ரூபாய் 18.10 இலட்சத்திற்கு அனுமதி ஏற்கெனவே வழங்கியது. இந்தத் திட்டத்தை நாம் எடுத்துக் கொள்கின்றபோதுதான் கேரள மாநில அரசும் இந்த மாநில அரசும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் நெய்யாறு அணையிலிருந்து கேரள அரசு தமிழ்நாட்டுக்கு விடும் என்று எதிர்பார்த்து இந்தத் திட்டத்தைத் தீட்டினோம். ஆனால், அவர்கள் அப்படி நாம் எதிர்பார்த்த ஒப்பந்தப்படி தண்ணீர் விடவில்லை. வினாடிக்கு 80 கன அடி முதல் 100 கன அடி தண்ணீர்தான் வருகிறது. எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக பயன் இருக்காது என்ற ஒரு கருத்தைச் சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் 110 கன அடி கொடுப்பதாக ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதுகுறித்து நான் விசாரித்து இந்த 150 கன அடி போதும் என்று கருதினால் வினாடிக்கு 110 கன அடி கூட இருந்தாலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்ற நிலைமை இருக்குமானால் 150 கன அடி வரவேண்டுமென்று நாம் முயற்சித்தாலும் இந்தத் திட்டத்தை நாம் ஒத்திவைக்காமல் நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக்களை அரசு பரிசீலிக்கும்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி எல்லாம் எற்கெனவே கால்வாய் இருக்கின்றது. இந்தக் கால்வாயை சீரமைத்தாலே போதுமானது. அந்த இடது புறக் கால்வாயிலே இப்போது வருகின்ற 80 கன அடி ஆனாலும் சரி, 100 கன அடியானாலும் சரி, அதிலே வருகின்ற தண்ணீரிலே ஒரு 30, 40 கன அடி தண்ணீர் லீக்கேஜ்-ஆகி போய்க்கொண்டிருக்



கிறது. இந்த லீக்கேஜ்ஜை அடைத்து பழுது பார்த்தால் போதும். இந்த 9 குளங்களுக்கு தண்ணீர் கொடுக்கமுடியும். அதை கணக்கில் எடுத்துக்கொண்டு இதை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது குறித்து பரிசீலனை செய்யும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, லீக்கேஜ் ஆவதைத் தடுத்தாலே—உறுதியான அளவு இல்லாவிட்டாலும் கூட—ஓரளவு தண்ணீர் கொடுக்க முடியும் என்று என்ஜினீயர்கள் சொல்கிறார்கள். ஆனால், அதற்கு வேண்டிய, அந்த வேலை செய்வதற்கு, இந்த வறட்சி நிவாரண ஏற்பாடுகளில்கூட, அந்த வேலையைச் செய்யலாம் என்று சொன்னாலும் கூட, பொதுப்பணித்துறைக்கு சிமெண்ட் கிடைப்பதற்கு முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் பிரத்தியேகமாக கவனித்து இந்த வறட்சி நிவாரண வேலையில் இப்படிப்பட்ட லீக்கேஜை அடைப்பதற்குத் தேவையான சிமெண்ட்டை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணியில் சிமெண்ட் கிடைக்கவில்லை என்பதற்காக பணி நின்றுவிடக்கூடாது என்று கருதி இப்போது இறக்குமதி செய்யப்படுகின்ற சிமெண்ட்டில் அவர்களுக்கு தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அங்கே நிச்சயமாக சிமெண்ட் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

## சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு தொழில் துவங்கிடும் தொழிற்சாலைகள்.

*வினா எண். 279—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு புதிதாகத் தொழில் துவங்கும் தொழிற்சாலைகளுக்கு சிமெண்ட் பெர்மிட் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு புதிதாகத் தொழில் துவங்கும், தொழிற்சாலைகளுக்கு சிமெண்ட் வழங்கப்படும்.

[1983 பிப்ரவரி 14

## சிமெண்ட் இறக்குமதி

*வினா எண். 281—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1979–1980, 1980–1981 ஆம் ஆண்டுகளில் டான்செம் எத்தனை டன் சிமெண்ட் இறக்குமதி செய்தது ?

(ஆ) என்னவிலைக்கு அதை வாங்கியது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) 1979–80 மற்றும் 1980–81 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தால் நேரடியாக சிமெண்ட் ஏதும் இறக்குமதி செய்யப்படவில்லை. அவ்வாண்டுகளில் சென்னை, தூத்துக்குடி மற்றும் பாண்டிச்சேரி துறைமுகங்களில் மத்திய அரசின் சிமெண்ட் கட்டுப்பாட்டு அலுவலர் அவர்களின் கையாளுதல் மற்றும் விநியோகிக்கும் (Handl ng-c m-D strib tion Agents) ஏஜெண்டுகளாகவே தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் செயலாற்றியது.

(ஆ) மத்திய அரசின் ஆணைப்படி ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் ( S.T.C. ) என்ற மத்திய அரசு நிறுவனத் தினிடமிருந்து சிமெண்ட் அவ்வப்போது அமுலில் இருந்து வந்த கட்டுப்பாடு விலைக்கு வாங்கி அதே விலைக்கு சிமெண்ட் கட்டுப்பாடு அலுவலர் ஆணைப்படி சிமெண்ட் விநியோகிக்கப்பட்டது. இதில் கையாளுதல் மற்றும் விநியோகிக்க கொடுக்கப்பட்ட ஊதியம் மட்டும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தைச் சேரும்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர் களே, இங்கே தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் டான் செம் மூலம் நமக்குக் கொடுக்கப்பட்டு இருக்கும் குறிப்பிலே 1979–80–ஆம் ஆண்டுகளில் 1980–81–ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்யப்பட்ட தாக குறிப்பு இருக்கிறதே அதைப் பார்த்து விட்டுத்தான் கேள்வி போட்டேன். ஆனால், அமைச்சர் அவர்கள் பதில் தருகின்ற நேரத்தில் அப்படி இறக்குமதி செய்யப்பட வில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இருப்பினும் நான் அறிய விரும்புவது, எவ்வளவு சிமெண்ட் இறக்குமதி, செய்யப்பட்டது, என்ன விலைக்கு விற்கப்பட்டது கடந்த ஆண்டு இறக்குமதி செய்யப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, 1979–80 ஆம் ஆண்டிலே தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் சிமெண்ட் இறக்குமதி செய்ததாக எங்கக்





குறிப்பு தெரிவிக்கிறது என்று புரியவில்லை. ஒருவேளை சமீபத்தில் அடிபடுகிற பேச்சை நினைவில் வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்களோ என்று நினைக்கிறேன். 1982 ஆம் ஆண்டுக்கு முன்னால் எந்த மாநில அரசும் அல்லது சிமெண்ட் கார்ப்பரேஷன் தனியாக இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை. மத்திய அரசு இறக்குமதி செய்து, தமிழக சிமெண்ட் கார்ப்பரேஷன் 'ஹான்ட்லிங் அண்ட் டிஸ்ட்ரி பியூஷன்'—கையாளுதல் மற்றும் விநியோகம் செய்தல்— உரிமையை மட்டும் பெற்றிருந்தது. அதற்கான ஊதியத்தை இந்த கார்ப்பரேஷன் பெற்றுக்கொண்டிருந்தது. 1982–ல் சிமெண்ட் பற்றாக்குறை அதிகமாக இருந்த காரணத்தால் நம்முடைய எஸ். டி. சி. மட்டுமல்ல, மற்ற மாநில அரசு களும் சிமெண்ட் இறக்குமதி செய்துகொள்ளலாம் என்ற அனுமதியை மத்திய அரசு கொடுத்து, எல்லா மாநிலங் களிலும் வெளிநாடுகளிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்யப்பட்டது. அந்த அடிப்படையிலே 1982–ல் நாம் 2 இலட்சம் டன் சிமெண்ட் இறக்குமதி செய்ய வட கொரியாவுக்கு ஆர்டர் கொடுத்தோம். இதுவரை அங்கிருந்து 40,000 டன் சிமெண்ட் வந்திருக்கிறது. மற்றவை இன்னும் இரண்டு மாதங் களில் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசு நமக்கு லெவி சிமெண்ட் டன் ஒரு காலாண்டுக்கு— அதாவது 3 மாதங்களுக்கு— 1.25 இலட்சம் டன் தந்துகொண்டிருக்கிறது. நமக்கு 4 அல்லது 5 இலட்சம் டன் தேவைப்படுகிறது. நம் முடைய தேவையை நிறைவு செய்துகொள்ள, பல்வேறு அரசுப் பணிகள் தங்குதடையின்றி நடைபெற இந்த 2 இலட்சம் டன்னுக்கு மேலும் தேவைப்படும் என்றால் மாநில அரசு மேலும் இறக்குமதி செய்யும்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, இந்த 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் எஸ். டி. சி. மூலமாக வாங்கி விநியோகம் செய்ய மத்திய அரசால் கொடுக்கப் பட்ட சிமெண்ட் எத்தனை டன் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இந்த ஆண்டுகளில் நாம் நேரடியாக செய்யவில்லை என்பதை ஏற்கெனவே சொன்னேன். மத்திய அரசு கொடுத்தது. 1979–80 ஆம் ஆண்டில் 3,49,950 டன் ; 1980–81 ஆம் ஆண்டில் 5,14,863 டன் ; 1981–82 ஆம் ஆண்டில் 3,06,250 டன். அவை எஸ். டி. சி. மூலம் விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதை குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) மதுரையிலுள்ள நீரேற்று நிலையங்களுக்கு மின்சாரம் வழங்கப்பெறாதது.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, கடந்த இரண்டு நாட்களாக இன்றைக்கு இரண்டாவது பெரிய கார்ப்பரேஷனாக இருக்கிற மதுரை மாநகரில் குடிதண்ணீர் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். நீரேற்று நிலையங்களுக்கு மின்சாரம் வழங்கப்படாததுதான் அதற்குக் காரணம் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் குடிநீரைப் பொறுத்தவரையில், நீரேற்று நிலையங்களுக்கு போதிய அளவுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் மதுரையில் வழங்கப்படவில்லை. அது ஏன் ? ஏற்கனவே உலகத்தமிழ் மாநாட்டுக்காகப் போடப்பட்ட குழாய்கள் எல்லாம் பழுதடைந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த இரண்டையும் நிவர்த்தி செய்து உடனடியாக அந்த மக்களுக்கு குடிதண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? இதுபற்றி ஏற்கனவே ஒத்திவைப்பு தீர்மானமும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உணர்வுகளை மதிக்கிறேன். ஆனால் இதற்கு எப்படி உடனடியாகப் பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடு) தண்ணீரை கம்பி வழியாகக் கொடுக்க முடியாது ; குழாய் மூலமாகத்தான் கொடுக்க முடியும் (சிரிப்பு). பிரச்சனை முக்கியமானது என்பதால் நாளை அதற்கு பதில் அளிக்கச் சொல்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சார், நாங்கள் கேட்பதற்கு அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்கள், ஆனால் திரு. சங்கரய்யாவுக்கு அனுமதி கொடுக்கிறீர்கள்; அதைப்போல எங்களுக்கும் அனுமதி கொடுக்க வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : அவர்களைத்தான் எக்கச்சக்கமாக அனுமதிக்கிறீர்கள். ஒன்றே ஒன்றுதான் இன்றைக்கு நாங்கள் கேட்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சங்கரய்யா திடீரென்று இப்படிக் கேட்கமாட்டார்கள். அவர் [illegible] சொல்கிறார் என்பதைக் கேட்பதாகத்தான் அனும[illegible]தேன்.



திரு. என். சங்கரய்யா: முக்கியமான பிரச்சனை. அமைச்சர் ஏதாவது சொன்னால்தான் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள். நீரேற்று நிலையங்களுக்கு மின்சாரம் வழங்குவதை நிறுத்தக்கூடாது என்று அரசாங்கம் ஒரு கொள்கையாக முடிவு செய்திருக்கிறது. மதுரை விஷயத்தில் அது பொருந்தாதா என்று கேட்கிறேன்.

(முற்பகல் 10—30)

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைக்கும் அது பொருந்தும். அதற்கு மின் பற்றாக்குறை காரணமாக இருக்குமேயானால் அது உடனடியாகச் சரி செய்யப்படும்.

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய முக்கியமான ஒரு கடமையில், தவறான ஒரு சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக தமிழ்நாட்டு மக்கள் வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு பணித்தேர்வாணைக்குழுவினுடைய தேர்வு கேள்வித்தாள்கள் முன்னாலேயே வெளிவந்ததன் மூலமாக மிகப் பெரிய வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏறத்தாழ 3 லட்சம் பேர்கள் தேர்வு எழுதியிருக்கிறார்கள். அந்த தேர்வின் முடிவு என்னவாகுமோ என்ற நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அது அப்படி வெளியிடப்பட்டதற்கான ஆதாரம் இருக்கிறது. அதற்காக தரப்பட்டிருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தை தாங்கள் உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் அவர்கள் கொடுத்தது போல் அதற்கான ஒத்திவைப்புத் தீர்மானத்தை எல்லாக் கட்சித் தலைவர்களும் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இன்றைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அது மயிலாடும் துறையில் ஆதிதிராவிடர்களின் குடிசைகளுக்கு தீ வைப்பின் சம்பந்தமாக எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையும் எல்லோரும் கொடுத்திருக்கிறார்கள். அரசு தரப்பிலேயிருந்து இதற்கு பதிலும் வந்திருக்கிறது. (குறுக்கீடு) எல்லாக் கட்சிக்காரர்களும் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லும்போது, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் கட்சியிலே தான் வருகிறார்கள்.

மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்ன, கேள்வித் தாள் எதிர்பாராத விதமாக வெளியிடப்பட்டது. என்பதை யும் எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. நாளைக்கு கடைசி நாளாக இருப்பதால் இரண்டையும் சேர்ந்து எடுத் துக் கொள்ளலாமா என்று அரசிடம் கேட்டிருக்கிறேன். பதில் வந்தவுடன் நாளைக்கே எடுத்துக் கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். காலையில் நான் வந்ததும் 8½ மணிக்கே அது பற்றி பேசி அமைச்சர்களிடத்திலே துறையிடமிருந்து பதில் பெற்றுத் தரமுடியுமா என்று கேட்டிருக்கிறேன். பதில் வந்தவுடன், நாளைக்கே இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங் களையும் சேர்த்து எடுத்துக்கொள்ள ஒரு தீர்மானத்தையும் கொண்டுவந்து அதற்குப் பிறகு சேர்த்து எடுத்துக்கொண்டு விவாதிக்கலாம் என்று கருதுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் முக்கியமான ஒரு விஷயமாக நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன் ஆர். எஸ், எஸ். பயிற்சி நடைபெறுவது சம்பந்தமாக அதையும் நாளைக்கு சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளை ஒருநாள் தான் இருக்கிறது. கடைசி நாள், ஒன்றுதான் ஒத்திவைப்புத் தீர் மானம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்குப் பதிலாக இரண்டை எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்திருக் கிறோம். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பிரச்னை மிக முக்கிய மாக இருக்கும். ஆகவே எல்லாவற்றையும எடுத்துக் கொள்ள முடியாது. அவையில் எடுக்கக் கூடியவற்றை எடுக்க முயற்சி பண்ணுகிறோம். அந்த முயற்சிக்கு ஆதரவு தாருங்கள். ஆர். எஸ். எஸ். அங்கேயேதான் இருக்கும் . . . .

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வீஸ் கமிஷன் கேள்வித்தாள்கள் வெளியிடப் பட்டது குறித்து ஆளும் கட்சியைச் சார்ந்த நாங்களும் 54-வது விதியின்கீழ் கொடுத்திருக்கிறோம். அதை எடுத்துக் கொண்டால் நாங்கள் பேச வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமும் வந்திருக்கிறது, கவன ஈர்ப்புத் தீர்மானமும் வந்திருக்கிறது. ஏதாவது ஒன்றின் கீழ்தான் எடுத்துக் கொள்ள முடியும். ஒத்திவைப்புத் தீர்மானத் தை நீங்கள் எல்லாம் கொடுக்க வேண்டும் என்றால், அந்த இடத்தில் உட்கார்ந்துக் கொள்ளாமல், வேறு இடத்திற்குப் போகவேண்டும்.

ஆகவே, ஒத்திவைப்புத் தீர்மானம் வந்ததற்குப் பின்னால், வேண்டுமானால் உங்கள் பெயரைச் சேர்த்துக் கொள்ளலாம்,





திரு. அ. நகுமாஸ்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய
தலைவர் அவர்களே, நாளையதினம் சட்டமன்றத்தினுடைய
இறுதிநாள் என்பது தங்களுடைய அறிவிப்புப்படியே இருக்
கிறது. பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்களும், உரிமைப்
பிரச்னைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்ட
மன்றத்தில் அனேகமாக எல்லா உரிமைப்பிரச்னைகளும்
எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.
ஆனால் நான் கொடுத்த ஒரு மிக முக்கியமான பிரச்னை மட்டும்
அப்படியே இருக்கிறது. தாங்கள் அனுமதித்தால், அதை நான்
என்னவென்று படித்துவிடுகிறேன், அவைக்குறிப்பில் ரெக்கார்டு
ஆகட்டும். பின்னர் வேண்டுமானால் தாங்கள் அதிகாரிகளி
டத்தில் கேட்டு எனக்கு அது குறித்து தெரிவிக்கலாம். ரெக்
கார்டில் இருப்பதைத்தான் நான் வாசிக்கப் போகிறேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி ஏற்
கனவே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அவைக் குறிப்பில்
எழுதியிருக்கிறார்கள். மோகன்தாஸ் பற்றித்தான் குறிப்பிடு
கிறீர்கள் என்று நினைக்கிறேன். பெயரைக்கூட குறிப்பிட்டு
நான் சொல்வதிலிருந்தே தங்களுக்கு தெரிவித்துக் கொள்
கிறேன் அவைக்குறிப்பில் அது ஏறியிருக்கிறது என்று. நான்
அதை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பியிருக்கிறேன். அரசு
தரப்பிலேயிருந்து பதில் வந்தவுடன் தங்களுக்கு தருகிறேன்.
அது வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்
கூர்ந்து பொருத்திருக்க வேண்டுகிறேன். (சிரிப்பு).

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### மயிலாடுதுறை அருகே அறுவடையின்போது ஏற்பட்ட வன்முறைச் செயல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ரா.
கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, என். வரதராசன்,
ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், மு.
அம்பிகாபதி, பொ. உத்திராபதி, எம். ஆறுமுகம், என். ஏ.
பூங்காவனம், தி. கா. நல்லப்பன், செ. இராமலிங்கம், என்.
பழனிவேல், எம். செல்லமுத்து, கே. ஆர். சுந்தரம் ஆகியோர்
"தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை அருகே 8-2-1983 அன்று
அறுவடையின்போது விவசாயத் தொழிலாளர் இடையே ஏற்பட்ட
மோதல், மற்றும் இலுப்பூர் ஆதிதிராவிடர்கள் குடிசையைதீயிட்டுக்
கொளுத்தல், கோவிந்தராஜ் என்பவர் கொலை இவற்றின்
தொடர்பாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவா
திக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்"
என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்பு

கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கூலி சம்பந்தமாக நடந்திருக்கின்ற ஒரு பிரச்சினை. அதிலேயும் குறிப்பாக நாம் சாதாரணமாக சொல்லக் கூடிய பிலோ பாவாட்டி லைன் என்று அந்த பகுதி மக்கள் சட்டக்கூலி கேட்டதை ஒட்டி நடந்திருக்கக்கூடிய ஒரு பயங்கரமான சம்பவமாகும் இது. எனவே மேலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

சாதாரணமாக என்.ஜி.ஓ. மற்றும் ஃபேக்டரிகளில் வேலை பார்க்கின்றவர்கள் பற்றிய பிரச்சினைகள் வருகின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்று சொல்வார்கள். அவர்களுக்கெல்லாம் சம்பளம் உண்டு, சட்டப்படி போனஸ் கொடுக்கப்படுகின்றது. ஆனால் விவசாயத் தொழிலாளிகள் எப்படி இருக்கிறார்கள். அவர்களையும் கொஞ்சம் கவனியுங்கள் என்று சொல்வது உண்டு. அதே மாதிரி நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும், நீங்களாவது ஸ்தாபன ரீதியாகச் சேர்ந்திருக்கிறீர்கள். ஆனால் கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள் ஸ்தாபனம் இல்லாமல் இருக்கிறார்களே அவர்களைக் கொஞ்சம் ஆர்கனைஸ் பண்ண வேண்டும் என்று சொல்வது உண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை நம்பி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதை நம்பி அந்தக் குறிப்பிட்ட கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து சங்கம் வைக்க முடிவு செய்து அதன் பிறகு கடைசியில் நடந்த சம்பவம்தான் இது. கீழ்த் தஞ்சையிலே தரங்கம்பாடி ஒன்றியத்திலே இலுப்பூரிலே நடந்த சம்பவத்தை மாண்புமிகு உறுப்பினர் செல்லமுத்து அவர்கள் சென்று பார்த்து வந்திருக்கிறார். அங்கே நடந்தது என்னவென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது போன்று சட்டக்கூலி கேட்டு அவர்கள் சங்கம் அமைத்தார்கள். அப்படி அமைத்த தேதியிலேயே தொழிலாளர்கள் பூராபேர்களையும் ஊஸ்ட் பண்ணிவிட்டார்கள். வேலையிலிருந்து கம்ப்ளீட்டாக அவர்களை நீக்கியாகிவிட்டது. முதலமைச்சர் போன கூட்டத்தொடரிலேயே ஒன்று சொன்னார்கள். உங்களை அவர்கள் நீக்கினாலும் கூட நீங்கள் ஏன் அவர்களைத் தடுக்கப் போகிறீர்கள் ? நீங்கள் சர்க்காரிடத்திலே சொல்லி நிவாரணம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அதைத்தான் அவர்கள் செய்தார்கள். எத்தனை ரெப்ரசன்டேஷன்ஸ் கொடுக்கப்பட்டது? 11-11-1982 அன்று. 17-11-1982 அன்று. 22-11-1982 அன்று. 16-11-1982 அன்று ஜுப11-1982 அன்று, 24-11-1982 அன்று. ' -11-1982 படி பல மனுக்கள் கொடுக்கப்பட்டன. போலி





சுக்கும் கூட கொடுக்கப்பட்டது. ஆர்டீ.ஓ., தாசில்தார் ஆகிய எல்லோருக்கும் கொடுத்தாகிவிட்டது. அவர்கள் கூட்டுவார்கள், இவர்கள் போவார்கள் மீண்டும் அவர்கள் கூட்டுவார்கள், இவர்கள் போவார்கள். ஆனால் சட்டக்கூலி கிடைக்காது. சட்டக் கூலி கொடுக்காததன் காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் நடந்தன. அவர்கள் சட்டக்கூலி கேட்டதால் அவர்களுக்கு வேலை கொடுக்காமல் 8-2-1983 அன்று அதாவது அறுவடை அன்று குண்டர்களைக் கொண்டு வந்தார்கள். அப்போது நியாயமான சட்டக்கூலி கொடு என்றும் தொழிலாளர்களுக்கு வேலை கொடு என்றும் அவர்கள் வற்புறுத்தினார்கள். அப்போதுதான் அங்கே நிலப்பிரபுக்களின் குண்டர்கள் நிலப்பிரபுக்களின் தலைமையிலே 45 வயதுள்ள கோவிந்தராஜ் என்பவர் கத்தியாலே குத்தி ஸ்பாட்டிலேயே கொல்லப்பட்டார். அவருடைய மூன்று குழந்தைகள் அனாதைகளாகிவிட்டன. மனைவி விதவையாக மாறிவிட்டாள். I want to know who is ruling tha.. .r. a—this government or those Land Lords ?

எனவே இப்போது நிலப்பிரபுக்களின் தான் ஆட்சி நடத்து கிறார்களா அல்லது மிராசுதார்கள்தான் ஆட்சி நடத்துகிறார் களா என்பது தெரியவில்லை. ஒரு கொலை நடத்தி அதோடு பக்கத்திலே இருக்கக்கூடிய அரிசனங்கள் வீடு மற்றும் லேபரர்ஸ் வீடுகளைக் கொளுத்தி விட்டார்கள். 13 வீடுகளில் நெருப்பிட்டு விட்டார்கள்.

(முற்பகல் 10-40).

மதிய ரோடில் 2 அரிசன வீடுகளுக்கு நெருப்பு வைத்துவிட்டார்
கள். பண்டாரவாடையில் 5 வீடுகளுக்கு நெருப்பை வைத்து
கொளுத்தி விட்டார்கள். இவர்களுக்கு ஆதரவாக இருக்கக்
கூடிய சிறு கடைகள் அரிசனங்களுக்கு சொந்தமான கடைகள்
உள்ள லைன் பூராவையும் நெருப்பு வைத்து கொளுத்தி விட்டார்
கள். நெருப்பை அணைப்பதற்கு பையர் சர்வீஸ் வந்தது,
அதை அந்த மிராசுதாரர்கள் துணிச்சலுடன், கொழுப்புடன்
தடுத்து நிறுத்தி நெருப்பை அணைக்கக் கூடாது எரிய வேண்டும்,
நாசம் ஏற்பட வேண்டும் என்பதற்காக பையர் சர்வீஸை தடுத்
தார்கள். அப்பொழுது ஒரு சப்-இன்ஸ்பெக்டர் போய் இந்த
மிராசுதாரர்கள், குண்டர்கள் செய்வதை தடுத்த காரணத்தி
னால் அவருக்கு காயங்கள் ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்கு போக
வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நெருப்பின் காரணமாக
ஏற்பட்ட புகையின் விளைவாக ஒரு கிழவி 2 நாள், 3 நாள்
மூழித்து செத்து விட்டது. நான் கேட்கிறேன், அந்த ஏழை
விவசாய தொழிலாளர்களை திரட்டுங்கள் திரட்டுங்கள் என்று
சொல்கிறீர்கள், நாங்கள் திரட்டப் போனால் அங்கு இருக்கக்கூடிய
மிராசுதாரர்கள் அவர்களை கொல்கிறார்கள். அரசாங்கம் அதாவது
நீங்கள் சொன்னபடி உங்கள் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு
தொழிலாளிகளை ஒன்று சேர்ப்பதற்கு பாதுகாப்பு கொடுக்க

வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இல்லையா? அந்த பொறுப்பை நிறைவேற்ற வேண்டாமா? இங்கே நீங்கள் என்.ஜி.ஓ. பற்றி பேசுகிறபோது விவசாய தொழிலாளிகளைப் பாருங்கள் என்று சொல்கிறீர்கள். நீங்கள் உண்மையில் விவசாய தொழிலாளிகள் மீது அனுதாபத்திற்காகவா சொல்கிறீர்கள் அல்லது என்.ஜி.ஓ.க்கள் கேட்டதை தாக்குவதற்காக அவர்களை எதிர்ப்பதற்காக விவசாயத் தொழிலாளிகளின் பெயரை உபயோகப்படுத்துகிறீர்களா என்று நான் கேட்கிறேன். இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் நான் சொல்லியிருக்கிறேன். சட்டப்படி கூலி கேட்கிறபோது போலீஸ் பாதுகாப்பு அவர்களுக்கு கொடுக்க வேண்டும் அந்த வகையில் இங்கிருந்து இன்ஸ்டிரக்ஷன் கொடுக்க வேண்டும் என்று எத்தனை தடவை முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன். அது நடக்கவில்லை. அதனுடைய விளைவு தான் இது. இதிலே தயவுசெய்து கட்சி பிரச்சனையை கிளப்பக் கூடாது. கட்சி பிரச்சனையைக் கிளப்புவதற்கான சூழ்நிலை இதில் உண்டு. நான் கிளப்பவில்லை. I don't want to make it a Political Issue.

போலிட்டிகலைஸ் பண்ண விரும்பவில்லை. ஏழை விவசாய தொழிலாளிகள் சட்ட கூலிக்காக போராடுகிறபோது மிராசுதாரர்கள் கொல்கிறார்கள். விஷயம் இது தான். நான் போலிட்டிகலைஸ் பண்ணவில்லை கவர்மெண்டும் பண்ணக் கூடாது. ஆகவே 14 பேர் இதில் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். மிராசுதாரர்களும், குண்டர்களும் இந்த கொலையிலும், தீ வைப்பிலும் இதில் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும். கேஸ் போட்டு அதில் எந்த இன்பீலியன்ஸ் வந்தாலும் அந்த இன்புலியன்ஸ்க்கு சர்க்கார் இறையாகாமல் கேஸ் நடத்தி அவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தாக்குதலுக்கு இறையான அந்த விவசாய தொழிலாளிகளை கைது செய்து இருக்கிறார்கள். இது என்ன நியாயம்,. வெள்ளைக்காரன் காலத்தில் அப்படித்தான் நடக்கும். குண்டர்களும், மிராசுதார்களும், வெள்ளைக்காரன் போலீஸும் தாக்கும், அரஸ்டு ஆவது யார் உதை வாங்கியவன் தான் அரஸ்டு ஆவான். அந்த மாதிரி இவர்களை கைது செய்து இருக்கிறார்கள். அவர்கள் பெயரில் இருக்கக்கூடிய கேஸ்களை வாபஸ் பெறவேண்டும். தீ வைப்பிற்கு கடைகள், வீடுகள், அரிசனங்களுக்கு சொந்தமானவைகள் பூராவும நஷ்டப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நஷ்ட ஈடு அரசாங்கம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த ரெவின்யூ அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் இடத்தில் அவர்கள் 8, 9 தடவை ரெப்பரசன்டேஷன் கொடுத்திருக்கிறார்கள். ஏன் அவர்கள் தலையிட்டு அதை விசாரணை பண்ணி பாதுகாப்பு ஏற்பாடு செய்யவில்லை. ஒரு வருடமாக நடக்கிறது இந்த விஷயம். அதை விசாரித்து அதில் பெயில் ஆகியிருக்கக்கூடிய அதிகாரிகள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டும் அல்ல சட்ட கூலியை



கேட்டதற்கு வேலையை மறுத்து ஒதுக்கப்பட்ட அந்த தொழிலாளிகளுக்கு மீண்டும் அதே மிராசுதாரர்கள் வேலை கொடுப்பதற்கு கடுமையானநடவடிக்கை எடுத்து அவர்களுக்கு வேலைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இனிமேல் சட்டக் கூலி கேட்கும் இடத்தில் ஒரு நிரந்தரமான பாலிசியை அரசாங்கம் உடனடியாக உருவாக்க வேண்டும். சட்ட கூலி கேட்டு எந்த விவசாய தொழிலாளி சங்கம் வைத்தாலும் Protection must be given to them அவர்களுக்கு சகல பாதுகாப்பும் ரெவின்யூ மூலமும், போலீஸ் மூலமும் கொடுக்கப்பட கூடிய ஒரு நிலைமையை அரசாங்க மிஷனரி உண்டாக்கினால் தான் இங்கே பேசுவதற்கு அர்த்தம் இருக்கும். இல்லாவிட்டால் மற்ற தொழிலாளிகளை தாக்குவதற்கு நீங்கள் அவர்கள் பெயரை பயன்படுத்துகிறீர்கள் என்று வரும். ஆகவே, இந்த மாதிரி முக்கியமான விஷயங்கள் இதில் விவாதித்து முடிவு எடுக்க வேண்டி இருப்பதால் அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே மயிலாடுதுறைக்கு அருகாமையில் உள்ள இலுப்பூரில் 8–2–83 அன்று பெரிய சம்பவம் நடந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாந் அவர்கள் இங்கே விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் தஞ்சை மாவட்டத்திலேயும் தமிழகத்திலேயும் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. சட்டக் கூலியை அமல் நடத்த முடியாமல் அதிகாரிகள் யார் பக்கம் நிற்கிறார்கள் என்பதைப்பற்றி ஒவ்வொரு ஆண்டும் பேசி வருகிறோம். அதேமாதிரி 8–2–83 அன்று இலுப்பூர், மற்றும் சில கிராமங்களில் அடிமைகளாக இருந்த மக்கள் ஒன்றாகக்கூடி சங்கம் வைத்து சட்டக் கூலி கேட்பது குற்றம் என்ற முறையில் — அவர்கள் சட்டத்தை மீறவில்லை— சட்டக்கூலி கேட்டதற்காக எந்தஅளவுக்குத் தண்டனை கிடைத்து இருக்கிறது என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

சட்டக் கூலி கேட்டதற்காக சமூகக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட அரிசனங்களை—இலுப்பூர், சங்கரம்பந்தல் ஆகிய கிராமங்களிலே உள்ள மிராசுதாரர்கள் சாதி இந்துக்கள் சாதி என்ற பெயரால் திரட்டப்பட்டு—தாக்குவதற்கு திட்டமிட்டு தாக்கியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஏற்கனவே காவல் துறை, ரெவின்யூ இலாகாவில் தாலுகா தாசில்தார் ஆகியவர்களிடம் அந்த தொழிலாளர்கள் பெட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள். அதன்மீது அந்த சம்பந்தப்பட்ட தாசில்தார் இரண்டு வகையறாக்களையும் அழைத்துப் பேசி சுமூகப்படுத்தியிருக்கிறார்கள். அந்த சுமூகத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அரிசனங்கள்தான். அதிகாரிகள் சொன்னதையும் மீறி கையெழுத்துப் போட மாட்டோம் என்று சொல்லி மிராசுதார்கள் மீறியிருக்கிறார்கள். தொடர்ச்சியாக தண்ணீர் பற்றுவில் உள்ளவர்களை அழைத்து

வந்து இலுப்பூர் கிராமத்திலே அறுவடைக்கு குறைந்த கூலிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைக் கேட்பதற்காகச் சென்ற அரிசனங்கள் தாக்கப்பட்டு, கோவிந்தராஜ் என்ற அரிசனத் தொழிலாளர் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு இறந்திருக்கிறார்.

அதோடு மட்டுமல்ல, நெருப்பில் எரிகின்ற போது அணைக்க வந்த தீயணைப்புப் படையினரையும் மிராசுதாரர்கள் தடுத்து நிறுத்தினார்கள். தீயணைக்க வந்தவர்கள் தாக்கப்பட்ட நேரத்திலே சப்-இன்ஸ்பெக்டர் வந்து கேட்டபோது மிராசுதார்கள் வேலை அவரும் தாக்கப்பட்டு இருக்கிறார். இந்த அளவுக்குச் சட்டத்தைப் புறக்கணித்து சட்டத்தை நெருப்பு வைத்து கொளுத்துகிற அளவுக்கு மிராசுதார்கள் துணிந்திருக்கிறார்கள். வீடுகளுக்கு நெருப்பு வைக்கப்பட்டு பொருள் சேதம் ஆகி இருக்கிறது. இந்தத் தீ விபத்தில் தள்ளாத வயதுடைய தாய் புகையில் சிக்கி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு 10 ஆம் தேதி பரிதாபமாக இறந்திருக்கிறார். இது இரண்டாவது கொலையாகும். இந்தச் சம்பவங்கள் சட்டத்தை அமல்நடத்த முடியாமல் நில பிரபுக்கள் ஏழை சாதி இந்துக்களையும் அழைத்துக்கொண்டு அரிசனங்களுக்கு எதிராக திட்டமிட்டு சதி செய்திருக்கிறார்கள், திட்டமிட்டே அவர்களை கொலை செய்திருக்கிறார்கள். திட்டமிட்டே வீடுகளைக் கொளுத்தியிருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகின்றன. இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

இன்றைக்கு இயற்கையில் தீ விபத்து ஏற்பட்டு விட்டால் அரசாங்கம் 200 ரூபாய், அரிசி மண்ணெண்ணெய் கொடுக்கிறது. ஆனால் திட்டமிட்டே கொளுத்தப்பட்டிருக்கின்றன, அந்த வீடுகள் எல்லாம் அழிந்துபோயிருக்கின்றன. அவர்கள் வீட்டிலே இருந்த நெல், பொருளாதாரம், குறைந்தபட்ச நகைகள் அத்தனையையும் அவர்கள் இழந்து இன்றைக்கு நிர்க்கதியாகி நிற்கிறார்கள். அந்தக் குடும்பங்களுக்குப் போதுமான நட்டஈடு கொடுக்க வேண்டும். அந்த வீடுகளை யார் எரித்தார்களோ அவர்களிடமிருந்து வசூல் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்தக் கொலைக்கும் வீடு எரிப்பிற்கும் யார் காரணமாக இருக்கிறார்கள் என்று நிருபிக்கப்படுகிறார்களோ அவர்களை உடனடியாக கைது செய்து தண்டனை வழங்க வேண்டும். இப்படிப்பட்ட காரியங்கள் தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்லாது மற்ற மாவட்டங்களிலும் நடக்காமல் இருக்க இதுபற்றி பல்வேறு பிரச்சினைகளை விவாதிக்க இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்த் தஞ்சை மாவட்டத்திலே 8-2-83 அன்று சங்கரம்பந்தல் அருகே இலுப்பூர் கிராமத்தில் ஏற்பட்ட கொடிய சம்பவம் கோரமாகவும் கொடுமையாகவும் இறுதியிலே கொலை நிகழ்ச்சி





யாகவும் நடைபெற்றிருக்கிறது. அந்த சம்பவம் நடந்த அன்று மட்டும் நடந்த தகராறு அல்ல அதற்குக் காரணம். ஏறத்தாழ 3 மாத காலமாகவே அந்தக் கிராமத்திலே ஒரு கடுமையான ஒரு பதட்டமான நிலைமை இருந்து வந்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

(முற்பகல் 10.50)

எனக்கு முன்னால் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. உமாநாத், அவர்கள் குறிப்பிட்டதுபோல அங்கேயிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கிடையே, கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியைசேர்ந்த தொழிலாளர்களுக்கும், கம்யூனிஸ்ட் அல்லாத தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட தகராறு தான் இந்த கொலையில்வந்துமுடிந்திருக்கிறது. அங்கேகூலிதகராறுஅடிப்படையான காரணம். கீழ்த்தஞ்சை மாவட்டத்தில் கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த நிர்ணயிக்கப்பட்ட கூலிச் சட்டத்தை மீறியவர்கள் நிலச் சொந்தக்காரர்களா? அல்லது தொழிலாளர்களா என்பதை மட்டும் நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த சம்பவத்தின் காரணமாக ஒரு சப்-இன்ஸ்பெக்டர் வெட்டப்பட்டுள்ளார். அவரும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அந்த கிராமத்தில் இந்த சம்பவத்திலே சம்பந்தப்படாத பொதுமக்கள்கூட காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சம்பவத்திற்கு எந்த தொடர்பும் இல்லாதவர்களின் வீடுகள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. நான் கேட்கிறேன், இதற்கு முன்னால் கீழத்தஞ்சையில் இருந்த கிசான் காவல் பிரிவு இன்றைய தினம் இருக்கிறதா? அது செயல்படுகிறதா? தயவுசெய்து அதை கவனிக்க வேண்டும். கண்காணிக்க தவறுவீர்களேயானால் கீழத்தஞ்சையில் இப்படிப்பட்ட கொலை, கொள்ளை, தீ வைப்பு சம்பவம் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும். எனவே அங்கே இருக்கிற காவல் பிரிவு இப்படிப்பட்ட சம்பவம் ஏற்படுகிற நேரத்தில உடனடியாக தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். கீழத்தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தான் வேறு எந்த இடத்திலும் இல்லாத அளவிற்கு கூலி தகராறு ஏற்படுகிறது. அதை ஒட்டி ஜாதி தகராறு ஏற்படுகிறது. எனவே இப்படிப்பட்ட தகராறு ஏற்படாமல் இருப்பதற்கு உடனடியாக காவல்துறையைச் சேர்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் எனக்கு கிடைத்த தகவல்படி இலுப்பூர் கிராமத்திலிருந்த விவசாயத் தொழிலாளர்கள் இருதரப்பினருமே காவல்துறைக்கு முன்னெச்சரிக்கையாக தகவல் கொடுத்திருந்தும், காவல் துறையைச் சேர்ந்தவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காததின் காரணமாக இந்த படுகொலை அங்கே நடந்திருக்கிறது. எனவே, அதற்கு முழு பொறுப்பும் அரசை சேர்ந்தது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட சம்பவம்தொடர்ந்து நடைபெறாமல் இருக்கவும் மற்ற

வருகிறது. நவீன இறைச்சிக்கூடத்தினால் கீழ்க்கண்ட நன்மைகளும் பலன்களும் ஏற்படும்.—

1. விவசாய பெருமக்கள் வளர்க்கும் ஆடு, மாடுகள், பன்றிகள் சிறந்த முறையிலும் நல்ல பலனுடனும் விற்பனை செய்ய நவீன இறைச்சிக்கூடத்தில் நிறுவப்பட இருக்கும் கால்நடை சந்தைகள், சிறந்த வசதிகளை அளிக்கும்.

2. உணவிற்காக உபயோகப்படுத்தப்படும் கால் நடைகள் தகுதிபெற்ற கால்நடை மருத்துவர்களால் சிறந்த முறையில்பரி சோதிக்கப்பட்டு பின்னர் மக்களின் உபயோகத்திற்கு அனுமதிக்க சிறந்த வசதிகள் ஏற்படுத்தப்படும்.

3. ஆடு, மாடு, பன்றிகள் மாமிசத்திற்காக தயாரிக்கப்படும் பொழுது யாதொரு அசுத்தமும் தரக்குறைவும் ஏற்படாவண்ணமும் மாமிசம் விரைவில் கெடாவண்ணமும் இருக்க தேவையான வசதிகள் நவீன இறைச்சி கூடத்தில் நிறுவப்படும்.

4. தற்பொழுது பெரம்பூரில் சுமார் 11 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கிவரும் இறைச்சிக் கூடத்தை நவீன முறையில் மாற்றி அமைக்க இயலாத காரணத்தால் இந்தகூடத்தினை கோடுவள்ளிக்கு மாற்றுகிறோம். தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் நல்ல தண்ணீர் வசதியும் உள்ளது.

5. நவீன இறைச்சிக்கூடத்தில் அதிக அளவில் கிடைக்கக் கூடிய உப பொருட்களான (by products) இரத்தம், எலும்பு, கொம்புகள், குளம்புகள், கொழுப்பு, முடி, தோல் முதலியன பலவிதமான தொழிற் துறைகளுக்கு பயன்படுத்துவதோடு இரத்தத்தூள், எலும்புத்தூள், முதலியவை கால்நடைகளின் தீவனத்திற்கும் கோழித்தீவனத்திற்கும் பெரிதும் பயன்படுத்தப் படும்.

6. நவீன இறைச்சிக்கூடத்தில் வெட்டப்படும் கால்நடைகளி லிருந்து கிடைக்கக்கூடிய சுரப்பிகள் ( glands ) மருத்துவ உபயோகத்திற்குப் பெரிதும் பயன்படுத்தப்படும்.

நவீன இறைச்சிக்கூடத்தில் கிடைக்கக்கூடிய உப பொருட் களை மேற்கூறியவண்ணம் பயன்படுத்தும் பொழுது தமிழகத்தல் தொழில் அபிவிருத்தியும் ஆயிரக்கணக்கான படித்த மற்றும் படிக் காத மக்களுக்கு (educated and uneducated) வேலை வாய் புக்களும் பெருக சிறந்த வாய்ப்புக்கள் உள்ளன. அதோடுஅல்லாமல் தற்பொழுது மகாராஷ்டிரம், கேரளம், உத்திரப்பிரதேசம, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் வெளிநாடுகளுக்கு இறைச்சி ஏற்றுமதி செய்து நல்லபலன்களை அடைகின்றன. கோடுவள்ளியில் நிறுவப்பட இருக்கும் நவீன இறைச்சிக்கூடம் தமிழகத்திலும் இறைச்சி ஏற்றுமதியை பெரிதும் ஊக்குவிக்கும். இறைச்சி ஏற்றுமதிக்கு முக்கியத் தேவை சுகாதாரத்துடனும், வசதிகளுட னும் செயல்படக்கூடிய நவீன இறைச்சிக்கூடமாகும்.



135985
600 008.



தற்போது கோடுவள்ளியில் நிறுவப்பட்டுவரும் நவீன இறைச்சி கூடம் பம்பாய் மாநகரில் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வரும் தேவனார் (Deonar) நவீன இறைச்சிக்கூடத்தை முன் மாதிரியாக கொண்டதாகும்.

இந்நவீன இறைச்சிக்கூடம் நிறுவப்படுவதால் தற்பொழுது சென்னை மாநகரில் இயங்கிவரும் இறைச்சிக் கூடங்களில் பணி புரியும் தொழிலாளிகள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப் படுவர்.

எனவே இந்நவீன இறைச்சிக்கூடம் நிறுவப்படுவதால் தற்போது இறைச்சி வெட்டும் தொழிலில் ஈடுபட்டுவரும் பணியா ளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் எவ்வித பாதிப்பும் இன்றி பெருமளவில் நன்மையே ஏற்படும்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவு.

### கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1980—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, தமிழ் நாடு 1980-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமுன்முடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் முடிவு எண் 45/1980) (ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு), ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் என்று முன் மொழிந்த தீர்மானத்தின் மீது மேலும் விவாதம். திரு. இரா. கருப்பையா ஏற்கனவே 40 நிமிடங் கள் பேசியுள்ளார். ஆகவே இன்று 5 நிமிடங்களே முடித்துக் கொள்ளவேண்டும்.

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே எனக்கு 5 நிமிடங்கள் போதாது, மேலும் நேரம் வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கூறியுள்ளேன்.

நேற்றைய முன் தினம் இந்தக் கூட்டுறவுச் சட்டத்தின்படி சங்கங்கள் செயல்படக்கூடிய முறைகள், ஜனநாயக அமைப்புகள் எப்படி செயல்படுகின்றன, அதிலே இருக்கிற குறைபாடுகள் என்ன என்பதைப்பற்றி நான் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறேன்.

அடுத்து, நான் குறிப்பிட விரும்புவது, சட்டத்திலே என்ன கூறப்பட்டிருக்கிறது? இந்த சட்டத்திலே உள்ள பல ஷரத் துக்களிலே, பதிவாளர் அவர்களுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. சங்கம் என்ன முடிவு செய்தாலும், பதிவாளருடைய முடிவே இறுதியானது என்கிற வகையிலே, அது நிலைநாட்டக்கூடிய வகையிலே இன்றையதினம் சட்டத்திலே ஷரத்துக்கள் இருக்கின்றன. அதை விவரமாகக் கூறுவதற்கான நேரம் இல்லை. பதிவாளருக்கு, ஒரு வீட்டோ பவர், ரத்து

அதிகாரம், கொடுத்துள்ளதைப் போல இருக்கிறது. சங்கம் என்ன முடிவு செய்தாலும் பதிவாளர் செய்கிற முடிவைத்தான் நிறைவேற்ற வேண்டுமென்று ஷரத்துக்கள் இருக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன்.

அடுத்து நான் கூற விரும்புவது, கூட்டுறவு அமைப்பையும் இந்த கூட்டுறவு நிறுவனங்களும், முழுமையாக நல்லமுறையிலே செயல்படுவதற்கென்று உள்ள ஊழியர்கள், பணியாளர் களுடைய நிலையைப் பரிசீலனை செய்து, அவர்களுடைய நலன் களைப் பாதுகாக்க தனியான ஷரத்துகள் இணைக்கப்பட வேண்டு மென்பது. ஊழியர்களுக்கு இருக்கின்ற வேலை நிலைமையை எடுத்துக்கொண்டால், வேலைக்கு உத்திரவாதம் இல்லை. குறைந்தபட்ச சம்பளம் இல்லை. எந்தத் தொழில் தகராறு சட்டமும் அந்த ஊழியர்களுக்குப் பொருந்தும் என்ற நிலைமை இல்லை. பிராவிடன்ட் பண்ட் இல்லை, கிராச்சுவிட்டி இல்லை, லீவ் வசதி இல்லை. குடும்பப் பாதுகாப்பு போன்ற பல்வேறு சலுகைகள், மற்ற தொழில்களிலே பணிபுரியக்கூடிய ஊழியர்களுக்கும், அரசுத்துறையிலே பணிபுரியக்கூடிய ஊழியர்களுக்கும் இருக்கிற பல்வேறு சலுகைகள் அந்த ஊழியர்களுக்கு இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த ஊழியர்களும் இதர ஊழியர்களைப்போல் சலுகை கள் பெறக்கூடிய வகையிலே உத்திரவாதம் தரக்கூடிய வகையிலே சட்டத்திலே ஷரத்துக்கள் கொண்டு வரப்படவேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11—00)

போனஸைப் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். போனஸ் சட்டம் இந்த ஊழியர்களுக்கும் பொருந்தும் என்றாலும் கூட பத்து பேர்களுக்கும் குறைவாக உள்ள சங்கத்தில் பணி யாற்றுகிற ஊழியர்களுக்கு போனஸ் கிடைக்கின்ற உத்தரவாதம் அளிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணிப் பாதுகாப்பு என்ற முறையில் காமன் கேடர் சர்வீஸ் என்ற முறையிலே, ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்கும் முறையிலே இந்த சட்டத்திலே ஷரத்து கொண்டு வரப்பட்டிருக் கிறது. அது பாராட்டப்படவேண்டிய ஒன்று. ஊழியர்களிடையே பொதுவான வேலை நிலைமைகள், குறைந்தபட்ச சம்பளம் மற்றும் அவர்களுக்கு லீவு வசதிகள், போனஸ் கிடைப்பது, குடும்பப் பாதுகாப்புபோன்ற அனைத்துச் சலுகைகளும், உரிமை களும் கிடைக்கும் முறையிலே பொதுப் பாதுகாப்பு அமைப்பு செயலாற்றும் முறையிலே அவற்றிற்கு உத்திரவாதம் உள்ள நிலையிலே இந்தச் சட்டத்தின் ஷரத்துகளிலே திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஊழியர்களை நியமிக்கின்ற அதிகாரத்தை இந்த காமன் கேடர் சர்வீஸ் அமைப்புகளுக்குக் கொடுத்தாலும், ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக அந்த



அமைப்புகளுக்கு அதிகாரத்தைக் கொடுப்பது சரியானதாக இருக்க முடியாது. மாற்றல், ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப்பது, சஸ் பெண்ட் செய்வது, வேலை நீக்கம் செய்வது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பது ஆகியவற்றிற்கான அந்தந்த சங்கங்களின் நிர்வாக போர்டுக்குக் கொடுப்பதுதான் சட்ட ரீதியாக சரியான நிலையில் இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். உச்ச நீதிமன்றத்திலும் இப்படிப்பட்ட முறையில் தீர்ப்பு வந்திருக்கிறது என்பதையும் நான் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, யார் வேலை வாங்கு கிறார்களோ அவர்களுக்குத்தான் அங்கு வேலை செய்யக்கூடிய அந்த ஊழியர்களை ஒழுங்குபடுத்தும் முறையில் அதிகாரங்கள் இருப்பது சரியாக இருக்கும்.

இந்த சட்டத்தில் கீழ்க் காணும் திருத்தங்கள் ஏற்றுக் கொள் ளப்பட்டு, இந்தச் சட்டம் கொண்டு வரப்படுமேயானால் அது மிகவும் பயனுள்ள முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, 9-வது ஷரத்தில் பதிவு செய்தல் சம்பந்தமாக 90 நாட்களுக்குள் என்று இருக்கிறது. 9 (1) (இ)-யில் 5-வது வரியில் 90 நாட்களுக்குள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை மாற்றி 30 நாட்களுக்குள் என்று அமைந்தால் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோன்றே (2)-வது பிரிவிலும் '30 நாட்களுக்குள்' என்றும் (3)-வது பிரிவிலும் '30 நாட்களுக்குள்' என்றும், (4)-வது பிரிவி லும் '30 நாட்களுக்குள்' என்றும் இருப்பதுதான் சரியாக இருக்கும். இவ்வாறு இல்லாமல் நாட்களை அதிகப்படுத்துவது வேண்டுமென்றே தாமதத்தை ஊக்குவிப்பதாகும் என்ற முறை யிலே அமையும். இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்த நேரத்தில் 30 நாட்களுக்குள் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார் கள். எனவே, இதை மேலும் உயர்த்த வேண்டிய அவசிய மில்லை என்று கருதுகிறேன்.

சங்கத்திற்கான துணை விதி சம்பந்தமான திருத்தத்தைப் பொறுத்த வரையிலும் கூட 30 தினங்கள் கால வரம்புக்குள் பதிவு செய்யப்பட வேண்டும். 11-வது ஷரத்துக்கும், 12-வது ஷரத்துக்கும்கூட 30 தினங்களுக்குள் என்றே இருக்க வேண்டு மென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

14-வது ஷரத்தைப் பொறுத்தவரையில், ''பொது மக்களின் நலன் முதலியவற்றைக் கருதி ஒருங்கிணைக்கும் கட்டளை பிறப் பிப்பதற்கான அதிகாரம்'' என்ற ஷரத்தை பொறுத்தவரையில் சொல்ல விரும்புகிறேன். பணியாளர்கள் இரண்டு சங்கங்களி லும் பணிபுரிபவர்களாக இருக்கலாம். ஆனால் இந்த இரண்டும் ஒன்றாக இணைந்தபிறகு வேலைப் பாதுகாப்பு என்ற முறையில்

இடங்களுக்கு அது பரவாமல் இருக்கவும் விரிவாக அது குறித்து பேசவேண்டுமென்கிற காரணத்தால் அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பொறையார் வட்டம், சங்கரன்பந்தல் கிராமத்திற்கு அருகிலுள்ள இலுப்பூர் முனிவேலன்குடி, மணல்மேடு, பண்டாரவாடை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயத்தொழிலாளர்கள் சுமார் 100 பேர் முனிவேலன்குடி கிராமத்திலுள்ள திரு. வேலாயுதம் பிள்ளை என்பவரின் வயலில் அறுவடை வேலை செய்வதற்காக 8-2-83 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் வந்துள்ளனர். அவர்கள் வந்து பார்த்தபோது உள்ளூர் தொழிலாளர்களைக் கொண்டு அறுவடை வேலை பூர்த்தி ஆகியிருந்தது. இதைக்கண்டு கோபம் அடைந்த அவர்கள் சங்கரன்பந்தல் கிராமத்திற்குச் சென்று தகராறில் ஈடுபட்டுள்ளனர். உள்ளூர் வர்த்தக கழகத்திலும் முறையீடு செய்துள்ளனர். உடனே மக்கள் கூட்டமாக கூட ஆரம்பித்தனர். திடீரென்று இருதரப்பினரும் கல்லெறிதல், தீ வைத்தல் போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். உடனே ஸ்தலத்திற்கு விரைந்து சென்ற பொறையார் காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டரையும், காவலரையும் தாக்கினர். கலவரத்தின்போது சங்கரன் பந்தலில் கூரைவேய்ந்த கடைகள் 47 ம் ஒரு குடிசையும், கூரை வேய்ந்த 10 ஷெட்டுகளும், இலுப்பூர் வடக்கு காலனியில் 13 குடிசைகளும், பண்டாரவாடை காலனியில் ஆறு குடிசைகளும் தீயினால் சேதம் அடைந்தன. திரு. கோவிந்தராஜன் என்பவர் குத்தப்பட்டு இறந்துள்ளார். சப்-இன்ஸ்பெக்டர் திரு. செல்வராஜ் என்பவர் வெட்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். செய்தி அறிந்தவுடன் மயிலாடுதுறை கோட்டாட்சித்தலைவரும், தரங்கம்பாடி வட்டாச்சியரும், தஞ்சாவூர் கிழக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் போலீஸ் படையுடன் விரைந்து அமைதியை ஏற்படுத்தினர். திருச்சிராப்பள்ளி டி.ஐ.ஜி.யும் சென்று பார்வையிட்டுள்ளார். சம்பவங்களின் தொடர்பாக 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சுமார் 130 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில், உதவிபெறத் தகுதிவாய்ந்த 18 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நிலைமை அமைதியாக உள்ளது. எனவே இப்பொருள் பற்றி விவாதிக்க பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால் இது இசைவு மறுக்கப்பெறுகிறது.



## 4. கவன ஈர்ப்பு.

### கோடுவள்ளி கிராமத்தில் நவீன இறைச்சிக் கூடம் நிறுவ ஆயத்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு, திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் '' திருவள்ளூருக்கு அருகில் மிகப் பெரிய மாடு வெட்டும் தொழிற்சாலை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருவதால் மக்களிடையே நிலவும் கவலை குறித்து '' மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும். அவர் தற்போது இருக்கையில் இல்லை.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை அறிக்கையினை வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்க அறிக்கை வைக்கப் பெறலாம்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இறைச்சி உண்போருக்கு சுத்தமானதும், தரமானதுமான இறைச்சி கிடைக்கச் செய்யும் பொருட்டும், இறைச்சிக் கூடத்தில் இறைச்சி கிடைக்கக்கூடிய பலவித உப பொருள்களை அதிக அளவில் கிடைக்கக்கூடிய பயனுள்ள வகையிலும் லாபகரமாக வீணாகாமல் தடுத்து பயன் படுத்துவதற்கும், அதிக அளவில் வேலை வாய்ப்புக்களை உண்டாக்குவதற்கும் ஒரு நவீன இறைச்சிக் கூடம் ஏற்படுத்துவது அத்யாவசியமாகிறது. சராசரி, தினசரி 2500 முதல் 3000 ஆடுகளும் , 150 முதல் 200 மாடுகளும் 20 முதல் 30 பன்றிகளும் உபயோகப்படுத்தப்படும். 40 லட்சத்திற்கு மாமிச உணவிற்காக மேற்பட்ட ஜனத்தொகை உள்ள சென்னை மாநகரத்திற்கு ஓர் நவீன இறைச்சிக்கூடத்தை தோற்றுவிக்க அரசு ஆணை பெற்று தமிழ் நாடு இறைச்சி நிறுவனம் செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் தாலுகாவில் கோடுவள்ளி கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 82 ஏக்கர் நிலப்பரப்பில் 3.75 கோடி ரூபாய் செலவில் நவீன இறைச்சிக்கூடம் கட்டும் ஆயத்தப்பணிகளை மேற்கொண்டு

ஒருங்கிணைப்பு சங்கத்தின் ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் ஏற்கனவே அவர்கள் வாங்கிய சம்பளம் மற்றும் சலுகைகளையும் அனுபவிக்கும் முறையிலே அந்தப் பகுதியில் ஒரு ஷரத்தை இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 21-வது ஷரத்தைப் பொறுத்தவரையில் சொல்ல விரும்புகிறேன். 30 நாட்கள் என்று ஏற்கனவே இருக்கிறது அதை 60 நாட்கள் என்று மாற்றியிருக்கிறார்கள். 30 நாட்களுக்குள்ளாக விண்ணப்பம் குறித்து குழு எடுத்த தீர்மானம். விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படவில்லையெனில் என்பதில் 60 நாட்கள் என உயர்த்தியிருக்கிறார்கள். அங்கத்தினராகச் சேர வேண்டும் என்று கோரும் விண்ணப்பதாரார்கள் சம்பந்தமாக 30 நாட்கள் என்று இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால், தகுதி இழக்கும் நிலைமை சம்பந்தமாக ஓராண்டுக் காலத்திற்கு அதிகமாக தண்டனை பெற்றவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்ல் அங்கத்தினராக இருக்கக்கூடாது என்று சட்டத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நிர்வாக சபையில் இயக்குநராக வருவதற்கு வேண்டுமானால் இந்த தகுதியின்மையை கொண்டு வரலாம்.

ஆனால் கிராமங்களிலே இருக்கின்ற சாதாரண விவசாயிகள் ஏதோ சந்தர்ப்பவசத்தால் சிறு குற்றம் செய்தால், அதன் காரணமாக தண்டனை அடைந்தால், அவர்கள் சங்கத்தில் அங்கத்தினர்கள க இருக்கக் கூடாது என்றால், அவர்கள் விவசாயம் நடைபெறவேண்டும் அதை வைத்தே வாழ்க்கை நடத்தவேண்டும், குடும்பம் நடத் வேண்டுப். அவையெல்லாம் பாதிக்கப்படும். எனவே இதை நீக்கவேண்டும் என்றுகேட்டுக்கொள்கிறேன். இந்தத் தகுதியின்மை அங்கத்தினர்களுக்கு இருக்கக் கூடாது, தலைவர்கள் போன்ற பொறுப்புகளிலே இருப்பவர்களுக்குத்தான் இத்தகைய தகுதியின்மை இருக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அங்கத்தினர் பதவியிலிருந்து விலக்கி மீண்டும் 3 ஆண்டுகளுக்குப் பிறகு சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றிருக்கிறது. இந்த காலம் மிகவும் அதிகமாக இருக்கிறது. அதை குறைத்து 'ஓராண்டு' என்று இருந்தால் சரியாக இருக்கும்.

அடுத்து 27-வது ஷரத்தின் படி, அங்கத்தினர்கள் தங்கள் சொந்தக் கணக்குகளைப் பார்க்கவேண்டும் என்றாலும் கூட, அதற்கு தனியாக கட்டணம் செலுத்திதான் பார்க்கவேண்டும் என்று இருக்கிறது. இது ஜனநாயக முறைக்கு முரணாக இருக்கின்றது. அவர்தான் சங்கத்தை நிர்வாகிக்கிறார், அவருக்குத்தான் அதிலே பொறுப்பிருக்கிறது என்ற முறையிலே இருக்கும்போது, அவருடைய சம்பந்தப்பட்ட கணக்குகளைப் பார்ப்பதற்குக் கூட, ஒரு 'பீஸ்' கட்டவேண்டும் என்று சொல்வது சரியாக இருக்காது. ஆகவே அதை நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து 25-வது ஷரத்திலே, அங்கத்தினர்களை விலக்குவது என்று வரக்கூடிய நேரத்திலே மகாசபை தீர்மானம் போடுகிறது என்றால் அதோடு விட்டுவிட வேண்டியதுதான். அந்தத் தீர்மானத்தை அதற்குப் பிறகு, பதிவாளருக்கு அனுப்பி அவர் அங்கீகாரம் அளித்தால்தான் அவர் நீக்கப்படுகிறார் என்ற முறையிலே பதிவாளரின் முத்திரையைப் பெறவேண்டும் என்ற அடிப்படையிலே இருக்கிறது. பெருவாரியான உறுப்பினர்கள் இருக்கின்ற மகாசபையிலே அந்த சங்கத்தில் ஒருவர் அங்கத்தினராக இருப்பது சரியில்லை, அவர் அருகதையற்றவர், அவருடைய நடவடிக்கை சரியல்ல என்று முடிவு செய்ததற்கு பிறகு அதற்கும் பதிவாளரின் ஒப்புதலை பெறவேண்டும் என்றிருப்பது சரியல்ல, அதை நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், (மணி அடிக்கப்பட்டது) நான் வேகமாகப்பேசிக் கொண்டிருக்கிறேன், விளக்கமாகப் பேசவில்லை.

அடுத்து பிரிவு 33லே, குழுவின் அமைப்பு சம்பந்தமாக இருக்கின்றது. அதிலே நூற்பாலைகள் கூட்டுறவு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அதிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். அந்த நூற்பாலைகளில் அந்த இயக்குநர்கள் சார்பிலே அங்கே பணிபுரியக் கூடியவர்களுக்காக, சாதாரண சங்கங்களிலே வேண்டுமானால் இது எப்படி என்று கேள்வி எழலாம். இம்மாதிரியான சங்கங்களிலே அதில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் சார்பாக ஒருவர் இயக்குநர் குழுவிலே அங்கம் பெறக்கூடிய முறையிலே இந்த ஷரத்திலே திருத்தம் ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து 33 (7) பிரிவின்படி சங்கத்தின் மேனேஜிங் டைரக்டரை ஒரு இயக்குநராக, அந்த அந்தஸ்து கொடுத்து நியமிப்பது என்கிற முறையிலே இருக்கிறது. அது தேவையில்லை. அவர் அரசாங்க அதிகாரியாக இருக்கிறார். சங்கத்தின் நிர்வாகத்தினை மேற்கொள்வதற்கான அந்தப் பொறுப்பு அவருக்குக் கிடைக்கிறது. கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும் அவருக்கு உரிமை இருக்கிறது. அவர்களை ஒரு இயக்குநராக ஆக்கி அவருக்கும் ஓட்டு உரிமை கொடுப்பது சரியாக இல்லை. எனவே இந்த 33(7) பிரிவை நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், பொருளாதார நிதியில் பின்தங்கியவர் போன்றவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பது வரவேற்கத்தக்கது. அவர்களுக்கு பிரதிநிதித்துவம் எப்படி ஏற்படுத்தி கொடுக்கவேண்டும். எந்த முறையிலே கொடுப்பது என்பதுதான் கேள்வி. இன்றைக்கு அரசாங்கம் புதிய திருத்தம் கொடுத்திருக்கிறது, ஆரம்பத்தில் நேர்ந்தெடுக்கப்படலாம் அல்லது போர்டே கோ-ஆப்ட் செய்து கொள்ளலாம். இரண்டும் சாத்தியம் இல்லை என்றால் அரசாங்கமே நியமிக்கும்

[திரு. இரா. கருப்பையா] [1983 பிப்ரவரி 14

அடுத்து, லாபப் பிரிவு சம்பந்தமாக இந்த லாபப்பிரிவிலே பர்ஸ்ட் சார்ஜ் ஊழியர்கள் போனஸ் என்று இருக்க வேண்டும். அது சட்டத்திற்கு அப்பாற்பட்ட தொழிலாளர்களுக்கும் போனஸ் சட்டம் பொருந்தாத, தொழிலாளர்களுக்கு அது வேண்டும். டிவிடெண்ட் 12 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது. மற்றும் ஊழியர்கள் சேமநலநிதி என்ற முறையிலே ஒரு 10 சதவீதத்திற்கு மேற்படாத முறையிலே ஒரு ஷரத்து கொண்டுவரப்படவேண்டும். இதிலே நான் ஏறகனவே சொன்னதுபோல், வேலை நிலைகளைப் ஒழுங்கு படுத்த அமுல் செய்யும் முறையிலே லீவ் மற்றும் குறைந்த பட்ச சம்பளத்தை நிர்ணயிக்கக்கூடிய முறையிலே ஷரத்துக்களைக் கொண்டுவரவேண்டும். குறிப்பாக இந்த ஊழியர்களுக்கு தொழில் தகராறு சட்டம் விதிகள் பொருந்துகிற முறையில் ஷரத்துகள் சேர்க்கப்பட வேண்டும். ஏற்கனவே ஷாப் ஆக்ட் இருந்தது. அதையும் பொருந்தாது என்று போட்டிருக்கிறீர்கள். அது சரியல்ல. இந்த ஊழியர்களுக்கு, தொழிற்தகராறு சட்டம் பொருந்தும், இந்த ஷாப் ஆக்ட் பொருந்தும் என்ற அந்த அடிப்படையிலே திட்டவட்டமாக இருக்க வேண்டும். இன்றைக்கு ஊழியர்களுடைய பிரதிநிதிகளை காமன் கேடரிலே ரெக்ரூட் மெண்டு போர்டிலே ஊழியர்களுடைய பிரதிநிதிகளை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அடுத்து பணியாளர்களை நீக்குவது சம்பந்தமாக, பதிவாளர்களுக்கு இருக்கிற அதிகாரம் சம்பந்தமாக —நான் ஏற்கனவே கூறியுள்ளேன்—அவர்களை வேலையினின்றும் நீக்குவது, டிரான்ஸ்பர் செய்வது, சஸ்பென்ட் பண்ணுவது போன்றவை அந்தந்த சம்பந்தப்பட்ட சங்கங்களிடம் அந்தப் பொறுப்புகளை கொடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).

அடுத்து குழுவை கலைப்பது சம்பந்தமாக பதிவாளர்களுக்கு அதிகாரம் கூடாது. அவர் அப்படி கருதினால் அதை ஒரு டிரிபூனலுக்கு விட்டு, அதன் முடிவின் அடிப்படையிலே சங்கம் கலைக்கப்படவேண்டும் என்று திருத்தம் செய்யப்பட வேண்டும். அடுத்து ஷரத்து 157 தவறான தகவல்கள் போர்டு கொடுத்தாலும் அவர்களுக்கு 500 ரூபாய் அபராதம் தண்டனை என்று போட்டிருக்கிறது. போர்டிலே இருப்பவர்கள் என்ன செய்ய முடியும்? அதிகாரிகள் வேலைசெய்யக்கூடியவர்கள் ஏதாவது தவறான தகவல்களை வேண்டுமென்றே கொடுத்தால் என்ன செய்வது? எனவே அந்த மாதிரியாக இருக்கக்கூடாது, அதை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஊழியர்கள் செய்தாலும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இருக்கிறது என்பதால் அந்த அடிப்படையில் இந்தப் பிரச்னை அணுகப்படவேண்டும். ஆகவே, அதை நீக்கி இந்தப் பிரிவிற்குத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 பிப்ரவரி 14] [திரு. இரா. கருப்பையா]

எல்லாவற்றிற்கும் மேலாக நான் குறிப்பிடவிரும்புவது, சட்டம் இயற்றியபிறகு அதற்கு விதிகள் இயற்றுவது என்ற பெயரால் அதிக அதிகாரம் எடுத்துக்கொண்டு, அது சயல் படுத்தப்படு கிறது. விதிகள் என்ற பெயரால் உருவாக்கப்படுகிற நடைமுறைகள் ஜனநாயகத் தன்மையையே தகர்க்கின்ற விதத்தில் இருக்கிறது. இன்ன தகையில் இந்தச் சட்டம் இயங்கவேண்டும் என்று நாம் சட்டத்திலே வழிமுறைகள் ஏற்படுத்தவேண்டும். ஏற்கனவே இருந்த சட்டத்தில் 112 ஷரத்துகள் இருந்தது. இப் போது இந்த சட்டத்திலே 161 ஷரத்து இருக்கிறது. இன்னும் 10 ஷரத்துகள் வேண்டுமானால் அதிகரித்துக்கொள்ளுங்கள். விதி முறைகள் என்ற பெயரால் என்னென்ன கொண்டு வரவேண்டும் என்று நினைக்கிறீர்களோ அதை சட்டத்திலேயே இணைத் துக்கொண்டு வரவேண்டும். அந்த வகையில் இந்த விதிகளை இயற்றும் அதிகாரத்தைக் கொடுக்கும் ஷரத்து-ஜனநாயகத் தன்மையைக் குறைக்கும் நிலைமையில் இருப்பதால்—அந்த ஷரத்து நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கான நோக்கமே, கூட்டுறவு சங்கங்கள் ஜனநாயக முறையில் இயங்கவேண்டும். விவ சாயிகள், நெசவாளர்கள் மற்றும் சமூகத்தில் நலிந்த பிரிவில் உள்ளவர்கள் இதிலே அங்கம் வகிக்கின்ற காரணத்தால், அவர் கள் ஜனநாயக முறையில் இந்தச் சங்கங்களை வழிநடத்திச் செல்ல வழிவகுக்கின்ற வகையில் இந்தச் சட்டம் செயலாக்க வேண்டும் என்று கேட்டு, அதிலே பணியாற்றும் ஊழியர்கள் பாதுகாப்பாற்ற முறையில் இருப்பதால் அவர்களுக்கும் பாது காப்புக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டம் இத்தகைய நிலைமைகளை உருவாக்கும் வகையில் நிறைவேற் றப்படவேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித் துக்கொள்கிறேன். நன்றி.

*டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980ஆம் ஆண்டு கூட்டுறவு சங் கங்கள் சட்ட முன்வடிவு, ஆய்வுக் குழு திருத்தி அமைத்துள்ள வாறு, இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ளதை ஆதரித்து, அதன் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்றைக்குப் புரட்சித் தலைவர் தலைமையில் இயங்குகின்ற தமிழக அரசு கிராமப்புற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் பயன்பெறுகின்ற வகையில் பல்வேறு நல்ல திட்டங்களை கூட்டுறவுத் துறையின் மூலம் அமல்படுத்துகின் றது. இந்த நேரத்தில் கூட்டுறவுத் துறையின் நிர்வாகத்தைச் சீரமைப்பது, சீரமைத்து அதில் இருக்கும் தவறுகளை தடுத்து திருத்துவது அவசிய அத்தியாவசியமான ஒன்றாக தமிழக மக்கள் கருதுகின்றனர். தவறு செய்கின்றவர்களை தண்டிப்பதற்கு ஏற் கெனவே விதிகள் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்கவில்லை.

என்று இருந்தது. யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று அரசாங்கமே நியமிக்கலாம் என்ற அடிப்படையிலே புதிய திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் அந்த அடிப்படையிலேதான் பூர்த்தி செய்யப்படவேண்டும். எப்படியும் இந்த சட்டம் வந்ததற்குப் பிறகு போதுமான அங்கத்தினர்கள் இருப்பார்கள். அந்த வகையிலே செய்யப்படவேண்டும். இதிலே சில இடங்களுக்கு விதிவிலக்குத் தேவை. சில சங்கங்களிலே குறிப்பாக நெசவாளர் சங்கங்களிலே பெண்கள் அதிகமாக இருப்பார்கள். சில சங்கங்களிலே ஆதி திராவிடர்கள் இருக்க மாட்டார்கள். இம்மாதிரி சமயங்களில் இம்மாதிரி பிரதிநித்துவம் அளிப்பது எப்படி என்ற சிந்தனை நமக்குத் தேவை என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து 33 (3) பிரிவிலே நேற்றே குறிப்பிட்டேன். இயக்குநருடைய எண்ணிக்கையை குறைக்கவேண்டும். 5-லே இருந்து 15-ம், 9லே இருந்து 21-ம் என்பது அது உச்சவரம்பாக இருக்கவேண்டும். அதை மாற்றக் கூடாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து 34 (1) (2) பிரிவிலே தகவின்மை என்பதிலே ஒரு நிதி உதவி செய்யக்கூடிய ஸ்தாபனத்திலே இருக்கக்கூடிய அதிலே அங்கம் பெறக்கூடிய மற்ற சொசைட்டிகள், தன்னுடைய கடனை அது செலுத்தவில்லை அந்த சங்கத்திற்கு 30 சதவிகிதம் ஓவர் டியூ இருக்கக்கூடிய சொசைட்டியிலே உறுப்பினராக இருக்கக் கூடிய ஒருவர், பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட அருகதை இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-10)

இது சரியானது அல்ல. ஒருவர் இந்த நிதியைப் பெறக்கூடிய, அல்லது கொடுக்கக்கூடிய இன்னொரு சங்கத்திலே அல்லது ஸ்தாபனத்திலே அவர் ஒரு மெம்பராக இருக்கிறார். அவர் கடனை காலத்தில் செலுத்தத்தவறி, ஓவர் டியூ ஏற்படவில்லை. அந்தச் சங்கம் கடனை காலத்தில் செலுத்துவதற்கு தவறியிருக்கிறது என்று அந்த மெம்பர் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படும் உரிமையைப் பறிப்பது என்பது கூடாது. 4 கூட்டங்களில் தொடர்ச்சியாக கலந்து கொள்ளாதவர்கள், அவருடைய தகுதியை இழக்கின்றார். அவருடைய ரெக்குசிசன் பேரிலே அவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது. அது ஒரு பீரியடிலே, 3 ஆண்டு காலத்தில் 2 தடவைகளுக்கு மேல் அவர்கள் இந்த மாதிரியாக சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்ற முறையிலே திருத்தம் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, கலைக்கப்பட்ட ஒரு குழுவின் உறுப்பினராக இருக்கக்கூடியவர்கள் மீண்டும் 3 ஆண்டுகளுக்கு ஒரு சங்கத்தினுடைய தேர்தலிலே நிற்பதற்கு தகுதியில்லை என்ற முறையிலே இருக்கிறது. உண்மையிலே அந்த குழுவின் உறுப்பினர்களுக்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லை என்றால், தலைவர் பொறுப்பிலே, உபதலைவர் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் அதற்கு பொறுப்பாக இருக்கலாம். சாதாரண ஒரு டைரக்டரை நீ பொறுப்பு என்று சொல்லி, நீ தேர்தலிலே நிற்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. ஆகவே அந்த அடிப்படையிலே நிர்வாகப் பொறுப்பிலே இருக்கக்கூடிய தலைவர் அல்லது உப—தலைவர் அல்லது பொருளாளர் போன்றவர்களைத் தவிர, மற்ற அங்கத்தினர்களுக்கு அந்த மாதிரி தகுதியில்லை என்று சொல்வது சரியில்லை. ஆகவே அதை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிக முக்கியமான ஷரத்து. 6 ஆண்டுக் காலத்திற்கு 2 பீரியட்க்கு—6 ஆண்டுக்காலத்திற்கு மேலே பொறுப்பு வகிக்கக் கூடாது என்ற முறையிலே இருக்கிறது. அது இந்தச் சட்டம் அமுலாகியதற்குப் பிறகு 2 பீரியட் என்று, ஏற்கனவே, 5½ வருஷம், அல்லது 6 வருஷம் இருந்து விட்டால், 6 மாதம் ஆனவுடனே அதற்குப் பிறகு, 6 வருஷம் என்று எந்தச் சட்டமாக இருந்தாலும் நாம் கொண்டுவருகிற சட்டம் பிராஸ்பெக்டிவ்வாகத்தான் இருக்கவேண்டுமே தவிர ரெட்ராஸ்பெக்டிவ்வாக இருப்பது சரியில்லை. ஆகவே அந்த அடிப்படையிலேதான் 6 ஆண்டுக்காலம் என்று நிர்ணயித்து இருப்பது, அது சரியாக இருந்தாலும், அது இந்தச் சட்டம் அமுலுக்கு வந்ததற்குப் பிறகு, அதற்குப்பிறகு 6 ஆண்டுக்காலம் என்று மாற்றுவதுதான் சரியாக இருக்கமுடியும். ஆகவே அந்த அடிப்படையிலே மாற்றவேண்டும்.

அடுத்து, 48-வது ஷரத்திலே ஊழியர்களுடைய, அதாவது கூட்டுறவு பேக்டரிகளிலே இருக்கக்கூடிய ஊழியர்களிடமிருந்து பண்டகசாலை அல்லது சொஸைடி கடனைப் பிடித்து தருவதற்காக நிர்வாகத்தினருக்கு பொறுப்பு கொடுக்கப்படுகிறது. அது 15 நாளைக்குள்ளே பிடித்தத் தொகையை அனுப்பவேண்டுமென்ற முறையிலே சட்டச் ஷரத்து இருக்கவேண்டும். அடுத்து பிடித்துக் கொடுக்காதவர்களுக்கான தண்டனை வழங்க ஷரத்து உள்ளது. கம்பெனிகளிலே இருக்கக்கூடியவர்களுக்கு அந்த தண்டனை வழங்கலாம். ஆனால் ஒரு அரசு ஊழியர் அந்தப் பொறுப்பிலே இருந்தால் என்றால் அவருக்கு இது பொருந்தாது என்ற முறையிலே ஷரத்து உள்ளது. அதை மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் கூட்டுறவுத் துறை நல்ல முறையில் வளரவேண்டுமானால் நாணயமும், நேர்மையும் சங்கங்களை நிர்வகிக்கின்ற தலைவர் களுக்கு இருந்தாக வேண்டும். ஆனால் இவைகள் சிறிதும் இல்லா மல் கிராமப்புற மக்களுக்கு சட்ட திட்டம் தெரியாத காரணத் தால் அவர்களை ஏமாற்றி அந்த ஏழை மக்களிடம் கையெழுத்து வாங்கி அவர்களை பினாமிகளாக்கி பல லட்ச ரூபாய்களை கொள்ளை அடித்தவர்கள் ஒரு புறம், கிராமக் கிடங்குகளில் ஆயிரக் கணக்கான கடலைக்காய் மூட்டைகள் அடுக்கி வைத்திருப்பதாகச் சொல்லி, கடலைக்காய் தோல் மூட்டைகளை அடுக்கி கொள்ளை அடித்தவர்கள் ஒரு புறம், கிழங்கு மாவு (சாகோ) அடுக்கியிருப்ப தாகச் சொல்லி, கிழங்குத்திப்புமாவை (வேஸ்ட் பவுடர்) அடுக்கி கடன் பெற்று கொள்ளை அடித்தவர்கள் ஒரு புறம், நெல் மூட் டைகளை அடுக்கியிருப்பதாகச் சொல்ல, மேலே ஒரு அடுக்கு மட் டும் நெல்லை அடுக்கிவிட்டு, மீதியை தவுடு மூட்டைகளாக அடுக்கி கடன் பெற்றுக்கொள்ளை அடித்தவர்கள் ஒருபுறம், இப்படிப் பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களின் நாணயங்கெட்ட செயல்களால், கூட்டுறவுத் துறையில் செழித்திருக்க வேண்டிய நாணயம் வற்றி விட்டது. இப்படிப்பட்டவர்களை மனதில் வைத்துத்தான் 'புரட்சித் தலை வர் அவர்கள் 1977ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் நாநயம் மிக்கவர்களாக மட்டும் இருந்தால் போதாது நாணயம் மிக்கவர் களாகவும் இருத்தல் வேண்டுமெனக் கூறிப்பிட்டார்.

இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் மட்டுமின்றி, ஏழை விவசாயிகள் தாங்கள் கடன் பெறுவதற்காக வைக்கும் நகைகளை கொள்ளை அடித்தவர்களும் இன்னும் தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களாக பணியாற்றுகிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டிய உர மூட்டைகளைத் தனியாருக்கு விற்று லாபம் சம்பாதித்தவர்களும் இருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் தடை இல்லையா, இவர்களை தண்டிப் பதற்குச் சட்டம் இல்லையா விதியில்லையா? எல்லாம் ஏற்கெனவே இருக்கின்ற கூட்டுறவுச் சட்டத்தில் இடம் உண்டு. ஆனால் இவர் கள் தப்பியிருக்கிறார்கள். எப்படி? மீண்டும் கூட்டுறவுச் சங்கங் களின் தலைவர்களாக வந்திருக்கிறார்கள் எப்படி? ஏற்கெனவே இருந்த சட்டத்தில் சில ஓட்டைகள், சந்து பொந்துகள் உள்ளன. அந்தச் சந்துகளின் பொந்துகளின் வழியாக சமுதாயத்தைச் சீர ழிக்கும் இந்தச் சமுதாய பெருச்சாளிகள் நுழைந்து தப்பி இருக்கி றார்கள். கூட்டுறவுத் துறையில் தவறு செய்யும் சமுதாயப் பெருச் சாளிகளை நுழைய விடாமல் தடுப்பதற்காகத்தான் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்.



(முற்பகல் 11-20.)

கூட்டுறவுத் துறையிலே பல்லாண்டு காலம் தலைவராக இருப் பவர்கள் அந்தக் கிராமத்தில் சர்வாதிகாரிகளாக மாறி இருக்கிற சூழ்நிலை பல கிராமங்களில் இருக்கிறது. என்பதை இந்த மாமன் றத்தின் உறுப்பினர்கள் யாரும் மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். காரணம் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் பணி யாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள்—அவர்கள் கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெறாதவர்கள்தான் அதிகம். பல தலைவர்களால நேரடியாக நியமிக்கப்பட்டவர்கள். அந்தப் பணியாளர்கள் மக்களுக்கு பணியாற்ற வேண்டுமென்ற எண்ணத்தைவிட அந்தத் தலைவர்களின் ஆணைக்குக் கட்டுப்பாடு நடக்க வேண்டுமென்ற எண்ணமே மேலோங்கி வருகிறது. அதனால் அவர்கள் தலைவர் சொல்லுகின்ற தவறுகளைச் செய்கின்ற கட்டாயத்திற்கு ஆளாகிறார்கள் பல்வேறு சந்தர்ப் பங்களில்.

மேலும் ஒருவர் பல காலம் அந்த ஊர் சங்கத்தின் தலைவராக இருந்தால் நியாயங்களுக்கு அப்பாற்பட்டு அவர்களுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு ஆளாகி, பொது மக்கள் ஏழை எளிய மக்கள், விவசாயிகள் அதனால் பாதிக்கப்படுகின்ற சூழ் நிலை ஏற்படுகிறது. ஆகவேதான் மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்றைக்கு இரண்டு முறைகளுக்குமேல் அதாவது 6 ஆண்டு களுக்கு மேல் ஒருவர் தலைவராக வரக்கூடாது என்ற சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை நான் மன மார வரவேற்கிறேன்.

அனைத்துச் சங்கங்களிலுமே 1000-க்கும் மேற்பட்ட உறுப் பினர்கள் உள்ளனர். ஆகவே, ஒருவர் ஒரு முறைதான் சங்கத் தின் தலைவராக வரவேண்டுமென்ற சட்டம் கூட கொண்டுவர லாம். அவர்கள் குறைந்த பட்சம் 3 முதல் 5 ஆண்டு காலம் அந் தச் சங்கத்தின் உறுப்பினராக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை யையும் விதிக்கலாம். இப்படி இன்னும் பல்வேறு நல்ல மாற்றங்களை வைத்து, திருத்தி அமைக்கப்பட்ட இந்தச் சட்ட திட்டங்களை நான் வரவேற்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்றைக்கு தமிழகம் எங்கும் வறட்சி நிலவுகின்ற காரணத் தால் வாழ்க்கையினை ஓரளவுக்கேனும் சீராக அமைத்துக்கொள்ள போதுமான பணவசதி இல்லாத காரணத்தினால் ஏழை எளிய மக்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் கூட்டுறவு வங்கிகளில் தங்களுடைய நகைகளை வைத்து கடன் பெற எண்ணுகின்றார்கள் முந்தைய ஆண்டுகளை விட அதிகமாக, கடந்த ஆண்டு கூட்டுறவு வங்கிகளின் மூலம் 1?? கோடி ரூபாய் நகைக்கடன் தரப்பட் டிருக்கிறது. அதற்குமேல் தரக்கூடாது என்று மத்திய ரிசர்வ் வங்கி தடை விதித்துள்ளதாக அறிகிறேன். இந்தத் தடையை தளர்த்தி, தமிழகம் எங்கும் வறட்சி நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் இந்த ஆண்டு நகைக் கடன் 350 கோடி ரூபாய்க்

காவது தரலாம் என மத்திய அரசு சட்டத்திட்டங்களை தளர்த்தி
ரிசர்வ் வங்கிக்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென மாநில அரசு
வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் தவறு செய்பவர்கள்மீது வழக்குத்
தொடர்ந்தால் வழக்கு முடிவதற்கு பல ஆண்டுக்காலம் ஆகிறது.
அதைத் தவிர்க்கும் பொருட்டு கூட்டுறவு அமைச்சர் அவர்களே
சட்ட அமைச்சராகவும் இருக்கின்ற காரணத்தால் கூட்டுறவுத்
துறைக்கு என்று தனி வழக்கு மன்றம் ஏற்படுத்த வேண்டுமென
கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. இன்றைக்கு இங்கே மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் குறிப்பிடும்போது 33-வது
பிரிவில் 7-வது சரத்தில் (மணியடிக்கப்பெற்றது).
கொஞ்சம் நேரம் கொடுங்கள். எனக்கு முன்னால் பேசிய உறுப்பி இன்னும்
னருக்கு 45 நிமிடங்கள் கொடுத்திருக்கிறீர்கள். நானும் ஒரு சட்ட
மன்ற உறுப்பினர்தான். எனக்கு அந்த அளவுக்குக் கொடுக்கா
விட்டாலும் இன்னும் சிறிது நேரமாவது கொடுக்க வேண்டும்.
ஒருவருக்கு 45 நிமிடம் கொடுத்துவிட்டு, என்னை குறைந்த
நேரத்தில் உட்காரச் சொல்வது * * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. பாலசுப்பிரமணியன்):
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * *
என்று சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட
உத்தரவிடுகிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : அவசரத்தில்
சொல்லி விட்டேன்; பொறுத்தருள வேண்டும். 33-வது பிரிவு, அப்படிச்
7-வது உட்பிரிவில்; மேனேஜிங் டைரக்டராக வரக்கூடியவர்
அதிலே ஒரு இயக்குநராக, டைரக்டராக இருக்க வேண்டுமென்று
மாண்புமிகு அமைச்சர் கொண்டுவந்துள்ள சட்டம் நியாயத்தின்
அடிப்படையிலே நிச்சயமாக வரவேற்கத்தக்க ஒன்றாகும். தேர்ந்
தெடுக்கப்பட்ட நிர்வாக இயக்குநர்கள் ஏதாவது ஒரு மாற்றம்
கொண்டுவர வேண்டுமென்று எண்ணினால், மேனேஜிங் டைரக்
டர் அதற்கு அப்பாற்பட்டிருந்தால் அந்த நிர்வாகம் சரியாக
நடைபெற வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே, அந்த
ஏற்பாடு இருப்பதுதான் சரியாக இருக்கும்.

பல்வேறு நெசவாளர் கூட்டுறவுத் சங்கங்களின் இன்றைக்கு
பெண் உறுப்பினர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால்
ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் நகராட்சி ஆகியவைகளில் பெண்
களுக்கு 15 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து சலுகை அளிக்க
வகை செய்யப்பட்டதைப்போல கூட்டுறவுச் சங்கங்களிலும் அவர்
களுக்கு அந்த மாதிரி சலுகை அளித்து குறைந்த பட்சம்
15 அல்லது 20 சதவீதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.





தலைவர் உட்பட இயக்குநர்கள் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில்
தவறு செய்தால் தலைவரை மட்டும் நீக்கிவிடுவது என்பது
நியாயமல்ல. மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள்
சொன்ன கருத்தை இதிலே நான் எதிர்க்க கடமைப்பட்டிருக்
கிறேன். ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே இயக்குநர்கள் அனை
வரும் பொறுப்பு வகிக்கிறார்கள். ஆகவே அங்கே தவறு
நடந்து விட்டால் அந்தச் சங்கத்தின் தலைவர் மட்டுமல்லாமல்
பொறுப்பு வகிக்கின்ற இயக்குநர்கள் அனைவரும் அந்தத்
தவறுக்கு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.
அந்த வகையிலே, டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்களை, வெளி
யேற்றப்பட்டவர்களை மீண்டும் தலைவர் பதவிக்கு வரக்
கூடாது என்று போடப்பட்டிருக்கின்ற சட்டம், வரவேற்கப்பட
வேண்டிய சட்டம் என்று கூறி, மக்கள் நலம் கருதி, இங்கே
கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்தை பல்வேறு கட்சி உறுப்
பினர்களும், எதிர்க்காமல், கூட்டுறவு இயக்கத்தை நாட்டிலே
வளர்க்க வேண்டும் என்று கொண்டு வரப்பட்டிருக்கிற சட்ட
மாதலால் அதனை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டு, மக்கள்
நலம் கருதி இந்தச் சட்டத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிற
சட்டத் திருத்தங்களை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி.
வணக்கம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவையின்
மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு புதிய
மசோதாவின் மீது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்
நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏற்கனவே
இந்தச் சட்டத் திருத்தத்தின் மீது பேசிய எங்களுடைய
உறுப்பினர், மாண்புமிகு திரு. பழனியப்பன் அவர்கள் பல
கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதனை
யொட்டி நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நான் இந்த சட்டத் திருத்தப் புத்தகத்தை படித்த வரையில்,
இந்த 4 ஆண்டுக் காலமாக தமிழகத்திலே இருக்கிற மக்கள்
புதிய கூட்டுறவுச் சட்டம் வர இருக்கிறது என்று எத்தனை,
ஆவலோடு எதிர்பார்த்தார்களோ, அந்த அளவுக்கு ஒரு பெரிய
மாறுதலான சட்டம் வருமோ என்று நானும் எதிர் பார்த்தேன்
ஆனால் நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு பெரிய மாறுதல்
எதுவும் இதில் இல்லை என்பதை உங்கள் மூலமாக நான்
மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கி
றேன்.

இந்தச் சட்டத் திருத்தம் வந்தால் தான் பல்வேறு
கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தேர்தல் நடத்த முடியும், நடத்த
வேண்டும், என்று பலமுறை இந்த அவையிலே கூட பேசப்
பட்டது. தனி அதிகாரிகளுடைய பதவி காலத்தை நீட்டிக்
கின்ற மசோதாவைக் கூட அந்த அடிப்படையிலேயே நாம்

நிறைவேற்றினோம் இந்த மசோதா வருவதிலே கூட, ஏற் கனவே தேர்தலை நடத்தி விட்டுக்கூட, இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கலாம் என்று தான் என்னைப் போன்றவர்கள் கருத்துக்களும் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனாலும் இந்த சட்டத்தை உடனடியாக நிறைவேற்றி விரைவாக தமிழகத்திலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தலை நடத்த வேண்டிய ஒரு தலையாய கடமை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே நம்முடைய தலைவர்கள், பண்டித ஜவஹர்லால் நேரு போன்றவர்கள் கூட, கிராமங்களிலே ஒரு நல்ல கூட்டுறவு இயக்கம் நல்ல முறையிலே பணியாற்றினால் அங்கே இருக்கக் கூடிய ஏழை விவசாயிகள், என்பவர்கள் காப்பாற்றப் படுவார்கள். அந்த மக்கள் உண்மையாகவே வளர் வதற்கு கூட்டுறவு இயக்கம் சிறப்பாக அவர்களுக்கு உறுதுணை யாக இருக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

எனக்கெல்லாம் அதிலே திடமான நம்பிக்கை உண்டு. இரண்டாவது இன்றைய தினம் இந்த விவாதத்திலே பல்வேறு கருத்துக்களும் பல்வேறு விதங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்களை நாம் வேண்டுகின்ற போது, விண்ணப்பங்கள் கொடுக்கிறார்கள். அல்லது விண்ணப்பம் கொடுத்த உடனேயே உறுப்பினர்களாக கருதப்படுகிறார்கள். பிறகு சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று மாற்றுக் கருத்து இருக்குமேயானால் சம்பந்தப்பட்ட, நிர்வாக குழுவிலே வைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப் பட்டதற்குப் பிறகு, உறுப்பினர்களை வேறு ஏதாவது காரணம் காட்டி நீக்குவது என்பது கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப் பினர்களாக இருப்பவர்கள், தேர்தல் வருகின்ற நேரத்தில் தேர்த லில், எந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலாவது கடன் பெற்று, கடனை காலா காலத்தில் கட்டாமல் அவர்கள் தவணை தவறி இருப்பவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் அது விவசாய கூட்டுறவுச் சங்கமாக இருந்தாலும் சரி, வீடு கட்டும் சங்கமாக இருந்தாலும் சரி; இன்றைய தினம் இருக்கின்ற விதிப்படி வாக்களிக்க தகுதியில்லாதவர்கள் என்று சொல்லியிருக்கிறார் கள். தேர்தலில் போட்டியிடுவதில் வேண்டுமானால், தவணை தவறிய, பாக்கி இருப்பவர்கள் போட்டியிடுவதை தவிர்ப்பதற்கு வேண்டுமானால் விதியிருக்கலாமே தவிர, உறுப்பினர்களாக இருப்பவர்கள் தவணை தவறி விட்டார்கள்—ஏதோ ஒரு சந்தர்ப்பத்திலே என்கின்ற ஒரு காரணத்தைக் காட்டி அவர் வாக்களிக்கின்ற ஒரு தகுதியை இழப்பதை தவிர்க்க வேண்டும். அப்போது தான் கிராமங்களிலே நியாயமான ஒரு தலைவரை—



தவிர, பல ஒரு சந்தர்ப்பத்திலே தவணை தவறியிருக்கலாமே ஆண்டுக் காலமாக நல்ல முறையிலே தலைவராக பணியாற்றி இருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் தேர்தலிலே ஓட்டு போடுகின்ற உரிமையை பறிக்கக் கூடாது. இந்தத் துறையிலே எனக்குத் தெரிந்த வரையில் தேர்தலே வரவில்லை என்று நான் நம்புகிறேன்.

(முற்பகல் 11-30.)

அந்தத் திருத்தத்தை அதாவது தவணை தவறிவிட்டது என்ற ஒரு காரணத்தைக் காட்டி அவர்களுடைய ஓட்டு உரிமை யைப் பறிக்கக் கூடாது. அவர்கள் வாக்களிக்கலாம். வேண்டு மானால் நிர்வாகக் குழுவிற்குப் போட்டியிடுகின்ற அந்தத் தகுதி வேண்டுமானால் கொடுக்காமல் நிறுத்துகின்ற வழி வகைகளைச் செய்யலாம். எனவே அப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவுச் சங்கங்களின் பேரவையினை 6 மாதத் திற்கு ஒரு முறை அல்லது ஒரு ஆண்டுக்கு ஒரு முறை என்று கூட்டுவது என்பது ஏற்கனவே விதியிலே இருக்கின்றது. வேண்டு மானால் சிறப்புப் பேரவையைக் கூட்டலாம். ஆனால் 6 மாதத் திற்கு ஒரு பேரவையைக் கூட்டியாக வேண்டும் என்று ஒரு சட்டம் போட்டாக வேண்டும். ஏனென்றால் நடைமுறையிலே நிர்வாகத்திலே இருப்பவர்கள் பல ஆண்டுகள் பேரவையைக் கூட்டாமலேயே இருந்து விடுகிறார்கள். பேரவையைக் கூட்டு வதில் இருந்து தவறுகிறார்கள். ஆனால் இன்றைய தினம் வளர்ந்து வருகின்ற சமுதாயத்தில் இருப்பவர்கள், அவற்றின் உறுப்பினர்கள் 6 மாதத்திற்கு ஒரு முறை பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றபோது நிர்வாகம் பற்றித் தெரிந்துகொண்டு விவாதிக்க வாய்ப்பு ஏற்படும். எனவே அப்படிப்பட்ட வாய்ப் பினை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அடுத்து பேரவையைக் கூட்டுகின்ற போது 15 நாட்களுக்கு முன்னதாகத் தெரிவிக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால் பெரும்பாலான சங்கங்கள் பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்தி விடுகிறார்கள். அது எந்தப் பத்திரிகை என்று கூட இருக்காது. தலைவர் எந்தப் பத்திரிகையை விரும்புகிறாரோ அந்தப் பத்திரி கையிலே 15 நாட்களுக்கு முன்னதாக இந்தச் சங்கத்தினுடைய மகாசபை இன்னின்ன இடத்தில் இன்னின்ன தேதியில் இன்னின்ன மணியில் நடைபெறும் என்று அறிவித்து விடுவார்கள். ஆனால் அந்தச் சங்கத்திலே உறுப்பினராக இருப்பவர்கள் எல்லோரும் அந்தப் பத்திரிகையைப் பார்த்து எந்தத் தேதியில் மகாசபை நடைபெறுகின்றது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறதா என் றால் முடியவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே தயக்கு வேண்டியவர்களை மட்டும் அழைத்து வைத்து கூட்டத்தை நடத்து முடித்து விடுகின்ற ஒரு தன்மை வர இயலும். எனவே பேரவைக்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1983 பிப்ரவரி 14

கூட்டத்தைக் கூட்டுகின்ற போது பத்திரிகையிலே விளம்பரம் கொடுப்பதைத் தவிர்த்து பேரவை உறுப்பினர்களுக்கு அச்சடிக்கப்பட்ட நோட்டீஸை தபாலில் தவறாமல் அனுப்ப வேண்டும். அப்போது தான் அதன் உறுப்பினர்கள் அந்தக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொண்டு தங்களுடைய சங்கத்தைப் பற்றி விவாதிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைத் தவிர வேறு எந்த வகையிலேயும் பேரவையைக் கூட்ட அனுமதிக்கக் கூடாது. ஆனால் சிறப்பு பேரவையினை அவசரமான காரணத்தால் கூட்ட வேண்டும் என்றால் மட்டும் கூட்டலாம் என்று விதியிலே இருக்கலாம். ஆனால் ஆண்டுக்கு இரு முறை பேரவைக் கூட்டம் கூட்டுகின்ற போது தபாலிலே உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற விதியைக் கட்டாயமாக ஏற்படுத்துவது நலம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு ஒன்றியங்கள் என்று சொல்கிறபோது அதை மேலோட்டமாகப் பார்க்கின்றபோது ஏதோ கூட்டுறவு வளர்ச்சிக்கே இந்த ஒன்றியங்கள்தான் காரணம் என்பதுபோல் தோன்றுகின்றது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இந்த ஒன்றியங்களே தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், நிலவள வங்கிகள் போன்ற வங்கிகளிலே நல்ல முறையிலே கடன் கொடுத்து, நல்ல முறையிலே வியாபாரம் செய்து இலாபகரமாக நிர்வாகத்திலே இருப்பவர்கள் நடத்துவார்கள். ஆனால் அவ்வாறு இலாபம் வந்ததற்குப் பிறகு இந்த கூட்டுறவு ஒன்றியத்திற்கு இத்தனை சதவீதம் சங்கங்கள் பணம் தருவது என்ற நிலைமை இருக்கின்றது. மேலும் அவ்வளவு கஷ்டப்பட்டு நிர்வாகத்தினை நடத்துகின்ற ஊழியர்கள் அந்தச் சங்கங்களில் ஏதாவது நியாயமான செலவுகளைச் செய்தால் கூட தணிக்கையிலே அவற்றுக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் கூட்டுறவு ஒன்றியத்திலே இருப்பவர்கள், தாங்கள் சிரமப்பட்டு சம்பாதிக்காத, யாரோ சம்பாதித்த பணத்தை இவர்களுடைய பங்காகப் பெற்றுக் கொண்டு தேவையில்லாத செலவுகளுக்கெல்லாம் அந்தப் பணத்தைப் பயன்படுத்துகின்ற நிலைமை இருக்கின்றது என்பது என்னுடைய திடமான எண்ணம்.

அந்த கூட்டுறவு ஒன்றியத்தை ஒரேயடியாக நீக்கவில்லை என்றாலும் கூட அதற்கு கொடுக்கப்படுகின்ற பணத்தை மிகக் குறைவாகக் கொடுக்கின்ற வகையில் வழிவகை ஏற்படுத்த வேண்டும். இப்போது இருக்கின்ற விதியினை மாற்றி குறைவாகப் பணம் கொடுக்கின்ற வகையிலே விதியினை ஏற்படுத்தவேண்டும். வேண்டுமானால் மாநில அளவிலே கூட்டுறவு ஒன்றியம் இருக்கட்டும். மாவட்ட அளவிலே ஒன்றியங்கள் தேவையில்லை. ஏனென்றால் அவர்களுக்கு வேலையும் கிடையாது. எனவே மாவட்ட அளவிலே இருக்கின்ற ஒன்றியங்களை நீக்க வேண்டும்.



1983 பிப்ரவரி 14] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் 3 ஆண்டுகள் என்பதுதான் ஏற்கெனவே இருந்து வருகின்றது. இப்போது அந்த 3 ஆண்டுகள் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. அதை 5 ஆண்டுகளாக மாற்றலாம். காரணம் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்பது அவசியம் இல்லை. எப்படி சட்டமன்றம், நாடாளுமன்றத்திற்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் என்று இருக்கிறதோ அந்த முறையில் கூட்டுறவு சங்கங்களுக்கும் தேர்தலை நடத்தலாம். அப்பொழுதுதான் சங்கத்தினுடைய நிர்வாகிகள் சங்கத்தினுடைய பணிகளை ஓரளவுக்கு கவனிக்கமுடியும். இல்லை என்றால் 3 ஆண்டு என்றால் அடிக்கடி விரைவாக தேர்தல் வரும். உறுப்பினர்களுக்கு கருத்து வேறுபாடு தோன்றலாம். அதனால் சங்கத்தினுடைய பணிகள் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டு. அதனால் 5 ஆண்டுகளாக மாற்றலாம். அதிலே ஒன்றும் கஷ்டம் இருக்காது. அதை 5 ஆண்டு என்று மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நிர்வாகக் குழு கூட்டம் 3 மாதத்திற்கு ஒரு முறை கூட்டினால் போதும் என்று இருக்கிறது. 3 மாதம் என்பது வருடத்திற்கு 4 முறை போதும் என்கிற ஒரு நிலைமையை உண்டாக்கிவிடும். இதை மாதத்திற்கு ஒரு முறை கூட கூட்டலாம். அதனால் சங்கத்திற்கு பெரிய செலவு வந்துவிடாது. நிர்வாகிகள் என்று வருகிறபோது 9 பேர், 12 பேர் டைரக்டர்களாக இருக்கிறார்கள். தலைவர் தான் நிர்வாகத்தில் அடிக்கடி தொடர்பு வைத்துக்கொள்வதற்கு வசதி வாய்ப்புகள் சட்டத்தில் ஏற்படுத்தமுடியும். ஆனால் நிர்வாகிகள் 3 மாதத்திற்கு ஒரு முறை தான் அதனுடைய நிர்வாகத்தை கவனிக்கமுடியும். அதனால் மாதத்திற்கு ஒரு முறை கூட்டலாம், அதனால் பெரிய செலவு நிர்வாகத்திற்கு ஏற்பட்டுவிடாது. நிர்வாகிகள் வந்து போவதற்கு படி கொடுக்கின்ற செலவு தவிர வேறு எவ்விதமான செலவும் ஏற்படாது. 30 நாட்களுக்கு ஒரு முறை இந்த நிர்வாகக் குழுவை கூட்டவேண்டும். இப்படிக் கூட்டினால் தலைவராக இருப்பவர் பல விவகாரங்களை நிர்வாகிகளுடன் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கலாம். இல்லை என்றால் தலைவர் ஒரு நடவடிக்கை எடுப்பார், நிர்வாகத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள் வர வாய்ப்பு இருக்கும். அதனால் மாதம் ஒரு முறை என்றால் சங்க நிர்வாகத்தை நல்ல முறையில் அழைத்துச்செல்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு சங்கத்தினுடைய தேர்தலிலே நிற்பவர்கள் தமிழ் மொழி அல்லது தமிழ் தெரியாதவர்கள் ஆங்கிலம் அல்லது நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற பிற மொழிகள் தெரிய வேண்டும் என்று போடப்பட்டிருக்கிறது.

மிற மொழிகள் தெரிந்திருக்கவேண்டும் என்பதில் எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. நிச்சயமாக தமிழ்நாட்டில் இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய கூட்டுறவு சங்க தேர்தலில் நிற்க விரும்புகிறவர்களுக்கு தமிழ் ஓரளவுக்கு படிக்க, எழுத தெரிந்து இருந்தால்தான் நிச்சயமாக அவர்கள் அந்தச் சங்கத்தை நல்ல முறையில் நிர்வகிப்பார்கள் திறம்பட செயல்படுத்தமுடியும். சாதாரணமாக ஒருவர் ஆங்கிலம் மட்டும் தெரிந்து கொண்டு இருக்கிறார் அல்லது வேறு நம்முடைய மொழிகள் தெரிந்து இருப்பார் ஆனால்—வேண்டுமானால் அதிகாரிகளிடம் ஆங்கிலத்தில் உரையாடிவிடலாம். சங்க உறுப்பினர்களோடு உரையாடுகின்றபோது தமிழ் மொழி அவருக்கு தெரியவில்லை என்றால் அவரால் நல்ல ஒரு நிர்வாகத்தை இந்த மாநிலத்தில் குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்களில் பேசுவதற்கு சிரமமாக இருக்கும். அதனால் கண்டிப்பாக தமிழ் எழுத, படிக்க தெரியவேண்டும் என்கிற அந்த வகையில் தான் ஒருவரை இந்த மாநிலத்தில், தமிழ் மாநிலத்தில் கூட்டுறவு சங்கத்தினுடைய நிர்வாகத் தேர்தலில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்பது என்னுடைய எண்ணம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தலைவர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 2 முறைக்கு மேல் போடப்படக்கூடாது என்கிற ஒரு விதி புதிதாக இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அரசாங்கம் ஒன்றைச் சிந்திக்கவேண்டும். 2 முறை ஒருவர் தலைவராக இருந்து விட்டால் அவரை 3வது முறை போடக்கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சட்டத் துறையையும் கவனிக்கிறார். அதனால் இதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி பிறகு இந்தச் சட்டத்தினால் இது ஏதோ இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதம் என்று யாராவது நீதிமன்றத்திற்கு சென்று—எப்படி ஊராட்சித் தேர்தலில் நாம் ஒன்றை புகுத்த போய் அது அந்த கருத்து வேறுபாடு கொண்டவர்கள் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் போகிற காரணத்தினால் இது வரையில் காரணம் காட்டி ஊராட்சி ஒன்றியம், நகராட்சி தேர்தல் எல்லாம் தள்ளிப்போடப்படுகின்றதோ அதேபோல் ஒரு நிலைமை இந்த சட்டத்தினால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைபெறுகிற தேர்தல்கள் பாதிக்கப்படக் கூடாது என்பது தான் எங்கள் கருத்து. அதை நீங்கள் கவனிக்கவேண்டும்.

அதேபோல் செலக்ட் கமிட்டியில் இருக்கிற எங்களுடைய உறுப்பினர்கள் கூட கருத்து சொன்னதாக அவர்கள் எங்களுக்குச் சொன்னார்கள். தலைவர் வேண்டுமானால் 2 முறை இருந்து 3-வது முறை போட்டியிடவேண்டாம். குழு உறுப்பினர்கள் தேர்தலில் அவர்களை உறுப்பினர்களாக அனுமதிக்கலாம் அதில்





ஒன்றும் பெரிய தவறு நேர்ந்துவிடாது. ஏற்கனவே 2 முறை தலைவராக இருந்து இருக்கிறார்கள் 3-வது முறை தலைவராக வேண்டாம் நிர்வாகத்தில் இருந்தால் அந்தச் சங்கத்தினுடைய வளர்ச்சிக்கு அவருடைய ஆலோசனை வழங்கலாம். மக்கள் தான் தேர்ந்தெடுக்கப்போகிறார்கள். யாரும் அவர்களா கவந்து விட இயலாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் கிராமங்களிலுள்ள சங்கத்திலே நல்ல முறையில் பணி ஆற்றினால் தான் அங்கு இருக்கின்ற உறுப்பினர்கள் நிச்சயமாக மறு முறை வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த இயலும். வேண்டுமானால் ஒரு காலத்தில் ஏதோ தலைவராக வந்துவிட்டவர்கள் மறுபடியும் அவர்களே தலைவராக இருந்தார்கள் என்றால் அது பழைய சட்டத்திலே இருந்த முறையை கண்டு பயப்படக்கூடாது. காரணம் அன்றைய தினம் இருந்த விதியை நாம் மாற்றியிருக்கிறோம். அந்த விதிப்படி ஒருவர் உறுப்பின்ராகவே சேரமுடியாது. எங்களுடைய திருவண்ணாமலை நகரத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் ஒரு வங்கியில் ஒரு உறுப்பினராக கூட சேர ஒரு கால கட்டத்தில் அனுமதிக்கவில்லை. அப்படிப்பட்ட நிலைமை இன்றையதினம் மாறிவிட்டன. பேரறிஞர் அண்ணா அவர்கள் என்றைய தினம் முதலமைச்சராக வந்தார்களோ அப்பொழுதுயிருந்து இந்த உறுப்பினராக சேருவதில் இருந்த சிரமங்கள் எல்லாம் மாறி இன்றைய தினம் யார் வேண்டுமானாலும் உறுப்பினராக சேரலாம், எந்த சங்கத்தில் வேண்டுமானாலும் உறுப்பினராக சேரலாம். அதிலே ஒன்றும் பிரச்சனை இல்லை.

(முற்பகல் 11-40)

இரண்டு முறைக்கு மேல் மூன்றாவது முறை போட்டியிடக் கூடாது என்ற முறையிலே அரசு விரும்புமானால் அதை மாநில அளவிலே உள்ள சங்கங்கள், மாவட்ட அளவிலே உள்ள சங்கங்கள், தாலுகா அளவிலே உள்ள சங்கங்கள் அந்தச் சங்கங்களோடு அந்த நடைமுறையை நிறுத்திக் கொள்ளுங்கள், கிராமங்களிலே உள்ள சங்கங்கள், நாணயச் சங்கங்கள், பால்வளச் சங்கங்கள், வீடுகட்டும் சங்கங்கள். இப்படிப்பட்ட சங்கங்களுக்கு அது வேண்டாம் என்பது என்னுடைய கருத்ததாகும் காரணம் அப்படிப்பட்ட ஒரு நடைமுறை கிராமங்களிலே உள்ள சங்கங்களிலே வருமானால் சில சங்கங்களிலே பொறுப்பு வகிக்க தலைவரே கிடைக்காத நிலைமை வந்துவிடும். யாரோ ஒருவர் தலைவராக வந்தால் காரியம் நடக்காதா? என்நால் வந்தால், நடக்காது, ஆகவே தாலுகா மட்டத்தோடு அந்த நடைமுறையே நிறுத்திக் கொண்டு கீழே உள்ள சங்கங்களிலே மக்கள் விரும்பினால் எத்தனை முறைகள் வேண்டுமானாலும் தலைவர்களாக வரலாம் என்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால்தான் அந்த கிராமங்களிலே உள்ள சங்கங்கள் நல்ல முறையிலே செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1983 பிப்ரவரி 14

நான் ஏற்கனவே சொன்னேன், ஊராட்சிகள் ஒன்றியங்கள் தேர்தல்கள் பற்றி. மாநில அளவிலே மட்டும் இருக்கலாம் என்ற நிலைமை வருகிறபோது மாநில சங்கத்திற்கு பல்வேறு மாவட்டங்களிலிருந்து பிரதிநிதிகள் வருகிற வாய்ப்பு இருக்கிறது. இதிலே சொல்லப்பட்டு இருப்பதிலிருந்து 10 பேர்கள் வரலாம் என்றாள் 10 பேர்களும் நியமனம் செய்யப்படுவார்கள் என்ற கருத்துப் படதான் இருக்கிறது. ஆகவே மாவட்ட ரீதியிலே அவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமே தவிர நியனமம் என்பது கூடாது. அப்படியில்லாமல் நீங்கள் நியமித்துக் கொள்கிறீர்கள் என்ற நிலை வரும். ஒரு இடத்திலே கூட்டுறவுப் பற்றியே எதுவும் தெரியாத ஒருவர் நியமனத்திலே வந்துவிடுவார். எதோ தெரிந்தவர் என்று காரணத்தினால் ஒருவர் அதற்கு வரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்த விடும். அவர் அந்த பெரிய பொறுப்புக்கு வந்த பிறகு அந்த பொறுப்பை திறம்பட செய்யமுடியாத அளவுக்கு நிலைமைகள் எல்லாம்வந்துசேரும். அவருக்குகீழே உள்ளவர்களையும்தெரியாது, பணம் எப்படி வருகிறது என்பதும் தெரியாது, எதோ நம்மைப் பதவியிலே—தனக்காக கொடுக்கப்ப்ட்ட பதவி என்ற நிலைத்துக் கொண்டு-இருக்கச் சொல்லியிருக்கிறார்கள், அந்தப் பொறுப்பிலே உள்ள சுகபோகங்களை அனுபவிக்கத்தான் நமக்கு இந்தப் பதவியைக் தந்திருப்பதாக அவர் கருதிக் கொண்டு இருப்பாரே தவிர திறம்படச் செயல்படுத்த முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே அந்த நிலைமை ஏற்பட விடக்கூடாது. மாவட்டங்களின் பிரதிநிதகள் அவர்களிலே ஒருவரை தேர்ந்து எடுத்துக்கொண்டு மாநில சங்கத்தினுடைய பணியைச் செய்யலாம என்பதை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனி அதிகாரிகள் நியமனம் பற்றி இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. பல நேரங்களிலே தனி அதிகாரிகள் நியமிக்கப் படுவதற்கு பதிவாளருக்கு அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட துணைப் பதிவாளர்கள், இணைப் பதிவாளர்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சங்கம் செம்மையாகச் செயல்படவில்லை என்றால் கூட உண்மையிலேயே இந்தியாவிலேயே தமிழ் மாநிலம் தான் மற்றைய மாநிலங்களைவிட கூட்டுறவுத் துறையில் நல்ல முறையில் செயல்பட்டு இருக்கிறது என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. ஏதோ அங்குமிங்கும் தவறு இருந்திருக்கலாம். மற்றைய இலாக்காவிலே தவறுகள் இல்லையா? நடைபெறத்தான் செய்கின்றன. கூட்டுறவு இயக்கத்திலே அரசியல்வாதிகளாகிய நாம் வருகிறோம் தேர்தல் நடக்கிறபோது எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றாலும் வரலாம். யார் பொறுப்புக்கு வரவில்லையோ அவர்கள் குறைகளைச் சொல்லலாம். அவர்கள் சொல்கின்ற காரணத்தினால் மக்களிடத்திலே எப்படியெல்லாம் கூட்டுறவுத் துறை நடந்திருக்கிறது என்றுஎண்ணக்கூடிய நிலையைஉருவாக்குகிறோம் அதனால் ஏதோ கூட்டுறவுச் சங்கங்கள் தவறுகளைத் தான் புரிந்து கொண்டிருக்கின்றன என்ற மாயை மக்களிடத்திலே சில நேரங்களிலே ஏற்படுவதுண்டு.



1983 பிப்ரவரி 14] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அதைக் கண்டு இந்த கூட்டுறவு இயக்கம் கூட பயப்படத் தேவையில்லை. பல்வேறு பணிகளில் இந்த கூட்டுறவு இயக்கம் மூலமாக மக்களுக்கு நன்மைகளை செய்திருக்கிறோம். இன்றைக்கு தமிழகத்தில் உணவு நிலை சரியாக இல்லையென்றாலும் ஒரு காலக் கட்டத்திலே இந்த மாநிலம் உணவு நிலைமையில் தன்னிறைவு பெற்றது என்று பெருமைப்பட்டோம் என்று சொன்னால் அந்த பெருமை வேளாண்மைத் துறையை விட கூட்டுறவுத் துறையே அதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அப்படி கூட்டுறவுத் துறை முக்கிய பங்கு வகிக்கவில்லை என்று சொன்னால் தமிழகம், உணவிலே தன்னிறைவு அடைந்தது என்று நாம் பெருமையாக சொல்லியிருக்க முடியாது. அந்த அளவிற்கு கூட்டுறவுத் துறை நிச்சயமாக, செம்மையாக பணியை நிறைவேற்றி இருக்கிறது.

பல நேரங்களில், பல சங்கங்களில், செம்மையாக பணிகள் நடந்திருக்கின்றன. ஆனால் ஒன்றிரண்டு சங்கங்களில் தவறுகள் நடக்குமேயானால் அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிவாளருக்கு அதிகாரம் வேண்டும்; வேண்டாமென்று சொல்லவில்லை. நடவடிக்கை எடுக்கலாம். முதலிலேயே சொன்னேன். கிராமப்புறத்தில் இருக்கிற சங்கமானாலும், தாலுக்கா அளவில் இருக்கிற சங்கமானாலும், மாவட்ட அளவில் இருக்கிற சங்கமானாலும், அவைகளில் யார் வேண்டுமானாலும், எந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் வேண்டுமானாலும் தேர்தல் மூலம் வந்துவிடலாம். சாதாரண தவறை கூட மக்கள்—இப்போது விழிப்பான காலம்; வேண்டுமானால் 20, 25 ஆண்டுகளுக்கு முன்னதாக தெரியாமல் இருக்காலம்; எந்த சங்கங்களில் யார் வருகிறார்கள்? எப்படி வருகிறார்கள்? என்று தெரிந்துகொள்கிற வாய்ப்பு அன்றைக்கு தெரியாதிருந்திருக்கலாம்; அந்த நேரங்களில் வேண்டுமானால் தவறு நடந்திருக்கலாம்; இன்றையதினம் சிறு தவறை செய்வார்களேயானால் நிச்சயமாக உறுப்பினர்கள் அவர்களை மன்னிக்க மாட்டார்கள். அந்த அளவிற்கு உறுப்பினர்கள் இருக்கிற இந்த காலக்கட்டத்தில், நாம் ஏற்கெனவே இருந்ததை வைத்துக் கொண்டு நிர்வாகக் குழுவை கலைப்பது என்பது நியாயமாக இருக்காது என்பது என்னுடைய எண்ண மாகும். காரணம் பல நேரங்களில், சங்கங்களில் நிர்வாகம் நடக்கிறபோது தலைவருக்கு வேண்டுமானால்—எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் தலைவராக ஜனநாயகத்தில் வந்து விடுகிறார் கள்—தங்களுடைய நிர்வாகத்தில் பணிகள் எப்படி நடக்கிறது? திறமையாக நடைபெறுகின்றனவா என்பதை எல்லாம் அவர் களால் கண்டறிய முடியுமா என்றால் முடியாது என்ற சூழ்நிலை இருக்கலாம். அப்படி தலைவர் மட்டும் ஈடுபட்டிருக்கிறார் என்றால் நிச்சயமாக தலைவரை மட்டும் வேண்டுமானால் நீக்கம் லாம்; பிறகு நிர்வாகக் குழுவில் இருக்கிற உறுப்பினர்கள் வேறு ஒருவரை தலைவரை தேர்ந்தெடுப்பதற்கு ஒரு வாய்ப்பளித்து பெறலாம்; பிறகு அந்த சங்கம் அந்த தவறை தொடர்ந்து செய் கிறதா? அதை திருத்திக்கொள்கிறதா? அதனால் நிர்வாகத் தன்மை மாறி வருகிறதா? ஏற்கெனவே இருந்த [illegible] கத்தைவிட

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1983 பிப்ரவரி 14

இப்போது எப்படி இருக்கிறது என்று பார்க்க ஒரு வாய்ப்பு
அளிக்கலாம். உடனடியாக நிர்வாக குழுவை கலைத்து விடுகிற
அளவிற்கு அதிகாரம் பதிவாளருக்கு அரசாங்கம் வழங்கக்கூடாது.
காரணம் ஒரு காலக்கட்டத்தில் அதிகாரிகளுக்கு நமக்கென்ன,
நிர்வாகக் குழுவை கலைத்துவிடலாம் என்கிற எண்ணம் அவர்
களுக்கு வரும். தவிர்க்க முடியதா சூழ்நிலையில் அரசாங்கத்
திற்கோ, பதிவாளருக்கோ ஏற்படுமானால் அந்த நிர்வாகக்
குழுவை கலைக்கிறீர்கள். ஆனால் நீங்கள் இப்போது சொல்லி
யிருப்பது இரண்டு ஆண்டுகள் வரையில் தனி அதிகாரிகளை நிய
மிக்கலாம் ; பிறகு வேண்டுமானால் இன்னொரு ஆண்டு காலம்
நியமித்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது
தவறு ; ஒரு நிர்வாகக் குழுவை, ஒரு சங்கத்திலே கலைத்து,
அது தவறு செய்துவிட்டது அந்த தவறு நிவர்த்திக்க முடியாத
தவறு, திருத்திக்கொள்ள முடியாத தவறு, ஏற்கெனவே தலை
வரை நீக்கினோம்; வருகின்றவர்களும் அதைத் தான் செய்கிறார்
கள் என்றால் நிர்வாகக் குழுவை கலைத்து ஒரு தனி அதிகாரியை
நியமித்தால், ஆறு மாத காலத்திற்குள் தேர்தல் நடத்தியாக
வேண்டும். நிச்சயமாக அதற்கு மேல் போவதற்கு அரசாங்கம்
கூட இந்த சட்டத்திலே இடம் வைக்க கூடாது. அப்படி ஒரு
இடமிருந்தால் அவர்கள் அதை பயன்படுத்திக் கொண்டு தேர்தல்
நடத்துவதை ஆறு மாதத்திற்கு ஒருமுறை, இரண்டு ஆறு மாதம்,
மூன்று ஆறு மாதம் என்று வளர்த்துவார்களே தவிர தேர்தல்
நடைபெறாது. ஆகவே உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்
சர் அவர்களை கேட்டுக் கொள்வது, ஆறு மாதங்கள் முடிந்தால்
உடனடியாக அதற்குள்ளாகவே அந்த சங்கத்தினுடைய தேர்தல்
வேலைகளை செய்து, தேர்தலை நடத்தி மக்கள் பிரதிநிதி
களிடத்திலே அதனுடைய நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டு
மென்கின்கிற வகையில்தான் சட்டங்கள் இருக்கவேண்டும்.
அதிகமாக நீடிக்கக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான
எண்ணம்.

இன்னொன்று இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இன்றைய தினம் கிராமங்களில் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்குகின்றன. கடன் வழங்குகிறபோது, ஏற்கெனவே சொல்லியிருப்பதைப் போல. ஏழை, எளிய மக்கள், விவசாயத்தை நம்பியிருக்கிற மக்கள் கடனை கட்ட தவறிவிடுகிறார்கள். பிறகு ரெவின்யூ ரெக்கவரி ஆக்டிலே கூட இன்றைக்கு அவற்றை வசூலிப்பதற்கு விதிகள் இருக்கின்றன. அதிலும் முடியவில்லை ; நமக்கு அடமானமாக வைத்த அந்த நிலத்தை முறைப்படி நம்முடைய இலாகாவி லிருக்கிற அதிகாரிகளை நீதிபதியாகக் கொண்ட அந்த குழுவை அனுப்பி ஏலம் விடுகிறீர்கள்.

[முற்பகல் 11–50.]

அப்படியிருக்கிற விவசாயிகளுக்கு நிலம் ஏலம் போய்விடு மானால், பிறகு விவசாயி பணம் கட்டினால், அரசாங்கம் நிலத் தைத் திருப்பித் தரும் என்று இந்தப் பேரவையில் கூட மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பல நேரங் களில்—மானியக் கோரிக்கையின் பொழுதும், கேள்வி நேரத்தின் பொழுதும்—சொன்னது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. ஆனால் கிராமங்களில் அப்படி நடைபெறவில்லை. என்னுடைய தொகுதியில் நடந்த சம்பவங்கள், என்னுடைய கவனத்திற்கு வந்தபொழுது நான் சம்பந்தப்பட்ட—வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவுத் தனி அதிகாரியையும், திருவண்ணாமலையிலே இருக் கிற துணைப் பதிவாளரையும் சந்தித்து சென்னால்கூட நடை முறையில் நடைபெறவில்லை. அமைச்சர் அவர்கள் உறுதி அளித் தாலும்கூட, நடைமுறையில் சாத்தியம் இல்லை. அதிகாரிகள் சிக்கல் இருக்கிறது என்று சொன்னார்கள். தனியாக வேண்டு மானால், அமைச்சர் அவர்களுக்கு விவரமாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே, சட்டத்திலேயே ஒரு விதியை நாம் சேர்த்தோமானால், பிறகு, தமிழகத்திலே, இப்படிப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு இன்னலே ஏற்படாத நிலைமையை நாம் நிரந்தர மாக உருவாக்க ஒரு வழியைக் கண்டிருக்கிறோம் என்று நமக்கே கூட திருப்தி ஏற்படும் என்று இந்த நேரத்திலே செல்லிக்கொள் கிறேன்.

சாதாரணமாக, ஒரு சங்கத்தினர், ஒருவருடைய நிலத்தை ஏலம் எடுக்கின்றார்கள், அவர்கள், ஏலம் எடுத்ததற்குப் பிறகு, சங்கத்திற்குச் சேரவேண்டிய அசல், வட்டி அனைத்தையும் அந்த விவசாயி கட்டிவிடுவாரானால், அந்தச் சங்கத்திலேயே ஒரு தீர் மானத்தை நிறைவேற்றி, இந்த விவசாயி, ஏற்கனவே இந்த ஆண்டில் பெற்ற கடனுக்கான அசலையும் வட்டியையும் இந்தத் தேதியிலே கட்டி விட்டதனால், அவரிடத்திலேயிருந்து பெற்ற நிலத்தை அவருக்கே திருப்பிக் கொடுத்துவிட இந்த நிர்வாகக் குழு தீர்மானிக்கிறது என்ற தீர்மானத்தை அந்தச் சங்கம் நிறைவேற்று மானால், உடனடியாக அந்தத் தலைவரோ சங்க அதிகாரியோ, சப் ரிஜிஸ்திரார் அலுவலகத்திற்குச் சென்று பதிவு செய்யமுடியும். அப்படி செய்தால் தான் வறுமையிலே இருக்கிற விவசாயி, வறு மைக்கோடு, வறுமைக்கோடு என்று நாம் சொல்லிக்கொண்டிருக் கிறோமே, அந்த வறுமைக்கோட்டுக்கு கீழே இருக்கிற ஒன்றும் அறி யாத விவசாயிகூட தன்னுடைய நிலத்தைப் பெறமுடியும். இல்லை யென்றால், இந்தப் பிரச்சனையில் நீங்கள் என்னதான் உறுதி அளித்தாலும், வசதி உள்ளவர்கள் திருப்பிப் பெற்றுக் கொள் வார்களே தவிர ஏழை எளியவர்கள் பெற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு மிகப் பெரிய கஷ்டத்தை ஏற்படுத்தும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, அந்த விதியை சட்டம் இயற்று வதற்கு முன்னாலே சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது)

ஒரு முக்கியமான கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.
முன்பு ஒரு ஊராட்சி மன்றத்திற்கு ஒரு சங்கம் இருந்து
வந்தது. ஆனால், இன்று என்ன நிலைமை? நாங்கள்
எல்லாம்கூட, ஆரம்பகாலத்திலே, பள்ளிக்கூடத்திலிருந்து வந்த
வுடனே, முதன்முதலாகப் பொறுப்பேற்றது கிராமத்திலே இருக்
கிற கூட்டுறவுச் சங்கத்திலேதான். அதிலே நாணயமான முறை
யிலே பணியாற்றினால் பிறகு அரசியலிலே வளர்வதற்கு
வாய்ப்புண்டு என்பதற்கு நானே கூட உதாரணமாகத் திகழ்
கிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆனால், இப்பொழுது வயபுள் யூனிட் என்று 5, 6 சங்கங்
களை ஒன்று சேர்த்துவிட்டார்கள். இன்றையதினம் ஒரு கிரா
மத்திற்குச் சென்றால், 10 மைலுக்கு ஒரு சங்கம் இருக்கிறது.
சாதாரணமாக என்ன நிலைமை? கடன் கேட்கவேண்டும்,
அல்லது வேறு காரணத்திற்காக அந்த அலுவலகத்திற்குச்
செல்லவேண்டுமானால், 10 மைலுக்கு அப்பாலுள்ள விவசாயி,
10 மைல் தூரத்திற்குச் செல்லவேண்டும். அங்குள்ள மேற்பார்
வையாளர் இருப்பாரா? இருக்கமாட்டார். அவர் எங்கே?
அவர் வேறு பணியாகச் சென்றிருப்பார். அதனால் கிராமப்
பகுதியிலே ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கவேண்டிய
சலுகைகள், அரசாங்கத்தினுடைய உதவிகள், ஆகியவற்றை
பெற முடியாத காலகட்டத்தை, சூழ்நிலையை, சட்டம் என்ற
பெயரால், நம்மை நாமே அறியாமல், ஏற்படுத்தி விடுகிறோம்
என்பதுதான் எனது பணிவான எண்ணம். ஆகவே, அமைச்
சரவர்கள் ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு கூட்டுறவுச் சங்கம்
கொண்டு வரவேண்டும். தமிழகத்திலே எத்தனை பஞ்சா
யத்துக்கள் இருக்கின்றன? அந்த ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும்
ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கம் என்ற நிலைமையை ஏற்படுத்த
வேண்டும். அப்படி ஏற்படுத்தினால், ஒவ்வொரு சங்கச் செயலா
ருக்கும் சம்பளம் வழங்கமுடியாது என்ற எண்ணம் எழலாம்.
அது நியாயமான எண்ணம். ஆனால் இப்பொழுதே பார்த்
தோமானால், ஒரு சங்கத்திற்கென்று ஒரு செயலாளர் இருக்கி
றார். ஆனால், சில நேரங்களில், ஒரு செயலாளரே 3 வயபுள்
யூனிட் என்றால், 30 மைல் பரப்பளவைப் பார்க்கிறார்.
இதை, நாங்கள் எல்லாம் கண்கூடாகக் கீழ்மட்டத்திலே
பார்க்கிறோம். அப்படி இல்லையென்றால், இரண்டு சங்கங்கள்,
மூன்று சங்கங்களுக்கு ஒரு செயலாளரை நியமித்துக் கொள்ள
லாம். அதிலே ஒன்றும் கஷ்டம் இருக்காது. ஆனால், ஏழை
எளிய மக்கள், உண்மையான கூட்டுறவுத் தத்துவத்தில,





அரசாங்கச் சலுகைகளைப் பெற வேண்டுமானால், நீங்கள் கட்
டாயமாக மாற்றியாகவேண்டும். இதிலே குறுக்கே இருப்ப
வர்கள் வேண்டுமானால், அதிகாரிகள் வேண்டுமானால் ஏதோ
தவறு வந்து விடும் என்று கருதலாம். ஆனால் நிச்சயமாகத்
தவறு நடக்காது, நல்லமுறையில் நடைபெறும். இந்த
இலாக்காவை நேரில் பார்த்து முடித்தவர்கள் என்ற முறையில்
சொல்கிறேன், ஊராட்சிக்கு ஒரு கூட்டுறவுச் சங்கம் என்ற
முறையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

நான்கூட செலக்ட் கமிட்டியிலே ஆரம்பத்திலே கொஞ்ச
நாள் சென்றேன். அப்பொழுது பல மாவட்டங்களிலேயும்,
கூட்டுறவுத் துறையிலே என்னை விட அனுபவம் வாய்ந்த பல
பெரியவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை கேட்கின்ற வாய்ப்பு
எனக்குக் கிடைத்தது. திருநெல்வேலியிலோ, கன்னியாகுமரி
யிலோ ஒரு இடத்தில் ஒரு பெரியவர் கேட்டார். மாநில
கூட்டுறவு வங்கி அதற்குப் பிறகு மாவட்டத்திலே கூட்டுறவு
வங்கி பிறகு கிராமத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் என்று இவை
களையெல்லாம் ஏற்படுத்துவதன் நோக்கமே கிராமங்களி
லுள்ள வசதியற்ற ஏழை எளிய விவசாயிகள் அதிக வட்டிக்குக்
கடனை வாங்கி சிரமப்படக் கூடாது என்பதாம், அவர்களுக்கு
வேண்டிய அளவிற்கு கடன் கொடுத்துக் காப்பாற்றவேண்டும்,
அவர்களைப் பாதுகாக்க வேண்டும், அவர்களைக் கை
தூக்கி விட வேண்டுமென்ற எண்ணத்தால்தான். இல்லை
யென்றால் இந்தச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டிய அவசி
யமில்லை, வேறு இலாக்காக்களின் மூலமாகவோகூட செய்
யலாம். செலக்ட் கமிட்டியிலே சென்றபோது ரிசர்வ் வங்கி
கடன் தருகிறது விவசாயிகளுக்கு. எனக்குத் தெரிந்த வரை
யில் சொல்கிறேன், அது ஒரு வேளை கொஞ்சம் கூடுதலா
கவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். விவசாயிகளுக்
காக வாங்கப்படும் கடன்கள் 7 சதவீத வட்டி என்று மாநில
கூட்டுறவு வங்கி வாங்குகிறது. மாநில கூடடுறவு வங்கிக்குக்
கிடைக்கின்ற அந்தப் பணம் விவசாயிக்குக் கிடைக்கின்ற
பொழுது 12 சதவீத அளவிற்கு, தவணை தவறவில்லை
என்றால், போய்ச் சேருகிறது.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாண்புமிகு உறுப்பினர்
திரு. அழகர்சாமி அவர்களுக்குக் கூட தெரியும், அவரும்
அந்தக் கமிட்டியிலே அப்பொழுது இருந்தார், இன்றைக்கு
இருந்தாரே இல்லையோ எனக்கு தெரியவில்லை. அப்பொ
ழுது ஒருவர் கேட்டார். எங்களுக்கே கூட அப்பொழுது
தான் அது நியாயம் என்று பட்டது. ரிசர்வ் வங்கியிலிருந்து
மாநில வங்கி கடன் பெற்றுத் தருகிறது. இடையிலே மத்திய
வங்கி இருக்கிறது. இப்படியில்லாமல் நேரடியாக கூட்டுறவுச்
சங்கங்களுக்கே அந்தப் பணம் போய் சேர வேண்டும்.

இல்லையென்றால், மாநில வங்கி அதற்கு வேறு பணியை வேண்டுமானால் கொடுத்துவிட்டு, ரிசர்வ் வங்கியிடமிருந்து மாவட்ட மத்திய வங்கியே கடனைப் பெற்று நேரடியாக அந்த விவசாய கடன் சங்கங்களுக்குக் கொடுத்தால், இப்பொழுது 12 சதவீதம் எனறு வட்டி என்று கொடுக்கப்படுவது இன்னும் குறைந்தது ஏறக்குறைய 5 சதவீத வட்டிக்கோ அல்லது 7 சதவீத வட்டிக்கோ தருகின்ற வாய்ப்பு வசதிகள் ஏற்படும் அப்படி அவர் எங்களைக் கேட்டார். அவர் ஒரு சங்கத்தின் நிர்வாகத்தில் தலைவராக இருந்தவர். அவர் இந்தக் குறை பாட்டை எங்களிடத்தில் சொன்னார். அதில் கூட நியாயம் இருக்கிறது என்று எங்கள் மனத்தில்பட்டது. ஆகவே, அரசாங்கம் இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்து, இதிலே மாற்றம் செய்ய முடியுமானால், நிச்சயமாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் துணிந்து இதைச் செய்தால் குறைந்த வட்டிக்குக் கடன் பெறுகின்ற வசதி உண்டு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். நம்முடைய அரசாங்கம், ஏற்கெனவே சொல்லிய அந்தக் கால் கட்டத்தை மட்டும் வைத்துக் கொண்டு பதிவாளர், துணைப் பதிவாளர் அல்லது இன்னொரு பதிவாளர் என்று அவர்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுப்பது தவறு. நாளைக்குக் கூட வருகிறது, நாம் மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறோம். அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்பதில் கருத்து வேறுபாடு இல்லை. அரசாங்கத்திற்கு இருக்கின்ற அதிகாரங்களை ஊராட்சி மன்றங்களாக இருந்தாலும், நகராட்சி மன்றங்களாக இருந்தாலும், ஒன்றியங்களாக இருந்தாலும், கூட்டுறவுச் சங்கங் களாக இருந்தாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டுமே தவிர, இடையிலே இருப்பவர்களுக்கு இப் படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுப்பது இடைஞ்சல் செய்யக் கூடும். எனவே, எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், யார் அந்தப் பொறுப்புக்கு வந்தாலும், அவர் களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்தால், அவர்கள் நாணய மாக நடந்து, நல்லமுறையில் விவசாயிகளையும், மற்றவர்களை யும் வாழ வைப்பார்கள் என்று கூறி, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறீ என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்., வணக்கம்.

(நண்பகல் 12–00.)

*திரு. ஏ. எம். சேதுராமன் : பேரன்புக்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் திருத்தப்பட்டது. அதற்குப் பின்னாலே 1981 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டு, சட்டமன்றத்திலே நிறை வேற்றப்பட்டு, 1983 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டு இருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித்





தலைவர் அவர்கள் அவர்களுடைய எண்ணத்தை, தமிழகத் திலே கூட்டுறவுத் துறையினர் வளர்ச்சியடைய வேண்டும் என் றும், அது முன்னுக்கு வரவேண்டும் என்றும் அவர்களுடைய வாழ்வுவளம் பெற வேண்டும் என்றும் அடிப்படையிலே, ஏதோ ஒரு வகையிலே, க்ஷீணித்துப் போய் இருந்த கூட்டுறவுத் துறையை புதுப்பிக்க வேண்டும் என்று புரட்சித் தலைவர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பேரிலே கூட்டுறவுச் சங்கங்களின் புதிய சட்டம் இயற்றப்பட்டு, திருத்தப்பட்டு இருக்கிறது என்பதை சட்டமன்றத்திலே ஆய்வு நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கியிலே இருந்து, எல்லா கூட்டுறவு வங்கிகளிலே இருக்கின்ற இருப்பை, பணத்தை வேறொரு, தேசீயமயமாக்கப் பட்ட வங்கிகளிலே வைக்கப்பட வேண்டும் என்ற சிக்கல், இந்த அரசாங்கம் கொண்டு வந்த இந்த சட்ட வடிவின் மூலம் தீர்க்கப் பட்டு, அந்தப் பணத்தை கூட்டுறவு வங்கிகளிலேயே வைப்பது என்ற அளவுக்குத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. அந்த வகையிலே கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுடைய பணம் கூட்டுறவு வங்கியிலேயே இருக்கின்ற காரணத்தால், கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு உதவி கரமாக இருக்கின்றது. என்பதைத் தெரிவித்து, அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, சங்கங்கள் துவக்குகின்றபோது, 10 உறுப்பினர்கள் கொண்ட ஒரு சங்கமாக இருக்க வேண்டும். 10 உறுப்பினர்களைக் கொண்டுதான் சங்கத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற நிலைமை மாறி, இன்றைக்கு 25 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. அதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம், கிராமத்திலே இருக்கின்றவர்கள் உறவினர்கள் 10 பேர்கள் ஒன்றாகச் சேர்ந்து, கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்து, அதன் விளைவாக பல மோசடிகள், பல சிக்கல்கள் இருந்து, இதனால் பல கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அந்த நிலை மையைப் போக்குவதற்காக இதேபோன்று 25 நபர்கள் தனித் தனி நபர்கள், அந்தச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் சங்கம் ஆரம்பிக்க இயலாது என்று சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அது பாராட்டுக்குரியதாகும்.

அதே போன்று தகுதியுள்ள உறுப்பினர்கள் ஏதாவது ஒரு சங்கத்திற்கு உறுப்பினராவதற்கு மனுச் செய்வார்களானால் அவர்கள் 60 நாட்களுக்குள்ளாக அந்த சங்கத்தினுடைய தலை வரோ அல்லது செயலாளரோ அதற்குப் பதில்கொடுக்கவேண்டும். அப்படி 60 நாட்களுக்குள் பதில் வராவிட்டால் அந்தச் சங்கத்தில் அவர் தானாகவே உறுப்பினராகும் தகுதியைப் பெற்று விடு கிறார். இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்த இந்த அரசுக்கு பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று கூட்டுறவுச் சங்கத்தில் ஆதி திராவிடர்கள்,
பழங்குடியினர் சமுதாயத்தில் இன்னும் நலிந்த பிரிவினர்கள்
மற்றும் மகளிர் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு இந்தச் சட்டம்
வகை செய்திருக்கிறது. இது உண்மையில் பாராட்டுதற்குரியது,
என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன். அவர்களை நியமனம் செய்கின்ற முறை
வைத்திருக்கக்கூடாது. நியமனம் முறை என்பது ஜனநாயகத்
திற்கு விரோதமானது. நல்லவர்கள் சிபாரிசின் பேரில் வரு
வதைவிட தேர்தலின் மூலம் அவர்களைக் கொண்டுவருவது சிறப்
பாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும்
சொல்லப்போனால் ஆடு வளர்ப்புச் சங்கம், கறவை மாடுகள்
வழங்குகின்ற சங்கம், பால்வளச் சங்கம், கூடை முடைவோர்
சங்கம், நெசவாளர் சங்கம் போன்றவைகளில் ஆண்கள் உறுப்
பினர்களாக இருந்தாலும்கூட, அந்தச் சங்கத்தினுடைய தலைவ
ராக இருந்தாலும்கூட, பெண்கள் அங்கே முக்கியமான பொறுப்
பேற்று வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற ஒரு பொறுப்
பிலே அவர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள், என்ற உண்மையை
நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.
ஆகவே, பெண்களுக்கு நிறைய அந்தச் சங்கங்களில் எல்லாம்
உறுப்பினர்களாகச் சேருவதற்கு இடம் கொடுக்க வேண்டும்.
அதே சமயத்தில் கிராமத்தில் இருக்கின்ற சங்கங்கள் அல்லது
புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கின்ற சங்கங்களிலே எல்லாம்
பெண்கள் முழுமையாக பங்கேற்று அவர்களே தலைவர்களாக,
அல்லது உப-தலைவர்களாக, அவர்களை டைரக்டர்களாக,
உறுப்பினர்களாக இருந்து சங்கத்தை நடத்த நடவடிக்கை
எடுக்க வேண்டும். ஏன் என்றால், பெண்கள் உறுப்பினர்களாக
இருந்து தலைவர்களாக இருந்து, செயல்படுகின்ற சங்கங்களில்
நிச்சயமாக ஊழல்கள் வராது. அவர்களுடைய பொறுப்பு அதிக
மாகி, இலாப நஷ்டங்களை சரிவர கண்காணித்து, அந்தச்சங்
கத்தை மேலும் வளர்ப்பதற்கு முனைவார்கள் என்பதை நான்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த அளவுக்கு கூட்
டுறவுச் சங்கங்களை நாட்டிலே அதிகமாகக் கொண்டுவர வேண்
டும், கிராமப்புறத்திலேயும், மற்ற பஞ்சாயத்துக்களிலேயும்,
ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு
இருக்கிறது. அந்த எண்ணத்தை விரைவு படுத்தி கிராமத்திலே
ஒரு சங்கம் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன். அதிகாரிகளாக இருக்கின்றவர்கள் ஏதோ சங்கமும்,
அல்லது அரசாங்கமும் நம்முடைய கைக்குள் இருக்கிறது என்று
அவர்கள் அந்தச் சங்கத்திலே இருக்கின்றவர்களை நிரப்பாமல்
அல்லது அந்தச் சங்கத்தினுடைய நோக்கத்திலே வேறு யாரவது
கைவைக்காமல் இருப்பார்களேயானால் நிச்சயமாக ஒவ்வொரு
கிராமத்திற்கும் ஒரு சங்கம் ஏற்படும் என்பதையும், இளைஞர்
களாக அதிலும் அதிகமாக படித்தவர்கள் அந்தக் கூட்டுறவுச்
சங்கத்திலே ஈடுபடவேண்டும், அப்படி ஈடுபட்டு அவைகளைச்
சிறந்த முறையில் நடாத்திச் செல்லக்கூடிய அந்தத் திறமையை
அந்த வாய்ப்பை அவர்களுக்கு உருவாக்கி அளிக்கவேண்டுமென்று
கேட்டுக்கொண்டு என்னை பேச வைத்தமைக்காக நன்றி கூறி
முடிக்கிறேன்.





(பிற்பகல் 12—10)

*/திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சட்ட முன் வடிவின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களைச் சொல்வதற்கு நான் இங்கே நிற்கிறேன். ஏற்கெனவே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களின் ஒரு பகுதியைத் தோழர் ஹேமச்சந்திரன் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொல்ல விட்டுப்போன சில விஷயங்களைக் குறித்து மட்டும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பொதுவாக, இந்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் இதற்கு முன்பு இருந்த சட்டங்களிலே நலிந்த பிரிவினருக்கோ, அல்லது பெண்களுக்கோ அல்லது தாழ்த்தப்பட்ட மக்களுக்கோ, பழங்குடி மக்களுக்கோ இதிலே பிரதிநிதித்துவம் இல்லை. ஆனால், இன்று அவர்கள் தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும் அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் எண்ணம் இந்தச் சட்டத்திலே கொண்டு வரப்பட்டு இருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதிலும் ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இவர்களையும் தேர்தல் மூலமாகக் கொண்டு வரலாம். அப்படி ஒரு உத்தரவு வந்தால் பஞ்சாயத்துத் தேர்தலுக்கு கொண்டுவரப்பட்டதால் ஏற்பட்ட சூழ்நிலை இதற்கும் வந்துவிடுமோ என்ற கருத்திலே அதை தற்போது வலியுறுத்தாவிட்டாலும், வருங்காலத்தில் அத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்த அரசு சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தேர்தல் நடத்தப்பட்டு பல ஆண்டுகள் கடந்து விட்டன. அதனால் பெரும்பகுதி ஸ்தாபனங்கள் எல்லாம் தேர்தல் இல்லாமல், தனி அதிகாரிகளின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகின்றன. அரசாங்கம் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என்று முயற்சித்தாலும் இடையிலே ஏற்பட்ட பல்வேறு சங்கடங்களின் காரணமாக அதைச் செய்ய முடியவில்லை. சென்ற சட்டமன்றத்திலேயே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று எண்ணியிருந்த போதிலும், இடையிலே இந்திரா அரசு ஆட்சியைக் கலைத்து விட்டதால், அது போய்விட்டது. சென்ற ஆண்டு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது இங்கே ஏற்பட்ட பல்வேறு சங்கடங்கள் காரணமாக அது அடுத்த கூட்டத் தொடருக்கு தள்ளிப் போடப்பட்டு, இந்தக் கூட்டத் தொடரில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலும், அது பாதி வழியில் நிறுத்தப்பட்டு, அடுத்த கூட்டத் தொடருக்குத் தள்ளிப்போடும் நிலைமையிருக்கிறது. இப்படி பல்வேறு சோதனைகள், சங்கடங்கள் வந்தபோதிலும், இந்தச்

அதேபோன்று, ஒரு சங்கத்திலே கணக்குகளை ஆடிட் செய்
வதற்கும், அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், அந்த
போர்டு கலைக்கப்பட்டாலும், அந்தக் கணக்கை 6 மாதத்திற்குள்
ஆடிட் செய்யும் ஏற்பாட்டினை செய்தது வரவேற்கத்தக்க
தாகும். அதேபோன்று விசாரணை இருக்குமானால், சிக்கல்கள்
ஏற்பட்டு அந்த சங்கத்தில் விசாரணை ஏதாவது மேற் கொள்ள
வேண்டுமானால் அந்த அதிகாரிகள் 3 மாதத்திற்குள்ளாக அந்த
சங்கத்திற்கு அந்த விசாரணையின் முடிவைச் சொல்ல வேண்டும்
என்று திருத்தப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு சட்ட திருத்தங்
களும் அந்த சங்கங்கள் மேலும் சுறுசுறுப்பாக செயல்படுவதற்குன்
டான நடவடிக்கையை எடுத்துக் கொள்வதற்கு அந்தச் சங்கம்
சிறப்பாகவும் நடப்பதற்கு ஆவன செய்வதாக இருக்கின்றது.

அதேபோல லாபத்துடன் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள்
14 சதவிகிதம் டிவிடன்டு கொடுக்கும் என்று சட்டத் திருத்தம்
அனுமதித்திருக்கிறது. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்
களுக்கு அந்த வகையிலே நன்றியைச் சொல்லக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

மத்திய அரசு பரிந்துரையின் பேரில் 60 சதவிகிதம் தவணை
தவறிய சங்கங்கள் எதுவாக இருந்தாலும், அந்தச் சங்கத்திலே
உள்ள போர்டில் உள்ள உறுப்பினர்களை தகுதியின்மை ஆக்கு
வது மட்டுமல்ல, ஆராய்ந்து, அல்லது ஆய்வு செய்து, பரிசீலனை
செய்து அந்தச் சங்கத்தைக் கலைத்துவிட்டு புதிதாக ஒரு சங்
கத்தை அந்த ஏரியாவிலே கொண்டு வருவதற்கு முயற்சிக்க
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த போர்டை
மட்டும் கலைத்து விட்டு அந்தச் சங்கத்தை அப்படியே இருக்க
வைப்பதிலே பல பிரச்சினைகள் உருவாகக் கூடும். அல்லது அதிலே
உறுப்பினர்களாக இருப்பவர்கள் கடன் வழங்குகின்ற அந்த
தகுதியை இழந்து விடுகின்ற நிலைமை ஏற்படும். ஆகவே மத்திய
அரசு 60 சதவிகிதம் உள்ள சங்கங்களுக்கு மறுதகுதி உண்டு என்
பதை, குறைந்தது இப்போது இருக்கின்ற மாதிரி 40 சதவிகிதம்
தகுதியை அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்கக் கூடிய அந்தஸ்தை
அந்தச் சங்கங்களுக்கு அளிக்க வேண்டும் என்பதையும் இந்த
நேரத்தில் என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற கூட்டுறவுத்
துறையின் மூலமாக நடைபெறுகின்ற சர்க்கரை ஆலைகள் பாங்கு
கள் இவைகளிலே ஐ.எம். போன்றவர்கள் அல்லது அந்தக் கேட
ரிலே இருக்கின்ற அதிகாரிகளை மாற்றுவதற்கு சங்கத்திற்கு
அதிகாரம் இல்லாமல் இருக்கின்றது. ஆலைகளிலே தவறுகள்,
மோசடிகள் நடைபெறுகின்றன. ஏகாதிபத்தியம், சர்வாதிகாரம்
நடைபெறுகிறது என்ற அளவுக்கு அதிகாரிகள் நடந்து கொள்
கிறார்கள். அவர்களை மாற்ற அல்லது வேறொரு அதிகாரிகளை
நியமிக்கக் கூடிய அளவுக்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை
என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஏற்
கெனவே தெரிவித்திருக்கிறேன்.



அந்தத் துறைக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வெளி
யிலே சட்டத் திருத்தத்திலே வருகின்றபோது அப்படிப்பட்ட
பணியாட்களை மாற்றி எந்த ஒரு கூட்டு அமைப்பானாலும், கூட
அந்தப் பணி செவ்வனே நடைபெற வேண்டுமென்பதற்காகவும்,
அந்தப் பணி செம்மையாக நடைபெற வேண்டுமென்பதற்காக
வும், அதிகாரிகளை மாற்றி, நல்ல அதிகாரிகளை கொண்டுவரு
வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்
கிறேன். இங்கே பேசுகின்றபோது 6 ஆண்டுகளுக்கு மேலாக
எந்த ஒரு தலைவருக்ம் அல்லது நிர்வாகத்தினரும் இருக்கக்
கூடாது என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன்.
அதாவது இப்போது இருக்கின்ற சங்கங்களில் 10 அல்லது 15
ஆண்டுகளுக்கு, 6 அல்லது 7 ஆண்டுகளுக்கு மேலும் அவர்களுக்கு
2 முறைகள் அவர்கள் சங்கத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டு நீடிக்
கின்ற தன்மை வருமானால், அவர்கள், 15, 20 ஆண்டுகளுள்
அந்தச் சங்கத்தினுடைய முதலாளிகளாக ஆகி விடுகிறார்கள்.
அவர்கள் தலைவர்களாக இருப்பதற்கு பதில் ஏகாதிபத்திய
உணர்வோடு சர்வாதிகாரியாக விளங்குகின்ற தன்மை ஏற்பட்டு
விடும். புதிய உறுப்பினர்கள் அல்லது படித்தவர்கள், படித்த
இளைஞர்களாக இருக்கின்றவர்கள் அல்லது அந்தக் கிராமத்திலே
திறமை பெற்றிருக்கிற பெண்கள் அந்தச் சங்கத்திற்கு ஒரு
தலைவராக வர முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே
தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை
திருத்தாமல் 6 ஆண்டுக்கு மேலாக தலைவராகவோ, பொறுப்
பாளராகவோ அல்லது உறுப்பினர்களாகவோ இருக்கக் கூடாது
என்ற நிலைமையைக் கொண்டு வர வேண்டும். வேண்டுமானால்
அங்கே அந்தத் தலைவர்கள் 6 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பின
ராக இருப்பதற்கு மட்டும் அனுமதித்தால் போதுமானது என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஆற்காடு தொகுதியில் திமிரி ஒன்றியத்திலே ஒரு
10 ஆண்டுகளுக்கு முன்னாலே துவங்கப்பட்ட விவசாயிகள் சேவை
கூட்டுறவுச் சங்கம் 2 இலட்ச ரூபாயிலே இன்றைக்கு அரசாங்
கத்திற்குக் கடனாக இருக்கிறது. பல பினாமி விவசாயிகள்
பெயராலே பணம் எடுக்கப்பட்டு, இன்றைக்கு திருப்பிக்கொடுக்க
முடியாத அளவில் இருக்கிறது என்பதை நான் பல அதிகாரிகள்
மூலமாக கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கே அந்த 2 இலட்ச
ரூபாய் எந்தக் காலத்தில் யாரால் இந்த மோசடி செயப்பட்டிருக்
கிறது என்பதையும் அதனுடைய வசூலைப் பெறுவதற்கான நட
வடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்என்று கேட்டுக்கொள்
கிறேன். அந்த சொசைட்டியை இன்னும் கலைக்கவில்லை. அந்த
சொசைட்டியினுடைய தலைவராகவும், உறுப்பினர்களாகவும்,
டைரக்டர்களாகவும் இன்றைக்கும் அவர்கள் இருந்து கொண்
டிருக்கிறார்கள். எந்த வகையில் எந்த உரிமையோடு அந்தச்
சங்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை இன்ன
மும் தெரியவில்லை, என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

சட்டத்தை நிறைவேற்ற எல்லோரும் சேர்ந்து இருந்து, சீக்கிர மாக இதை நிறைவேற்றி, சீக்கிரம் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சி மீண்டும் வற்புறுத்துகிறது.

நேற்றைய தினம் பேசும்போது, எப்போது தேர்தல் நடத் தப்படும் என்று குறிப்பிட்டு நான்—குறுக்கிட்டுக் கேட்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொன் னார்கள்—நிச்சயமாகத் தேர்தல் எப்போது நடத்தப்படும் என் பதைக் கூட இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படும்போது தெரிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, சர்க்காரும் இந்தத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு முறையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தங்களைப் பற்றி அரசு கொடுத்துள்ள அறிக்கையிலே நான் ஓரிரு விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். பக்கம் 18-லே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால்— ஏற்கெனவே நான் கூறியதைப் போல நலிந்த பிரிவினர்கள், ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்கள் அல்லது இதர மக்கள் ஆகியோர் இந்த ஸ்தாபனங்களில் அங்கம் வகிக்க வேண்டும் அல்லது இடங்கள் ஒதுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு ருப்பது ''வேக்''-ஆக இருக்கிறது. ''தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் ஒருவரையும் அல்லது பொருளாதாரத் தில் நலிந்த பிரிவினர் ஒருவரையும் அல்லது மகளிர் ஒருவரை யும் சந்தர்ப்பத்திற்கேற்ப நியமிக்க வேண்டும்''.

இப்படி நியமிக்கின்ற அதிகாரம் யாருக்கு என்பது தெளிவாக இல்லை. எத்தனை பேர் என்பதும் தெளிவாக இல்லை. ரிஜிஸ்டிராருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைத் தொடர்ந்து இதீ வருவதால், இந்த அதிகாரமும் ரிஜிஸ்டிராருக்கு கொடுக்கப் படுகிறதா அல்லது போர்ட்டுக்குக் கொடுக்கப்படுகிறதா என் பதைப் பற்றித் தெளிவாக வரையறுக்க வேண்டும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், போர்ட்டுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்க வேண்டுமே தவிர, பதிவாளருக்கு அந்த அதி காரம் கொடுப்பது சரியாக இருக்காது என்பதாகும். ஆகவே, அந்த அடிப்படையில் இந்தப்பிரிவு திருத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திருத்த அறிக்கை பக்கம் 24-இல் குழு உறுப்பினர் கள் தேர்வு பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ''பதிவான சங் கத்தின் குழு உறுப்பினர்கள், அந்த பதிவான சங்கத்தின் உறுப் பினர்களால் நிர்ணயிக்கப்படும் முறையில் வாக்குச் சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்'' என்று இருக்கிறது. இந்த வாக்குப்பதிவு தற்போது இரகசியமான முறையில் நடைபெறு



கிறது. அதாவது இரகசிய வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். இதில் இரகசிய வாக்கெடுப்பு முறையில் இல்லாமல் நேரடியாக ''கை தூக்கு'' மூலம் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு அபாயம் இருப்பதாக நான் அறிகிறேன். அப்படி இருக்கக் கூடாது. இரகசிய வாக்கெடுப்பு மூலமாகவே தேர்ந்தெடுப்பது தான் சரியாக இருக்கும் என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யின் கருத்து.

பிரிவு 88-லே ஏதாவது தவறுகள் நடைபெற்றால் அவற் றைப் பரிசீலிப்பது என்ற முறையிலே அல்லது விசாரிப்பது என்ற முறையிலே நடவடிக்கை எடுக்க வழிவகை இருக்கிறது. ஏதா வது தவறு நடந்திருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டால் அந்த போர்டு ஆப் டைரக்டர்ஸ் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படு கிறதே தவிர, கூட்டுறவுத் துறையின் சார்பிலே அங்கே இருக் கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க விதி இல்லை. எல் லோரும் சேர்ந்துதான் தவறு செய்கிறார்கள். அப்படி தவறு செய்யும்போது டைரக்டர்களுக்கு தண்டனை வழங்கப்படுகிறது. அதிகாரிகளுக்கு டிபார்ட்மெண்ட் நடவடிக்கை என்று சொல் கிறார்கள். அது சரியல்ல. டைரக்டர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்படுகிறதோ அதே தண்டனை அதிகாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். டைரக்டர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஒரே மாதிரியான விசாரணை நடத்தப் பெற வேண்டும்; ஒரே மாதிரியான தண்டனையும் வழங்கப்பட வேண்டும்.

அதிகாரிகள் மீது டிபார்ட்மென்ட் நடவடிக்கை என்று சொல்லி, ஏதோ ஒரு நடவடிக்கை எடுக்கிறார்கள். அதிலும் பல ஆண்டு கழிந்து விடுகிறது. இறுதியில் அவர்களுக்கு அளிக்கும் தண்டனை 'ட்ரான்ஸ்ஃபர்'. அவ்வளவுதான். இல்லை என் றால் ஓராண்டுக்கு இன்கிரிமென்ட் நிறுத்தி வைக்கப்படுகிறது. இந்தப் பாகுபாடு இருக்கக் கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்ட டைரக் டர்களை நீக்கிவிட்டு, நியமிக்கப்பட்ட அதிகாரியை அப்படியே வைப்பதோ, நடவடிக்கை எடுக்காமல் இருப்பதோ சரியல்ல. இன்னும் சொல்லப்போனால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் கள் விவசாயிகளாக தொழிலாளியாக இருக்கலாம்; சட்டங்களைப் பற்றிய தெளிவான அறிவு இல்லாதவர்களாக இருக்கலாம். அவ களுக்குத் தண்டனை அளித்துவிட்டு, எல்லாம் தெரிந்தவர்க்குத் தண்டனை அளிக்கக்கூடாது என்ற பாகுபாடு இருக்கவேண்டாம். கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். ''மாமியார் உடைத் தால் மண் குடம், போனால் போகட்டும்; மருமகள் உடைத்தால் பொன் குடம், ஐயோ போய்விட்டதே'' என்று சொல் வது போல இது இருக்கிறது. அப்படி இருக்கக் கூடாது என்பது எங்களுடைய கருத்து. அதிகாரிகளுக்கு 'லீனியன்ஸ்' காட்டக்கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்) [1983 பிப்ரவரி 14

அடுத்து, இந்த அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுப்பது பற்று ஏற்கெனவே சொன்னார்கள். கூட்டுறவுச் சங்கங்களிலே பரிசு வழங்கும் திட்டம் [illegible] பரிசு வழங்கப்படுவது குரிய சங்கங்களைத் [illegible] எடுக்கும் அதிகாரம் அதிகாரிகளுக்கு [illegible] கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே அதிகாரிகள் பாரபட்சம் காட்டாமல் நடந்துகொள்ள வேண்டும். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை. மாவட்டத்தில் நல்லமுறை யில் செயல்படக்கூடிய கூட்டுறவு பண்டகசாலை எது என்று தேர்வு செய்து, அதற்கு பரிசு வழங்கும் முறை இருக்கிறது. அதற் கென்று ஒரு விழா நடைபெறுகிறது. அந்த விழாவிலே பரிசு வழங்குகிறார்கள்.

பரிசளிப்புக்குத் தேர்வுசெய்வதிலே எந்தஅளவுக்கு பாரபட்சம் காட்டுகிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட காலத்தில், கிலோ 3.50 ரூபாய்க்கு விற்கும் போதுகூட தேவையான அளவுக்கு அரிசியை கொள்முதல் செய்து ஸ்டாக் வைத்து, பின்னர் தொழிலாளர்களுக்கு குறைந்த விலைக்கு கிலோ ஒன்றுக்கு 2.40 ரூபாய் என்ற அளவுக்கு விற்பனை செய்கிறார்கள். ஆனால், வெளியே அரிசி விலை கிலோ 3.50 ரூபாய். ஒரு கிலோவில் 1.10 ரூபாய் குறைத்துக் கொடுக்கிறார் கள்; அதே நேரத்தில் லாபத்தில் கொடுக்கிறார்கள். அதனால் அந்த கிரடிட் சொசைட்டியைச் சேர்ந்த தொழிலாளர்கள் எல்லாம் நல்ல பயனடைந்திருக்கிறார்கள்.

அதே நேரத்தில் கிலோ 2.80, 2.90 க்கு விற்ற ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு பரிசு வழங்கியிருக்கிறார்கள். அது இருப்பது திருநெல்வேலியிலே பேட்டை என்ற இடத்தில். அது ஒரு கூட்டுறவு மில்லைச் சேர்ந்த ஸ்டோர். அந்த ஸ்டோருக்கு நல்ல முறையில் செயல்பட்டது என்று சொல்லி பரிசு வழங்கப்படு கிறது. இது என்ன நியாயம்? அதிகாரிகள் இப்படி பாகுபாடு காட்டலாமா?

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நியாயமான முறையில் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து, நல்லமுறை யில் லாபம் ஈட்டும் ஒரு சங்கத்திற்கும் விழாவிலே பரிசுகொடுப்ப தற்கு தேர்வு செய்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் விக்கிரமசிங்கபுரம் தொழிலாளர் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் தேர்வு செய்யப்பட்டிருக்கவேண்டும். அவர்கள் அதிகமாக டிவிடன்ட் வழங்கியிருக்கிறார்கள். மத்திய வங்கியிலிருந்துகூட அவர்கள் கடன் வாங்கவில்லை. அவர்களுடைய சொந்த பணத்தை வைத்தே குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்து, அதன் மூலம் நல்ல லாபம் ஈட்டியிருக்கிறார்கள். தனியாக அரசாங்கத்திலிருந்து அனுமதி பெற்று 15 சதவிகிதம் வட்டிக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த சொசைட்டிக்கு பரிசு கிடையாது. 14 சதவீதம் வட்டிக்குக் கொடுத்த வேறு ஒரு சொசைட்டிக்கு பரிசு கொடுத்திருக்கிறார்கள். அது அர்பன்



1983 பிப்ரவரி 14] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்]

பாங்க் என்ற காரணத்தால் 14 சதவீதம் வட்டி என்றாலும் அதற்கு கொடுத்திருக்கிறார்கள். இது என்ன நியாயம்? இப்படி செயல் படுகின்ற அதிகாரிகளுக்கு இன்னும் அதிக அதிகாரங் களைக் கொடுத்தால் அவர்கள் எப்படி செயல்படுவார்கள், எந்த அளவுக்கு பாரபட்சம் காட்டுவார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். ஏற்கனவே கூட்டுறவுப் பதிவாளரு க்கு பல அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அவர்கள் செயல்படக்கூடிய முறை சரியல்ல என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 12-20]

அதே போல இன்னொரு விஷயத்தையும் நான் சுட்டிகாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்திலேயே திருத்தமாக அதனை எடுத்துக் கொள்ளாவிட்டாலும் கூட, பின்னாலே அதனுடைய விதிகளை நிர்ணயிக்கின்ற போதாவது நான் சொல் வதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

நிர்வாகச் செலவு 3 சதவீதத்திற்கு மேல் போகக் கூடாது என்று சொல்லியிருக்கிறது. நான் அரசை பணிவோடு கேட்டுக் கொள்வதெல்லாம் நிர்வாகச் செலவு 3 சதவீதம் என்று இருக்கக் கூடாது. வேண்டும் என்றால் 1 அல்லது 2 சதவீதம் என்று இருக்கலாம். பெரும்பாலான சொசைட்டிகளில் அல்லது கூட்டுறவுச் சங்கங்களிலெல்லாம் 6 சதவீதம் 7 சதவீதம் என்ற நிலைமையில்தான் இந்த நிர்வாகச் செலவு இருக்கிறது. ஆகவே 3 சதவீதம் நிர்வாகச் செலவு என்ற பெயரால் அந்த நிர்வாகத்தை நடத்துவதற்கு உதவியாக இருக்கக் கூடிய ஊழியர்களுக்கு கொடுக்க வேண்டிய சலுகைகளை கொடுக்க முடியாத ஒரு அபாய நிலை ஏற்பட்டதால் அதனை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தை இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினையையும் அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். விக்கிரம சிங்கபுரம் என்னும் இடத்தில் உள்ள கூட்டுறவு சங்கத்தில் அரசாங்கத் தினுடைய உதவியோடு கொள்முதல் செய்கிற அரிசியை, ஒரு கிலோ ரூபாய் 3-05 பைசாவிற்கு விற்கிறார்கள் சன்னரக அரிசியை. அதே அரிசி சென்னையிலும் மதுரையிலும் 6 ரூபாய் கூட கிடைக்கவில்லை. ஆனால் சமீபத்திலே அரசாங்கம் இது வரையில் கொடுத்திருந்த ஒரு சலுகையை ரத்து செய் திருக்கிறார்கள். என்ன சலுகை? கூட்டுறவு ஸ்தாபனங்கள் நேரிடையாக கொள்முதல் செய்தால், அந்தக் கொள் முதலிலிருந்து அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய லெவியை கொடுக்க வேண்டாம் என்று ஏற்கனவே அர சாங்கம் ஒரு உத்தரவை போட்டிருக்கிறது.

அந்த உத்தரவின் பிரகாரம் தான் இப்போது கொள்முதல் செய்யப்பட்டு குறைந்த விலையில் அரிசியைக் கொடுத்து வருகிறார்கள். அதன் காரணமாகத்தான் இன்றைக்கு விக்கிரமசிங்கபுரத்திலும் அதனைச் சுற்றியுள்ள அம்பாசமுத்திரம் போன்ற இடங்களிலும் சன்ன ரக அரிசியின் விலையை ஒரு கிலோ 3.60க்கு மேல் போகாமல் இருக்கும் வகையில் தடுத்து நிறுத்தியிருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் இப்போது அந்த உத்தரவை ரத்து செய்திருக்கிறார்கள். என்ன உத்தரவை ? 50 சதவீதம் லெவி அளிக்கப்பட வேண்டும்—நெல் கொள் முதல் செய்யும் நேரத்தில் என்னும் விதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலில் ரத்து செய்யப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அது கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அவைகள் நேரிடை கொள்முதல் செய்தாலும் அவர்களும் அந்த 50 சதவீதம் லெவி கொடுக்க வேண்டும் என்று. இப்படி அந்த விலையையும் இதிலே ஏற்றி, இன்று வெளியிலே என்ன விலைக்கு அரிசி விற்பனைக்கு வருமோ, அதே விலைக்குத்தான் கூட்டுறவுச் சங்கங்களிலும் விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாகத்தான் விலை ஏற்றத்தை தடுக்க முடியும் என்று அரிசி, கோதுமை, மைதா போன்றவைகளை கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் வழங்குகிறோம். அதன்மூலம் ஓரளவுதான் விலையை கட்டுப்படுத்த முடியும் என்றாலும் கூட, ஓரளவிற்காவது விலையைக் கட்டுப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் இருந்த போதிலும் கூட, கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கூட, கொள்முதல் 50 சதவீதம் நெல்லை அரசுக்கு கொடுக்க வேண்டும் என்கிற விதியினை மீண்டும் கொண்டுவந்தால் குறைந்த விலையில் அரிசி மக்களுக்குக் கிடைப்பதற்கான ஏற்பாடு செய்வதற்கு பதிலாக, அந்த வாய்ப்பை இழக்க நேரிடும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்னும் ஒரு விஷயம். அதிகாரிகளைப் பொறுத்த மட்டில் எப்படி பாகுபாடாக இருக்கிறார்கள் என்பதற்கு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அம்பைத் தொகுதி அகஸ்தியர்பட்டியிலே தொழிலாளர்களுக்காக ஒரு வீடு கட்டும் சொசைட்டி இருக்கிறது. அந்த சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 16 ஆண்டுகள் ஆகி விட்டது. அது இதுவரையில் தன் மகாசபையை கூட்டவில்லை. ஆண்டு விழா நடப்பது இல்லை. டைரக்டர்கள் மீட்டிங்கும் சரியாக நடப்பது இல்லை மெம்பர்கள் மொத்தம் [illegible] பேர்கள். அதிலே [illegible]



பேர்கள் கையெழுத்துப்போட்டு மகாசபை கூடலாம் என்றாலும் கூடுவதில்லை. ஏனென்றால் 10 ஆண்டுகளாக செயல்படுத்தப் பட்டுவந்த அந்த கணக்குகள் எல்லாம் இதுவரையில் ஆடிட் செய்யப்படவில்லை. அதற்குக் காரணம் 10 ஆண்டுகளாக பலமோசடிகள் நடைபெற்றிருக்கின்றன.

அதனால் கணக்குகள் சரியாக்கப்படாமல், அதை எப்படி சரிசெய்வது என்பதுபற்றி டிபார்ட்மெண்டிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அந்தப் பகுதி மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மகாசபை கூட்டத்தை தட்டிக் கழிக்கிறார்கள். அதே நேரத்தில் அங்கே இருக்கக்கூடிய சில முக்கியமான நபர்கள் என்ன செய்கிறார்கள் ? அந்த சொசைட்டிக்குச் சொந்தமான பல நிலங்கள் இருக்கின்றன. அது 1938 ஆம் ஆண்டு நமது மறைந்த ஜனாதிபதி கிரி அவர்கள் தொழிலாளர் அமைச்சராக இருந்தபோது, அவர்கள் முயற்சியினால், தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக அந்த இடம் வாங்கப்பட்டது. அது அந்த சொசைட்டிக்குச் சொந்தம். இப்போது என்ன நிலை. இப்போது அந்த தொழிற்சாலையைச் சேர்ந்த மில் மேனேஜ்மெண்ட் பெங்களூரிலிருந்து ஹெலிகாப்டரில் வந்து இறங்குவதற்கான மைதானமாக அந்த இடம் உபயோகப்படுகிறது. அதே நேரத்தில் மேலதிகாரிகள், பெரிய அதிகாரிகள் ஆகியோர்களின் டென்னிஸ் விளையாட்டு மைதானமாகவும் பயன்படுகிறது.

அதிலே தொழிலாளர்கள் கையெழுத்துப் போட்டு மகஜர் என்ற பெயரில் தொழிலாளர்களுக்கான இன்ஷூரன்ஸ் ஆஸ்பத்திரி கட்டவேண்டும் என்று அந்த 3 ஏக்கர் நிலத்தை அதற்கு கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தாலும், ஸ்டோர் பிராஞ் கட்டிடம் கட்ட இடம் கேட்டாலும் மகாசபை வரட்டும், மகாசபை வரட்டும் என்று சொல்லி காலம் தாழ்த்திக் கொண்டே ஏமாற்றப்படுகிறது. ஏனெனில் அதைக் கொடுத்து விட்டால் தம்முடைய சொந்த உபயோகத்திற்கு இல்லாமல் போய் விடுமே என்பதற்காகத்தான் மில் அதிகாரிகள் இப்படிச் செய்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அந்த தொழிலாளர்களில் யாராவது வீடு கட்டிக் கொள்வதற்காக மனு கொடுத்தால், அந்த இடங்களை அவர்களுக்கு கொடுப்பதற்கு பதிலாக தங்கள் இஷ்டம் போல அதனைப் பயன்படுத்துகிறார்கள். அதேபோல வீரவநல்லூரிலே ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்திலே உள்ள அதன் செயலாளர் படிப்படியாக 2 ஆயிரம், 4 ஆயிரம், 6 ஆயிரம் என்று கையாடி கடைசியாக 11 ஆயிரம் ரூபாய் கையாடல் செய்திருக்கிறார். அவரை கட்டாயப்படுத்தி அந்தப் பணத்தை கட்டவைக்க வேண்டும் என்கிற முயற்சி வேறு மாதிரியாகப் போய்விட்டது. அரசாங்கத்திலே அந்தப் பணத்திற்கு என்ன, யாரிடம் வசூல் செய்வது என்று தெரியாமல் விழிக்கச் செய்வது,

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்] [1983 பிப்ரவரி 14

கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு குற்றத்தை விசாரியுங்கள்
என்று சொன்னால் டிபார்ட்மெண்டினர் அதைக் காலா
காலத்தில் விசாரிக்காமல் இருப்பதினாலேயே இந்த நிலை.
அதேபோல வீரவநல்லூர் தொழிலாளர் கூட்டுறவு கடன்
வழங்கும் சங்கம் என்ற ஒன்று இருக்கிறது. அங்கும் பல
மோசடிகள் நடைபெற்று, அவர்கள் கூட வேறு இடத்திற்கு
போய் விட்டார்கள்.

இப்படிப்பட்ட பல மோசடிகள் நடைப்பெற்று இருக்
கின்றன. இவற்றை எல்லாம் காலாகாலத்தில் விசாரிக்க
வேண்டும் என்றால் அதாவது உதாரணமாக சேர்மாதேவி
பஞ்சாயத்தின் ஈ. ஓ. கூட்டுறவு இது குறித்து சென்று விசாரிக்க
வேண்டும் என்று கேட்டால் அவர்கள் விசாரிக்கிறோம்,
விசாரிக்கிறோம் என்று நாளைக் கடத்திக் கொண்டு போகின்ற
நிலைமைதான் இருக்கின்றது.

அடுத்து கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய சின்னச்சின்ன
கூட்டுறவு ஸ்தாபனங்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டிடங்
களில்தான் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு
மானியம் தந்து கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பது போன்று
இதற்கும் அரசு மானியம் தந்து அதிலிருந்து கூட்டுறவு
ஸ்தாபனங்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசாங்க தரப்பிலே இருந்து மட்டுமல்லாது
கூட்டுறவு அதிகாரிகளும் என்ன சொல்கிறார்கள் என்றால்
ஏதாவது வாங்கவேண்டும் என்றால் கூட்டுறவு ஸ்தாபனத்தின்
மூலம் வாங்கவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் அதே
நேரத்தில் அதே தரமான பொருட்கள் வெளியே கூட்டுறவுச்
சங்கத்தைவிட குறைவான விலைக்குக் கிடைக்கின்றது என்றால்
வாங்கலாம்.

காலண்டர் அச்சடிக்கின்றபோது அரசாங்கத்தின் அனுமதி
பெற்று அதாவது கூட்டுறவுப் பதிவாளர் அனுமதி பெற்று அடிக்க
வேண்டும் என்றால் நாம் கொடுப்பது எவ்வளவு? ஆயிரத்திற்கு
2,000 ரூபாய்க்கு மேலே போகக்கூடாது என்று ஒரு விகிதாச்
சாரம் போடுகிறார்கள். ஆனால் கூட்டுறவு ஸ்தாபனத்திலே
செங்கற்பட்டிலே உள்ள அச்சகத்திலே போய் கேட்டால் 2,500
ரூபாய் சொல்கிறார்கள். அதேமாதிரி சிவகாசியிலே ஒரு
கூட்டுறவு அச்சகம் இருக்கின்றது. அது எங்கே இருக்கின்றது
என்று தேடித் தேடிப் பார்த்தேன், கிடைக்கவில்லை. எங்கோ
ஒரு மூலையிலே போர்டு மட்டும் தொங்குகிறது. ஆனால் அச்சகம்
கிடையாது. அது கூட்டுறவு அச்சகம். அப்படிப்பட்ட அச்சகத்
திற்குப் போனால் அவர்கள் பக்கத்திலே கொடுத்து அச்சடித்து
வாங்கி அதன்பேரில் பில்லையும் வாங்கிக்கொண்டு இவர்
களுடைய சீலைப் போட்டுக் கொடுக்கிறார்கள். இதுதான்



[1983 பிப்ரவரி 14] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

நடக்கின்ற விவகாரம். அங்கே வாங்கியபிறகு இங்கே மாமூல்
காடுத்து, பிறகு இங்கிருந்து மாமூல் கொடுத்து வாங்குகின்ற
லைமை இருக்கின்றதல்லவா? ஆகவே கூட்டுறவு ஸ்தாபனங்
ளில் வாங்கவேண்டும் என்று வருகின்றபோது இப்படிப்பட்ட
ல மோசடிகள் நடக்கின்றன. கூட்டுறவு ஸ்தாபனங்களில்
டைப்பது போன்று அதே தரமான அதே சரக்குகள் அதைவிட
றைந்த விலைக்கு கிடைத்தால் அடுத்த இடத்திலே வாங்கு
தற்குரிய முறையினை நாம் ஏற்படுத்தவேண்டும். இன்றைக்கு
ாலண்டர் என்பது மட்டுமல்ல. பல்வேறு விவகாரங்கள் நான்
சால்லி இருக்கிறேன். ஜே. சியிலே பருப்பு கொள்முதல்
செய்யவேண்டும் என்று சொல்லப்படுகின்றது. ஒரு குவிண்டால்
ருப்பு 450 ரூபாய் என்று சொல்லப்படுகின்றது ஒரு மூன்று
ாதங்களுக்கு முன்பு. ஆனால் அதே பருப்பை யார் சப்ளை செய்
கிறார்களோ அதே நபர் டெண்டர் கொடுக்கிறார் 400 ரூபாய்
ஒரு குவிண்டால் என்று. ஒரு குவிண்டாலிலே 50 ரூபாய் என்றால்
ஒரு கிலோவிற்கு 50 பைசா அதிகமாக வருமா வராதா? இப்படிப்
பட்ட பல்வேறு விதமான நடைமுறைகளை மாற்றியமைப்
பதற்கான முறையிலே பின்னால் ரூல்ஸ் வரும்போது கவனத்தில்
கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு சீக்கிரமாகத்
தேர்தலை நடத்துவதற்கான முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி,
வணக்கம்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தற்காலிகத்
தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால்
கொண்டுவரப்பட்ட கூட்டுறவு சட்ட முன்வடிவினைப் பற்றி ஒரு
சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்
வடிவினை இனி வரக்கூடிய சட்டமன்றத்திலே நாம் முழுமை
யாகப் பாஸ் செய்ய இருக்கிறோம். அப்படி இந்தச் சட்டத்தைப்
பாஸ் பண்ணியதற்குப் பிறகு ஒரு சில மாதங்களுக்குள்ளாக
கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கான தேர்தலை நடத்தினால் அது
சாலச் சிறந்ததாக இருக்கும். இன்றைக்கு இரண்டாண்டு
களுக்கும் மேலாக தனி அதிகாரிகள் இருக்கின்றார்கள். அவர்
களை மேலும் ஒரு ஆண்டு நியமிக்கலாம் என்ற நிலைமை
இருக்கின்றது. நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால்
இந்தச் சட்டசபையினைக் கலைக்கிறார்கள் என்று வைத்துக்
கொள்ளுங்கள் நான் பழைய கதையைச் சொல்கிறேன்—அப்படி
சட்டசபை கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி வருகின்றது
என்றால் 6 மாதம் அல்லது ஒரு வருடத்திற்குள்ளாக தேர்தல்
வந்துவிடுகின்றது. அதற்குமேல் போனதில்லை. அதேமாதிரியான
நிலைமையை இந்த கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பொறுத்தவரை
யிலேயும் வைத்துக்கொண்டால் குறைந்தது ஓராண்டுக்குள்ளாக
தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும். அது
சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

அடுத்து, ஒரு பள்ளியினுடைய தலைமையாசிரியர், ஸ்வாமிகள் அவர்கள் உள்ள ஒரு கிறிஸ்துவ இன்ஸ்டிடியூஷனுக்குச் சென்று இருந்தேன். ஐயா நான் ஒரு ஏழை, அதிலும் நான் ஒரு எம்.எல்.ஏ. அதில் நான் ஒரு டைரக்டர், பணம் 3 லட்சம் வசூல் செய்ய வேண்டும் என்றேன். அவர், காப்பி, பலகாரம் எல்லாம் கொடுத்தார். பிறகு ஒரு தட்டில் 10 ஆயிரம் ரூபாய்க்கான செக்கை ஆடாமல், அசங்காமல் கொண்டுவந்து கொடுத்தார்கள். அந்த அளவுக்கு அந்த பணத்தை கொடுத்தவர்கள் எல்லாம் இந்த சர்க்கரை ஆலையில் பணம் போட்டோமே அது என்ன ஆனது என்று நினைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் சற்று தனி கவனம் செலுத்தி இப்பேர்ப்பட்ட நிலைமைகளை எல்லாம் போக்க, லாபமாக இருக்குமானால், அந்த பங்குத் தொகை போட்டவர்களுக்கு அதாவது சேர் கேப்பிடல் போட்டவர்களுக்கு அந்த லாபததில் இருந்து ஒரு பகுதியை பிரித்து கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1973—74 பிரிவின்படி நாம் பணியாளர்கள் விஷயம் எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜ்லிருந்து பெயர்களை வாங்கி சில கூட்டுறவு நிர்வாகங்கள், ஸ்தாபனங்கள் சில பேர்களை வேலைக்கு வைத்துவிட்டார்கள். அப்படி வேலைக்கு வந்தவர்கள் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் வேலை செய்து இருக்கிறார்கள். இப்போது மறுபடியும், எம்ப்ளாய்மெண்டு எக்சேன்ச்லிருந்து வந்த ஆட்களின் நியமனம் செல்லாது என்று சொல்லி தற்காலிகமாக வேலை நீக்கம் செய்து இருப்பதாக தெரிகிறது. அதிலே கிட்டத்தட்ட 100 பேர்களுக்குமேல் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து இந்த கூட்டுறவுத் துறையிலே வேலை வாய்ப்பைக் கொடுக்கவேண்டும்.

அடுத்து, எல்லாத் துறைகளிலும் அரிசனம், அரிசனம் என்று சொல்லி 18 சதவீதம் பூர்த்தி செய்யப்படுவது இல்லை. தயவு செய்து அமைச்சர் அவர்கள் அதிலே சற்று தனி கவனம் செலுத்தி இந்த 18 சதவீதம் முழுமையாக பூர்த்தி செய்யப்படுவதற்கு வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று இந்த சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு பெரிய விஷயத்தை நான் கேள்வி மூலமாகக் கேட்டேன். அமைச்சர் அவர்கள் கூட ஒத்துக்கொண்டார்கள். சில நேரங்களிலே ஏ.சி. எஸ்.ஸிலே இரவுக் காவலர்களை நியமிக்கிறோம். என்னுடைய தொகுதியிலே பள்ளபட்டி என்ற ஊரிலே ஏ.சி. எஸ்.ஸிலே ஒரு இரவுக் காவலர், சின்னக்காளை என்பவர் —அவர் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்—நியமிக்





கப்பட்டார். அவர் 10, 15 ஆண்டுக்காலம் தாற்காலிகமாக வேலை செய்து கொண்டிருந்தார். அவர் இரவு காவலில் இருந்த போது 3 லட்ச ரூபாய் நகையும் 80 ஆயிரம் ரூபாய் பணமும் அங்கே இருந்தது. அவர் காவலில் இருந்தபோது சில திருடர்கள் சென்று அவரோடு மல்லுக்கட்டி, அவரை அறுத்து அப்படியே ஓட்ட வைத்து விட்டனர். பூட்டைத் திறந்திருக்கிறார்கள், திறக்கமுடியவில்லை. அவர் இறந்து விட்டார். நம்முடைய முதலமைச்சர் ஆட்சியிலே பாம்பு கடித்து செத்துவிட்டால் அதற்கு 5 ஆயிரம் ரூபாய்; மரத்திலே இருந்து விழுந்து செத்தால் அதற்கு 5 ஆயிரம் ரூபாய்; கிணற்றிலே தவறி விழுந்து செத்தால் அதற்கு 5 ஆயிரம் ரூபாய்; கல் உடைக்கும்போது செத்தால் அதற்கு 5 ஆயிரம் ரூபாய்; ஆனால் நம்முடைய கூட்டுறவுத் துறையிலே 10, 15 ஆண்டுகள் வேலை செய்த ஒரு ஏழை—சிறிய வயதுள்ள 3 குழந்தைகளை விட்டுவிட்டு—இறந்துவிட்டார் என்றால் பத்தாயிரமும் கொடுக்கவில்லை. முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுங்கள் என்று பல முறைகள் அமைச்சரிடத்திலே நான் சொல்லியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே அலைந்து அலைந்து கால் ஓய்ந்துபோய் எப்படியோ ஆகட்டும் என்று நான் பேசாமல் இருந்துவிட்டேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இப்படிப்பட்ட கேஸ்களிலே எல்லாம் தனிக் கவனம் செலுத்தி இந்த அரசுத் துறையிலே பணியாற்றக் கூடியவர்கள் பணியிலே இருக்கும்போது இறந்தால் ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து 10 ஆயிரம் கொடுக்க வேண்டுமென்பதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிலக் குடியேற்றம் என்ற முறையிலே நாம் கூட்டுறவுத் துறையிலே சங்கங்களை அமைத்து அதன் மூலமாக விவசாயம் செய்யச் சொல்கிறோம். அந்த அடிப்படையிலே நான் பழைய சட்டமன்றத்தில் இருந்தபோது, 1957 முதல் 1967 வரைக்கும் இருந்தபோது என் தொகுதியிலே சந்தலூர், சின்னமநாயக்கன் கோட்டை ஆகிய இரண்டு இடங்களிலும் புறம்போக்கு நிலங்களை அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுத்து லேண்ட் காலனைசேஷன் ஸ்கீம் என்ற ஸ்கீமை ஏற்படுத்தி கூட்டுறவுத் துறையிலிருந்து ஆறாயிரம், ஆறாயிரம் கிணறு வெட்டுவதற்காகக் கடன் கொடுத்து இன்று வரை ஏதாவது பலன் அளித்ததா என்றால் பலன் அளிக்காமல் இருக்கிறது. மறுபடியும் போய் அவர்கள் கடன் கேட்டால் உங்களுக்கு முன்பு கொடுத்த கடனைக் கொடுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை வரும்போது மறுபடியும் நாம் செய்யவேண்டிய வேலை என்னவென்றால் அந்த சொஸைடிகளுக்கு புத்துயிர் கொடுத்து மறுபடியும் கடனைக் கொடுத்து கிணறை வெட்டச் சொல்லி—அவர்கள் ஏற்கனவே பம்பு செட்டு வைத்திருக்கிறார்கள், தண்ணீர் உற்பத்தியை அதிகமாக அவர்களுக்கு செய்து கொடுத்து—விவசாயம் செய்யக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் நாம் கொடுத்த கடன்களை

ரைட் ஆப் செய்துவிட்டு அவர்களுக்கு அந்த நிலத்தைத் தனித்தனியாகப் பிரித்துக் கொடுத்து விவசாயம் செய்யுங்கள் என்ற நிலைமையை உருவாக்கினால்கூட சாலச் சிறந்ததாக இருக்கும்.

இன்றைக்கு நிலவள வங்கி என்று இருக்கிறது. இதற்கு முன்னால் லேண்ட் மார்ட்கேஜ் பேங்க், நில அடமான வங்கி என்று இருந்தது. அப்போது முன்கடன் தீர்ப்பதற்கு பணம் கொடுக்கப்பட்டு வந்தது. இடையிலே அது நிறுத்தப்பட்டு இருந்தது. மீண்டும் அமைச்சர் அவர்கள் அதற்கு உயிர் கொடுத்து அவர்களுக்கு அதைக் கொடுக்கலாம் என்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள், நான் அதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் நம்முடைய நிலவள வங்கிகளையும், கூட்டுறவு அர்பன் பாங்குகளையும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஏழைகளுக்குக் கொடுக்கக் கூடிய கடன்களுக்கு நாம் வட்டி குறைவாகக் கொடுக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடன் வாங்கினால் ' எவ்ரி த்ரீ மன்த்ஸ் ' நான் கடன் வாங்கி இருந்தேன். அதனால் அனுபவம் இருக்கிறது. 5 வருஷம் கழித்து 11 ஆயிரம் வாங்கியதற்கு 17 ஆயிரம் கட்டினேன். பிறகு அங்கேயிருந்த மானேஜரைப் பார்த்து ஏன் அய்யா, 6 ஆயிரம் வட்டி போட்டீர்கள் என்று சண்டை போட்டபோது 3 மாதத்திற்கு ஒரு தடவை வட்டியைக் கட்டிவிடவேண்டும், அப்படி வட்டியைக் கட்டாவிட்டால் வட்டியோடு அசலையும் சேர்த்து காம்பவுண்டிங் இண்டரஸ்ட் போட்டு வாங்குவோம் என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய வங்கியிலே அப்படி இல்லை. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து ஏழைகளுக்கு நம்முடைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் இருபது அம்சத் திட்டத்தின் அடிப்படையில் கடன் கொடுக்க வேண்டுமென்று சொல்லியும்கூட ஏதோ அவர்கள் அப்பன் வீட்டுச் சொத்தைக் கொடுப்பதைப் போன்று ஏதோ அவர்கள் சொந்தப் பணத்தைக் கொடுப்பதைப் போன்று அவர்கள் கடன் மனுக்களை நிராகரிக்கிறார்கள். அதற்கெல்லாம் பாதுகாப்பு அளிக்கக் கூடிய முறையிலே நம்முடைய கூட்டுறவு வங்கிகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் வட்டி கொஞ்சம் ஜாஸ்தி, அமைச்சர் அவர்கள் சற்றுக் குறைத்துக் கொடுப்பதற்கு வழிவகைகள் செய்வார்களேயானால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*[பிற்பகல் 12-40]*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதோடு மட்டுமல்ல இன்றைக்கு ஜப்தி நடவடிக்கைகள், இன்றைக்கு அரசியல்வாதிகளாகிய நாமே மக்களுக்கு நல்லதில்லாமல் செய்துவிட்டோம். என்னையும் உள்ளிட்டு சொல்கிறேன், மற்றவர்கள் தவறாக நினைக்க வேண்டாம், வாங்கிய கடனை



கட்ட வேண்டாம் என்ற பிரச்னையை சொல்கிறோம். நானும் அதிலே நிற்கிறேன். யார் கட்ட வேண்டாம்? 2 ஏக்கர், 5 ஏக்கருக்கு உள்ளிருப்பவர்கள், எந்த ஒரு வசதியும் இல்லாமல் இருப்பவர்கள் கட்டாமல் இருக்கலாம். ஆனால், ஐந்து ஏக்கருக்கு மேல், 10 ஏக்கர், 20 ஏக்கர் என்று வைத்துக்கொண்டு, பினாமியாக லோன் போட்டுக்கொண்டு திரும்ப கட்டாமல் இருக்கிறார்களே, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

ஜப்தி பொறுத்தவரையில் என் தொகுதியில் நடந்த ஒரு விஷயத்தை கூற விரும்புகிறேன். அங்கே ஒரு நபர் கடன் வாங்கி இருந்தார். கடன் வாங்கியவரும், கடன் கொடுத்தவரும், இரண்டு பேர்களும் சொந்தக்காரர்கள்தான். கடன் வாங்கியவருக்கு நிலம் இருக்கிறது, அவருக்கு திருப்பிக் கொடுக்கிற சக்தி இருக்கிறது. ஆனால் அவரிடத்தில் கடன் கொடுத்ததை திருப்பி கேட்கிறபோது அவர் என்ன சொன்னார் என்றால், உங்களுக்கு என்ன தெரியுமோ, அதை பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறி விட்டார். அதற்கு பிறகு டிபார்ட்மெண்ட் மூலமாக நடவடிக்கை எடுத்து , கோர்ட்டிற்கு போய், அங்கு ஒரு 12 ஆண்டு காலம் வழக்கு நடைபெற்று, பிறகு அந்த கடனை கட்ட வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டது ; அதன்பேரில் ஒரு ஏலத்தின் மூலமாக அந்த சொத்து பறிமுதல் செய்யப்பட்டது. நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்லமுறையில் செய்தாலும் கூட, வேண்டியவரா, வேண்டாதவரா என்று பார்க்காமல், வாங்கிய கடனை அல்லது ஏலத்தில் எடுத்த நிலத்தை திருப்பிக் கொடுக்க வேண்டிய நிலைமைகள் இருக்குமானால்—கிராமத்தில் இருக்கிற கஷ்டநிலைமைகள் எனக்கு தெரியுமாதலால் சொல்கிறேன்—அதற்கு முன்பாக எத்தனை ஏக்கர் யாருடைய சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டிருக்கிறதோ அது அத்தனையையும் திருப்பிக் கொடுத்தால் தான் கிராமத்தில் ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே பிடிவாதம் பிடித்து கட்டக்கூடிய சக்தியுள்ளவர்கள் கட்டாமல் இருப்பார்களானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஊழல், பினாமி மாற்றம் குறித்து ; எனக்கு வசதி இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் சொஸைட்டி தலைவராக இருந்தால் 10 பேர்கள் மீது நான் லோன் எடுத்துக் கொள்கிறேன். அதை திருப்பிக் கட்டாமல் இருக்கிறேன். அது அதிகாரிகளுக்குத் தெரிந்தால் உடனே, இந்த அம்மா பதவியில் இருக்கிறார்களே என்று விட்டுவிடக் கூடாது ; உடனடியாக போலீஸிலே ரிப்போர்ட் கொடுத்து, அரெஸ்ட் பண்ணுகிற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் இந்த மாதிரியான த்வறுகள் ஏற்படாமல்

அடுத்து இன்று காலையில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அரிசன் என்று சொல்லக்கூடாது ஆதி திராவிடர் என்றுதான் சொல்லவேண்டும் என்று சொன்னார்கள். அதை நான் வன்மையாக எதிர்க்கிறேன். அரிசன் என்ற பெயரை வைத்தவர் மகாத்மா காந்தி அவர்கள். அவர்கள் அவதரித்த காரணத்தால்தான் என்னைப்போன்ற குப்பை மேட்டிலே, குடிசையிலே பிறந்தவர்கள் எல்லாம் இங்கே வந்து அமர்ந்திருக்கிறோம். எனவே காந்தியார் அவர்கள் பல பிரிவுகளாக இருந்த மக்களை ஒன்று சேர்த்து அரிசன் என்று பெயர் சூட்டினார். அதைச் சொல்லவேண்டாம் என்று சொல்வது நியாயமில்லை. எனவே அரிசன் பிரதிநிதி ஒருவரையும் பெண் பிரதிநிதி ஒருவரையும் நியமிக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்கு உரிய ஒன்றாகும். ஆனால் நினைக்க வேண்டும் என்று இருக்கின்ற நிலைமையை மாற்றி கட்டாயம் நியமிக்கவேண்டும் என்ற வகையிலே சட்டத்திலே உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30.]

இந்த தேர்தல் பற்றி நேற்றைய தினம் நான் மதுரைக்குச் சென்று இருந்தேன். அப்போது நான் சொன்னேன், கட்டாயமாக இன்று போகவேண்டும் அங்கே கூட்டுறவுத் துறையிலே பேச வேண்டும் என்று. ஆறு ஆண்டுக்கு இரண்டு முறைக்கு மேல் அதிலே தலைவராக இருக்கக்கூடியவர்கள் அங்கம் வகிப்பவர்கள் வெளியே போகவேண்டும், அடுத்து வேறு நபர்கள் வரவேண்டும் என்ற நல்ல அருமையான ஒரு திட்டத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஆகையால் அதை கண்டிப்பாக வரவேற்றுப் பேசவேண்டும் என்று சொன்னபோது அதிலே சில பேர்களுக்கு பிடிக்கவில்லை. சில பேருக்கு பிடிக்காமல், அப்படி என்றால் நீங்கள் மட்டும் சாகும் வரைக்கும் எம். எல். ஏ.வாக இருக்கலாமா? நீங்களும் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்கள்தானே. சட்டமன்றத்திலே தீர்மானத்தை போடுங்கள், சட்ட மன்றத்திலே தீர்மானத்தைப் போட்டு சட்டசபைக்கு கூட 2 முறை தான் இருக்கவேண்டும் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்புறம் எங்களையும் நிறுத்தச் சொல்லுங்கள் என்று சட்டசபையில் பேசுங்கள் என்று சொன்னார்கள். இருந்தாலும் கூட இது பெரிய பெரிய துறைகளுக்கு சாலச் சிறந்ததாக இருக்கிறது. பெரிய நூற்பாலைகள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், சென்டிரல் பாங்க், அதிகப்படியான பணம் டிரான்சேக்ஷன் ஆகிக்கொண்டிருக்கிற நிறுவனங்கள் அதற்கு நிச்சயமாக இது பொருந்தும், கண்டிப்பாக இதை அமுல் நடத்தவேண்டும். 2 முறை இருந்தவர்கள் மறுபடியும் இருக்கக்கூடாது என்ற நிலைமையை உருவாக்குவதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





கீழ் நிலையிலுள்ள அதாவது கிராமங்களில் இருக்கின்ற ஏ.சி. எஸ். கூட்டுறவு நாணயசங்கங்கள், பால் பண்ணைகள், கிராமப் புறங்களில் உள்ள வீடு கட்டும் சங்கங்கள் இதில் எல்லாம் யார் வேண்டுமானாலும் இருக்கட்டும். 10 ஆண்டுகள், 12 ஆண்டுகள் யாராவது இருந்துவிட்டு போகட்டும் என்ற நிலையை உருவாக்கினால்தான் அது நல்ல முறையிலே நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும். இதற்கு ஒரு உதாரணமாக சொல்கிறேன். என் சொந்த ஊரிலே சொல்கிறேன். கூட்டுறவு நாணய சங்கத்தின் தலைவராக இருந்தார். அவர் ரொம்ப நாளாக இருந்தார். ரொம்ப நாணயமானவர். நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. அவர் ஒரு முறை எனக்குத் தெரியாமல் ராஜினாமா செய்துவிட்டார். இன்னொருவர் தலைவராக வந்தார். அவரை வைத்துக்கொண்டு இலாகாவினர் ஆறு மாதத்திற்குள்ளாக மண் எடுத்தோம், மண் எடுத்தோம் என்று சொல்லி 10 ஆயிரம் ரூபாய்க்கு செக் போட்டுவிட்டார்கள். இப்படிப் பட்ட நிலைமை இல்லாமல் இருப்பதற்கு கிராமப்புறங்களில் மாற்ற வேண்டும் என்ற நிலை இருந்தால் நலமாக இருக்கும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அது மாத்திரம் அல்லாமல் இன்றைக்கு நம் நிலவள வங்கிகள், மத்திய வங்கிகள், சூப்பர் மார்க்கெட் இதில் எல்லாம் மாறுதல் செய்வது இல்லை. எத்தனையோ ஆண்டுகள் 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று இருக்கிறார்கள். சிலர் ரிடையர் ஆகும் வரை ஒரே இடத்தில் இருக்கிறார்கள். அது நல்லதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசனையில் எடுத்துக் கொண்டு 10 ஆண்டுகள் ஒரு இடத்தில் இருந்தால் பிறகு வேறு இடங்களுக்கு மாற்றினால்தான் அது நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பதிவான சங்கங்களுக்கு அரசாங்கமும் முதலீடு செய்கிறது. நம் பொது மக்களுக்கும் பங்கீடு கொடுக்கிறோம். அதற்கு உதாரணம் அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அது பழைய காலத்தில், என்னுடைய காலத்தில் என்னுடைய தொகுதியில் நான் எல்லாம் முன்னின்று நடத்தியது. 30 இலட்சம் ரூபாய் பங்குத் தொகை வசூல் செய்தோம். அரசாங்கம் 90 இலட்சம் ரூபாய் பங்குத் தொகை கொடுத்தது. அது கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாயில் பெரிய நிறுவனத்தை நிறுவினோம். அந்த மில்லைக் கட்டி அதில் சர்க்கரை ஒரு நாள் அரைத்து எங்களுக்கு எல்லாம் நிர்வாகஸ்தர்களுக்கு எல்லாம் ஒரு கிலோ சர்க்கரை கொடுத்தார்கள். அதற்கு பிறகு 1967-ல் தேர்தல் வந்தது. நான் வெளியே வந்துவிட்டேன். 1,500 டன் ஒரு நாளைக்கு அரைக்கக்கூடிய 1½ கோடி ரூபாய் மூலதனத்துடன் போட்டு நடத்தக்கூடிய அந்த பெரிய சர்க்கரை ஆலையிலிருந்து இதுவரைக்கும் ஒரு பைசா கூட லாபம் இல்லை என்றால் அது எவ்வளவு ஒரு பெரிய மன வேதனையை அளிக்கக்கூடிய விஷயமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இருக்கும். 65 என்குயரி போட்டு, 4 வருஷம், 5 வருஷம் என்று போய் 6 வருஷத்திற்குப் பிறகும் அங்கே ஒன்றுமில்லை என்ற நிலை உருவாகுமானால் மக்களிடத்தில் ஒரு மெத்தன போக்கு வந்துவிடும், என்பதை சுட்டிக்காட்டி, இவைகளுக்கு எல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சட்ட விவாதத்தில் பேசு கிற வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டுறவுத் தேர்தல் நீண்ட நெடு நாட்களாக நடை பெறாமல் அதற்கு பிறகு மாண்புமிகு அமைச்சர் திரு. கிருஷ்ண சாமி அவர்கள் தலைமையில் செலக்ட் கமிட்டி நடைபெற்று, அதற்கு பிறகு ஆட்சி கலைக்கப்பட்டு, மேலும் இந்தக் கூட்டுறவுச் சட்டத்திற்கு ஒரு திருத்த சட்டம் கொண்டுவரப்பட்டு, அதிலே ஆலோசனைகள் செய்யப்பட்டு மாண்புமிகு கூட்டுறவுச் சட்ட அமைச்சர் அவர்கள் இதிலே மிக நல்ல எண்ணத்தோடு செயல் பட்டிருப்பதை, அவருடைய இன்டென்ஷனை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன்.

இப்போது நிறைவேற்றப்படுகிற இந்தக் கூட்டுறவுச் சட்டத்தில்
நீண்ட ஆராய்ச்சிகள் நல்ல முறையில் நடைபெறவேண்டும், கட்சி
கண்ணோட்டம் இருக்கக்கூடாது, மற்ற மாநிலங்களுக்கு வழி
காட்டியாக இருந்த இந்த மாநிலம், நீண்ட நாட்களாக தேர்தல்
நடைபெறாமல் இருந்த காரணத்தால் அதில் சில சிக்கல்கள் ஏற்
பட்டு, மற்ற மாநிலங்கள் இன்றைய தினம் மிக சிறப்பாக
இருக்கிறபோது, இங்கே தேர்தல்கள் நடைபெறாமல் இருக்கிறது;
குறிப்பாக அலுவலர்கள் கையில் நிர்வாகம் இருப்பதால் பாராட்
டத்தக்க நிலையில் இல்லை என்பதால், பாராட்டக் கூடிய
முறையில் இருக்கவேண்டும், முன்பு இருந்த கீர்த்தி மீண்டும்
வரவேண்டும் என்ற எண்ணத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அக்கறையோடு இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்
கொள்வது என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.
நீண்ட நெடுநாட்களாக அதிகார வர்க்கத்திடம் இது இருந்த
காரணத்தினால், இப்போழுது இயற்றப்படுகிற சட்டத்தினால்
அது அந்த அதிகார வர்க்கத்தினுடைய பி[illegible]ப்பிலேயிருந்து
எங்கே நழுவி விடுமோ என்ற எண்ணம் அதிகா[illegible] வர்க்கத்திலே
இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு உறுப்[illegible]ர்கள் குறிப்
பிட்டமாதிரி, இந்தச் சட்ட விதிகளிலே, சகல [illegible]திகாரங்களும்
பதிவாளருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.





அவர்களது
நம்முடைய எண்ணங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களது
இந்தக் கூட்டுறவு நல்லமுறையில் நடைபெற வேண்டு
மென்ற எண்ணம், மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்
தெரிவித்த இந்தக் கூட்டுறவு சிறப்பான முறையில் நடைபெற
வேண்டுமென்ற அந்த நோக்கம், இவைகளெல்லாம், அதிகார
வர்க்கத்தினரிடம், பதிவாளரிடம், சகல அதிகாரங்களும் கொடுக்
கப்பட்டிருக்கிற காரணத்தினால், எங்கே மீண்டும் நல்ல முறை
யில் கூட்டுறவு இயங்காமல் போய்விடுமோ என்ற அச்சம் எல்லா
உறுப்பினர்களுக்கும் இருக்கிறது. அந்த அச்சத்தைத் தெரிவிப்
பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அரசியல்வாதிகளாகிய நாம் ஏதாவது ஓரிடத்திலே தவறு
செய்துவிட்டால், அல்லது தவறு நிகழ்ந்துவிட்டால், அவர்
எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியாக இருந்
தாலும் சரி, அல்லது எதிர்கட்சியாக இருந்தாலும் சரி, ஏதாவது
ஒரு சிறு தவறு செய்துவிட்டால், மாபெரும் கூச்சலாகி,
பத்திரிகையிலே வெளியாகி, அவர் பெரிய ஊழலைச் செய்து
விட்டார், இவர் பெரிய ஊழலைச் செய்துவிட்டார், நீங்கள் முன்
பிருந்தபொழுது ஊழல் செய்யவில்லையா? நீங்கள் இப்பொழுது
செய்யவில்லையா, என்று அரசியல்வாதிகள் பேசுகிறார்கள்.
ஆனால், இன்றையதினம் அதிகார வர்க்கத்திற்குக் குளிர்விட்டுப்
போயிருக்கிறதே—அந்த வார்த்தையைச் சொல்வதற்காக
நான் வருந்துகிறேன்.—நீண்ட காலமாக அதிகார
வர்க்கத்திடம் ஒப்படைத்துவிட்ட காரணத்தினாலே அவர்கள்
ஊழல் செய்வதற்கு அதனைக் கெடுத்துவிடுவதற்கு, இன்னும்
சொல்லப்போனால் எந்த அளவுக்கு வேண்டுமானாலும்
காரியங்களைச் செய்யலாம் என்ற எண்ணத்தை அதிகார
வர்க்கத்திடம் நாம் ஏற்படுத்திவிட்டோம்.

நான் கூட்டுறவை விட்டு வேறு துறைக்கு போனாலும்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுத்தருள
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு இடத்தி
லும் தேர்தல் நடத்தாத காரணத்தினால், ஊராட்சி ஒன்றி
யத்தை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு என். ஆர். இ. பி.
வேலைகளை கிராம சேவைக்குள் செய்கிறார்கள். இன்றைய
தினம் பல ஒன்றியங்களிலே பல கிராம சேவக்குகள்
இலட்சாதிபதிகளாகி விட்டார்கள். அரசியல்வாதி கான்ட்ராட்க்
எடுத்து செய்தால், பினாமி பெயரிலே கான்ட்ராக்ட் எடுத்து
செய்தால் பிரமாதப்படுத்துகிறோம். ஆனால், இன்றையதினம்
ஒன்றியங்களிலே இருக்கிற அதிகாரிகள், கான்ட்ராக்ட் என்ற
முறையிலே—அரசியல்வாதிகள் எடுக்கக்கூடாது, தங்களிடமே
இருக்க வேண்டுமென்ற முறையிலே, என். ஆர். இ. பி. வேலை
களை, கிராம சேவக்குகள் செய்து, பலர் இலட்சாதிபதிகளாகி
இருக்கிறார்கள்.

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1983 பிப்ரவரி 14

அதே போல், கூட்டுறவுத் துறையிலே இருக்கிற பல அலுவலர்கள், நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை, அந்த மாதிரி இருக்கிறார்கள். காரணம் நாம் அந்தச் சலுகைகளை அவர்களுக்குக் கொடுத்துவிட்டோம், இன்னும் சொல்லப் போனால் பலர் இலட்சாதிபதிகளாகி விட்டார்கள். நம்முடைய திட்டத்தினால், தேர்தல் நடத்தாத காரணத்தினால், அந்த அதிகார வர்க்கத்திடம், அந்தத் துறையை ஒப்படைத்த காரணத்தினால்: நீங்கள் தயவுசெய்து அந்த அதிகாரத்தைப் பரிசீலனை செய்தால்கூட மிகப் பொருத்தமாக இருக்கும். இன்றையதினம் பல இடங்களிலே, பதிவு அலுவலகங்களுக்கு, சப் ரிஜிஸ்திரார் அலுவலகங்களுக்குப் போய் பார்த்தால், அரசியல்வாதிகளைவிட, அதிகமாக அதிகாரிகள், பினாமி பெயரிலே பல இலட்சக்கணக்கான சொத்துக்களை வாங்குவதை நாம் பார்க்க முடியும். அந்த அளவுக்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். காரணம், கோடிக்கணக்கான முதல்கள், கூட்டுறவுத் துறையிலே, சென்ட்ரல் ஸ்டோர்ஸ், மற்றும் மத்திய வங்கிகள் போன்றவைகளிலே புரள்கின்ற நிலையில், அவற்றின் பொறுப்புகளை அதிகார வர்க்கத்திடம் விட்டுவிட்ட காரணத்தினால், அதிகாரவர்க்கம் ஒரு அப்பாய்ன்ட்மென்ட் வேண்டுமென்றால் ரூ.3,000 என்ற அளவிலே ரேட் பேசுகிற நிலைமையிருக்கிறது.

அதேபோல், பர்ச்சேசிங், சென்ட்ரல் பர்ச்சேசிங்; மிளகாய் போன்றவைகளை வாங்குவதிலே அதிகாரிகள் தவறு செய்கிறார்கள். அரசியல்வாதிகள் செய்தால், அப்பொழுதே அம்பலமாகிவிடும். ஆனால், அதிகார வர்க்கம் அந்த அந்த அளவிலே கமிஷன் போன்றவைகள் வாங்கிக்கொண்டு மற்ற இலஞ்ச ஊழல்கள் போன்றவைகளை உருவாக்கி கொண்டு இருக்கிறார்கள். இன்றைய தினம் கூட்டுவுத் துறையிலே இருக்கிற அதிகாரிகள் மிகச் சிறப்பான முறையிலே வாழ்க்கையை நடத்துவதற்குக் காரணம் நீண்ட நாட்களாக நாம் தேர்தலை நடத்தவில்லை. அப்படிப்பட்ட ஒரு அவல நிலைக்கு அதிகாரிகள் அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்று சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 12.50)

அது எப்படியிருப்பினும், கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த நோக்கம் நல்ல முறையில் ஈடேற வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் சொன்னதைப்போல, அதிகார வர்க்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிக அதிகாரங்களைக் குறைக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில் தெரிவிக்கக்கூடும், பதிவாளரின் கருத்து முடி



1983 பிப்ரவரி 14] [திரு. பாபு ஜனார்த்தனன்]

வானது அல்ல. அடுத்து, அரசாங்கத்திற்கு அப்பீல் செய்யலாம்
என்று கூறக்கூடும். ஆனால், நம்மை நாமே நம்பி, கூட்டுறவுத்
துறையிலே பெரிய பயிற்சியை ஏற்படுத்தக் கொண்டு உறுப்பினர்
கள் நல்ல முறையிலே அந்தக் கூட்டுறவை பயன்படுத்தும் முறை
யிலே ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்
வாறின்றி எல்லாவற்றிற்கும் அதிகாரிகளையே எதிர்நோக்கி
நடக்க வேண்டுமென்றால் கூட்டுறவு நிர்வாகத்தில் வருபவர்கள்
அதிகாரிகளைச் சரிக்கட்டுகின்ற அளவிற்கு வந்து விடுவார்கள்.

இலஞ்ச, லாவண்யம் என்று பார்ப்போமேயானால், ஒரு ப்ர
மோஷன் ஆக வேண்டுமென்றாலும்கூட அதற்கு ஒரு ரேட் பேசு
கின்ற அளவிற்கு அதிகார வர்க்கத்தின் நிலைமை இருக்கிறது.
போஸ்ட்டிங்ஸ் ஆனாலும், டிரான்ஸ்ஃபர் ஆனாலும் இப்படிப்
பட்ட காரியங்களிலேயெல்லாம் இலஞ்ச லாவண்யம் நடக்கக்.
காரணம் இன்றைய தினம் ஜனநாயக அமைப்பு இல்லாததுதான்.
அவைகளையெல்லாம் கட்டுப்படுத்தி, முன்பு எந்த வகையிலே
கூட்டுறவு அமைப்பு பாராட்டப்படக்கூடிய அளவிலே சிறப்பாக
நடைபெற்றதோ அதேஅளவிற்கு வரவேண்டுமென்ற நோக்கத்தில்
தான் மாண்புமிகு அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். அந்த
நோக்கத்தை நான் குறை சொல்லவில்லை. அவருடைய நோக்
கம் புனிதமான நோக்கம்தான். ஆனால், அந்த நோக்கம் முழு
அளவில் ஈடேற வேண்டுமென்றால் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்
பட்டிருக்கின்ற அதிக அதிகாரங்களைக் குறைக்க வேண்டும்.
எனவே, பட்ஜெட் கூட்டத் தொடர் தொடரும்பொழுது அதிகார
வர்க்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களை நிச்
சயமாகக் குறைக்க வேண்டுமென்ற எண்ணத்தை இந்த நேரத்
திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லோரும் உறுப்பினர்களாக ஆக வேண்டுமென்ற அந்த
நோக்கம் இந்தச் சட்ட முன்வடிவிலே இருக்கிறது. எல்லாப்
பிரிவினரும் உறுப்பினராவதை நாங்கள் வரவேற்கிறோம். நலிந்த
பிரிவினர், மகளிர் பிரிவினர், ஆதி திராவிட பிரிவினர் ஆகிய
இவர்களுக்கெல்லாம் நாம் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று
சொன்னார்கள். அந்த நோக்கம் புனிதமானதுதான். இதில்,
நலிந்த பிரிவினர் என்னும்போது அவர்களுக்கு என்ன வரைமுறை
என்பதை அந்த துணை கிளாஸ்களிலே நிர்ணயித்தே தீர வேண்
டும். நலிந்த பிரிவினர் என்பதற்கு என்ன குவாலிஃபிகேஷன்
என்று நிர்ணயித்து, இதுதான் நலிந்த பிரிவினர் என்று வரை
கோடு ஏற்படுத்த வேண்டும். மகளிர் பிரிவைப் பொறுத்தவரை
யில்கூட, இத்தனை பேர்கள் சேர வேண்டுமென்றால் அவர்
களுடைய கணவன்மார்களே உறுப்பினர் கட்டணத்தைக் கட்டி
விடுவார்கள். ஆனால், இன்றைக்குள்ள நிலைமையில் அரிசன
பிரிவினரை நியமிக்கும்பொழுது அந்தக் கட்டணத்தை அரசே
கூட கட்டிவிட்டால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1983 பிப்ரவரி 14

தேர்தலில் உறுப்பினர்களெல்லாம் நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த நிர்வாகஸ்தர்கள் சேர்ந்து தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நேரத்தில் நலிந்த பிரிவினரோ, அரிசன மக்களோ, மகளிரோ வரவில்லை என்றால் அவர்களை கோவாப்ட் செய்து கொள்ளலாம் என்று சொல்லும் பொழுது, அவ்வாறு செய்யும் அதிகாரத்தைத் தயவுசெய்து பதிவாளருக்கு—நான் பதிவாளர் என்று சொல்லும்பொழுது அது பதிவாளர் அல்லது துணைப் பதிவாளர் என்ற முறையில் அதிகார வர்க்கத்திற்கு—நீங்கள் கொடுத்து விட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகக் குழுவிற்கு மகளிர் பிரிவினரோ அல்லது அரிசனப் பிரிவினரோ, நலிந்த பிரிவினரோ தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால் அவர்களைச் சேர்த்துக்கொள்ளும் அதிகாரத்தை அந்த நிர்வாகக் குழுவிற்கே அளிக்க வேண்டும். அவர்களை நியமனம் செய்யும் அதிகாரத்தைத் தயவு செய்து நீங்கள் அதிகார வர்க்கத்திற்கு விட்டு விட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தயவு செய்து என்று நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், கூட்டுறவுச் சட்டம் என்பது நீண்ட நெடுங்காலத்திற்கு நாட்டிற்குப் பயன்பட வேண்டிய சட்டமாகும். சோஷலிச சமுதாயத்தை அமைக்கின்ற அடிப்படையில் கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. அந்தக் கூட்டுறவு அமைப்பை நாட்டிலே சிறப்பாக வாழவைக்க வேண்டுமென்பதற்காக இப்பொழுதே நாம் பரிசீலனை செய்ய வேண்டும். ஏதோவொரு அரசியல் நோக்கத்தோடு கொண்டுவரக் கூடாது. அரசியல் நோக்கம் அமைச்சருக்குக் கிடையாது என்பது எனக்குத் தெரியும். ஆனால், ஏதோ ஒரு வகையிலே அதிலே அரசியல் புகுந்துவிட்டால் நிச்சயமாக அது நாட்டுக்கு நன்மையைத் தராது. கூட்டுறவு அமைப்பு மக்களுக்குப் பயன் தர வேண்டுமென்ற அந்த நோக்கமும் ஈடேறாது.

ஆகவே, உறுப்பினர்கள், இயக்குநர்களைத் தெரிந்தெடுக்கின்ற நேரத்திலே, அந்த இயக்குநர்கள் எல்லாம் சேர்ந்து தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று இந்த சட்டவடிவிலே இருக்கிறது. இப்படி இயக்குநர்களே தேர்ந்தெடுக்கின்ற இந்த நிலைமை இல்லாமல் உறுப்பினர்களே தலைவர்களை தேர்ந்தெடுக்கின்ற நிலைமையை உருவாக்கினால்தான் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற நிலைமை இருந்தால், '' வல்லான் வகுத்ததே வாய்க்கால்'' என்றும் அல்லது அவர் மற்றவர்களை விட செலவு செய்து தலைவராக வந்துவிட்டார் என்று அமைச்சரோ மற்றவர்களோ கருத்து தெரிவிக்கலாம். ஒரு ஜனநாயக அமைப்பிலே அப்படித் தேர்ந்தெடுத்தவர் சரியாக இல்லை என்று சொன்னால் நிர்வாகக் குழு



1983 பிப்ரவரி 14] [திரு. பாபு ஜனார்த்தனன்]

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இயக்குநர்கள் சேர்ந்து, வேறொரு தலைவரைக் கொண்டு வந்துவிடலாம். ஆகவே, இன்னும் சிறப்பான முறையிலே நாம் தேர்ந்தெடுக்கின்ற அந்த நிலைமையை இந்தச் சட்டத்திலே கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தலைவர் தேர்தலைப் பொறுத்தவரையிலே நாம் கொண்டுவந்திருக்கின்ற நிலைமையை ஆரம்பத்திலேயே தெரிவித்தேன். ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட், அதாவது சட்ட முன்வடிவு உருவாகின்ற நேரத்திலேயே, அதற்கு முன்னதாக 6 ஆண்டு காலம் தொடர்ந்து தலைவராக வந்தால், மீண்டும் அவர் தலைவராக நிற்கக்கூடாது என்று இருப்பது சரியல்ல ; மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல, ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் சட்டமன்ற உறுப்பினராக வரலாம், ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் நாடாளுமன்ற உறுப்பினராக வரலாம். ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும், எந்த அமைச்சரவையிலும் அமைச்சராக வரலாம். கொள்கையை மாற்றிக் கொண்டால், அப்படி எல்லாம் இருக்கின்றபோது, இந்தக் கூட்டுறவு இயக்கத்திலே மட்டும் 6 ஆண்டுகளுக்கு மேல் தலைவராக இருக்கக்கூடாது என்று சொன்னால் அது ஜனநாயக மரபுக்கு உரித்தானதன்று. பொதுவாக ஊரிலே சொல்லுவார்கள், காரியங்களைச் செய்வதற்கு ஊரிலே 4 பேர்கள் வேண்டும் என்று சொல்லுவார்கள். யார் அந்த 4 பேர்கள். எதற்காக 4 பேர்கள் என்று சொல்லுகிறார்கள். எதற்கெடுத்தாலும் சொல்வார்கள், 4 பேர் ஏதாவது சொல்வார்கள், 4 பேர் பேசக்கூடிய காரியத்தைச் செய்யவும் என்றெல்லாம் சொல்வதை நீங்கள் அறிவீர்கள். அந்த 4 பேர்கள் நல்லவர்கள், வல்லவர்கள், நாணயமானவர்கள், விவகாரமானவர்கள். நமது உறுப்பினர், தாமரைகனியைப் போன்று விவரம் தெரிந்தவர்கள். அவர் யாரைப்பார்த்தாலும் விவரமானவர் என்று சொல்வது வழக்கம் அவ்வளவு நல்ல முறையில் அன்போடு பழகுபவர். எனவே, இந்த 4 பேர்களும் ஊருக்கு நல்லது செய்வார்கள் என்ற நிலை. அப்படி சிறப்பான காரியத்தைச் செய்யக்கூடியவர்களை, அந்தத் தலைவர்களை நீங்கள் கொண்டுவந்துள்ள சட்டத்தின் மூலம் தொடர்ந்து 6 ஆண்டுகளுக்கு மேல் நிற்க முடியாமல் செய்து இருக்கிறீர்கள்.

மற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அரிசன மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும், மகளிருக்கு வாய்ப்பளிக்க வேண்டும், நலிந்த பிரிவினருக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், அவர்கள் கூட்டுறவை முறையாகப் பயின்று கற்றுக்கொண்டு அந்தப் பொறுப்புக்கு வர வேண்டும். எடுத்த எடுப்பிலேயே அவர்களை இந்த பொறுப்பிலே வைத்தால் கூட்டுறவு பாதிக்கப்பட்டுவிடுமே என்பதற்காகத்தான் இதைச் சொன்னேனே தவிர, மற்றபடி, நலிந்த பிரிவினர், அரிசன மக்கள் போன்றவர்களுக்கு வாய்ப்பளிப்பதிலே ஆட்சேபணை இல்லை.

காரியங்களுக்குச் செலவிடவேண்டுமென்று ஆராய்ச்சி செய்ய
வேண்டும் என்று கேட்டு, இந்த 3 சதவீதம் என்பதை தயவு
செய்து 2 சதவீதம் என்று மாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். ஒரு கூட்டுறவு
சங்கத்திலே ஒரு டெலிபோன் செய்தால் தவறு. அந்தக் கூட்
டுறவுச் சங்கத்தில் உள்ள வாகனங்களை அந்தத் தலைவர் எடுத்
தால் தவறு. 10 ரூபாய் அளவிற்கு அவர் டெலிபோன் செய்து
இருந்தாலும் அதற்காக வழக்கு. பொதுப்பணியில் கவுரமாக
பணியாற்றுகின்ற நேரத்தில் இதையெல்லாம் குறையாக எடுத்துக்
கொண்டு தவறு என்று சொல்லுகிறபோது, பேரவைக் கூட்டம்
நடைபெறுகிறது என்பதைப் பத்திரிகைகள் மூலம் உறுப்பினர்
களுக்குத் தெரிவிக்க ரூபாய் 2,000, ரூபாய் 3,000 என்ற அளவில்
செலவழிக்கிறார்கள். இது தேவையில்லாத ஒரு செலவு.
பேரவைக் கூட்டம் நடைபெற இருக்கிறது என்று சொன்னால்
எல்லா உறுப்பினர்களுக்கும் கடிதம் அனுப்பிவிடலாம். இப்படி
கடிதம் அனுப்பவேண்டியது ஸ்ட்ரிக்ட்டாகக் கடைப்பிடிக்கப்பட்
டால், செலவு மிச்சமாகும். மேலும், ஒரு அர்பன் வங்கியில்
இலாபம் அதிகம் வந்துவிட்டது என்று சொன்னால், அதை பத்
திரிகையில் விளம்பரம் கொடுக்கிறார்கள். அது குறித்தும் உறுப்
பினர்களுக்கு கடிதம் மூலம் தகவல் கொடுத்தால் போதும்.
ஆகவே, இந்த முறையில் அந்தச் செலவைக் குறைக்கலாம்.
ஆகவே, பத்திரிகையில் விளம்பரமாகப் போட்டு பணத்தை வீண
டிக்க வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, புதிய சங்கங்கள் ஏற்படுத்துகின்ற நேரத்தில் ஓர்
ஆண்டுக்காலம் அல்லது இரண்டாண்டுக் காலம் அதை அதிகாரி
களின் நிர்வாகத்தில் வைத்துவிட்டு, அது முடிந்த 6 மாத காலத்
திற்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு மூலம் அதை
நடத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

ஒவ்வொரு கூட்டுறவு சங்க நிர்வாகக் குழுவும் மாதாமாதம்
கூட்டவேண்டும் என்பதை நாம் ஒரு கொள்கை ரீதியாக வைத்
துக் கொள்ள வேண்டும். 3 மாதத்திற்கு ஒரு முறை என்பதை
விட மாதாமாதம் கூட்ட வேண்டும் என்று நிலைமை இருந்து,
கூடிப்பேசினால் பல விவரங்கள் தெளிவாகும். ஆகவே, மாதா
மாதம் அந்தச் சங்க நிர்வாகக்குழு கூட வேண்டும். சர்குலேஷன்
முறையில் முடிவுகள் எடுக்கக் கூடாது. அவசியமானால் மாதம்
இரண்டு முறை கூட கூடலாம். மாதம் இரண்டு முறை கூட்டு
வதால் அதிகமான செலவு எதுவும் ஆகிவிடப் போவது இல்லை.
ஒரு உறுப்பினருக்கு 5 ரூபாய் பாட்டா கொடுப்பதால் என்ன
அதிக செலவாகிவிடும்? ஆகவே, சர்க்குலேஷன் முறையில் முடி
வுகள் எடுப்பது நீக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்
கிறேன்.





கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த வரையில், அரசு பல நல்ல
முன்னேற்றங்களை இன்றையதினம் செய்து இருக்கிறது. இருப்
பினும் அவர்கள் ரிசர்வ் வங்கி தலையீடு இருக்கின்ற காரணத்
தால், அவர்கள் அளிக்கின்ற டைரக்டிவ்படி நடக்க வேண்டியிருப்
பதால் சரிவர மக்களுக்கு உதவி செய்ய முடியவில்லை. ரிசர்வ்
வங்கி பணம் கொடுத்து இருக்கலாம். அதற்காக அவர்கள் சொல்
கிற முறைப்படி நடக்க வேண்டும் என்று சொன்னால் பின்னர்
அந்த நிர்வாகிகள் இருப்பது அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

விதி 29-லே உறுப்பினர்களின் பங்குப் பணம் திரும்பப் பெறு
வதற்கு சில நிபந்தனைகளை வைத்து இருக்கிறார்கள். ஒருவர்
உறுப்பினராகச் சேர்ந்தால், அவர் அந்தப் பங்குத் தொகையை.
3 ஆண்டுக் காலம் கழித்துத்தான் திரும்பப் பெற முடியும் என்று
சொல்வது சரியல்ல. ஒரு சங்கத்தில் உள்ள அத்தனை உறுப்பினர்
களும் ஒரே நாளில் பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளப்
போவது இல்லை. அந்த ஊரில் உள்ள ஒரு உறுப்பினர் ஏதோ
வாழ்க்கையில் நலிந்து போய், அந்த ஊரை விட்டே போக
வேண்டும் என்று நினைத்தால், கோவிந்தசாமி என்ற உறுப்பினர்
இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம்—அவர் வாழ்க்கையில்
நொடிந்துபோய், அந்த ஊரை விட்டு வெளியேறுகின்ற நேரத்தில்
—இந்தச் சங்கத்தில் உள்ள பங்குத் தொகையைத் திரும்பக் கேட்
டால், அதை உடனடியாகத் தருகின்ற முறையில் விதிகள் திருத்தி
யமைக்க வேண்டும். அதற்குச் சட்டம் தடையாக இருக்கக்
கூடாது. அந்த ஊரை விட்டே வெளியேறுகின்றவர் அல்லது
வேறு காரணத்தால் சங்க உறுப்பினர் பதவியை ராசினாமா
செய்து விட்டு, பங்குத் தொகை கேட்பவர் இரண்டாண்டு காலம்
காத்திருந்து தான் அந்தப் பங்குப் பணத்தைத் திரும்பப் பெற
வேண்டும் என்பது சரியல்ல. அதற்கான அதிகாரத்தை நிர்வாகக்
குழுவிற்கு விடவேண்டும். அவர்கள் தான் அந்த உறுப்பினரின்
நிலையை உணர்ந்து முடிவுகளை எடுக்க முடியும். ஆகவே,
சட்டத்திலே இதற்கான தடை வைக்க வேண்டாம் என்று
கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின்
இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 15—2—1983
-ம் தேதி காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—09 மணிக்கு ஒத்தி வைக்கப்
பெற்றது.

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1983 பிப்ரவரி 14

கூட்டுறவு நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்ற எண்
ணத்திலே சட்டம் கொண்டு வந்த நேரத்திலே, கோர்ட்டுக்குச்
சென்று எங்களுக்கு உரிமையில்லையா, ஆகவே, தலைவர் தேர்
தலுக்கு நாங்கள் நிற்கக் கூடாதா என்று கோர்ட்டுக்குச் செல்லும்
நிலை ஏற்பட்டுவிடும். கூட்டுறவு நல்லமுறையிலே நடைபெற
வேண்டும் என்ற கருத்துள்ள அமைச்சர் அவர்கள் இதை மீண்டும்
ஆலோசனை செய்து, சட்ட முன் வடிவு ஏற்பட்ட நாளிலிருந்து
6 வருடம்—வேண்டுமானால் 3 வருடம்—6 வருடம் என்று அமல்
படுத்துங்கள்—அந்த நாளிலிருந்த இதை சட்டமாக ஆக்கினால்
சிறப்பாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்
கிறேன்.

[பிற்பகல் 1–00]

அப்படி அந்தச் சட்டத்தைத் திருத்தி, இந்தச் சட்டம் வந்த
நாளிலே இருந்து என்று சொன்னாலும்கூட அது பொருத்தமாக
இருக்கும். இது எதைப்போல இருக்கிறது என்றால் ஓடையிலே
ஆடு ஒன்று தண்ணீர் குடிக்கின்ற நேரத்திலே ஓநாய் ஒன்று நீ
தண்ணீரைக் கலக்கிவிட்டாய் அதனாலே நான் தண்ணீர் குடிக்க
முடியவில்லை என்று சொல்லி, அதை, அந்த ஆட்டை கொல்கிற
மாதிரி, இருக்கிறது. ஏற்கெனவே, நீங்கள் 6 வருஷம் இருந்தீர்
கள், ஆகவே, சட்டப்படி நீங்கள் தேர்தலிலே நிற்க முடியாது
என்ற அந்த நிலைமையை உருவாக்குவது என்பது இந்த ஜன
நாயக தத்துவத்திற்கு சரியாகாது. மக்கள் அனைவருக்கும் தேர்
தலிலே நிற்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற அளவிலே
நீங்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சட்டத்தைத் திருத்தி
அமைத்து எல்லோரும் தேர்தலிலே நின்று தலைவராக வரக்கூடிய
அளவிற்கு நல்ல முறையிலே எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்க
வேண்டும், அந்தத் தலைவர்களுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்
என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, பல சங்கங்களிலே கௌரவமான நிலையிலே
அந்தத் தலைவர்கள் பணியைச் செய்கிறார்கள். ஆனால், அந்
தத் தலைவர்களுக்கு எந்த ஊதியமும் கிடையாது. கௌரவ
மான உத்தியோகம்தான். இதற்கு ஒரு காலத்திலே, 1966 வரை
யிலே கௌரவமான பணி செய்த அந்தத் தலைவர்களுக்கு ஹான
ரோரியம் கொடுத்திருந்தார்கள். காங்கிரஸ் கட்சி மறைகின்ற
நேரத்திலே, அதற்குப்பிறகு, அந்த ஹானரோரியம் கொடுப்
பது நின்றுவிட்டது. கௌரவமான அந்தப் பணியைச் செய்
கின்ற அந்த உத்தமமான தலைவர்களுக்கு பல வாழ்க்கைச் சங்
கடங்கள் இருக்கின்றன. அந்தப் பொறுப்பான பதவியிலே இருக்
கின்ற காரணத்தாலே வருகின்ற அவர்களை, வரவேற்க காசைக்
கொடுப்பது, மற்ற விவகாரங்களை எல்லாம் செய்வது என்பது
அந்தத் தலைவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. அந்த ஹானரோரி
யத்தைக் கூட்டுவதிலே, அப்படிக் கூட்டிக்கொடுப்பதற்கு நீங்கள்
அவசியம் முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள
கிறேன்.



1983 பிப்ரவரி 14] [திரு. பாபு ஜனார்த்தனன்]

அதற்கு அடுத்து இங்கே லாபப் பங்கீட்டில் கொடுக்கப்பட
இருக்கின்ற அந்த ஊதியத்தில் 14 சதவீதம் என்று போட்டிருக்
கிறார்கள். ஆனால், அதை 15 சதவீதமாக—இதிலே 1 சத
வீதம் என்ன கெட்டுவிடப்போகிறது—15 சதவீதமாக லாபப் பங்
கீட்டிலே நீங்கள் உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்
டுக்கொள்கிறேன். இதற்குப் பிறகு, அதிக அளவிலே இலாபம்
வந்தால் மேல் அனுமதியைப் பெற வேண்டும். அந்த இலாபத்
திலே அதிகமாக வந்தால், பர்சென்ட்டேஜ் அதிகமாக கொடுப்
பதற்கு, அந்த டிவிடென்ட் கொடுப்பதற்கு, 14 சதவீதம் என்
பதை 15 சதவீதமாக கொடுப்பதற்கு அந்த நிர்வாகக் குழு
நினைத்தால், அரசு அதற்குக்கூட மேல் அதிகாரிகள் அனுமதி
கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியான செயலாக இருக்
காது. ஆகவே, நிர்வாகக் குழு கூடியே அதிக டிவிடென்ட்
கொடுப்பதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இந்த போனஸாக 20 சதவீதம் நீங்கள் அனு
மதித்து இருக்கிறீர்கள். நல்ல முறையிலே இலாபம் வந்தால்
அதை இன்கம்டாக்ஸ் கட்டுவதற்கு பதிலாக, வங்கிகளிலே கட்ட
முடியாது, இன்கம்டாக்ஸ் வராத இடங்களிலே எல்லாம் 20
சதவீதத்தை 30 சதவீதமாக ஆக்குவதற்கு நீங்கள் சட்டத்தைத்
திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப்பிறகு, இந்தக் கூட்டுறவு ஆராய்ச்சி, வளர்ச்சி நிதி
3 சதவீதமாக போட்டிருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலமாக
தமிழ்நாட்டில் உள்ள யூனியன்கள் எல்லாம் அதை ஆராய்ச்சி
செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு பக்கத்திலேதான் கூவம்
ஓடிக்கொண்டிருக்கிறது. அதைப்போலவே சரியான வளர்ச்சி
இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இந்த 3 சதவீதத்தை அவ
சியம் இல்லாத—பல இலட்சக்கணக்கான முதல் இன்றைய தினம்
தமிழ்நாட்டில் பல கூட்டுறவுச் சங்கங்களில் பாழ்பட்டு இருக்கின்
றது. அந்தச் சங்கங்களிலிருந்து அவர்கள் மாவட்டத்திற்கு ஒரு
கூட்டுறவுப் பத்திரிகை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தக்
கூட்டுறவுப் பத்திரிகையில் என்ன வருகிறது என்று சொன்னால்,
அம்மாமி கதைகள்தான் வருகிறதே ஒழிய, அடிப்படையாகக்
கூட்டுறவு வளர்ச்சிக்கு என்ன வருகிறது என்று நிச்சயமாக
சொல்ல முடியவில்லை என்பதை நான் இந்தநேரத்திலே தெரி
வித்துக்கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.
கூட்டுறவுப் பத்திரிகை ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தமிழ்ப்
பத்திரிகை ஒன்று என்று ஒரே இடத்திலே ஒரு மாவட்டத்திற்கு
ஒரு பத்திரிகை என்று இல்லாமல் அந்தக் கூட்டுறவு வளர்ச்சி
நிதியிலே இப்போது என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்
றால் இங்கே படங்களைக் காட்டுவது போன்ற ஒரு காரியத்தை
கூட்டுறவு சங்கங்களிலே நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மாவட்
டத்திற்கு மாவட்டம் பத்திரிகை நடத்துகிறார்கள். அப்படி
யெல்லாம் இல்லாமல், ஒரு குழு போட்டு, இப்படி பல இலட்சக்
கணக்கான ரூபாய் நிதியாக இருக்கிறதே இதை என்னென்ன

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்,—எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

33. 1983 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1983) நகலும், இணைப்பும்.

34. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன் வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/1983) நகலும், இணைப்பும்.

35. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன் வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 12/1983) நகலும், இணைப்பும்.

36. அரசு உறுதி மொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ், ஆங்கிலம்).

37. பாசனத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் அறிக்கை—பதினைந்தாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).



இணைப்பு I.

(..245-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 264-க்கான விடையைக் காண்க.)

கோவில் நிலங்களைத் தனி நபர்கள் விவசாயத்திற்கு வைத்துக் கொள்வதற்கு உள்ள நில உச்ச வரம்பு, அதிகமாக வைத்திருக்கும் குத்தகையாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை, திரும்பப் பெறப்பட்ட நிலங்கள் பற்றிய விவரங்கள்.

(அ) தமிழ்நாட்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண் நிலங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 57/61, பிரிவு 2 (6) இன்படி, கோவில் நிலங்களை, தனி நபர்கள் விவசாயத்திற்கு வைத்துக் கொள்ள வரையறுக்கப்பட்ட நில உச்சவரம்பு 5 தரஏக்கர்கள் ஆகும்.

(ஆ) ஏதேனும் ஒரு குத்தகைதாரர், வரையறுக்கப்பட்ட உச்சவரம்புக்கு மேல் நிலம் வைத்திருந்தால், சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற அலுவலர் சட்டப் பிரிவு 11 (2) இன் கீழ் விசாரணை நடத்தி, உச்சவரம்புக்கு மேல் அதிகமாக உள்ள நிலத்தை, சட்டப் பிரிவு 7 இன் கீழ், பொதுப் பொறுப்புக் கழகத்தின் நிலங்களுடன் சேர்த்து விடுவார். அவ்வாறு சேர்க்கப்படும் நிலம் தகுதியானவர்களுக்கு சட்டப் பிரிவு 8 இன் கீழ் குத்தகைக்கு விடப்பட வேண்டும். அவ்வாறு, எந்தப் பொதுப் பொறுப்புக் கழகமேனும், குறிப்பிட்டுள்ள காலத்திற்குள், அந்நிலத்தைக் குத்தகைக்கு விடாவிடில், அதிகாரம் பெற்ற அலுவலர் சட்டப் பிரிவு 12 அல்லது 14-ஏ இன் கீழ், அந்நிலத்தை குத்தகைக்கு விட நடவடிக்கை எடுப்பார்.

(இ) அதிகப்படியாக வைத்திருந்த குத்தகைதாரர்களிடமிருந்து திரும்பப் பெறப்பட்ட நிலங்கள் வருமாறு :—

| | | | ஏக்கர்கள். |
|---|---|---|---|
| தஞ்சாவூர் | .. | .. | 2,888.43 |
| திருச்சி | .. | .. | 40.09 |
| இராமநாதபுரம் | .. | .. | 6.91 |
| மற்ற மாவட்டங்கள் | .. | .. | இல்லை |
| மொத்தம் | | .. | 2,935.43 |

## உள்ளடக்கம்

**15—2—1983**

S.No. 140/55/83


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்: | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 361 - 393 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | |
| 2. அறிவிப்புகள்: | |
| (அ) நிதி நிலை அறிக்கை அளித்தல் .. | 393 |
| (ஆ) அரசினர் சட்ட முன்வடிவுகள். .. | 486 |
| 3. அரசினர் தீர்மானங்கள் | |
| (அ) விதி 58-ஐ தளர்த்தல் .. .. | 394 |
| (ஆ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல் .. | 486 |
| 4. தகவல் கோரல் : | |
| உறுப்பினர் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள். | 394—395 |
| 5. ஒத்திவைப்புத் தீர்மானங்கள் : | |
| (அ) தேர்வாணைக் கழகத் தேர்வுக்கான கேள்வித்தாள்கள் முன்கூட்டியே வெளியானது. .. .. .. .. | 395—410 |
| (ஆ) நாகர்கோவிலில் தடியடி, துப்பாக்கிச்சூடு | 410—438 |
| 6. தன்னிலை விளக்கம் : | |
| குமரி மாவட்டம் அம்மாண்டிவிளையிலுள்ள கயிறு ஆலை மூடல்... .. .. | 438—439 |
| 7. கவன ஈர்ப்புகள் : | |
| (அ) சென்னையில், கடலில் குளிக்கச் சென்ற இளைஞர்கள் மரணம். .. .. | 440—445 |
| (ஆ) பாம்புத் தோல் ஏற்றுமதிக்கு மைய அரசு தடை. .. .. .. .. | 445—448 |


D II A 301—1

## இணைப்பு II.

(254-ம் பக்கத்திலுள்ளள உடுக்குறியிட்ட வினா எண் 268-க்கான விடையைக் காண்க.)

(அ) சட்டங்களை மொழி பெயர்க்கும் பணிக்கென்று அரசினால் நியமிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையமானது, 1–5–1976 முதல் 15–10–1981 வரை 161 மத்தியச் சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றது. இவற்றில் 16 மத்தியச் சட்டங்கள் அச்சடிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன.

(ஆ) உயர்நீதி மன்றத்திற்குக் கீழமைந்த உரிமை வழக்கு மற்றும் குற்ற வழக்கு நீதிமன்றங்களில் தீர்ப்பு மொழியாக தமிழைக் கொண்டு வருவது என்று அறிவிக்கப்பட்ட அரசின் கொள்கையை ஒட்டியும், இதன் தொடர்பாக அரசு பிறப்பித்த உத்தரவுகளுக்கு இணங்கி நடக்கும் வகையிலும், தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையமானது, குற்ற வழக்கு நீதிமன்றங்களில் பொருள் விளக்கத்திற்காக அடிக்கடி வருகின்ற சட்டங்களில் பெரும்பாலானவற்றை மொழிபெயர்த்ததோடு உயர்நீதிமன்றத்திற்குக் கீழமைந்த குற்ற வழக்கு நீதிமன்றங் களில் தீர்ப்பு மொழியாகத் தமிழைக் கொண்டுவருகின்ற திட்டம், 13–11–1976 ஆம் நாளிட்ட எம். எஸ். 191 என்ற எண்ணிட்ட சட்டத்துறை அரசாணையில் அரசினால் நிறைவேற்றப்பட்டது. மிகவும் முக்கியமான உரிமையியல் சட்டங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, அவற்றின் படிகள் (நகல்கள்) உயர் நீதிமன்றத் தின் கீழமைந்த உரிமைவழக்கு நீதிமன்றங்கள் அனைத்திற்கும் வழங்குவதற்காக உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக் கின்றன. அரசு வலியுறுத்தியவாறு தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சி மொழி ஆணையமானது மற்ற முக்கிய உரிமையியல் சட்டங்களின் மொழிபெயர்ப்புகளையும் வெளியிடுவதற்காக தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. இவ்வாறு (i) உயக நீதிமன்றத்திற்குக் கீழமைந்த உரிமை வழக்கு நீதி மன்றங்கள், (ii) தீர்ப்பாயங்கள் ( Tribunals ) மற்றும் (iii) வாடகை வழக்கு நீதிமன்றங்கள், வருவாய்த்துறை வழக்கு நீதிமன்றங்கள் ஆகியவற்றில் தீர்ப்பு மொழியாகத் தமிழைக் கொண்டு வரும் திட்டம், 18–1–1982 ஆம் நாளிட்ட எம். எஸ். 9 ஆம் எண்ணிட்ட சட்டத்துறை அரசாணையில் அரசினால் நிறைவேற்றப்பட்டது.



## இணைப்பு III.

(..259-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 262-க்கான விடையைக் காண்க.)

1982 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தூத்துக்குடி அருகில்,
தைவான் நாட்டு மீன் பிடிப் படகுகள் மீன் பிடித்ததாக எந்தத்
தகவலும் இல்லை. ஆனால், 1982 ஆம் ஆண்டு சூலைத் திங்களில்
தூத்துக்குடி அருகில் தைவான் நாட்டு மீன் பிடிக் கப்பல்களின்
ஊடுருவல் நடைபெற்றுள்ளது. தூத்துக்குடி, திருச்செந்தூர்
கடற் பகுதிகளில், தைவான் நாட்டு மீன் பிடிக் கப்பல்கள்,
ஊடுருவல் செய்ததுடன் மீனவர்களின் பெருமளவு வலைகளைச்
சேதப்படுத்தின என்ற தகவல்களை தூத்துக்குடி (மண்டலம்)
மீன்துறை துணை இயக்குநர் 7–7–1982 ஆம் நாளிட்ட தந்தியின்
மூலம் தெரிவித்தார். தந்தி கிடைக்கப் பெற்றவுடன் சென்னை
பொது (ராணுவத்துறை) ஆணையர் மற்றும் செயலாளர், சென்னை
கிழக்கு மண்டல கடற்கரை காப்பாளர், மண்டபம் கடற்படை
காப்பாளர் ஆகியோருக்கு மேற்சொன்ன தைவான் நாட்டு மீன்
பிடிக் கப்பல்களின் ஊடுருவல் பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்
பட்டு அந்த மீன் பிடிக் கப்பல்களை பிடிக்க உடனடி ஏற்பாடு
செய்யும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் தொடர்பாக,
மீண்டும் தூத்துக்குடி வடக்கு மீனவர்கள் சங்கத் தலைவர் திரு.
சம்சு முகமது 10–7–1982 இல் அனுப்பிய தந்தியில் அயல்
நாட்டு மீன்பிடிக் கப்பல்கள் தூத்துக்குடி கடற்பகுதி அருகில்
மீன் பிடித்துக் கொண்டிருப்பதாகவும் இதனால், மீனவர்களின்
வலைகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். திரு. சம்சு
முகமது கொடுத்த தந்தியின் அடிப்படையிலும் உடனடியாக நட
வடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சென்னை கிழக்கு மண்டல
கடற்கரைக் காப்பாளர், கொச்சின் மண்டபம் கடற்கரை காப்
பாளர், ஆகியவர்களுக்கு, இதுபற்றிய தகவல்கள் மீண்டும்
தெரிவிக்கப்பட்டு, தூத்துக்குடி கடற் பகுதி அருகில் மீன்
பிடிப்பதாக கூறப்பட்ட அயல்நாட்டுக் கப்பல்களை பிடிக்க
உடனடி ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. சென்னை கிழக்கு மண்டல கடற்கரை காப்பாளரும்
உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு சந்தேகிக்கப்பட்ட பகுதி
களில் அயல்நாட்டுக் கப்பல்களைத் தேடும் பணியை மேற்கொண்
டார். எனினும் சந்தேகிக்கப்பட்ட கப்பல்கள் தென்படவில்லை
என தெரிவித்துள்ளார். மேலும், மண்டபத்தில் உள்ள சுங்க
இலாகாவை சார்ந்த ரோந்து விசைப் படகு தூத்துக்குடி கடற்
பகுதிகளில் முகாமிட்டு ரோந்து சுற்றியதின் பயனாக தைவான்
நாட்டு மீன் பிடிக் கப்பல்களின் நடமாட்டம் இல்லை எனவும்
தற்போது மீனவர்கள் பயமின்றி தொழில் செய்கிறார்கள் எனவும்
தெரிவித்து, மீனவர்களின் நலனைக் கருதி, மீன்துறை
இயக்குநரால் மேற்கொள்ளப்பட்ட விரைவு நடவடிக்கைக்கும்
மீனவர்களைப் பாதுகாத்ததற்கும் மீனவர்களின் சார்பில் உரிய
நன்றியை, முத்து மற்றும் சங்கு குளிப்போரின் சங்கத்தின்
தலைவர் திரு. சம்சு முகமது தெரிவித்துள்ளார்.

பக்கங்கள்

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் :

(அ) பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு, 1983. .. .. .. 448

(ஆ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன் வடிவு, 1983. .. .. .. 448

9. தனித் தீர்மானம் :

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் (தொடர்ச்சி). .. .. .. 449—48

திரு. என். வரதராஜன் .. .. 449—460

திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் 460—473

திரு. மு. அப்பாதுரை .. .. 473—480

திரு. என். வி. என். சோமு .. .. 481—485

10. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் — 487

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1983, பிப்ரவரி 15

மாசி 3, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு ".

செல்வ நிலையில் ஒருவருக்கு உண்டாகும் வறுமை என்பது விருந்தோம்புதலைப் போற்றாத அறியாமையாகும். அது அறிவிலிகள் இடமே உள்ளதாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### [அ] உடுக்குறியிட்ட வினாக்கள்

#### ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள மருத்துவர்கள்

*வினா எண் 293—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்களே நேரிடையாக கடைகளில் மருந்து வாங்குவதற்கு என்று ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்படும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அவசரத்தேவையை ஈடு செய்ய மட்டுமே ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொறுப்பேற்றுள்ள மருத்துவ அலுவலர்கள் உள்ளூரில் மருந்து வாங்கலாம். அவ்வாறு வாங்குவது நிதி இருப்புக்கு உட்பட்டு ஒரு நேரத்தில் ரூ. 200 வரை வாங்கலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்தத் தொகையை உயர்த்துவதற்கும், அதைப் போன்று நோயாளிகளே மருந்துகளை வாங்க வேண்டுமென்ற சூழ்நிலையை தவிர்ப்பதற்கும் சிறப்பான நடவடிக்கை ஏதேனும் அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 பிப்ரவரி 15

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே,
ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் இப்போது
நன்றாகச் செயல்படுகின்றன. எவ்வளவு தேவையோ அந்த
அளவுக்கு மருந்துகள் அங்கே இருக்கின்றன. அது மட்டுமல்ல.
1981-க்கு முன்னால் ஒரு வருஷத்துக்கு 15,000 ரூபாய் மருந்து
வாங்கும் உரிமை இருந்தது. இப்போது 20,000 ரூபாய் மதிப்
புள்ள மருந்துகளைக் கொடுக்கிறோம். அதைப் போன்று
மொபைல் யூனிட்டுக்கு 16,000 ரூபாயாக இருந்ததை இப்போது
20,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். ஆகவே, தற்போது
இதற்கு மேலே வாங்குவதற்கு உரிமை அளிக்க வேண்டிய தேவை
இல்லை என்று அரசு கருதுகிறது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்த ஆரம்பச்
சுகாதார நிலையங்கள் இன்றைக்கு பெரிய ஆஸ்பத்திரிகள் செயல்
படுவதைப் போன்று 3, 4 டாக்டர்களைக் கொண்டு, 30, 40
படுக்கைகள் வைத்து செயல்படுகின்றன. அப்படிப்பட்ட ஆஸ்
பத்திரிக்கு அவசரத் தேவையை முன்னிட்டு 200 ரூபாய்க்கு
மட்டுமே மருந்து வாங்க அனுமதிப்பது என்றிருப்பது சரியல்ல.
இந்தத் தொகையை உயர்த்த வேண்டும். அதோடு, இன்றைக்கு
ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு டாக்டர்கள் சரியாக இருந்து,
அங்கே தங்குவது இல்லை. போன வாரத்தில் கூட என்னுடைய
தொகுதியில் ஒரு நோயாளி இறந்துவிட்டார் சரியான கவனிப்பு
இல்லாத காரணத்தால். ஆகவே, டாக்டர்கள் அங்கே தங்கி
யிருந்து சிகிச்சை அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே,
ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் இந்தி
யாவிலேயே மிகச் சிறப்பாக நடைபெறுவது தமிழ்நாடுதான்.
அதுமட்டுமல்ல. இப்போது ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில்
3 டாக்டர்கள் இருக்கிறார்கள். அது தவிர, 210 மருத்துவ
மனைகளில் சித்த மருத்துவத்தில் பயிற்சி பெற்ற டாக்டர்களை
அனுமதித்திருக்கிறோம். அந்த வகையில் பார்த்தால் ஒரு
மருத்துவமனையில் 4 டாக்டர்கள் என்ற அளவில் இருக்கிறார்
கள். அந்த அளவுக்கு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.
அதே நேரத்தில் நாம் இன்னும் 15 மருத்துவமனைகளை பெரிய
மருத்துவமனைகளாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைச் சொல்லி,
தவறு நடக்கிறது என்று சொன்னார்கள். எங்கே என்ன நடந்தது
என்று எழுதிக் கொடுத்தால், பர்டிகுலேர்ஸ் கொடுத்தால்
உண்மையில் நடந்தது என்ன என்பதை விசாரிப்பதற்கு வசதி
யாக இருக்கும். கவனக் குறைவால் தவறு நடந்தது என்று
தெரிந்தால் அதுபோன்ற சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்கு
முயற்சி மேற்கொண்டு, உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்
படும். இந்தக் குறிப்பிட்ட விஷயத்தை எழுத்துமூலம் தெரி
வித்தால் கவனக் குறைவால்தான் நோயாளி இறந்தாரா, உரிய



1983 பிப்ரவரி 15]

கவனம் செலுத்தியிருந்தால் ஒருவர் உயிரைக் காப்பாற்றியிருக்
கலாமா என்பதை விசாரித்து, தெரிந்து கொள்ளலாம். ஒட்டு
மொத்தமாகப் பார்த்தால் இன்றைக்கு ஆரம்ப சுகாதார
நிலையங்களில் போதுமான மருந்து இருக்கிறது. டாக்டர்களைப்
பொறுத்தவரையில், 210 மருத்துவமனைகளில் சித்தா டாக்டர்
களை நியமித்திருக்கிறோம். 15 மருத்துவமனைகளை விரிவு
படுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில்
அங்கே பணிபுரியக்கூடிய டாக்டர்கள் அங்கே செல்லக்கூடிய
நோயாளிகளுக்கு, நோய்க்கு ஏற்ப மருந்துகள் கொடுப்பது இல்லை
உதாரணமாக ஒரு நோயாளிக்கு 20 சி.சி. மருந்தை இன்ஜெக்ஷ
னாக கொடுக்க வேண்டும் என்றால் 10 சி.சி. தான் போடுகின்ற
சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பாமர மக்கள் கேட்டால்,
மருந்துகளின் சப்ளையை குறைந்த அளவு தான் செய்கிறார்கள்,
அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்கள்.
ஆகவே அப்படிப்பட்ட டாக்டர்கள் மீது புகார் வந்தால் அரசு
நடவடிக்கை எடுக்குமா? அவர்களை சஸ்பெண்ட் செய்ய
முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்
களுடைய சர்க்கார் புகார் வரும் வரையில் காத்திருக்கக்கூடிய
சர்க்கார் அல்ல. உடனடியாக நாங்கள் அங்கே சென்று மருந்து
கள் எல்லாம் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும்
வேண்டிய அளவு உள்ளனவா என்று அடிக்கடி செக் செய்து
கொண்டுதான் வருகிறோம். ஆகவே மருந்துகள் இல்லை
என்கிற பிரச்னையே இல்லை. 20 சி.சி. மருந்து என்று உறுப்
பினர்கள் ஏதோ சொன்னார்கள். எனக்கு அதனுடைய
விவரம் தெரியவில்லை. நோயாளிக்கு எவ்வளவு அவசியமோ
அந்த அளவுக்குத்தான் மருத்துவர்கள் போடுவார்கள். எது
குறித்து புகார் வந்தாலும் நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு
தான் இருக்கிறோம்.

அதுமட்டும் அல்லாமல் இன்னொரு வேலையையும் செய்து
இருக்கிறோம். அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களின் பரா
மரிப்புப் பணி ஒழுங்காக நடைபெறவேண்டும் என்பதற்காக,
ஒரு மாவட்டத்திற்கு ஒரு டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர் என்று
இருந்த நிலையை மாற்றி, 10, 12 ஆரம்ப சுகாதார நிலையங்
களுக்கு மட்டும் ஒருவர் என்று நிர்ணயித்து, அதை அவர்கள்
திறம்பட நிர்வாகம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்
டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், செக்ஸ் அண்ட் கவுண்டர்
செக்ஸ் என்னும் முறைகளையும் வைத்திருக்கிறோம். இதனால்
மருந்துகளின் சப்ளை குறித்த பிரச்னையே இல்லை.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, ஆஸ்பத்திரிகளில் மருந்து போதவில்லை, மருந்துகள்
எழுதிக் கொடுத்து கடையில்தான் வாங்குகிறார்கள் என்ற
நிலைமை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்கு தெரி
வித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் சாப்பிடுகிற இரண்டு
மருந்துகளை கூட சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் வெளியில் வாங்கித்
தான் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஆரம்ப சுகாதார
நிலையங்களில் மருந்துகள் போதவில்லை என்பது உண்மை.
அதிகப்படியான டாக்டர்களைப் போட்டு நன்கு பராமரிக்கின்ற
காரணத்தினாலோ என்னவோ மருந்துகள் பற்றாக்குறையும்
இருக்கிறது என்பது உண்மை. தேவையாக அங்கே இருக்க
வேண்டிய ஒரு சிலவற்றிற்கும் கூட, வெளியில் கடைகளில்
வாங்கிவரவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே அப்படிப்
பட்ட சூழ்நிலையே இல்லை என்று சொல்லும் வகையில்
அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் எந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பற்றிக் குறிப்
பிடுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. திரு. ரமணி அவர்
களின் தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை
என்று நினைக்கிறேன். வெளியில் இருக்கும் வேறு ஏதாவது
நிலையங்களைக் குறிப்பிடுகிறார்கள் என்றால், குறிப்பிட்டுச்
சொன்னால் நன்றாக இருக்கும். ஏனெனில் ஆரம்ப சுகாதார
நிலையங்களில் மருந்துகளை வெளியில் வாங்கிக் கொடுக்க வேண்
டிய நிலை இல்லை. தேவையான மருந்துகள் எல்லாம் சப்ளை
செய்யப்படுகின்றன. நான் அடிக்கடி எல்லா இடங்களிலும் சென்று
திடீர் சோதனை செய்கிறேன். வெளியிலிருந்து மருந்து வாங்கி
கொண்டு யாராவது வந்தாலும், அவர்களையும் வழியில் தடுத்து
நிறுத்தி அது என்ன மருந்து என்று செக் செய்து பார்த்திருக்
கிறேன். இதுவரையில் அடிப்படிப்பட்ட செக்கிங் சிஸ்டம்
கிடையாது. அந்த அளவில் செய்துக் கொண்டு இருக்கிறோம்.
தேவையான மருந்துகள் எல்லாம் ஆரம்ப சுகாதார நிலை
யங்களில் இருக்கின்றன. நான் மாண்புமிகு உறுப்பினர்
ரமணி அவர்களை வேண்டுமானால் நான் அப்படி திடீர்
சோதனை செய்யப்போகும்போது என்னோடு ஒரு முறை
அழைத்துப் போகிறேன். அவரே நிலைமையை நேரில்
புரிந்துக் கொள்வார்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் 3
டாக்டர்களைப் போட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் குறிப்பிட்டார்கள். எல்லா மருத்துவ மனை
களுக்கும் 3 டாக்டர்களைப் போட்டிருக்கிறீர்களா என்று
தெரிவிப்பதோடு, கிராமப்புறங்களில்தான் ஆரம்ப சுகாதார



நிலையங்கள் இருக்கின்றன. அங்கே அந்த டாக்டர்கள் தங்கு
வதற்கு வசதியாக இடங்கள் இல்லை. ஆகவே அப்படிப்
பட்ட இடங்களில் அந்த 3 டாக்டர்களும் தங்கக்கூடிய வகையில்
அவர்களுக்கு வீட்டு வசதியையும் செய்துக் கொடுக்க அரசு முன்
வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 3 டாக்டர்கள் எல்லா
இடங்களிலும் போடப்பட்டுவிட்டனவா என்று கேட்டார்கள்.
எல்லா இடங்களிலும் 3 டாக்டர்கள் இல்லை. கிட்டத்தட்ட
30, 35 இடங்களில் 3 டாக்டர்களுக்குப் பதிலாக 2 டாக்டர்
கள் இருக்கிறார்கள். காரணம் அவர்கள் போஸ்ட் கிராஜுவேஷன்
படிப்பதற்கு சென்றிருக்கிறார்கள். இதற்காக சர்வீஸ் கமிஷன்
மூலமாக ரெக்ரூட்மெண்ட் செய்துக் கொள்ளும் பணி நடை
பெற்று கொண்டிருக்கிறது. அது முடிந்தவுடன் இந்தப் பற்றாக்
குறை தீர்க்கப்பட்டு விடும்.

அது மட்டும் அல்லாமல் இன்னொரு கேள்வியும் கேட்டிருக்
கிறார்கள். குடியிருப்பு வசதிகளைப் பற்றி. அதற்குப் படிப்
படியாக பேஸ்ட் புரோக்கிராம் என்கிற முறையில் வேலை
களைச் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் கூறியது அருமையான கருத்து. மிக முக்கியமான
விஷயமும் கூட, சில மருத்துவ மனைகளில் அப்படி தங்குவதற்கு
இடம் இருக்கிறது. அதில் பெண் டாக்டர்களுக்கு பிஃரபுரன்ஸ்
கொடுக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது
போல், 3 டாக்டர்களும் அங்கேயே தங்கும் வகையில் இட
வசதி செய்துக் கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்
கத்தின் நோக்கமும். படிப்படியாக இந்த பேஸ்ட் புரோக்
கிராம் அடிப்படையில் அத்தகைய திட்டங்கள் நிறைவேற்றப்
படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9–10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விகள்
கேட்கும்போது கேள்வியைப் படித்துவிட்டுக் கேளுங்கள்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : ஆரம்ப சுகாதார நிலையங்
களிலும் சில தாலூகா மருத்துவமனைகளிலும் அந்த மருத்துவ
மனையைச் சார்ந்த மருத்துவர்கள் நேரடியாக வாங்கும் மருந்து
களை குறிப்பிட்ட அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின் உப
யோகத்திற்கு என்று அதில் குறிப்பிடுவது கிடையாது. அதனால்
அங்கே பல்வேறு தவறுகள் ஏற்படுவதற்கு அது வாய்ப்பாக
உள்ளது. ஆகவே மருத்துவர்கள் நேரடியாக வாங்கும்
மருந்துகள் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின் உபயோகத்
திற்கு என்று குறிப்பிடவேண்டுமென்று அமைச்சர் அவர்கள்
வற்புறுத்துவார்களா ?

கிறோம், மீஸில்ஸ்க்காக. அதுகூட முதலில் அவர்கள் சந்தேகப்
பட்டார்கள். பல மாநிலங்களில் கொடுத்து கெட்டுபோய்
இருந்தது. ஆகவே உங்களால் பயன்படுத்த முடியுமா என்று
கேட்டு நாம் அதற்கு ஒரு திட்டத்தைக் கொடுத்த பிறகு,
அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டதற்குப் பிறகு, நம்மிடம் ஒப்
படைத்திருக்கிறார்கள். பிறகு வந்து பார்த்து நன்றாக நடந்து
கொண்டிருக்கிறது என்று மகிழ்ச்சியோடு சென்றிருக்கிறார்கள்.
நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் டப்ள்யூ.எச்.ஓ. கொடுக்
காத காரணத்தால், நம் மாநிலத்திற்கு எவ்வளவு தேவை
இருக்கிறதோ ஓரல் போலியோ வாக்ஸின் அதைவிட குறை
வாகத்தான் இந்திய அரசு கொடுத்துக்கொண்டிருக்கிறது. என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்படி குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுகின்ற
கிராஸ் ப்ராகிராம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?
இப்போது அப்படிப்பட்ட சிறப்புத் திட்டம் ஏதேனும் நடை
முறையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்
களே, நாம் அண்மையிலே மூன்று மாவட்டங்களில் இப்படிப்
பட்டத் திட்டங்களை எடுத்துக் கொண்டோம். திருச்சி, தஞ்சை,
தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் அவ்வாறு எடுத்துக்கொண்
டிருக்கிறோம். ஆனால் நமக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளைப்
பற்றி நான் மிகத் தெளிவாக விளக்க விரும்புகிறேன்.
The total requ'rements in year for Tamil Nadu are of the order
of 50 lakh doses while we are receving 9 lakh doses
ஒரு மூன்று டோஸஸ் ஒரு குழந்தைக்குக் கொடுக்க வேண்டும்.
பூஸ்டர் டோஸஸ் என்றால் 4 டோஸஸ் கொடுக்க வேண்டும்.
நமக்கு 50 இலட்சம் டோஸஸ் தேவை. ஆனால், நமக்குக்
கிடைக்கின்ற டோஸஸ் 9 இலட்சம் டோஸஸ்தான். இதனை
முழுமையாகப் பயன்படுத்துகிறோம். நாம் வற்புறுத்தி இந்த
ஆண்டு கொஞ்சம் ஜாஸ்தி கிடைத்திருக்கின்றது. சென்ற மூன்று
ஆண்டுகளுக்கு முன்பு During 1980—81 Tamil Nadu received a
supply of 3.86 lakh doses of oral pol'o vaccine
இந்த ஆண்டு கிட்டத்தட்ட 9 இலட்சம் டோஸஸ் நமக்குக்
கிடைத்திருகின்றது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர்
அவர்களே, கிராமங்களில் குழந்தைகளுக்கு தட்டம்மைத்
தடுப்பு ஊசி என்று முன்பு போடுவார்களே அது தற்சமயம்
நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளதா ? அந்தப் பணி கிராமங்களிலே
நடைபெறவில்லையே, அவ்வாறு அம்மை குத்துகின்ற பணி
செய்யப்படாததற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்பு



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்
களே, இந்த மீஸல்ஸ் வேக்ஸின் என்பதைப் பொறுத்த வரையில்
7 இலட்சத்து 60 ஆயிரம் டோஸஸ் இந்த ஆண்டு நாம்
உபயோகப்படுத்தி இருக்கிறோம். இதற்குத் தேவை எவ்
வளவோ அந்த அளவுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றது.

## தமிழ் நாட்டில் ஆரம்ப சுகாதார மையம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண். 295—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் புதிதாக ஆரம்ப சுகாதார மையம் ஆரம்
பிக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் புதிதாக ஆரம்ப சுகாதார
நிலையங்கள் நடப்பாண்டில் எத்தனை கட்டப்படுகின்றது ?
இதற்கு அரசு எவ்வளவு ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றது
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத்
தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு 383 ஆரம்ப சுகா
தார நிலையங்கள் இருந்து இருக்கின்றன. இப்போது 1981-82-ல்
20 ஆரம்ப சுகாதார நிலையங்களை நாம் ஏற்படுத்தி இருக்
கிறோம். ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக ஏற்படுத்து
வதற்கு 11.5 இலட்சம் ரூபாய் செலவாகின்றது என்பதைத்
தெரித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார
நிலையம்தான் இருக்கின்றது. கூடுதலாக ஆரம்ப சுகாதார
நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்றால் எந்தத் தகுதியின்
அடிப்படையில், எந்த கண்டிஷனில் ஆரம்பிக்கப்படுகின்றது ?
இந்த ஆண்டு எவ்வளவு கட்டப்பட இருக்கின்றது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்
களே, இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் பட்ஜெட் வந்த
தற்குப் பிறகுதான் சொல்ல முடியும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இந்தியாவிலேயே நம் மாநிலத்தில் மட்டும்தான் தமிழ்நாடு சர்க்காருக்காக நாம் வாங்குகிற மருந்துகளைப் பொறுத்தவரையில் தமிழ் நாடு என்பதற்கு 'த' என்றும் அரசுக்கு 'அ' என்றும் தமிழ் நாடு அரசு என்று நாம் குறிப்பிட்டிருக்கிறோம். இப்படி எந்த மாநிலத்திலும் எந்தக் கம்பெனியிடத்திலும் இப்படி குறிப்பிட்டு அவர்களுக்கு வாங்குவது கிடையாது. ஆகவே தமிழ்நாடு அரசு மட்டும், அதிலும் குறிப்பாக நம் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான் இப்படிப்பட்டதொரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆக, இது நல்லதொரு முற்போக்கான திட்டம். அரசாங்கம் மருந் துகள் வாங்கும் நேரத்தில் அரசாங்கத்தினுடைய மருந்து என்பதைத் தெரிவித்துக்கொள்வதற்காக மாத்திரைக்கு மேலே ஒரு முத்திரை குத்தப்படுகிறது. இது உறுப்பினர் அவர் களுக்கும் தெரியும்—மோனோக்ராம். அதை நாம் செய்து கொண்டிருக்கிறோம். இதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கில்லை.

திரு. மு. அப்பாதுரை : ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் ஒரே நேரத்தில் ரூ. 200 வரைதான் மருந்து வாங்க லாம் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். சில வேளை களில் மகப்பேறுக்கு வரக்கூடிய தாய்மார்கள், இரண்டு மூன்று பேர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். ஒருவருக்கு வாங்கும் மருந்தே ரூ. 200க்கு மேல் ஆகிற காரணத்தால்—பல கிராமங் கள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போக போக்குவரத்து வசதி இல்லாத நிலையில் இருக்கின்றன. அதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட இடங்களுக்காவது பிரத்தியேகமாக அங்குள்ள மருத்துவர்கள் அதிகமான தொகைக்கு மருந்துகள் வாங்கலாம் என்று அறிவிப்பார்களா ? மேலும் எல்லா மருத்துவ மனைகளி லும் மூன்று டாக்டர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். என் தொகுதி ஒட்டபிடாரத்தில் உள்ள மருத்துவ மனையில் இது வரை ஒரு டாக்டர்தான் இருக்கிறார் என்பதை அமைச்சர் அவர்களிடம் அறிவித்திருக்கிறோம். அந்தக் குறையைப் போக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தனிப்பட்ட குறைகள் இருக்குமானால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசாங்கம் தயாராகயிருக்கிறது. ஆனால் இந்த 200 ரூபாய் மருந்தைப் பொறுத்த வரையில் அது ஒரு நோயாளிக்கு என்றல்ல. ஏற்கனவே ரூ. 15,000 என்றிருந்ததை ரூ. 20,000 ஆக நாம் உயர்த்தியிருக்கிறோம். அதுமட்டுமல்ல. சிலயிடங் களில் போக்குவரத்து வசதிகள் இல்லை என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதற்காகத்தான் 149 ப்ரைமரி



ஹெல்த் சென்டர்ஸ், 405ல் 149—அட்டாக்ட்டு மொபைல் க்ளினிக்ஸ் ஏற்படுத்தி இருக்கிறோம். மொபைல் க்ளினிக்ஸ் ஏற்படுத்தியிருக்கிறோம். ஒவ்வொரு க்ளினிக்கும் ரூ. 14,000ல் இருந்து ரூ. 20,000 ஆக மருந்துகள் வாங்கக் கூடிய நிலையை உயர்த்தியிருக்கிறோம். ரூ. 20,000க்கு வாங்கிக் கொண்டிருக் கிறார்கள். இந்த ரூ. 200 என்பது அவசரமாக திடீரென்று ஒரு மருந்து இல்லையென்று சொன்னால் உடனடியாக அதை வாங்கிக் கொள்ளத்தக்க வகையில்தான் செய்யப்பட்டிருக்கிறது. நோயாளிகளுக்கு கூடுதலாக மருந்துகள் கொடுக்க வாய்ப்பு இருக் கிறது.

**போலியோ—தட்டம்மை போன்ற தடுப்பு ஊசிகளுக்கான மருந்துகள்.**

*வினா எண். 294—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) போலியோ—தட்டம்மை போன்ற தடுப்பு ஊசிகளுக் கான மருந்துகளை தனியார் அமைப்புகள் ஏதேனும் வழங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் வழங்கும் அமைப்புகள் எவை எவை ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) போலியோ தடுப்பு மருந்தை அரசின் கூட்டு நிறுவனமாகிய தமிழ் நாடு தாதா ட்ரக்ஸ் பார்மசூடிகல்ஸ் லிமிடெட், சென்னை -86 மற்றும் தனியார் நிறுவனமாகிய ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி யும் வழங்குகிறது. தட்டம்மை போன்ற தடுப்பு ஊசித்திட்டம் அனைத்துலகு ரோட்டரி சங்கத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை : இந்த நோய் தடுப்புப் பணிக்கு உலக சுகாதார நிறுவனம் ஏதாவது உதவி அளித்து வருகிறதா ? அப்படி உதவி அளிக்கிறது என்றால் நாம் அந்த உதவியை எந்தெந்த வகையில் பெற்று வருகிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : டப்ள்யூ.எச்.ஓ. நமக்கு உதவி செய்யவில்லை. ஆனால் ரோட்டரி க்ளப், அதுவும் கூட குறிப்பாக நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அங்கு சென்று பேசி, சென்ற ஆண்டு அதற்கு பிறகு என்னைப் போய் பார்க்கச் சொல்லி அத்தனைபேர்களும் சேர்ந்து அவர்களிடத்தில் சென்று நாம் நிறைய வாங்கியிருக்

ஆகவே நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அல்மா மேட்டா அதாவது அனைவருக்கும் நல்வாழ்வு என்ற உலக சுகாதார நிலையத்தினுடைய அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நாடாக இருப்பதால் நம்முடைய நோக்கத் தின்படி நம்முடைய டார்கெட் 50 ஆயிரம் பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தேவை. அந்த அடிப்படையிலே படிப்படியாக ஃபேஸ்ட் ப்ரோகிராம் என்ற வகையிலே இதை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். அப்படி ஏற்படுத்து கின்றபோது பல பஞ்சாயத்து யூனியன்களுக்கு இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஆயிரம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கக்கூடிய ஒரு திட்டத்தை நோக்கி நாம் சென்று கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொது வாக ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வகையிலும் ஒருசில ஒன்றியங்களுக்கு மட்டும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்ற நிலைமையில் இருக்கின்றது. அப்படி இருக்கின்ற அந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் அந்தந்த ஒன்றியங்களிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் சென்று அவ்வப் போது வரக்கூடிய நோய்களுக்கு தடுப்பு நடவடிக்கை ஏதாவது எடுத்துக் கொண்டு வருகிறார்களா ? தற்போது அவர்களுக்கு வேன் மற்றவைகள் எல்லாம் கொடுத்திருந்தாலும் கூட எந்தப் பகுதியிலே ப்ரைமரி சென்டர் இருக்கின்றதோ அந்தப் பகுதிக்கு மட்டும்தான் பயன்படுத்தப்படுகின்றது. எனவே அத்தனை பேருக்கும் பயன்படுகின்ற வகையிலே வேறு ஏதாவது யோசனை அரசினிடத்திலே உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மிக முக்கியமான திட்டம் என்னவென்றால் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு சப்-சென்டர் என்று தாய்-சேய் நலவிடுதி என்று சொல்லுவார்கள். கிளை ஆரம்ப சுகாதார நிலையம் என்று சொல்லுவார்கள். இதை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் திட்டம். இதிலே ஆல் இந்தியா கைய்டு லைன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. 10 ஆயிரம் ஜனத்தொகை ஒரு சப்-சென்டருக்கு இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அதை மாற்றி 50 ஆயிரம் ஜனத்தொகை உள்ள இடத்திற்கு ஒரு சுகாதார நிலையம் இருக்கவேண்டும் என்ற திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதேமாதிரியாக 5 ஆயிரம் ஜனத்தொகை கொண்டிருக்கக் கூடிய அந்த ஏரியாவுக்கு ஒரு சப்-சென்டர் ஏற்படுத்திவிட்டோம் என்றால் அந்த ஊர்திகள் சப்-சென்டருக்கு சென்று அங்கே பணி ஆற்றுவதற்கு சௌகரியமாக இருக்கும். அந்த அடிப் படையில் செய்து கொண்டு வருகிறோம். அதை பொறுத்த



வரையில் நம்முடைய மாநிலம் மிக நல்ல வகையில் முன்னேற்றம் கண்டிருக்கிறது. ஏன் என்றால் தன்னிறைவுத் திட்டத்தில ஏராளமான சப்-சென்டர்கள் நமக்கு கிடைத்துக்கொண்டிருக் கிறது. இந்தியாவுக்காக நிர்ணயித்துள்ள இலக்கு 2 ஆயிரம், மற்ற மாநிலங்கள் எல்லாம் எடுத்துக்கொள்கிறார்களோ இல்லையோ நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் நிச்சயமாக இன்னும் 2 ஆண்டுக்குள் நாம் எட்டிவிட முடியும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஆயிரம் ஜனத்தொகை உள்ள இடத்திற்கு ஒரு சென்டர் என்ற முறையை மாற்றி மலைப் பகுதிகளுக்கு அந்த எண்ணிக் கையை சற்றுக் குறைத்து அதற்கு என்று ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது Hill Area Development Programme என்று, மலைப் பகுதிகளுக்கு என்று தனியாக ஒரு ப்ரோகிராம் வைத்து இருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று இருக்கிறது. நீலகிரி மாவட்டத்திலே குலக்கொம்பு என்ற இடத்தில் நாம் ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 282 மற்றும் 283 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டு கோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்பெறுகின்றன.

### தமிழக நீர்மாசு தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் வாரியம் அமைக்கும் திட்டம்

*வினா எண் 296—திரு. எம். சின்னசாமி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Prevention of Water Pollution Board அமைக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அக்குழு என்ன நடவடிக்கைகள் இதுவரை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. ''(அ) தமிழக நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் வாரியம்'' (Prevention of Water Pollution Board) 19–2–1982இல் அமைக்கப்பட்டு 27–2–1982 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) விவர அறிக்கை @அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

@488—489ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பால்வள நிறுவனம்

*வினா எண் 242—திரு. கு. ரமணி : மாண்புமிகு ஊரகத்
தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்
பாரா—

(அ) தமிழ்நாடு பால்வள நிறுவனத்தைக் கலைத்துவிட்டு
பால் விநியோகத்தை உபயோகிப்போர் கூட்டுறவுகள் மூலம்
நடத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கு என்ன காரணம் ?

(இ) பால்வள நிறுவனத்தில் வேலை செய்துவந்த தொழி
லாளர்களுக்கு இதனால் வேலையிழப்பு ஏற்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) பால்வள
நிறுவனத்தை கலைத்துவிட வேண்டுமென்று அரசு உத்தர
விடவில்லை. தமிழ்நாடு பால்வள நிறுவனம் மாற்றப்பட்டு
இப்பொழுது தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்
இணையம் என்ற பெயரில் 1—2—1981 முதல் செயல்பட்டு வரு
கிறது. இந்த இணையம் மேற்கொண்டிருக்கும் பல பொறுப்பு
களில் பால் விநியோகம் செய்யும் பொறுப்பு ஒன்றினை
மட்டும் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களிடம் ஒப்படைத்
துள்ளது.

(ஆ) தற்பொழுது பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின்
கீழ் உள்ள டெப்போக்கள் மூலமாக நுகர்வோர்களுக்கு பால்
விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நுகர்வோர் இம்முறை
யில் குறிப்பிட்ட குறைபாடுகளை தவிர்ப்பதுமல்லாமல் இந்த
பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு பால்
உற்பத்தியாளர்கள் இணையத்திற்கும், நுகர்வோர்களுக்கும் ஒரு
இணைப்புப் பாலமாகவும் அமையும்.

(இ) பால்வள நிறுவனத்தில் வேலை செய்து வந்த தொழி
லாளர்களுக்கு இதனால் ஒரு சிறிதும் வேலை இழப்பு ஏற்படாது.
கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டவுடன் அந்தந்தப்
பகுதிகளில் பணியாற்றி வந்த இணையத்தினுடைய பணியாளர்
கள் சங்கத்தினுடைய நிர்வாகத்திற்கு மாற்றப்படுவார்கள்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
பொதுமக்களுக்கு வினியோகிக்கப்படும் மிக அத்தியாவசிய
மான உணவு பண்டங்கள், பால் உட்பட எல்லாம் அரசாங்கத்தி
னுடைய வினியோகத்தில் இருப்பதும் அது அரசாங்கத்தின்
பொறுப்பாக இருப்பதும் நாட்டில் இருக்கிற அனைத்து மக்களும்
விரும்பக்கூடிய ஒரு விஷயம். அப்படி இருக்கும்போது அரசாங்



கத்தினுடைய நேரடியான பார்வையில் வைத்திருந்த இந்த
அமைப்பை ஏன் கூட்டுறவுத் துறைக்கு மாற்ற வேண்டும் ?
அது இருப்பதால் அரசாங்கத்திற்கு என்ன கெடுதல் ? அங்கே
மாற்றுவதால் மக்களுக்கு என்ன நன்மை என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக நுகர்வோர்கள்
கூட்டுறவு அமைப்புக்கு மாற்றுவதால் நேரடியாக நுகர்வோர்
கள் அந்த நிர்வாகத்தை கவனிக்கின்ற ஒரு ஜனநாயக மாறுதல்
ஏற்படுகிறது. அவர்களே கவனிக்கிற நேரத்தில் பல குறை
களை அவர்களே விரைவிலே எளிதாக தவிர்க்க முடிகிறது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இதை வெறும் ஜனநாயகத்தினுடைய பிரச்சினையாக
மட்டும் நாம் பார்க்கவில்லை. அரசாங்கமே பொறுப்புடன்
மக்களுக்கு காரியம் செய்வது என்பது ஜனநாயகத்திற்கு அப்பாற்
பட்டது அல்ல. இந்த அரசாங்கத்தை ஜனநாயக முறைப்படி
மக்கள்தான் கட்டுப்படுத்துகிறார்கள். ஆகவே அது சரியான
முறை என்று தோன்றவில்லை. அதே சமயத்தில் இதில் வேலை
செய்யும் தொழிலாளர்கள் முழுவதும் எந்தவிதமான பாதிப்பும்
இன்றி அந்த நுகர்வோர் ஸ்தாபன அமைப்புக்கு அதாவது
கூட்டுறவுக்கு மாற்றப்படுவார்கள் என்று சொல்கிறார்கள்.
அவர்களுடைய பழைய சர்வீஸ் மற்றும் சகலவிதமானவைகளும்
அவர்களுக்கு அங்கே மாற்றி கொடுத்து வேலைக்கு உத்திரவாதம்
கொடுக்கப்படுமா என்றும் இங்கே இருக்கும்படியான பால்வள
நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் வருடக்கணக்காக வெளியே
வேலை இல்லாமல் இருக்கிறார்கள் அவர்களுக்கும் சேர்த்து
அங்கே வேலை கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்றும்
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே
பால் நுகர்வோர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்ட நேரத்திலே
ஏற்கெனவே பணியாற்றியவர்களுக்கு வேலைகள் கொடுக்கப்
பட்டிருக்கின்றது. எதிர்காலத்திலே சங்கங்கள் அமைகிறபோது
நிச்சயமாக அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, பால்வள
நிறுவனத்திலிருந்து பால் இணையகம் ஏற்படுத்தப்படும் என்று
அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த இணையகத்திற்கு
இந்த தமிழக அரசினுடைய பங்குத் தொகை எவ்வளவு ? மத்திய
அரசால் கொடுக்கப்படுகிற பங்குத் தொகை எவ்வளவு ?
எத்தனை இணையகங்கள் துவக்கப்பட்டு இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே
தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, தற்போது மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் யூனியன், பால் வழங்கு யூனியன் என்ற இரண்டு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இரண்டு அமைப்புகளையும் ஒரே அமைப்பின் கீழே கொண்டு வரும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, இது மூலக்கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி. எனவே தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி . தலைவர் அவர்களே, பால் மிக அத்தியாவசியமான சத்துள்ள உணவு. அது கிடைப்பதற்கு தமிழகத்திலே நாம் எதிர்பார்த்த அளவுக்கு உற்பத்தி அதிகரிக்க வில்லை. சில மாநிலங்களில் வெண்மைப் புரட்சியை நடத்தி முடித்துவிட்டார்கள். நம்மிடத்திலே அதற்கான வாய்ப்புகள் இருந்தும்கூட அப்படி எதிர்பார்த்த அளவிற்கு உற்பத்தியாகாத தற்கு எனக்குத் தெரிந்தவரையில் என்ன காரணம் என்றால் ஒரு தடவை கறவை மாடு வாங்கினால் கடனைக் கட்டமுடியாமல் விற்று விடுகிறார்கள். அல்லது மறுபடியும் வாங்க அவர்களால் முடியவில்லை. இவையெல்லாம் போக்குவதற்கு உற்பத்தியை அதிகரிப்பதற்கு உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதைப்போலவே விநியோகிப்பவர்களுக்கு மானியம், சப்ஸிடி, ரிபேட் ஏதாவது கொடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு நடவடிக்கைகளை எடுத்து பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு சரியான திட்டத்தை அரசு வகுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இங்கே இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார் கள். ஒன்று, போதுமான அளவுக்கு பால் உற்பத்தி செய்யப்பட வில்லை என்பது. சென்ற ஆண்டிலே—சென்ற ஆண்டைத்தான் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன்—லட்சம் விட்டர்கள் அதிகமாக அதற்கு முந்தைய ஆண்டைவிட செய்திருக்கிறோம். இரண்டாவது, பாலுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டு மென்று வற்புறுத்தி இருக்கிறார்கள். அடுத்த ஆண்டு இது பற்றி பரிசீலனை செய்து நிச்சயமாகக் கொடுக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, கடன் வாங்கி மாடுகளை வைத்திருக்கிறபோது இன்ஷூரன்ஸ் செய் திருக்கிறார்கள். கடன்களைக் கட்டியதற்குப் பிறகு—மாடு களுக்கு வைக்கோல் கிடைக்காததால்—அவைகளைக் கொன்று விடுகிறார்கள். அதன் மூலமாக இன்ஷூரன்ஸ் தொகையைப் பெற்றுக்கொள்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு நட வடிக்கை எடுக்குமா ?



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகளைப் பரிசீலனை செய்து தக்க நட வடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, பால் கன்ஸ்யூமர் சொஸைடிகள், நுகர்வோர் சங்கங்கள் எல்லா இடங்களிலும் அமைக்கப்படுகின்றன. கோவை, ஈரோடு போன்ற பெரிய நகரங்களில் உற்பத்தியாளர்கள் ஒன்றியமே விநியோகத்தையும் மேற்கொள்வதைப்போல பெரிய இடங்களிலே தலைநகரங் களிலும் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களே விநியோகத்தையும் மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே உபயோகிப்போருடைய கூட்டுறவு சங்கத்தை தமிழ்நாடு முழுவதும் விரிவு படுத்த வேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. ஆனால் முதல் கட்டமாக சென்னை நகரத்திலே பரீட்சார்த்தமாக செய்து வருகிறோம். சென்னை நகரத்திலே இதுவரையிலே 15 இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறோம். ஏறக் குறைய 100 இடங்களில் சென்னையிலே இதை ஏற்படுத்தி தன்னிறைவைப் பெற முடிகிறதா என்றும் செயல்படுகின்ற தன்மையைப் பார்த்த பிறகும் விரிவுபடுத்துவதுபற்றி ஆலோசிக்கப்படும்.

## டான்சி நிறுவனத்தின் மூலம் கடன் பெற்ற நிறுவனங்கள்.

*வினா எண். 243—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) டான்சி (TANSI) நிறுவனத்தின் மூலம் கடன் பெற்ற நிறுவனங்களில் மார்ச் 82 முடிய கடனை முழுவதும் செலுத்தாத நிறுவனங்கள் யாவை ?

(ஆ) அவைகளின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) டான்சி நிறுவனம் பொதுத் துறையில் சிறு தொழில்கள் சிலவற்றை நடத்தி வருகிறது. இந்நிறுவனம் மற்ற நிறுவனங்களுக்கோ, நபர்களுக்கோ கடன் அளிப்பதில்லை.

[முற்பகல் 9–30]

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தின் மூலம் கடன் பெற்ற நிறுவனங் கள் கடனை திருப்பிச் செலுத்துவதில் என்ன சிக்கல் இருக்கிறது? கடன் பெற்ற நிறுவனங்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

**உதகமண்டலத்தில் மாவட்ட தொழில் மையத்திற்கான கட்டிடம் கட்டும் திட்டம்**

*வினா எண். 284—திரு. கே. உச்சி : மாண்புமிகு கைத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த உதகமண்டலத்தில் மாவட்ட தொழில் மையத்திற்கான கட்டிடம் கட்டும் பணி எப்போது முடியும்?

(ஆ) அங்கு எந்தெந்த உபபொருட்கள் தயாரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தற் பொழுது கோயம்புத்தூர் மாவட்டத் தொழில் மையம் நீலகிரி மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளை கவனித்து வருகிறது. ஆகவே தொழில் மையத்திற்கான கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, இந்துஸ்தான் போட் டோ பிலிம்ஸ் நிறுவனத்தில் கலர் பிலிம் தயாரிக்கும் பிரிவு அங்கே இல்லை என்ற நிலை ஏற்படும்போது, அதை மீண்டும் ஏற்படுத்தவேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற் புறுத்துமா என்றும், அதற்கான உப பொருள்களை அங்கே தயாரிக்க அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இது ஏற்கனவே விவாதிக்கப்பட்ட பிரச்னை. ஆனால், ஏற்கனவே இருக்கின்ற இந்துஸ்தான் புகைப்பட பிலிம் நிறுவனத்திற்கு அருகே ஒரு துணை தொழிற்பேட்டை அமைக்கப் பட்டு, அதை விரைவிலே அங்கே தொடங்கயிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சுமார் சராசரியாக 10 தொழிற்கூடங்கள் அமைய இருக்கின்றன. ஏற்கனவே இருக்கின்ற தொழிற் [illegible] வைகள் துணைத் தொழிற்கூடங்களாக அமையும்.



திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தை தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக கருதி, இந்த அரசு நீலகிரி மாவட்டத்திற்கென தனியாக ஒரு தொழில் சென்டரை ஏற் படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தனியாக தொழில் மையத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பை அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது. அது விரைவில் அமைக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர் களே, உதகமண்டலம் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற் சாலையில் கலர் பிலிம் பிரிவு நிச்சயமாக அமைக்கப்படும் என்று பிரதமர் அவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியின் சில தலைவர் களிடம் வாக்குறுதி கொடுத்ததாக பத்திரிக்கையிலே செய்தி வந் திருக்கிறது. அத்தகைய வாக்குறுதியை பிரதம மந்திரி அவர் களிடமிருந்து தமிழக அமைச்சர் பெற முடியவில்லையா? அல்லது இந்திரா காங்கிரஸ் கட்சியினர் சென்றால்தான் அந்த வாக்குறுதி அளிக்கப்படுமா? இதற்கு அமைச்சர் அவர்கள், இந்தத் தொழில் அங்கே அமைக்கவேண்டும் என்று பிரதம மந்திரி அவர்களைச் சந்தித்தார்களா? அவர் அப்போது என்ன பதில் சொன்னார் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, இதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

**வேதாரண்யம் திருக்கோயிலுக்கான அறங்காவலர்**

*வினா எண் 285—திரு. எம். எஸ். மாணிக்கம் : திரு. என். பழனிவேல், திரு. இரா. நாமமைரக்கனி : மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வேதாரண்யம் திருக்கோயிலுக்கு, இலங்கையைச் சேர்ந் தவர் பரம்பரை அறங்காவலராக இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதை மாற்றி பரம்பரையில்லாத அறங் காவலர்களை அரசு நியமனம் செய்யும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) அருள் மிகு வேதாரண்யேஸ்வரசுவாமி ஆலயத்திற்கு தவத்திரு ச. கதிர்காம பண்டார சந்நிதி என்பவர் தற்போது பரம்பரை அறங் காவலராய் உள்ளார். அவர் இலங்கைத் தமிழராவார். அவர் இந்தியாவில் வசிக்க அரசாங்கத்தில் அவ்வப்போது அனுமதி

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர
வைத்தலைவர் அவர்களே, ஜனாதிபதி ஒப்புதல் பெறப்படாமல்
இருக்கிற சட்டம் பரம்பரை அறங்காவலர்களை நீக்குகிற சட்
டம் அல்ல. அது சில மடங்களுடைய நிர்வாகங்களை சீர்
திருத்துவதற்காக கடந்த ஆண்டுகளில் சட்டமன்றத்திலே நிறை
வேற்றப்பட்ட சட்டம் ஆகும். ஆனால் இப்போது நாம் புதிய
தாக, பரம்பரை அறங்காவலர்களை நீக்குவதற்கும், அதை திருந்
தியமைப்பதற்கும் வழிகாணுகிற வகையில் புதிய சட்டத்தை
உருவாக்க இருக்கிறோம். முன்னால் இப்படிப்பட்ட பரம்பரை
அறங்காவலர்கள் இருக்கிற, மடாதிபதிகள் இருக்கிற கோவில்களில்
நிர்வாக அதிகாரிகளை கூட போடக் கூடாது என்று அவர்கள்
நீதிமன்றத்திலே தடை ஆணையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்
கள். ஆகவே தான் இந்த நிர்வாகத்திலே நம்முடைய அதிகாரி
களை அனுப்பி விவரங்களைப் பெறமுடியாமல் இருக்கிறது.

தமிழ் நாட்டிலுள்ள சுற்றுலா இடங்கள் பற்றிய செய்திப் படம்

*வினா எண். 286—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு
செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சுற்றுலா இடங்கள் பற்றிய சினிமா
படம் எடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது இத்திட்டம் தொடங்கப்
படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) அண்ட் (ஆ):
தற்போது 'தமிழகத்தில் ஓய்விடங்கள்' (Holiday Resorts
in Tamil Nadu) என்னும் தலைப்பில் ஒரு சுற்றுலா
செய்திப்படம் வண்ணத்தில் தமிழ்நாடு அரசு செய்திப்பட பிரி
வின் மூலம் அரசு தயாரித்துக் கொண்டிருக்கிறது. இந்த செய்தி
படத்தின் தயாரிப்பு 1983 மார்ச் மாத இறுதிக்குள் முடிவடை
யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள சுற்றுலா மையங்
களை வரலாற்று சிறப்புடன் வெளிநாடுகளில் விளம்பரப்படுத்த
அரசிடம் சிறப்புத் திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்
களே, தமிழகத்தினுடைய சிறப்புமிக்க சுற்றுலாத் தலங்கள்
நல்ல படங்களின் மூலம், போஸ்டர்களின் மூலம், புத்தகங்



களின் மூலம் வெளிநாடுகளில் பரப்புவதற்காக முயற்சிகள்
முன்பே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே ஒரு முயற்சி
தான் இந்த திரைப்பட தயாரிப்பு.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இப்படி தயாரிக்கப்படுகிற படங்கள்
ஆங்கிலம் மற்றும் ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்த்து
அங்கே திரையிடுவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்திலே தயாரிக்கப்படு
கிறது. மற்ற ஐரோப்பிய மொழிகளில் தயாரிக்கிற சூழ்நிலை
இப்போது இல்லை.

[முற்பகல் 9-40]

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு தயாரித்துள்ள சுற்றுலா
இடங்களைப் பற்றிய அந்த சினிமா படத்தில் வரலாற்று சிறப்பு
மிக்க பூம்புகார், தஞ்சாவூர் போன்ற இடங்கள் இடம் பெறு
கின்றனவா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, இப்பொழுது தயாரிக்கின்ற இந்தப் படம்
இரண்டு பிரிவுகளாகத் தயாரிக்கப்படுகிறது. 20 நிமிடங்கள்
ஓடக்கூடிய சுமார் 2,000 அடியிலே இருக்கக்கூடிய படமாகும்
அது. அதிலே, எந்த அளவுக்கு முக்கியமான பகுதிகளை,
இயற்கைக் காட்சிகளை, மலைவளங்களைக் காட்ட முடியுமோ,
அப்படி பிரித்து, தொகுத்து காட்டப்படும். அப்படி முக்கிய
மான பகுதிகள் விடப்பட்டிருந்தால் அடுத்துவரும் நிகழ்ச்சி
களிலே அப்படிப்பட்ட பகுதிகள் இணைக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இன்றைய
தினம் மக்களுடைய ஒற்றுமைக்கும் இந்தியாவினுடைய ஒற்
றுமைக்கும்கூட இந்தக் கலாச்சாரப் பரிமாற்றம் மிக முக்கிய
மாக தேவைப்படுகிறது. ஆகவே, இந்தி திணிப்பை எதிர்ப்பது
வேறு. இந்தியாவிலே இருக்கக்கூடிய 35 கோடி மக்கள்
இன்று இந்தி பேசுகிற மாநிலங்களிலே வாழ்கிறார்கள். தமி
ழகத்தினுடைய நாகரீகத்தையும், நம்முடைய தொன்மை
யான பண்பாட்டையும் புரிந்து கொள்வதற்கே இப்படிப்பட்ட
சினிமா படங்கள் அவர்களுக்கு உதவி செய்யும். அந்த முறை
யிலே இந்தியிலும் இப்படிப்பட்ட படத்தை [illegible] அரசு
முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

பெற்றுவருகிறார். மேற்கண்ட ஆலயத்தின் நிர்வாகத்திட்டம்
மாற்றி அமைக்கப்பட்டு, பரம்பரை அறங்காவலருடன்
இரண்டு பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமனம்
செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே
அவருடைய விசாக் காலத்தை நீட்டிக்காமல், அவர்களுக்கு அனு
மதி மறுத்தால், அவருடைய பரம்பரை அறங்காவலர் பதவி
ரத்தாகிறது. எனவே, அவர் விசாக் காலத்தை நீட்டிக்காமல்
இருக்கும்படி, மத்திய அரசை தமிழக அரசு கேட்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, விசாக் காலத்தை நீட்டிப்பதும், நீட்டிக்கா
மல் இருப்பதும் மத்திய அரசினுடைய ஆதிபத்தியத்திற்கு உட்
பட்டது. ஒரு இலங்கை பிரஜையினுடைய விசாவை நீட்டிக்கக்
கூடாது என்று தமிழக அரசு காரணம் இல்லாமல், சொல்வதற்கு
வழியில்லை என்று நினைக்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, பரம்பரை அல்லாத அறங்காவலரை நியமனம்
செய்வதற்கு உயர்நீதி மன்றத்திலே தடை வாங்கியிருப்பதாகத்
தெரிகிறது. ஆகவே தடையை நீக்கி பரம்பரையில்லாத அறங்
காவலரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்திலே தடை பெற்
றிருக்கிறார்களா என்ற விவரம் அரசிடம் இல்லை; தடை பெற்
றிருந்தால் அதை நீக்குவதற்கு அரசு முயற்சி செய்யும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த கேள்வியை நான் கேட்டது வேதாரண்யம்
கோவில் சம்பந்தமாக அல்ல; தமிழ்நாட்டிலுள்ள பரம்பரை
அறங்காவலர்கள் குறித்து நான் கேட்டிருந்தேன். தமிழகத்தில்
10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவில்கள் தனியார் நிர்வாகத்தில்
பரம்பரையாக வந்துகொண்டிருப்பதாக தெரிகிறது. அதை
ஒழிப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பரம்பரை அறங்காவலர்கள் பொறுப்
பில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவில்கள் இருக்கிறது
என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.
அந்த கணக்கு சரியா என்று தெரியவில்லை. இருந்தாலும்



பெரும்பாலான கோவில்கள், சில முக்கியமான கோவில்கள் எல்
லாம் கூட இப்படி பரம்பரை அறங்காவலர்கள் பொறுப்பில்
இருந்துகொண்டு அறநிலையத் துறையோ, அரசோ அதனு
டைய நிர்வாகத்தின் உள்ளே தலையிடமுடியாமல் தடுக்கப்பட்டு
வருகின்றன. ஆகவே இப்படிப்பட்ட பரம்பரை அறங்காவலர்கள்
முறையை நீக்குவதற்கு ஒரு புதிய சட்டமுன்வடிவை அறிமுகப்
படுத்தி சட்டம் நிறைவேற்ற அரசு பரிசீலனை செய்து கொண்
டிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த பரம்பரை அறங்காவலர்கள் இருந்து கொண்
டிருப்பதால் இன்றைக்கு கோவில் நிர்வாகங்களில் அவர்களும்,
அங்கே இருக்கக் கூடிய அதிகாரிகளும் சேர்ந்து கொண்டு பல
ஊழல்களை செய்துவிடுகிறார்கள். ஆகவே இந்த அரசு பரம்
பரை அறங்காவலர்களை ஒழிப்பதற்கான மசோதாவை கொண்டு
வருவதற்கு உத்தேசித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள். அதை இந்த ஆண்டிலேயே கொண்டுவருவதற்கு
அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர்
அவர்களே, விரைவில் அந்த சட்டமுன்வடிவை கொண்டு வந்து
நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வடபாதிமங்கலத்தில் ஏஜெண்டாக, பூசாரியாக
இருந்தவர் இன்று இங்கே ட்ரஸ்டியாக இருக்கிறார்களே அது
அரசிற்கு தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன். இந்த
கோவிலுக்கு ஏதாவது சொத்துக்கள் இருக்கிறதா என்பதையும்
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்
களே, இது வேதாரண்யம் திருக்கோவிலைப் பற்றிய கேள்வி.
மாண்புமிகு உறுப்பினர் எந்த கோவிலைப் பற்றிக் கேட்
கிறார்கள் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வடபாதிமங்கலம் கோ
விலைப் பற்றிக் கேட்கிறார்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பரம்பரை தர்மகர்த்தா ஒழிப்புச் சட்
டத்திற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறதா? இந்த
சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க முடியாமல் தமிழ்நாட்டிலுள்ள
ஆதீனகர்த்தாக்கள் தடையாக இருப்பது அரசிற்குத் தெரியு
மா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தியாவிலே வாழ்கிற மக்களுக்குப் பரப்புகிற வகையில், அவர்கள் புரிந்துகொள்கிற வகையில், ஆங்கிலத்தில் தயாரித்தாலே போதும் என்று அரசு கருதுகிறது. மத்திய சுற்றுலாத் துறை வேண்டுமானால் இந்தியாவிலே இருக்கிற சிறப் புகளை எடுத்துச் சொல்கிற அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்தியிலே தயாரிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசுக்கு அவர்களுடைய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் இந்த யோசனையைத் தெரிவித்தால் தமிழகத்திற்கும் பயன் உள்ளதாக அமையும்.

## கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் திட்டம்

*வினா எண். 287—திரு. து. புருஷோத்தமன், மற்றும் திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி இப்பொழுது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்பது பற்றிய ஒரு அறிக்கை தருவதற் காக நிபுணர் குழு ஒன்று பொதுப்பணித்துறைத் தலைமைப் பொறியாளர் தலைமையில் அமைக்கப்பட்டது. நிபுணர் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்று, அறிக்கையினுடைய விவரங்களைப் பற்றி அரசு மேல் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் நம்முடைய புலவர் திருவள்ளுவருடைய சிலையைத் திறப்பது பற்றி எதற்காக குழு அமைக்கப்பட்டுள்ளது? இடம் தேர்ந்தெடுக்கப்படுவதற்காகவா ? அல்லது வேறு எந்த காரணத்திற்காக அந்தக் குழு அமைக்கப்பட்டது ? எப் பொழுது அமைக்கப்பட்டது ? எந்த அடிப்படையிலே அவர்கள் ஆய்வு செய்கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா ?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எந்தக் காரணத்திற்காக குழு அமைக்கப்பெற்றது என்கிற விவரத்தை எல்லாம், இந்த அவையிலேயே நான் முன்னாலேயே சில கேள்விகளுக்குப் பதிலாக அளித்திருக்கிறேன். ஆனால், மீண்டும் அதைத் தெரிவிக்கிறேன். அங்கே அமைக்கப்பட இருக்கிற திருவள்ளுவர் சிலை என்பது 75 அடி உயரத்திலே அமைக்கப்பட வேண்டுமென்கிற ஒரு மிகப் பெரிய திட்டமாக முதன்முதலிலே இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அமைக்கப்படுகிற சிலை கல்லிலே அமைவதா ? வெண் கலத்திலே செய்வதா ? அல்லது செப்பிலே செய்வதா ? என்பது போன்ற விவரங்களும் அது ஏறக்குறைய ரூ. 4 கோடிக்கு மேல் திட்டமிட்டு செலவு செய்யப்பட வேண்டிய திட்டமாக இருக்கிற காரணத்தாலும் அது கடலோரத்திலே அமைக்கப்படுகிற காரணத் தினாலும், பாறையின் மேலே அமைக்கப்படுகிற காரணத் தினாலும் நீண்ட காலத்திற்குப் பாதுகாப்பாக அவைகளை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் அறிந்து ஆராய்ச்சி செய்து அரசுக்கு அறிக்கை தருவதற்காக இந்தக் குழு அமைக்கப்பெற்றது. அது கடந்த ஆண்டிலே அமைக் கப்பட்டு, அவர்களுடைய அறிக்கை இப்பொழுது அரசுக்குத் தரப் பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் ; பேரவைத் தலைவர் அவர் களே, அரசுக்குத் தரப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். அப்படியானால் அந்த அறிக்கை யிலே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் ? சிலை அமைப் பதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று அமைச்சர் அவர்கள் நினைக்கின்றார்கள் ? அது அமைத்து முடிய எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை வரவர்களே, அந்தக் குழு இப்படி மூன்று விதமான சிலைகளை அமைப்பதற்கு எப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், எந்த அளவிற்கு நிதி செலவாகும், எந்தச் சிலையை வைத்தால் என்னென்ன பின் விளைவுகள் ஏற்படும் என்பது பற்றியெல்லாம் ஒரு நீண்ட அறிக்கையைத் தந்திருக்கிறார்கள் அதைப் பற்றிப் பரிசீலித்து இறுதியான வடிவத்தினைப் பெறு வதற்காகத் தலைமைச் செயலாளர் தலைமையிலே நிர்வாக அலு வலர்களைக் கூட்டி அதைப்பற்றி கருத்துக்களை அரசுக்குக் வழங்க வேண்டுமென்று அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. அந்த முடிவு தெரிந்த பிறகுதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்குத் தெளிவான, இறுதியான விடையை அளிக்க முடியும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் சென்னை மாநகராட்சி மூலம் தென் தலைவரவர்களே, பூரில் திருவள்ளுவருக்குப் பெரிய சென்னையிலே மைலாப் அந்தச் சிலையைச் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. சுற்றி இருக்கின்ற இடத்தைப் பொழுது மிகவும் அருவருப்பாகக் காட்சி பார்க்கின்ற திருவள்ளுவர் சிலையைச் அளிக்கிறது. ஆகவே, சுற்றியுள்ள அந்த இடத்தில் நல்ல பூங்காவை அமைத்து அதை நல்ல இடமாக அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கேள்வி கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப் பதைப் பற்றியதாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனியாக இந்தக் கேள்வியைத் தருவார்களேயானால் அதற்குரிய துறையினிடத்திலேயிருந்து விரிவான பதில் அவர்களுக்குக் கிடைக்கும்.

வேலூர் நகரில் 1982 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அரசுப் பொருட்காட்சி

* வினா எண். 288—திரு. இல. பலராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு வேலூர் நகரில் 1982 ஆம் ஆண்டு சுற் றுலா வாரியம் மூலம் பொருட்காட்சி அமைக்கப்பட்டதற்கான செலவு எவ்வளவு ?

(ஆ) எந்த அடிப்படையில் அங்காடிகள் வாடகைக்கு விடப் பட்டன ?

(இ) அதன் மூலம் கிடைத்த வசூல் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) வட ஆற்காடு வேலூர் நகரில் முதன் முறையாக 1982 ஆம் ஆண்டு செய்தி துறையின் சார்பாக அரசுப் பொருட்காட்சி நடத்தியதற்கு ரூபாய் 6.22 லட்சம் செலவு செய்யப்பட்டது.

(ஆ) பொது ஏல முறையில் அங்காடிகள் வாடகைக்கு விடப்பட்டன.

(இ) அங்காடிகள் வாடகை மூலம் ரூ. 75,000 கிடைத்தது. இந்த பொருட்காட்சி நடத்தியதின் மூலம் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 10·72 இலட்சம்.



திரு. ஏ. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டும் வேலூரில் பொருட்காட்சி நடத்துவதற்கு அரசுக்குத் திட்டம் உள்ளதா ? அப்படியென்றால் எப்பொழுது அந்தப் பொருட்காட்சி துவங்கவிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர வர்களே, மின்சார நெருக்கடி, மற்றும் பல இயற்கையினுடைய தாக்குதல் போன்ற சூழ்நிலைகளை மனத்திற்கொண்டு பொருட் காட்சியை இந்த ஆண்டு நடத்த வேண்டுமா அல்லது தள்ளி வைக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக் கிறது.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, வேலூரில் நடந்த அந்தப் பொருட்காட்சியின்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் எங்களுக்கு ஒரு வாக்குறுதி தந் தார்கள். வேலூருக்கு அருகில் உள்ள கோத்தமலையைச் சுற்றுலா ஸ்தலமாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பல உறுப்பினர்கள் விடுத்தோம். அதை அமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டு ஆவன செய்வதாகச் சொன்னார்கள். அது சம்பந்த மான ஆய்வு அரசில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை வரவர்களே, சுற்றுலா ஸ்தலமாக ஆக்குவதற்கும், இந்தப் பொருட்காட்சியை நடத்துவதற்கும் தொடர்பில்லை. மாண்பு மிகு உறுப்பினரவர்களுடைய கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. சி. கோபால் : மாண்புமிகு தலைவரவர்களே, கடந்த ஆண்டு வேலூரில் பொருட்காட்சி நடந்தபொழுது ஏறத்தாழ 4 இலட்சம் ரூபாய் இலாபம் வந்ததாகப் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அரசுக்கு வருவாய் வருகின்ற இந்த நிலையிலே மின்சாரத்தைப் பொறுத்தவரையில் வேண்டுமானால் தனிப்பட்ட முறையிலே அரசிடத்திலேயிருந்து விதிவிலக்கு பெற்று, வேலூ ரிலே அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை வரவர்களே, மின்சாரத்தைக் கூட மிகக் குறைந்த அளவிலே பயன் படுத்துவது அப்படித் தேவையானால் ஜெனரேட்டர் வைத்துப் பயன்படுத்துவது பற்றிக்கூட திட்டங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. இருந்தாலும் பொதுச் சூழ்நிலைகளை மனத்தில் எண்ணி அந்தப் பொருட்காட்சி நடத்தப்பட வேண்டுமா அல்லது கொஞ்சம் தள்ளி வைப்பதா அல்லது இந்த ஆண்டு நடத்தாமலே தவிர்க்கப்பட லாமா என்பதைப் பற்றியெல்லாம் அரசு ஆலோசித்துக் கொண் டிருக்கிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, இதுபோன்ற சுற்றுலாப் பொருட்காட்சிகள் எல்லா மாவட்டங்களிலும் நடத்தப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை வரவர்களே, இது சுற்றுலாத் துறையின் மூலம் நடத்தப்படுவது அல்ல. சென்னையிலே மட்டும்தான் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்தப் பொருட்காட்சியை நடத்துகிறது. மற்ற மாவட்டத் தலை நகரங்களில் நம்முடைய செய்தித் துறை சார்பாக நேரடியாகவே அரசின் சார்பிலே நடத்திக் கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 9-50]

இப்போது அநேகமாக 7, 8 மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். மீண்டும் தொடர்ந்து மாவட்டத் தலைநகரங்களில் நடத்துவதற்கான திட்டமும் இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே மின்சாரப் பற்றாக் குறை இருக்கிற காரணத்தாலே பொருட்காட்சி நடத்துவதைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், பத்திரிகைகளிலே நடத்தப்படும் என்று செய்திகள் வந்துள்ளன. ஏற்கனவே வட ஆற்காடு மாவட்டத்தில் மின்சாரம் இல்லாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந் நிலையில் இப்படிப்பட்ட பொருட்காட்சி நடத்துவது தேவை தானா என்று அரசாங்கம் யோசிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே அரசின் சார்பிலே நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நடத்தப் படும் என்று ஏதோ பத்திரிக்கைச் செய்தி வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தப் பத்திரிகை இந்தப் பொருட் காட்சியை நடத்தவில்லை. அரசுதான் நடத்துகிறது. அதை நடத்துவதைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறது. அதைத் தள்ளிப் போடலாமா என்பது பற்றியும் யோசித்துக் கொண்டு இருப்பதை பற்றியும் தெரிவித்து இருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, அரசுப் பொருட்காட்சி நடத்துகிற போது பல்வேறு துறைகளின் சார்பாக பல ஸ்டால்கள் வைக்கப்படுகின்றன. நான் கேட்க விரும்புவது தமிழ்நாட்டையே சட்டமன்றப் பேரவைதான் நிர்வகிக்கின்றது. அந்தச் சட்டமன்றப் பேரவைத் துறை சம்பந்தமான விவரங்கள் அங்கே வைக்கப்படுமா ?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை. வருகின்ற பொருட்காட்சிகளிலே இது குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 289, 290, 291, 292 ஆகியவை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

## விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்

*வினா எண். 297—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்கள் பென்ஷன் வழங்கும் திட்டத்திற்கு 1980—81-ல் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) இதனால் எத்தனை பேர்கள் பயனடைந்தனர்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களும், முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் பயன் பெறும் பொருட்டு, முதியோர் ஓய்வூதியத் திட்டத்தினை விரிவுபடுத்தி, 15—3—1981 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. 1980—81ல் இத்திட்டம் கொண்டு வரப்படவில்லையாதலால், அவ்வாண்டில் இத்திட்டத்திற்கான செலவு மற்றும் பயனடைந்தவர்கள் பற்றி வினா எழ இடமில்லை.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயத் தொழிலாளர்கள் 60 வயதைக் கடந்தவர்கள் போடக்கூடிய மனுக்களிலே, சில மனுக்கள்தான் சாங்ஷன் ஆகிறது. மீதியுள்ளவை சாங்ஷன் ஆகவில்லை. அரசாங்கம் 60 வயதைக் கடந்த அனைவருக்கும் பென்ஷன் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 வயது நிரம்பிய ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் இதுவரையில் 30 ஆயிரம் பேர் களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. தமிழகத் திலே உள்ள எல்லா ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை வழங்குவது என்று சட்டமன்றத்திலேயே குறிப்பிட்டு இருக்கிறேன். அரசு அதற்காக பரிசீலித்து வரு கிறது என்பதையும் குறிப்பிட்டு இருக்கிறேன்.

போகக்கூடிய நிலையிலே அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே தனிப்பட்ட முறையிலே வயதை கணக்கில் கொண்டு அவர்களுக்குத் தனியாகக் கொடுப்பதற்கு எடுத்துக் உத்தரவு போடுமா என்பதை அறிய விரும்புகிறேன். அரசாங்கம்

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நியதியை இன்றைக்கு இந்த அரசு கையாளவில்லை.

## தமிழகத்தில் குழந்தைகளுக்கான நீதி மன்றங்கள்

*வினா எண். 298—திரு. கு. ரமணி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் குழந்தைகளின் (Children) நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவை குறித்த விவரங்கள் எண்ணிக்கை என்ன?

(இ) கைது செய்யப்படுகிற, தண்டிக்கப்படுகிற குழந்தைக் குற்றவாளிகளுக்கு சிறை வசதிகள் எவ்வாறு செய்யப் பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) இல்லை. (ஆ) இவ்வினா எழவில்லை. (இ) தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் காவல் துறையினரால் கைது செய்யப்படும் சிறுவர்கள் முதலில் வரவேற்பு இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

தமிழ்நாடு அரசின் நேரடி நிர்வாகத்தில் ஒன்பதும், அரசின் நிதி உதவி பெற்று தனியார் மேற்பார்வையில் 6 நிறுவனங்களும் ஆக 15 நிறுவனங்கள் வரவேற்பு இல்லங்களாக செயல்பட்டு வருகின்றன. இந்த வரவேற்பு இல்லங்களில் சிறுவர்களுக்குத் தேவையான உணவு, உடை ஆகிய அத்தியாவசிய தேவைகள் அளிக்கப்படுவதுடன், தங்க வசதி, மருத்துவ வசதிகள், உடற்பயிற்சி, பொழுது போக்கு அம்சங்கள் போன்ற எல்லா வசதிகளும் அளிக்கப்படுகின்றன.



திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் ஏராளமான பேர்கள் கைது செய்யப்படுகிறார்கள். கோவை மாவட்டத்திலே தொழிலாளர் போராட்டம் நடந்த போதிலும், மின்சாரத் தொழிலாளர்கள் போராட்டம் நடந்த போதிலும் குடும்பத்தோடு பெண்களும், குழந்தைகளும் 1½ வயது முதல் 13 வயது வரைக்கும் குழந்தைகள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களைக் கொண்டு போய் வைப்பதற்கு தனியார் கட்டிடங்களை வாடகைக் கொடுத்து அதிலே வைத்து, சுகாதாரமில்லாமல், எந்தவிதமான வசதியுமில்லாமல், அவர்கள் போட்டிருந்த துணியைக் கூட துவைத்துப் போட்டுக் கொள்வதற்கு அவர்களுக்கு வசதியில்லாமல், அவர்களை வைத்தபோது நானே அந்தச் சமயத்தில் ஒரு ரிப்போர்ட் கூட அனுப்பியுள்ளேன். அப்படிப்பட்ட குழந்தைகள் குற்றவாளிகள் என்று கருதப்படுவதற்கு ஒன்று, அதற்கு தகுந்த நீதிமன்றமும் மற்ற ஏற்பாடுகள் இருக்க வேண்டும். இல்லை என்றால், அவர்களுக்கு தகுந்த பராமரிப்புக் கொடுப்பதற்கான சகல வசதிகளும் அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதற்கான முயற்சிகளை அரசு எடுத்துள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 10-00.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் சட்டத்தின் கீழ் குற்றம் செய்த சிறுவர்களை விசாரிப்பதற்கென்று கிரிமினல் ப்ரொசீஜர் கோட் திருத்தியமைக்கப்பட்டபோது சென்னையைப் பொறுத்தவரைக்கும் அங்கே மெட்ரோபாலிடென் மாஜிஸ்டிரேட்டும், மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட், செகன்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்ஸ் மற்றும் சீப் ஜுடிசியல் மாஜிஸ்டிரேட்ஸ் ஆகியோரும் குழந்தைகள் சட்டத்தின் கீழ் விசாரணை செய்து அதன் மூலமாக தண்டனை கொடுத்துவருகிறார்கள். குழந்தைகளைக் காவல் துறையினர் கைது செய்து, பிறகு வரவேற்பு இல்லங்களில் வைக்கின்றனர். பிறகு நீதிமன்றங்களுக்குக் கொண்டு போகப்பட்டு, விசாரணை செய்கிறபோது அவர்கள் குற்றவாளிகளா இல்லையா என்பது தெளிவாகப் புலப்பட்டபிறகு, குற்றவாளிகளாக இருந்தால், சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்பட்டு, அவர்களுக்கு கல்வியிலிருந்து தொழிற்பயிற்சி வரை எல்லா விதமான சலுகைகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[1983 பிப்ரவரி 15

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் எல்லா
ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும் கொடுப்பது பற்றிச்
சொல்லி இருக்கிறார்கள். ஆனால் பல ஆயிரக்கணக்கான
மனுக்கள் எல்லாவிதமான விவரங்களும், டாக்டர் சர்ட்டிபிகேட்
போன்றவைகளைக் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால்
தாசில்தார் அலுவலகத்தில் பணம் இல்லை பணம் இல்லை
என்று அவைகள் தேங்கி கிடக்கிறது. எனவே தயவு செய்து
60 வயதுக்குட்பட்டவர்களுக்குக் கூட கொடுக்க வேண்டாம்
70 வயது, 75 வயது தாண்டியவர்களுக்கு உடனடியாக அவர்
களுடைய மனுக்களை பரிசீலித்து, அவர்களுக்குப் பணம்
கொடுக்க வழி வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 70, 75 வயதைத் தாண்டிய
அனைவர்களுக்கும் அந்த சீனியாரிட்டி அடிப்படையில் கண்டிப்
பாக கொடுப்பதற்கான ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் தொழிலாளர் பென்சன், முதியோர் பென்
சன் வாங்கத் தகுதியுடையவர்கள் பட்டியலை அரசு கணக்கு
எடுத்துள்ளதா ? அப்படி ஒரு பட்டியல் தயாரித்து அதில் தகுதி
யுள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதை விரைவுபடுத்த
அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத்
தலைவர் அவர்களே, பட்டியலின் அடிப்படையில்தான் அவர்
களில் தகுதி வாய்ந்தவர்களுக்கு அரசு உதவித் தொகை
கொடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தச் சமுதாயத்தில் விவசாயத் தொழிலாளர்கள்
தான் மிகவும் நலிந்த பகுதியினர். அவர்களுக்கு இந்த பென்சன்
கொடுப்பதிலே ஒரு நிபந்தனை—குழந்தைகள் இருந்தால் பென்
சன் இல்லை என்று ஒரு நிபந்தனை இருக்கிறது. குழந்தைகள்
இருந்தும் ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்
கள். ஆகவே எந்தவித சொத்தும் அல்லது வருமானமும்
இல்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு—கேரளா போன்ற
மாநிலங்களிலே அந்தமாதிரி கொடுக்கிறார்கள்—அப்படி பென்
சன் கொடுத்து அவர்களைப் பாதுகாப்பதற்கு அரசு தீவிரமான
நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத்
தலைவர் அவர்களே, குழந்தைகள் இருந்தால் ஏழை விவசாயத்
தொழிலாளர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதில்லை என்



1983 பிப்ரவரி 15]

றும், அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது என்றும் மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தவித சொத்தும்
இல்லாதவர்களுக்கு குழந்தைகள் இருந்தாலும் கொடுக்க வேண்
டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். பெண் குழந்தைகள்
இருந்தால் கண்டிப்பாக அவர்களுக்கு உதவி கொடுக்க வேண்டு
மென்று ஒரு நியதி இருக்கிறது. ஆண் குழந்தைகளாக இருந்
தால் கண்டிப்பாக தகப்பனுக்கு கடன்பட்டவர்களாக இருக்க
வேண்டும் என்பதை நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த விவசாயத் தொழிலாளர்களுடைய பென்சன் வழங்குவதற்
காக உள்ள பணியாளர்கள்—ஒரு வட்டாட்சி அலுவலகத்தில்
போதுமான அளவில் இல்லாத காரணத்தால், ஒரே பணியாளர்
ஏறத்தாழ, 3 ஆயிரம், 4 ஆயிரம் தொழிலாளர்களுக்கு பென்சன்
தொகை கொடுக்கவேண்டியுள்ளது. அதனால் குறித்த காலத்
தில் அனுப்பமுடியாமல், 2 மாதத்திற்கு ஒரு முறை அல்லது 3
மாதத்திற்கு ஒரு முறை அனுப்புகிறார்கள். எனவே அந்தப்
பணியாளர்களை கூடுதலாக்க அரசு ஆவன செய்யுமா என அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத்
தலைவர் அவர்களே, இருக்கின்ற பணியாளர்களை வைத்துத்
தான் செயலாற்றுவது என்ற கொள்கையாக இருந்து கொண்டி
ருக்கிறது. வேலை அதிகமாக இருந்தால் கண்டிப்பாக அதி
காரிகளைத் துரிதப்படுத்தி அதற்கு ஏற்றவாறு வேலைகளைச்
செய்வதற்கான ஆலோசனையை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவர் அவர்களே,
தகுதி வாய்ந்தவர்களுக்கு எல்லாம் இந்த பென்சன் வழங்கப்
படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால்
என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியில் ஆயிரக்கணக்கான
தொழிலாளர்களிடமிருந்து மனு வாங்கப்பட்டு இருக்கிறது. அதை
உடனடியாக பரிசீலித்து தகுதி வாய்ந்தவர்களுக்கு உடனடியாக
கொடுப்பதற்கு, அதிகாரிகளுக்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க
கட்டளையிட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத்
தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கி
றேன். தகுதி வாய்ந்த அனைவருக்கும் உதவித்தொகை
கொடுப்பதற்கு அரசு ஆலோசனை செய்து பரிசீலித்து வருகின்
றது என்பதை நான் குறிப்பிட்டு இருக்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே,
பந்தமும் சொந்தமும் இருந்தாலும் வாயும் வயிறும் வேறாக
இருக்கின்றது. தகப்பனுக்கும் மகனுக்கும் தொடர்பு அற்றுப்

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தண்டிக்கப்பட்ட பிறகு சிறைக்கு அனுப்பப்பட்டால், அவர்களுக்குக் கொடுக்கப் படுகின்ற வசதியைப் பற்றி நான் கேட்கவில்லை. அவர்களைக் கைது செய்தவுடனேயே கொண்டுபோய் வைக்கிறார்களே அந்த வரவேற்பு இல்லங்கள் இன்றைக்கு நரகத்திற்கு ஒப்ப இருந்து கொண்டு இருக்கின்றன. அங்கே போலீஸ் காவல் நடந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அந்த குழந்தைகளை விசாரணை முடியும் வரையில் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது என்பது ஒன்று. மத்திய சிறையின் சூப்பிரன்டெண்ட் அல்லது வேறு ஏதாவது ஜுடிசியல் அதாரிட்டீஸ் கன்ட்ரோலிலே அவர்களை வைத்து தகுந்த பராமரிப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரவேற்பு இல்லங்களில் கண்காணிப்பாளர் என்ற அதிகாரி மூலம் பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள். வரவேற்பு இல்லங்கள் சரியான முறையில் அமைக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். சுகாதாரமான முறையில் இல்லை என்று குறிப்பிட்டார்கள். எந்த வரவேற்பு இல்லத்தில் இத்தகைய நிலை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால் அந்த இல்லத்தை சுகாதாரமான முறையில் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு நிச்சயம் எடுக்கும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் இப்படி இருக்கிறது என்று ஸ்பெசிபிக்காகக் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் இருக்கின்ற வரவேற்பு இல்லத்தில் சுகாதார முறைக்கு மாறுபட்டு இருந்தால், கண்டிப்பாக அதைச் சுகாதாரமான முறையில் செயல் படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

இலங்கை அகதிகளுக்கு வீடு கட்டத் தரும் கடன் தொகை

*வினா எண். 299—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூலநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கை அகதிகளுக்கு வீடுகட்ட தரும் நிதியை உயர்த்த மத்திய அரசு உத்திரவிட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விவரமென்ன?

(இ) அதனால் எவ்வளவு பேர் பயன் பெறுவார்கள்?



மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் . (அ) ஆம்.
(ஆ) வீடுகட்டத்தரும் கடன் உதவியை கிராமப்புற
பகுதிகளில் ரூ. 3,000-லிருந்து ரூ. 4,000 ஆகவும்; நகர்புற
பகுதிகளில் ரூ. 6,000-லிருந்து ரூ. 8,000 ஆகவும் உயர்த்தி
7—7—1982-ல் மத்திய அரசு ஆணையிட்டுள்ளது.
(இ) 7—7—1982-க்குப்பின் 3,822 குடும்பத்தினர்
இந்தியா வந்துள்ளனர். இது தவிர சுமார் ஒரு லட்சம்
மக்கள் இன்னும் தாயகம் திரும்ப இருக்கிறார்கள். இந்தக்
குடும்பங்கள் பயன் பெறும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்
களே, இந்த அறிவிப்பின்படி நம்முடைய மாநில அரசு
எவ்வளவு பேருக்குக் கடன் வழங்கியுள்ளது? அப்படி வழங்கப்
படுகின்ற தொகையில் மத்திய அரசு உதவித் தொகை
எவ்வளவு என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் நிதி
யுதவியோடுதான் தமிழ் நாட்டில் இதுவரையில் 28,048
இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு வீடு
கட்டுவதற்கான கடனை அளித்து இருக்கிறோம்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் :

[201—400 எண். உடுக்குறியிடாத வினாக்களையும் விடை
களையும் தனி இணைப்பில் 1—114-ம் பக்கங்களில் காண்க.
பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகளில் (ஆ) பிரிவில் இனம் 38 ஆக
வைக்கப் பெற்றுள்ளது.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்
பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது
என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) நிதிநிலை அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர்
அறிவிப்பு. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202
(1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1)
ஆகியவற்றின் கீழ் 1983—84-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை
அறிக்கையை 5—3—1983 ஆம் தேதி, சனிக்கிழமை காலை
11.00 மணிக்கு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டு
மென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 58-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஒருநாளில் ஒரு பொருளுக்குமேல் பேரவையில் எடுத்துக் கொள்ளக்கூடாது" என்ற 58ஆவது விதியைத் தளர்த்தி இன்று, 15—2—1983ஆம் தேதி பேரவையில் "ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளலாம்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறை வேற்றப்பெற்றது.

4. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்.

திரு. அ. ரகுமான்கான் : சார் பாயின்ட் ஆப் ஆர்டர். நான் ............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன கேட்கப்போகிறீர்கள் என்பது எனக்குத் தெரிகிறது. இன்றைக்கு ஒத்திவைப்பு தீர்மானத்தில் பேராசிரியர் பேசப் போகிறார். நீங்கள் சொல்லவேண்டியதை பேராசிரியரிடம் சொன்னால், அவர் விளக்கமாகச் சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் சொல்வதை ஒரு நிமிடம் கேட்டுவிட்டு உங்களுடைய தீர்ப்பைக் கொடுங்கள். எங்கள் கட்சியின் சார்பில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது பேராசிரியர் அவர்கள் பேச இருக்கிறார்கள். ஆனால் நான் கூற விரும்புவது வேறு. இன்றைக்கு கடைசி நாள். ஒரு நிமிடம் அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முக்கியமான பிரச்சனையை ஒழுங்காகச் சொல்வதாக இருந்தால் ஒரு நிமிடம் அல்ல, 5 நிமிடங்கள்கூட கொடுக்கிறேன். ஆனால் நீங்கள் இப்போது கூறப்போவதுபற்றி உங்கள் கட்சியின் சார்பில் பேராசிரியர் பேச இருக்கிறார்கள்.



திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் கூறப்போவது வேறு பிரச்சினை. ஒரு நிமிடம் அனுமதி கொடுங்கள். எங்கள் கட்சியின் சார்பில் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசுகிறார்கள். அது பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. 13—2—1983 அன்று சர்வீஸ் கமிஷன் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னலேயே கேள்வித்தாள் (கொஸ்டின் பேப்பர்) வெளியாகிவிட்டது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதப் பட்டிருக்கிறது. அதன் நகல் என்னிடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை பேராசிரியரிடம் கொடுங்கள். அவர் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசும் போது உங்களை விட நன்றாக அதுபற்றி பேசுவார்.

5. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) தேர்வாணைக் கழகத் தேர்வுக்கான கேள்வித் தாள்கள் முன்கூட்டியே வெளியானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் க. அன்பழகன் அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, ரா. கிருஷ்ணன், பெ. சு. திருவேங்கடம், சோ. அழகர்சாமி, தி. கா. நல்லப்பன், இரா. கருப்பையா, மு. அம்பிகாபதி, மு. அப்பாதுரை, எஸ். ஆண்டித்தேவர், செ. சிவசாமி, ஜே. ஹேமச்சந்திரன், பாபு ஜனார்த்தனன், என். பழனிவேல், எம். ஆறுமுகம், பி. சுந்தரம், த. வேணு கோபால், எஸ். இராமலிங்கம், ஏ. சாகுல்ஹமீது ஆகியோர் "தமிழ்நாடு தேர்வாணைக் கழகம் மூலம் குருப் நான்கிற்கான தேர்வு 13—2—1983 அன்று நறைபெறுவதற்கு முன்பே கேள்வித்தாள்கள் மாணவர்களுக்குக் கிடைத்து விட்ட காரணத்தால், கேள்வித்தாள்கள் வெளியாகி விட்டதாலும், மாணவர்களிடையே ஏற்பட்டு இருக்கும் பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையிலே இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு முன் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இதேபொருள் குறித்து பேரவையில் 54-ம் விதியின்படி கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர்.

திருவாளர்கள் வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், ஆர். மணிமாறன், ஜே. சி. டி. பிரபாகரன், பி. வெங்கடசுப்பிரமணியம், கோ. விஸ்வநாதன், மி. வின்சென்ட், ஐ. கணேசன், ஏ. சி. சண்முகம், டாக்டர் கே. சமரசம்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது
என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி
கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10–10]

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் தேர்வு
ஆணைக் குழு நடத்திய 4-வது குரூப் பணிகளுக்கான
போட்டித்தேர்வு, இந்த மாதம் 13ஆம் தேதி அன்றையதினம்
தொடங்குவதாக அறிவிக்கப்பட்டு, அன்றையதினம் நடைபெற்
றது. அந்தத் தேர்வு நடைபெறுவதற்கு 2 நாட்களுக்கு முன்னால்
11ஆம் தேதி அன்றையதினமே, நடைபெறவிருக்கிற ஆங்கிலத்
தேர்வு, பொது அறிவு தேர்வு ஆகியவைகளுக்கான கேள்வித்தாள்
கள் என்ற பெயரால், தமிழ்நாட்டினுடைய பல்வேறு பகுதிகளிலே
யும், சென்னை நகரத்திலேயும் எராளமான இடங்களில்
கேள்வித் தாள்கள் விற்கப்பட்டிருக்கின்றன.

விற்பவர்களுடைய திறமைக்கு ஏற்ப, வாங்குகிறவர்
களுடைய அவசரத்திற்கு ஏற்ப 10 ரூபாய் 20 ரூபாய் முதல்,
300 ரூபாய் 400 ரூபாய் வரையில் சில இடங்களில் விற்கப்
பட்டிருக்கின்றன. இந்தச் செய்திகள், நடைபெறவிருக்கிற
போட்டித் தேர்வினுடைய கேள்வித்தாள், அதிலும் மாணவர்
கள் அதிக எண்களை பெறக்கூடிய வாய்ப்பு இல்லாமல்
இருப்பதும், ஆனால் அதிக எண்கள் தேவையாக இருக்கக்
கூடியதுமான ஆங்கிலம், பொது அறிவு ஆகிய அப்படிப்பட்ட
தாள்கள், அவர்கள் தாங்களாகவே யூகித்துக் கொள்ள
முடியாத கேள்விகள் வரக்கூடிய அப்படிப்பட்ட கேள்வித்தாள்கள்,
இளைஞர்களிடத்திலே விற்பனையான செய்தி, அரசாங்
கத்திற்கும் தெரிய வந்திருக்கிறது. 11ஆம் தேதி அன்றைய
தினமே எழுதப்பட்ட அந்தக் கடிதம், தமிழ்நாடு பப்ளிக்
சர்வீஸ் கமிஷனுடைய செக்ரட்டரி அவர்களுடைய பேருக்கும்
எழுதப்பட்டு, copy to the Chief Minister என்று குறிப்பிட்டு தமிழ
கத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கும் அதிலேயே "for
information and necessary action" என்ற குறிப்பு எழுதி முதலமைச்
சர் எம். ஜி. ஆர். அவர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவருக்கும்
அந்தக் கடிதத்தின் நகல் அனுப்பப்பட்டிருக்கிறது.
அதிலேயே அந்தக் கேள்வித் தாள்களும் ஜெனரல் நாலேட்ஜ்
என்பதும் ஆங்கிலம் என்பதும், அந்தக் கடிதத்தோடு சேர்த்து
அனுப்பப்பட்டிருக்கின்றன.

அது மட்டும் அல்லாமல், அந்தக் கேள்வித் தாள்கள் வெளி
யிலே விற்கப்படுகின்ற செய்தியை அறிந்த முரசொலி இதழும்
அறிந்த அந்தச் செய்தியை அன்றைய தினமே வெளியிட்டிருக்



கிறது. ஒரு வேளை அந்தக் கேள்வித்தாள் வெளியிடப்பட்டது
உண்மையா அல்லவா என்ற சந்தேகம் இருந்தாலும் கூட,
என்ன என்ன கேள்விகள் வரும் என்பதை, அந்தப் போட்டித் தேர்வு
எழுதக் கூடியவர்கள் அறிந்துக் கொள்ளத் தக்க வகையில்,
எந்த அளவுக்கு பத்திரிகையில் இடம் இருக்கிறதோ, அந்த
அளவுக்கு அந்தக் கேள்வித் தாள்களும் வெளியிடப்பட்டிருக்
கின்றன.

தேர்வு நடைபெற்றபோது, அதே கேள்விகள் அதே வகை
யிலே அந்தக் கொடுக்கப்பட்ட கேள்வித் தாள்களில் இடம்
பெற்று இருந்ததின் காரணமாக, அரசுப் பணிக்கான தேர்வு
எழுதியவர்களில் சிலர், அந்தக் கேள்விகள் முன்னாலேயே அறிந்த
கேள்விகள் என்ற உணர்வுடன் எழுதியிருக்கிறார்கள். வெளிவந்த
அந்தக் கேள்வித்தாள்கள் கிடைக்கப் பெறாதவர்கள், அந்த
வாய்ப்பு அற்றவர்கள் மிகப் பெரிய ஏக்கத்திற்கும், ஏமாற்றத்திற்
கும் ஆளாகியிருக்கிறார்கள். ஏறக்குறைய 3 இலட்சம் பேர்கள், சரி
யாக 2 இலட்சத்து 90 ஆயிரம் பேர்கள் தேர்வு எழுதியிருப்பினும்
பணிக்காக தேர்ந்து எடுக்கப்பட வேண்டியவர்கள் 6,000 பேர்கள்.
ஏறக்குறைய 50 பேர்களுக்கு ஒருவர் வீதம் தேர்ந்து எடுக்கப்பட
வேண்டியதாக இருக்கிறது.

தேர்வு எழுதிய 2 இலட்சத்து 90 ஆயிரம் பேர்களில்,
ஏறக்குறைய 50 ஆயிரம் பேர்கள் அல்லது 70 ஆயிரம் பேர்கள்
மட்டுமே ஏற்கெனவே கேள்வித் தாள்களைப் பெற்று விட்ட
நிலையைப் பெற்றவர்களாகிறார்கள். ஒரு அரசாங்கத்திற்கு 13
ஆம் தேதி நடைபெறுகிற தேர்வு பற்றி 11 ஆம் தேதி அன்றே இப்ப
டிப்பட்ட கடிதம் வந்தும் கூட அல்லது 12 ஆம் தேதி காலையி
லேயே கடிதம் வந்ததாக வைத்துக் கொண்டாலும், தமிழ்
நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் செக்ரட்டரி அவர்களுக்கும் அப்படிப்
பட்ட கடிதத்தின் நகல் அனுப்பப்பட்டுங் கூட, அந்தத் தேர்வு
நிறுத்தப்படாமல் நடத்தப்பட்டிருக்கிறது என்றால்,
இந்த அரசாங்கம் உள்ளபடியே காலண்டர் இல்
லாத அரசாங்கமா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.
தேதிப்படி முக்கியத்துவம் கொடுத்து இன்னின்ன பணிகளைச்
செய்ய வேண்டும் என்கிற நிலைமை பழக்கத்தில் இருந்திருக்கு
மேயானால் இதனை நிறுத்தியிருக்கலாம். ஒரு வேளை இளைஞர்
களுக்கு ஏமாற்றமாக இருந்தாலும், மிகப் பெரிய தவறைச்
செய்வதற்கு இடம் இல்லாமல் இருந்திருக்கக்கூடும். இரண்
டாவது, அரசினுடைய பொதுப்பணித் தேர்வு ஆணைக்குழு
வினுடைய தேர்வுகள் எல்லாமே மிக இரகசியமாக பாதுகாப்பாக
நடைபெற வேண்டிய நிலை இருக்கிறது. அது மிக
இரகசியமாக நடைபெற வேண்டும் என்பது மிக முக்கியம்.
காரணம் போட்டி மிகக் கடுமையானது. அதிலே வாய்ப்பு
பெறுகிறவர்கள் 50 பேருக்கு ஒருவர்தான். இப்படிப்பட்ட தேர்

வினை, சாதாரண பள்ளிக்கூட தேர்வுகள் போல, நடத்தியுள்ளனர்
சிலபள்ளிக்கூட தேர்வுகள் நடத்தப்படுவதேயில்லை. சில பள்ளி
களில் தேர்வு நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டு விடுகின்றன.
சில இடங்களில் தேர்வு நடைபெற்று, எழுதிய எல்லோரும் வெற்றி
பெற்றார்கள் என்று சொல்வதுண்டு. அப்படிக் குறைந்த அளவு
தகுதி எண் பெற்றாலே வெற்றி பெறுகிற வாய்ப்புத் தருகிற
பள்ளிக்கூடத் தேர்வு போன்றல்லாமல், அதிக எண்ணிக்கை பெற
வேண்டிய, 2 இலட்சத்து 90 ஆயிரம் பேர்களில், முதல் எண்கள்
பெறுகிற 10 ஆயிரம் பேர்களுக்குள், இந்த 6,000 பேர்களைத்
தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலைமை வருகிறபோது, இந்தத் தேர்வு
மிகப் பெரிய அளவுக்கு ஏமாற்றத்தை, மிகப் பெரிய அதிர்ச்
சியையும் தரக்கூடிய நிலைமையிலே தான் நடைபெற்றிருக்கிறது.

இந்தக் கேள்வித்தாள் வெளியாகி இருக்கின்றது என்ற
உண்மையை யாரும் மறுக்க முடியாது. தினமணி பத்திரிகையில்
வந்திருக்கின்றது. ஆளும் கட்சியை ஆதரிக்கின்ற மக்கள் குரல்
பத்திரிகையிலேயும் இடம் பெற்றிருக்கின்றது. கேள்வித்தாள் கேள்
விகள் எல்லாம் முதல் நாளே பத்திரிகையிலே வந்துவிட்டன.
எனவே வெளி வந்த கேள்விகளைக் கொண்டே ஒருவர் அதிக எண்
கள் பெற முடியும். இந்த அளவுக்கு பெரிய தவறு நடைபெற்றிருக்
கின்றது என்று சொன்னால் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுவதற்
காகச் சொல்லவில்லை, உணர வேண்டிய உண்மை என்பதற்
காகச் சொல்கிறேன். பட்ஜெட் ரகசியம் வெளியாவது போன்ற
நிலைமை இது. நிதியமைச்சருக்கு இதனால் ஆபத்து இல்லை.
அது வேறு. ஆனால் ஒப்பு நோக்கிப் பார்க்கிறபோது பட்ஜெட்
ரகசியம் வெளியாவதும் ஒரு அரசாங்கத்தினுடைய தேர்வுக்
கான கேள்வித்தாள் வெளியாவதும் ஏறத்தாழ அரசாங்கத்
தினுடைய திறமையைக் குறித்து, ஆற்றலைக் குறித்து அவநம்
பிக்கை ஏற்பட இடம் அளிப்பதாகும். மேலும் இன்று
இந்தத் தேர்வின் காரணமாக பாதிக்கப்படக் கூடியவர்
கள் ஏராளமானவர் இருக்கின்ற காரணத்தால் உடனே, இந்த
உண்மைகள் தெரிந்தவுடன், அரசாங்கம் இந்தத் தேர்வு ஏற்றுக்
கொள்ளப்படவில்லை, அடுத்து மற்றொரு நாளிலே இதத தேர்வு
நடத்தப்படும் என்று அறிவிக்க முன் வந்திருக்க வேண்டும். ஏற்
கெனவே கட்டணம் செலுத்தியவர்கள் திரும்பவும், மறுபடியும் கட்
டணம் செலுத்துகின்ற அவசியம் இருக்கக் கூடாது. இன்னும்
சொல்லப்போனால் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு நடத்தப்படு
கின்ற முறைகளிலே தேர்வுத்தாள் குறிக்கப்படுகின்ற கட்டத்திலே
இருந்து அது ரகசியமாக காப்பாற்றப்படுகின்றதா என்று கண்
காணிப்பது வரை இந்த எல்லா பொறுப்புகளையும்
முறைப்படி செய்யத் தவறி இருக்கிறார்களா என்பதும் யாராவது
இந்தக் குற்றத்திற்கு காரணமாக இருந்தார்களா என்பதும் ஆரா
யப்பட வேண்டும். அதுமட்டுமல்ல. The seri..usness of the problem



இதன் விளைவுகளின் விபரீதத்தை உணருவதற்கான ஒரு ஆற்றல் இந்த அரசுக்குத் தேவை. அப்படி உணர்ந்திருப்பின் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆனால் பொதுவாக ஒரு கருத்து இன்றைய தினம் ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. இந்த அரசு இதைப் பற்றி எல்லாம் யோசிப்பதும் இல்லை, முன்கூட்டித் தகுந்த முறையிலே பாதுகாப்பான நடவடிக்கை எடுப்பதும் இல்லை, அரசாங்கத்தின் எந்த ஒரு துறையும், அரசாங்கத்தோடு இணைந்திருக்கின்ற துறையும் தங்களுடைய கடமைகளை முறைப்படி செய்வதில்லை, இந்தக் குறைகள் ஏற்பட்டால், கூட அது தங்களுக்கு லாபம் என்று கருதக் கூடிய ஒரு மனப்பான்மை இருக்கின்றது என்ற கருத்து உருவாகக்கூடிய அளவுக்கு ஒரு நிலைமை இருக்கின்றது. உண்மையாக இப்படிப்பட்டநிலைமைகளில், குற்றம் சாட்டப்படுவது அரசின் சார்பான தனி அமைப்பு என்றாலும்அதாவது தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்று சொன்னாலும் கூட குற்றம் சாட்டப்படுவது அரசாங்கம்தான். எனவே அரசாங்கம் தான் இதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் விட மிக முக்கியமான பொறுப்பு 11 ஆம் தேதி அன்று முதலமைச்சருக்குக் கடிதம் அனுப்பப்பட்டு 12 ஆம் தேதியில் காலையில் அந்தக் கடிதத்தைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு முதலமைச்சருக்கோ, முதலமைச்சருடைய அலுவலாளர்களுக்கோ இருக்கின்றது. அப்படி அந்தக் கடிதத்தைக் கவனிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தும் கூட, இந்த அரசு கடமையயாற்றத் தவறி இருக்கின்ற காரணத்தால் அரசாங்கத்தினுடைய குற்றத்தை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு என்ற முறையில் இதை முழுமையாக விவாதிப்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கும் மக்களைக் கடுமையாகப் பாதிக்கின்ற பிரச்சினை என்ற உணர்வோடு இந்தப் பிரச்சினையை நாம் விவாதிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 13 ஆம் தேதி நடக்க இருந்த தேர்வுக்கான கேள்வித் தாள்கள் 11 ஆம் தேதி சென்னை நகரத்திலே விற்கப்படுகின்ற காட்சியையும், பலருடைய கையிலே வைத்திருக்கக் கூடிய காட்சியையும் நானே நேரிலே பார்த்தேன். எனவே இது ஒரு சாதாரணமான நிகழ்ச்சி அல்ல. 3 இலட்சம் மாணவர்கள் இன்று வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டு வாழ்க்கை நடத்துவதற்கு கஷ்டமாக இருக்கும் நேரத்தில் பணம் செலவழித்து மனுக்கள் போட்டு, தேர்வு நடைபெறுகின்ற சென்டர்களுக்கு பணம் செலவுசெய்து சென்று தேர்வு எழுதிய இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு நடவடிக்கையாக இது இருக்கின்றது

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1983 பிப்ரவரி 15

இந்த நேரத்தில் மாண்புமிகு எதிர் கட்சித் துணைத் தலைவர்
அவர்கள் குறிப்பிட்டது போல் ஏற்கெனவே இது அரசுக்குத்
தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதுஉண்மை. அது மட்டுமல்லா
மல் இந்த நாட்டிலே இருக்கின்ற எங்களை எல்லாம் மிரட்டு
வதற்காக, எங்களைக் கண்காணிப்பதற்காக வைக்கப்பட்டிருக்
கின்ற ஒரு படை இருக்கின்றதே, அந்தப் படைக்கு இது தெரிய
வில்லையா ? அவர்கள் காலா காலத்தில் அரசின் கவனத்திற்கு
இதைக் கொண்டுவரவில்லையா ?

[முற்பகல் 10–20]

அவர்களுக்கு இதில் உத்திரவாதம் இல்லையா ? அப்படி எல்
லாம் அரசுக்கு தெரிவதற்கு வாய்ப்பு இருந்தும் இதை நடத்து
வதற்குப் பதிலாக வானொலி வாயிலாகவும், பத்திரிக்கை
வாயிலாகவும் இந்த தேர்தலை நிறுத்தி வைக்க அரசு நடவடிக்கை
எடுத்து இருக்க வேண்டும். அதைச் செய்யாமல் ஒரு பக்கத்தில்
தேர்வு நடத்தப்படுகிறது, மற்றொரு பக்கத்தில் தேர்வுக்கான
கேள்வித் தாள்கள் 500 ரூபாய் வரைக்கும் விலைக்கு விற்கப்படு
கிறது என்பது நாடு அறிந்த ஒரு உண்மை. இது எப்படி நடந்தது
என்பதை தெளிவாகப் பார்க்க வேண்டும். பப்ளிக் சர்வீஸ்
கமிஷன் அலுவலகத்தில் இருந்து தான் இந்தக் கேள்வித் தாள்கள்
வெளியே சென்றிருக்கிறது என்று பரவலாக பேசப்படுகிறது.
இதன் காரணமாக பணம் கொடுக்க வசதி உள்ளவர்கள் பப்ளிக்
சர்வீஸ் கமிஷன் அலுவலகத்தில் எதையும் நடத்திக் கொள்ள
லாம் என்ற ஒரு தவறான எண்ணம் தமிழக மக்களிடம் ஏற்படு
வதற்கு தெளிவான ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை
நாம் பார்க்க வேண்டும். ஏற்கெனவே பப்ளிக் சர்வீஸ் கமிஷன்
பொறுத்த அளவில் பல முறைகளில்ஊழல்கள் நடப்பதாக மக்கள்
மத்தியில் பேச்சு நடந்துக் கொண்டிருக்கிற ஒரு நேரம் இது
என்பதை நாம் மறந்து விட வேண்டாம். ஏற்கெனவே நடந்த
பல தேர்வுகளில் ரிசல்ட்டுகள் இன்னும் வெளி வராமல் இருப்ப
தன் காரணமாக பணம் கொடுத்தால் தான் அந்தவிஷயம் நடக்
கிறது என்றும் பணம்வாங்கப்படுகிறதுஎன்றும் விலேஜ் ஆபீஸர்ஸ்
தேர்வை வைத்து கொண்டு, டீச்சர்ஸ் தேர்வுகளை வைத்துக்
கொண்டு எல்லாம் இன்று மக்கள் இடத்திலே பிரச்சாரம் செய்
யப்படுகிற ஒரு நேரம் என்பதை நாம் பார்க்க வேண்டும். துர
திருஷ்டவசமாக விலேஜ் ஆபீஸர்ஸ் தேர்வின் முடிவுகள் இன்னும்
தெளிவான முறையில் வெளிவராமல் இருப்பது, இப்படிப்பட்ட
சந்தேகத்தை பப்ளிக் சர்வீஸ் கமிஷனுடைய 'இன்டக்கிரிட்
டியை ' கடுமையாக சோதனை செய்யக் கூடிய விஷயங்கள்
வளர்ந்திருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். இந்த
பின்னணியில் தான் இந்த தேர்வு 3 இலட்சம் மாணவர்களின்
வாழ்க்கை சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையில் இன்று இப்
படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால். Something
is rotten in the city of Denmark.



983 பிப்ரவரி 15] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

என்று சொல்வதுபோல் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அலுவலகத்தில்
ஒரு கடுமையான, ஒரு மோசமான நிலை ஏற்பட்டிருக்கிறது
என்பது மக்கள் மத்தியில் ஏற்கெனவே இருந்த சந்தேகத்தை
ஊர்ஜிதம் படுத்தக்கூடிய முறையில் அமைந்துள்ளது என்பதை
இந்த நேரத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றை நாம் தெளிவாக பார்க்க
வேண்டும். இதிலே பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு ஒரு உத்திர
வாதம் இல்லையா? அந்த ஆபீஸில் பணியாற்றக்கூடிய சிப்பந்
திகள் விற்றார்களோ இல்லையோ ? ஒருவேளை அவர்கள் மேல்
சொல்லிவிடலாம். ஆனால், constitutional responsibility
அந்த பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மெம்பர்களுக்கு உண்டு. அந்த
சேர்மேனுக்கு உண்டு என்பதை நான் வலியுறுத்த விரும்புகி
றேன். அந்த சேர்மேனும், மெம்பர்களும் ஒரு நிமிஷம் கூட
அந்தப் பதவியில் தொடர்ந்து இருப்பதற்கு அருகதை இல்லை
அவர்கள் தொடர்வது " ஜஸ்டிபையபில் " அல்ல என்று
வற்புறுத்துவதற்காக நான் இந்த நேரத்தை உபயோகப்படுத்திக்
கொள்ள விரும்புகிறேன். நியாயமாக அவர்களே அந்த பதவி
யிலிருந்து விலகி சென்று இருக்க வேண்டும் அப்படி விலகிச்
செல்வதற்கு அவர்கள் தயாராக இல்லை என்று கருதுகிறேன்.
அவர்களை பதவி நீக்கம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்க
வேண்டும். அந்த கமிஷனை கலைத்துவிட்டு வேறு ஒரு கமி
ஷனை ஏற்படுத்துவதுதான் இந்த நேரத்தில் மக்களிடையே பப்
ளிக் சர்வீஸ் கமிஷனைப் பொறுத்த அளவிலே நம்பிக்கை ஏற்
படுத்துவதற்கு ஒரு நிலையை ஏற்படுத்தும் என்று இந்த நேரத்
தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, அதோடு மட்டும் நிற்காமல் இது சம்பந்தமாக ஒரு
நீதி விசாரணை நடத்த வேண்டும், சம்பந்தப்பட்டவர்களை,
குற்றவாளிகளை கடுமையாகத் தண்டிக்க வேண்டும். அப்படிப்
பட்ட நடவடிக்கை வழியாகத்தான் இந்த பப்ளிக் சர்வீஸ் கமி
ஷன் பொறுத்த அளவிலே அவர்கள் நடத்தப்படுகின்ற தேர்வை
பொறுத்த அளவிலே மக்களிடம் ஒரு நம்பிக்கை ஏற்படுவதற்கு
ஏதுவாகும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு இந்த
விவாதம் முக்கியமான ஒரு பிரச்சினை என்பதால் இதை விவா
திப்பதற்கு அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதை
விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தவிர,
பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு என்னஎன்ன நிவாரணம் அளிக்க
முடியும் என்பதையும் அரசு பரிசீலித்து அவர்களுக்கு பாதிப்பு
இல்லாத முறையில் எப்படி அவர்களுக்கு ஒரு வாய்ப்பை ஏற்
படுத்தி ஒரு தேர்வை ஏற்படுத்திக்கொள்ளமுடியும் என்பதை
பரிசீலிப்பதற்கு சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து மிக
முக்கியமான விவாதம் இதற்குத் தேவை என்று மீண்டும் வலி
யுறுத்தி அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அரசு அலு
வல்கள் தேர்வாணைக் குழு 13-ஆம் தேதிய அந்தத் தேர்வை
யொட்டி வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானது பற்றி
இங்கே பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். நானும்
கேள்விப்பட்டேன். 13-ஆம் தேதி இதுபற்றிக் கேட்கிற நேரத்
திலே ஒரு வாரத்திற்கு முன்னாலே இந்த வினாத்தாள்கள் பரவ
லாக பலபேர்களுக்குக் கிடைத்திருக்கிறது என்று சொன்னார்கள்
இவ்வளவு முன்கூட்டியே கேள்வித்தாள்கள் வெளியிட்டும் கூட
அந்த வினாத்தாள்களை மாற்றியிருக்க வேண்டும் அல்லது வேறு
விதமாக நடத்துவதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.
கமிஷனுக்கு முன்கூட்டியே எழுதியிருந்தபோதும் காலத்திலே அந்
தக் காரியத்தைச் செய்யாததன் காரணமாக ஏறத்தாழ 3 இலட்
சம் பேர்கள்—ஆறாயிரம் பணிகளுக்காக—தேர்விலே கலந்து,
கொண்டவர்கள் எவ்வளவு பாதிப்புக்குள்ளாயிருக்கிறார்கள் என்
பதைப்பற்றி நான் அதிகமாக சொல்லவேண்டியதில்லை. ஏனெ
றால் வினாத்தாள்களைக் கொடுத்து, விடைகளையும் அதில்
எழுதி—எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் கூறியது
மாதிரி—இடங்களுக்குத் தகுந்த மாதிரி 100 ரூபாயிலிருந்து 500
ரூபாய் வரை விற்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இவ்வ
ளவு மோசமான முறைகேடான காரியம் நடைபெறுவதற்கு
உஷார்த்தன்மை இல்லாமல் தேர்வை நடத்தக்கூடிய தேர்வா
ணைக்குழு எப்படி செயல் பட்டது என்பதைப் பரிசிலனை
செய்ய வேண்டும். விடைத்தாள்கள் திருத்துவதற்கான பணி
யை நிறுத்துவதாக இன்றையதினம் பத்திரிகையிலே அதனுடைய
சேர்மன் சொல்லியிருக்கிறார். ஆனால், நேற்றைய தினம் ஒரு
பத்திரிகையிலே பார்த்தால் அதை நிறுத்த வேண்டியதில்லை
என்ற செய்தியைப் பார்த்தேன். இன்றைக்குத் திருத்தும்பணி
நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியைப் பார்த்தேன்.
மறுபடியும் பரீட்சை எழுதவேண்டுமென்றால் 3 இலட்சம் பேர்
களுக்கும் எவ்வளவு பண நட்டமும் செலவும் ஆகும் என்பதை
எண்ணிப்பார்க்க வேண்டும். அதுவும் பல காலம் வரையில்
தேர்வு வராமல் இப்போதுதான் தேர்வு நடந்திருக்கின்றது
என்ற சூழ்நிலையில் இப்படி நடந்திருப்பது குறித்து நாம் அத்
தனை பேரும் வருத்தப்பட வேண்டிய விஷயமாக இருக்கிறது.
திரும்பவும் அவர்கள் பரீட்சை எழுதவேண்டுமென்றால் அவர்
கள் பாதிக்கப்படாத அளவுக்கு என்ன செய்யவேண்டுமோ
அதைச் செய்வதற்கு அரசாங்கம் யோசிக்க வேண்டும். வினாத்
தாள்கள் வெளியாகியிருக்கிறது, ஒரு வாரத்திற்கு முன்னதாகப்
பலருக்குக் கிடைத்திருக்கிறது என்றால் தேர்வு ஆணைக் குழுவை
நடத்துகின்றவர் சேர்மன் ராஜிநாமா செய்ய வேண்டும் அல்லது
ராஜினாமா செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.
எதிர்காலத்திலே மக்களுக்கு இதிலே நம்பிக்கை ஏற்படுவதற்கு
இப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.
இந்தத் தேர்வாணைக்குழு நடத்துகின்ற தேர்வுகளை எழுதக்



கூடியவர்களுக்கு எப்படிப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்
றன என்பதைப்பற்றியெல்லாம் இன்னும் ஆழமாகப் பரிசீலிக்க
வேண்டுமென்றால் அதைப்பற்றி விவாதிக்க வேண்டும், அதற்
காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவா
திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவர் அவர்களே,
1983-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13-ஆம் நாளன்று தேர்
வாணைக்குழுவால் நடத்தப்பட்ட அந்தப் பரீட்சையின் வினாத்
தாள்கள் 3, 4 தினங்களுக்கு முன்னதாகவே, சென்னை நக
ரத்திலே விற்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. அதற்கு
ஆதாரம் என்ற முறையில் பேராசிரியர் அவர்கள் ஒருகடிதத்தைப்
படித்துக் காட்டினார்கள், 11-ஆம் தேதியே அந்தக் கடிதம்
முதலமைச்சர் அவர்களுக்கும் தேர்வாணைக்குழுவின் செயலாள
ருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது என்று. அப்படியிருந்தும் அந்
தத் தேர்வு நடத்தப்பட்டிருக்கிறது. அந்தத் தேர்வு எந்தச்
சூழ்நிலையில் நடத்தப்பட்டிருக்கிறது என்பதை மனிதாபிமானத்
தோடு கவனிக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.
ஆறு ஆண்டுகளாக நடத்தப்பெறாமல் இப்போதுதான் நடத்தப்
படுகிற காரணத்தினாலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச்,
சேர்ந்தவர்களுக்கு 25 வயதுவரை எழுதலாம் என்று இருந்தது,
30 வயது வரை எழுதலாம் என்று ஆக்கியிருக்கிறார்கள், இந்த
நேரத்திலே 30 வயதுக்கு மேல் ஆனவர்கள் 3 இலட்சம் பேர்கள்
தமிழகத்திலே வேலையின்றி இருக்கிறார்கள்என்ற நிலைமையிலே
அவர்கள் தேர்வு எழுத வேண்டியஇந்த நேரத்திலே வினாத்தாள்
வெளிவந்திருக்கின்றன. 13-ஆம் தேதி காலையிலே முரசொலிப்
பத்திரிகையிலே வந்தது பலருக்குத் தெரியும். கேள்வித்தாள்
அங்கே வழங்கப்பட்டது என்பது எல்லோருக்குத் தெரியும்.
முரசொலியிலே வந்திருந்த முதல் கேள்வி ஏஷியாட்,
அந்தக் கேள்வித்தான் தேர்விலேயும் முதல் கேள்வியாக வந்
திருக்கிறது. நான் அந்த வினாத்தாளைப் பார்த்தேன். இப்
படிப்பட்ட செயல்கள் தேர்வாணைக்குழுவிலே நடத்துகிற
பரீட்சைகளில் நடக்குமானால் நாட்டு மக்களுக்கு தேர்வாணைக்
குழு நடத்துகின்ற பரீட்சைகளிலே எப்படி நம்பிக்கை ஏற்பட
முடியும் ?

[முற்பகல் 10-30]

வருகிற ஆண்டிலே 40 பேர்கள் உயர் அதிகாரிகளாக, ஆர்.டி.ஓக்
கள், சூப்பிரண்டெண்டண்ட் ஆப் போலீசுகள் தேர்ந்தெடுக்கப்
படவிருக்கிறார்கள். அவர்களுடைய திறமை என்னவாகும் ?
அவர்கள் 30 ஆண்டுகள் இந்த நாட்டை ஆளுகிற பொறுப்பில்
வருகிற அதிகாரிகள். இந்த நிலையில் அவர்களை தேர்ந்தெடுக்
கிற தேர்வாணைக் குழு மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமா ?
மூன்று இலட்சம் பேர்களில் கேள்வித்தாள்களைப் பெற்றவர்கள்,
இங்கே நகரத்தில் இருப்பவர்களும், பத்திரிகை படிக்கிற வாய்ப்பு
உள்ளவர்களும் பெற்றிருக்கலாம். கிராமப்பகுதிகளில் இருப்ப

வர்கள் பெறமுடியாமல் போயிருக்கும். அவர்கள் எவ்வளவு
திறமையானவர்களாக இருந்தாலும்கூட, இப்படி கேள்வித்தாள்
களை வாங்கி எழுதியவர்களைவிட திறமைக் குறைந்தவர்களாக
தெரிந்துவிடக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்த நிலையில் எந்த
அளவிற்கு தேர்வாணைக்குழு இந்த ஆட்சிக்கு நல்ல பெயரை
வாங்கிக் கொடுத்திருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்க
வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, தேர்வாணைக் குழு தேர்வு நடத்திய
தோடு நின்றுவிடவில்லை. 14-ஆம் தேதியே அவற்றை திருத்து
வதற்கான ஆசிரியர்கள் மாநிலம் முழுவதிலுமிருந்து வந்துவிட்
டார்கள் என்ற செய்தியை பத்திரிகைகளில்பார்த்தோம். வினாத்
தாள்கள் வெளியான பின்னும், அதை அரசு மறுபரிசீலனை
செய்வதற்கு முன்னும், விடைத் தாள்களை திருத்துவதற்கு ஏற்
பாடுகளை செய்திருக்கிறார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி
வருகிறது என்றால் அவர்கள் தாங்கள் செய்த தவறை மறைத்து,
தாள்களைத் திருத்துகிற அளவிற்கு சென்றுவிட்டார்கள் என்று
சொன்னால் இந்த நாட்டில் திறமைக்கு இடம் உண்டா என்
பதை பார்க்க வேண்டும். இந்த அளவிற்கு 3 இலட்சம் பேர்
களின் வாழ்க்கையோடு விளையாடியவர்கள் மீது, அதற்கு
காரணமாக இருந்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கு,
யார் பொறுப்பு என்பதைத் தெரிந்து கொள்வதற்கு விரிவாக
விவாதிப்பதற்காக இந்த அவையினுடைய இதர அலுவல்களை
ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இன்றைக்கு அரசு பணி தேர்வாணைக்குழுவின்
வினாத்தாள்கள் வெளியாகி ரோட்டிலே கூவி விற்கிற நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் தேர்வின் முடிவுகள் வெளி
யிடப்படுமானால், தேர்வுத்தாள்கள் வெளியானதின் காரணத்
தால் தேர்வு பெறாதவர்கள் வழக்கு மன்றத்திற்கு செல்வதற்கு
வாய்ப்பு இருக்கிறது.

மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்
பிட்டதைப் போல 13-ஆம் தேதி தேர்வு குறித்து 11-ஆம் தேதி
யே தெரிவிக்கப்பட்டும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல்,
தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டதிலிருந்து எந்த அளவிற்கு அரசு
இயந்திரம் பழுதுபட்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.
மேலும் அரசு எந்த அளவிற்கு தன்னுடைய பொறுப்பற்றத்
தன்மையை காட்டியிருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ள
முடிகிறது. பத்திரிக்கையில் பார்க்கிறபோது தேர்வாணைக் குழுத்
தலைவர், ஒரு சில இடங்களில்தான் வினாத்தாள்கள் வெளி
யாகி இருக்கின்றன, மற்ற இடங்களில் வெளியாகவில்லை என்று
ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது.



இந்த நிலையில் தேர்வாணைக் கழகத்தில் இருப்பவர்கள் மீது என்ன நடவடிக்கையை அரசு எடுக்கவிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் பொறுப்பற்ற நிலையில் நிர்வாகம் இருக்கிறது என்ற காரணத்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை கண்டித்து, மேலும் விரிவாக விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன் : சார், ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாய்ன்ட் ஆப் ஆர்டர் இப்பொழுது அனுமதிப்பது கிடையாது.

திரு. கோ. விஸ்வநாதன் : ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றிய பாய்ன்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே பாய்ன்ட் ஆப் ஆர்டர் இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்த பிறகு சொல்லுங்கள்.

திரு. கோ. விஸ்வநாதன் : முரசொலியில் மட்டும்தான் வெளி வந்தது. தமிழ்நாட்டில்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் சொல்ல வேண்டியது அவை முன்னவர். அவர் பதில் சொல்வார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13—2—1983-ஆம் நாள் அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நான்காம்நிலைத்தேர்வுவினாத்தாள் தேர்வுக்குமுன்பே வெளியாகி விட்டது என்ற பிரச்னையை ஒட்டி மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் இங்கே, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்ற முறையில் பேசி உள்ளார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேராசிரியர் அவர்களும் இதுபற்றிக் கூறி உள்ளார்கள்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக் குழு ஆண்டுதோறும் பல்வேறு நிலைகளுக்கான பல்வேறு துறைகளுக்கான தேர்வுகளைப் பல வகைகளிலே நடத்திக்கொண்டுதான் வருகிறது. ஆகவே, அதை மிக இரகசியமாக நடத்துவதற்கு என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் உள்ளனவோ அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை எல்லாம் முறையாகச் செய்து கொண்டுதான் வந்திருக்கிறது. பல்லாண்டுகாலமாக, ஆண்டு முழுவதும் தேர்வுகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் எதிர்பாராத வகையில் நாம் எல்லோரும் வருந்தத்தக்க வகையில்

இந்த ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. தொடர்ந்து பல நூற்றுக்
கணக்கான தேர்வுகள் நடந்தாலும் பல்லாண்டுக்காலம் இந்த
தேர்வுகள் நடைபெற்று வந்தாலுங்கூட, அப்படிப்பட்ட
குறைபாடு ஏற்படக்கூடாது என்பதற்கு எப்படிப்பட்ட
பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமோ, இரகசிய
தொடர்ந்து செய்துகொண்டு வந்திருக்கிறது. அதைத்தான்

ஆனால், இந்த 4-ஆம் நிலைத் தேர்வு நடக்கிறபோது
மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போன்று
தேர்வு நடப்பவதற்கு முன்னாலேயே வினாத்தாள் வெளியிடப்
பட்டுவிட்டது என்ற செய்தி — குறிப்பு—இரகசியக் காவல் துறை
யினர் மூலமாகவும் வந்தது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்
தலைவர் அவர்கள் கூறிய மாதிரி வெளியிலும் சில பத்திரிகை
களிலே அதனைக் கோடிட்டுக் காட்டுகிற அளவு ஏற்பட்டிருக்
கிறது. 11 ஆம் தேதி தகவல் வந்ததற்குப் பிறகு அரசு தேர்
வாணைக் குழுவினுடைய தலைவருடைய கவனத்திற்கு இதைக்
கொண்டு வந்து, இதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று அரசு உடனடியாகக் கேட்டுக் கொண்டது. இடையிலே
12 ஆம் நாள் மட்டுமே இருந்தது. ஆனால் தேர்வாணைக் குழு
தன்னாட்சி உரிமை பெற்ற ஒரு அமைப்பாக இருப்பதன் காரண
மாக, இதைத்தான் நீங்கள் செய்ய வேண்டும், அதைத்தான்
செய்ய வேண்டுமென்று ஆணையிடவோ, உத்தரவிடவோ
அரசுக்கு உரிமையில்லை. ஆனால், இப்படிப்பட்ட ஒரு நிலைமை
வந்திருக்கிறது. இதுபற்றி நீங்கள் உடனடியாக தக்க முடிவு
எடுக்க வேண்டுமென்றுதேர்வாணைக்குழுவுக்குஅரசு தெரிவித்தது.
மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள்
இங்கே கடிதத்தைக் கொடுத்த மாதிரி, அப்படிப் பட்ட செய்தி
கள் வந்தன. அந்தக் கடிதத்திலே சொல்லியிருக்கிறபடி 11- ஆம்
தேதி இந்தச் செய்தி வந்ததற்குப் பிறகு ஆராய்ந்து, தேர்வா
ணைக் குழு இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று அரசு கேட்டது.

தமிழ்நாடு தேர்வாணைக்குழு நான்காம் நிலை பதவிக்குரிய
தேர்விற்கான வினாத்தாள்கள் இரண்டு. ஒன்று பொது ஆங்கி
லம் (General English) மற்றொன்று பொது அறிவு (General
Knowledge) தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் நியமிக்கப்பட்ட
Exam ner-களிடமிருந்து ஒவ்வொரு வினாத்தாள்களிலும்
இரண்டு செட்டுகள் வினாத்தாள்கள் பெறப்பெற்றன. இந்த
வினாத்தாள்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்
குழுவில், குழுத் தலைவர் மற்றும் இரு உறுப்பினர்களால் பரிசீலி

கப்பட்ட பின்னர், அவற்றுள் ஒருவகை (One set) வினாத்தாள்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட வினாத்தாள்கள் ஆங்கிலம் (பொது) 17—11—1982 அன்றும், பொது அறிவு வினாத்தாள் 29—12—1982 அன்றும் அச்சகத்திற்கு அனுப்பப்பட்டன.

பொது ஆங்கிலம் வினாத்தாளின் பார்வைப் படியை (Proof) அரசு தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர் (Controller of Examinations) ஒத்திட்டு பார்த்த பின்னர் அச்சகத்திற்குத் திரும்ப அனுப்பப்பட்டது. பொது அறிவு பற்றிய பார்வைப் படியினை அரசு தேர்வு கட்டுப்பாடு அலுவலரும், அவ்வலுவலகத்து துணைச் செயலரும் அச்சகத்திற்குச் சென்று அங்கு ஒத்திட்டுப் பார்த்த பின்னர் அந்தப் பார்வைப்படியினை அச்சகத்திற்குத் திருப்பிக் கொடுத்துவிட்டனர்.

அச்சடிக்கப்பட்ட வினாத்தாள்கள், ஒவ்வொரு கட்டிலும் 200 வீதம் உறைக்குள் போடப்பட்டு, அனைத்து வினாத்தாள்களும், 16—12—1982 ஒரு பகுதியும், 3—2—1983 மிச்சப் பகுதியும், அச்சகத்தில் இருந்து பெறப்பட்டு, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைக்குழு அலுவலகத்தில் அரசு தேர்வுக் கட்டுப்பாட்டு, அலுவலரின், (Controller of Examinations) பொறுப்பில், வழக்கம்போல், பத்திரமாக பாதுகாக்கப்பட்ட பின்னர், சென்னையைத் தவிர இதர மாவட்டங்களுக்கு ஆயுதப் படைதாங்கிய காவலோடு பல்வேறு மையங்களுக்குக் கருவூலம் மற்றும் கிளைக் கருவூலம் வாயிலாக அனுப்பப்பட்டது. இராமேஸ்வரத்தைப் பொறுத்தமட்டில் வினாத் தாள்கள் அங்குள்ள தேர்வு மையத்திற்கு பதிவு அஞ்சலில் ஒப்புதலோடு கூட (By Insured Registered Post with acknowledgement due) அனுப்பப்பட்டது.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் வினாத்தாள்கள் கட்டுகள் தேர்வு ஆணைக்குழு அலுவலகத்தில் வைத்திருந்து பிறகு 13—2—1983 அன்று காலை ஒவ்வொரு தேர்வு மையத்தின் தலைமை கண்காணிப்பாளரிடம் குழு அலுவலகத்தில் நேரில் கொடுக்கப்பட்டது.

12—2—1983 காலை, தமிழ்நாடு தேர்வாணைக் குழு தேர்வின் தொடர்பாக மேற்படி வினாத்தாள்கள் வெளியாகிவிட்டன என்று தெரிய வந்ததும், தேர்வாணைக் குழு அதன் தொடர்பாக நிலைமையை ஆராய்ந்த பின்னர் தேர்வினைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்று ஆராய்ந்து, கீழ்க்கண்ட காரணங்களை முன்னிட்டு நடத்துவது என்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 பிப்ரவரி 15

[முற்பகல் 10—40]

(1) தேர்வை நிறுத்துவதால் காவல்துறையினரின் புலனாய்வு பாதிக்கப்படலாம் ;

(2) தேர்வை ஒத்திப்போடுவதால் சட்ட ஒழுங்கு நடவடிக்கை பாதிக்கப்படலாம் ;

(3) தமிழ் நாட்டில் 81 இடங்களில் 750-க்கு மேற்பட்ட தலைமைக் கண்காணிப்பாளர்களுக்கும் சுமார் 2,92,000 விண்ணப்பதாரர்களுக்கும் தேர்வு நிறுத்தல் அறிவிப்பை அனுப்ப மிகக் குறுகிய காலமே இருந்தது.

(4) வினாக்கள் வெளியானது சென்னை நகரத்தில் மட்டுமே யானால் மற்ற இடங்களில் உள்ள வேட்பாளர்கள் தாங்கள் செய்யாத தவறுகளுக்காக சங்கடத்துக்குள்ளாவார்கள்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு மேற்கண்ட தேர்வினை எழுதுவதற்கு சுமார் 2,92,400 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இத்தேர்வு இம்மாநிலம் முழுவதும் 81 மையங் களில் நடைபெற்றது. தேர்வு தினத்தன்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சென்னை மற்றும் இதர மாவட்டங்களுக்குச் சென்று தேர்வு மையங்களில் நடத்த தேர்வினை பார்வையிட்டனர். வினாத் தாள்கள் வெளியாகிவிட்டது என்ற புகார் குறித்து தமிழ்நாடு தேர்வாணைக்குழு காவல் துறையினிடம் உரிய புகார் செய் துள்ளனர். இதன் தொடர்பாக முடிவினையும் தேர்வாணைக் குழு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. ஆய்வு செய்து முடிவு எடுக்கும் முழு உரிமையும், தேர்வாணைக் குழுவைச் சார்ந்தது. இதில், அரசு தலையிட்டு எந்தவிதமான ஆணையையும் தேர் வாணைக் குழுவிற்குப் பிறப்பிக்க இடமில்லை. தேர்வாணைக் குழு தன்னாட்சி உரிமை பெற்றுள்ள நிறுவனமாகும். வினாத் தாள்கள் தயாரிப்பதிலிருந்து தேர்வு மையங்களுக்கு அனுப்பும் வரை எல்லா நிலைகளிலும் இரகசிய முறையை கையாளப் பட்டதென்று தேர்வு ஆணைக்குழு கூறியுள்ளது. இந்நிலையில் பொதுமக்களிடையே பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது என்ற கருத்தில் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள்.

ஆனல் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர் கள் கூறியது மாதிரி ஒருநாள் அவர்கள் யோசித்தபொழுது நிறுத்தலாமா அல்லது நடத்தலாமா என்கின்ற அளவிற்கு நாம் நிறுத்தி விடவோ அல்லது நடத்தவோ சொல்வதற்கு நமக்கு உரிமை இல்லை என்றாலும், அவர்கள் எடுத்த முடிவு நான் மேலே சொன்ன காரணப்படி எடுத்திருக்கிறார்கள்.



இப்பொழுது தேர்வாணைக் குழுத் ஆனால் கடைசியிலே அந்த விடைத்தாள்களையெல்லாம் தலைவர் தெரிவித்திருப்பது திருத்துகின்ற பணி மேற்கொள்ளப்படவில்லை என்றும், புல னாய்வுத் துறையினுடைய முழு அறிக்கையும் வந்ததற்குப் பிறகு அதன்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

விரைவில் புலனாய்வுத் துறையினால் நடவடிக்கை எடுக்க, பிறப்பிக்கப் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஆணையும் கொடுத் பட்டிருக்கிறது. அவர்களும் கம்ப்ளெயின்ட் புகார் திருக்கிறார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் சொல்லி யது மாதிரி இது இந்தத் தடவை இந்தப் பகுதியிலே மட்டும் வெளியே போவதற்கு எது காரணம் என்றும் கண்டு பிடிக்கப்பட வேண்டும், அவர்கள் நடைமுறையிலே கொண்டிருப்பதிலே ஏதாவது தவறு ஏற்பட்டதா என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும், இதற்கு யார் காரணம் என்பதையும் கண்டுபிடித்து புலனாய்வுத் துறையின் மூலமாகத் தெரிந்ததற்குப் பிறகு, அவர்கள் சொன்னது மாதிரி, அவர்கள்மீது தக்க நடவடிக்கையை கடுமையான நடவடிக்கையை அரசு எடுத்து, எதிர்காலத்திலே அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாத அளவிற்குப் பாதுகாக்கின்ற சூழ்நிலையும் ஏற்படுதல் வேண்டும். ஆனால் பரவலாகத்தான் இந்தக் கேள்வித் தாள்கள் எங்கு பார்த்தாலும் பரவி இருக்கின் றன என்று சொன்னால், சென்னையை மட்டும் விட்டு விட்டு மற்றவற்றை ஏற்றுக்கொள்ளுகின்ற சூழ்நிலை ஏற்படாது. ஆனால் எல்லாயிடங்களுக்கும் பரவி விட்டது, பத்திரிகை மூலம் பரவி விட்டது என்று சொன்னால் எங்கே போயிற்று. யார் கைக்குப் போயிற்று, யார் பயன்படுத்திக் கொண்டார்கள், யார் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ற இக்கட்டான நிலையெல்லாம் ஏற்படும்.

அதிகமாக மார்க் வாங்கி, ஒருசிலர் பயன்படுத்திக் கொண்டு 2,90,000 பேர் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதைப்போன்று வாய்ப்பு எழுதியதிலே 6,000 பேர்களைத் தேர்ந்தெடுப்பதிலே, பெறாத பெற்றவர்களெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு, வாய்ப்பு அதிலே தால் குறைந்த மார்க் வாங்கி விடுபட்டாலும்கூட ஏற்றுக்கொள்ளப்பட நியாயம் இருக்காது என்ற கருத்தும் இந்தத் தேர்வை மறுபடியும் வேண்டிய ஒன்றுதான். ஆகவே, நடத்த வேண்டிய நடத்துவது என்ற ஒரு நிலை வந்தாலும்கூட தேர்வாணைக் குழுத் தலைவரவர்கள் அவசியம் வருமென்று புலனாய்வுத் துறையினுடைய அறிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவரையில் திருத்தப் கையை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, மறுபடியும் தேர்வு நடத்து படப் போவதில்லை அது. முடியுமானால், நிலைநாட்டப் வதானால் நியாயம் கற்பிக்கப்பட மறுபடியும் தேர்வை பட முடியும் என்ற நிலை ஏற்பட்டால்

நடத்துவதற்கு வேறு வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு பாதுகாப்போடு, இரகசியத்தோடு வைக்கப்பட்டு தேர்வு நடத்துவதற்கும், அதே சமயத்தில் இந்தத் தவறுக்குக் காரணமாக இருந்தவர்கள் யார் யாரோ அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு முறையாக நடத்தும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்வர்கள் கூறியது போன்று, மீண்டும் அப்படியொரு தேர்வை நடத்துகின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால், தேர்வு விண்ணப்பதாரர்களெல்லாம் கட்டணம் கட்ட வேண்டிய அவசியமில்லாமல், அவர்களுக்கு மறுபடியும் அப்படி ஒரு தண்டனை கொடுக்காத அளவிற்கு அரசு தக்க முயற்சிகளை எடுக்கும். அதிக சங்கடங்கள் இல்லாத அளவிற்கு ஒரு நியாயத்தை நிலை நாட்டுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, விரைவிலே இந்தப் புலனாய்வு விசாரணையை நடத்தி, தக்க முடிவை எடுத்து, இந்த விண்ணப்பதாரர்கள் அதிகமான அளவிற்குக் காலங்கடந்து, காலந்தாழ்திருந்து மறுபடியும் எழுதுகின்ற சூழ்நிலை ஏற்படாமல் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக நடத்த முடியுமோ அதை நடத்த வேண்டுமென்ற அளவிற்குத் தேர்வாணைக் குழுவிற்கும் அரசு தெரிவிக்கும் என்பதை எடுத்துத் தெரிவித்து, இந்த அளவிற்கு விளக்கம் தரப்பட்டிருப்பதனாலும், இதற்கு மேற்கொண்டு விளக்கம் தருவதற்கு இப்பொழுது வாய்ப்பு இல்லாததாலும், இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பேரவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

**(ஆ) நாகர்கோவிலில் தடிய துப்பாக்கிச்சூடு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், பெ. சு. திருவேங்கடம், சோ. அழகர்சாமி, தி. கா. நல்லப்பன், இரா. கருப்பையா, மு. அம்பிகாபதி, செ. சிவசாமி, மு. அப்பாதுரை. என். சங்கரய்யா, ரா. உமாநாத், ஜெ. ஹேமச்சந்திரன், டி. மணி, ரா. கிருஷ்ணன், எஸ். ஆண்டித் தேவர், சு. பாலன், ப. பொன்னுரங்கம், பி. முகமது இஸ்மாயில், ஏ. சாகுல் ஹமீது, ப. நெடுமாறன் ஆகியோர், "குமரி மாவட்டக் கலெக்டரின் அமைதி வேண்டுகோளையும் மீறி இந்து முன்னணியர் 144 தடையை மீறியதாலும், வன்



முறையில் இறங்கியதாலும் 13—2—1983 அன்று தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும் சிலர் இறந்துள்ளதாலும் மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு முன் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இதே பொருள் குறித்து திருவாளர்கள் கோ. விசுவநாதன், எம். வின்செண்ட், சு. முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் பேரவை விதி 54-ன் கீழ் கவன ஈர்ப்புக்கான முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நடைபெற்றிருக்கக்கூடிய நிகழ்ச்சிகள், ஏற்கனவே சிறிது காலத்திற்கு முன் வகுப்புக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்கள், அந்த பாதிப்பிலிருந்து மீளுவதற்கு முன்னதாகவே மறுபடியும் ஏற்பட்டிருக்கிறது என்பது மிகவும் அபாயத்திற்குரிய ஒரு பிரச்சினையாக இருக்கிறது என்பதை முதலிலே குறிப்பிட விரும்புகிறேன். இதற்குப் பிரதானமான காரணம் ஏற்கனவே மண்டைக்காடு திருவிழாவில் ஏற்பட்ட கலவரம் இந்த இந்து முன்னணி மாநாடு நடைபெற்ற பிறகுதான் நடைபெற்றது. அதேபோல அந்த மண்டைக்காட்டிலே அந்தத் திருவிழா நடைபெறவேண்டிய சூழ்நிலையிலே இவர்கள் மீண்டும் தங்களுடைய இரண்டாவது மாநாட்டை நடத்த அங்கே திட்டமிட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இது சரியான நேரமில்லை, அதை ஒத்திவைத்துவிடுங்கள் என்று வற்புறுத்திக் கூறியதற்குப் பிறகும், விட்டு விட்டு இதற்காக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நிகழ்ச்சிகள்தான் இதற்குக்காரணம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். துரதிஷ்டவசமாக குமார் என்ற வாலிபன் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக இறந்திருக்கிறார். அவருக்கு 10 ஆயிரம் ரூபாய் அளிக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார். அதை ஏற்றுக்கொள்கிறோம். அதேபோன்று காயம் பட்டவர்களுக்கும் இம்மாதிரியான நிவாரணம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கான காரணம் இந்த இந்து முன்னணியானது கன்னியாகுமரி மாவட்டத்திலே குறிப்பிட்டுத் தொடர்ச்சியாக செய்திருக்கக்கூடிய வகுப்பு வெறியைத் தூண்டும் பிரச்சாரமாகும். அது மிகவும் அபாயகரமானதாகும்

இன்றைக்கு தலை தூக்க ஆரம்பித்திருக்கிறது என்பதை நாம்
சிந்திக்கவேண்டும். இன்றைக்கு அவர்கள் யாரைத் தூண்டு
கிறார்கள். அங்கேயுள்ள கிறிஸ்துவர்களையும், முஸ்லீம்களை
யும் வைத்து அவர்கள் எல்லாம் தமிழர்கள் இல்லையா? தமிழ்
நாட்டிலே உள்ள நாம் இதைப் பார்க்கவேண்டும். தமிழ்
மக்களை ஒருவருக்கொருவர் விரோதமாக ஆக்கி தமிழக
இந்த ஆர். எஸ். எஸ். இயக்கம் திரட்டிக்கொண்டு இன்றைக்கு
என்பதுதான் இதிலே உள்ள அபாயம். நான் வருகிறது
இந்த ஆர். எஸ். எஸ். இயக்கத்தினுடைய தலைவர் கேட்கிறேன்.
கூறியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் தடை இன்றைக்கு
செந்தூர் தேர்தலிலே ஓட்டுக்கள் வாங்குவதற்கு செய்தது திருச்
விட்டு அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? என்று. சொல்லி
அவர்கள் அதை ஆட்சேபித்து தாணுலிங்க நாடார்
முன்னாலே உண்ணா விரதம் திருச்செந்தூர் கோவிலுக்கு
எதற்காக திருச்செந்தூர் கோயிலுக்கு இருப்பார்கள் என்று சொல்கிறார்.
படுத்துவதற்காக இந்து முன்னணியினர் வரவேண்டும், அரசியல்
நாகர்கோவிலில் நடைபெற்றிருக்கக்கூடிய செய்கிற வேலை.
திருச்செந்தூர் கோயிலுக்கு முன்னாலே வந்து விஷயத்திற்கு
இருப்பது என்பது திருச்செந்தூர் தேர்தலிலே உண்ணா விரதம்
அரசியலை பயன்படுத்துவதற்குத்தான் இது என்று வகுப்புவாத
ஆனால் அவர்கள் அரசியல் காரணமாக தெரிகிறது.
ஆனால் நான் அறிகிறேன். சென்ற முறை நான் செய்யவில்லை.
அரசாங்கம் உஷாராக நடவடிக்கைகள் எடுக்கவில்லை இந்த மன்றத்திலே
கூறியதன் காரணமாக அரசாங்கம் இதிலே என்று
எச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்தது தான் ஓரளவு மூன்
ஆகவே இதிலே அரசியல் கிடையாது. என்பது உண்மை.
கள் அவர்கள். அதே நேரத்திலே நான் அரசியல் படுத்துகிறார்
இருக்கக்கூடிய கிறிஸ்துவ நண்பர்களுக்கும் கூறுகிறேன்.
விடுக்கிறேன். அவர்கள் அந்த, மண்டைக்காட்டில் நான் வேண்டுகோள் அங்கே
பிரயோகம் நடந்ததே அதைப் போன்ற நிகழ்ச்சிகளைக் துப்பாக்கிப்
வருவதற்காக முயற்சிக்கிறார்கள். அவர்கள் கொண்டு
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதை கைவிட
சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பிலே, இன்றைக்கு இருக்கக்கூடிய மார்க்
நாயக சக்திகள் சார்பிலே, அரசாங்கம் அவர்களிடத்தில் ஜனா
எந்தவிதமான ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்கு இரையாகாமல் கூறி
இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவேண்டும்.

அதேபோல் அங்கே முஸ்லீம் மக்களும் இருக்கிறார்கள்.
குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்திலே ஒரு முக்கிய
மான ஒரு பங்கை வகித்து வருகிற ஒரு மாவட்டம், அங்கே
இப்படிப்பட்ட வகுப்புவாத சக்திகளை ஊக்குவிக்க அவைகள்
தலைதூக்க நாம் இடம் கொடுக்கக் கூடாது. ஆனால் வேடிக்கை
என்னவென்றால், போலீஸ் இந்தப் பிரச்சினைகளை, கலகத்தைத்
தூண்டுபவர்களை அடக்குவதற்குப் பதிலாக சாதாரண பொது
மக்கள் மத்தியிலே கண்டபடி தாக்குதல் நடத்திக்கொண்டிருக்

ஆனால் இந்த சமாச்சாரம் தெரிந்த உடனே, இந்த ஆட்சியாளர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தினைக் கூட்டி, என்னுடைய வேண்டுகோளை மீறி இதை நடத்துகிறார்கள். ஆகவே நாம் அனைவரும் கூட மக்களிடத்திலே இதற்காக வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று அவர்கள் ஏற்பாடு செய்திருக்கவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர். அதேபோல இதையும் மீறி அவர்கள் செய்திருக்கக்கூடிய அந்த ஊர்வலம் சட்ட விரோதமானது, வகுப்பு வெறியைத் தூண்டக்கூடியது. அதற்கு மக்கள் வரக்கூடாது என்றுபத்திரிகைகளிலும், மற்ற அரசாங்கத்தினுடைய துறைகளின் மூலமாகவும் மக்கள் மத்தியிலே அரசாங்கம் விளக்கிக் கூறி இருக்கவேண்டும் என்று கருதுகிறேன். இவைகளையும் மீறி அங்கே நடத்தப்படக்கூடிய முயற்சியைப் பார்த்தால் ஏராளமான பணத்தை இந்து முன்னணியினர் செலவழித்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. அவர்களுக்கு இவ்வளவு பணம் எவ்வாறு கிடைத்தது என்பதைப் பற்றி எல்லாம் ஒரு ஆழமான புலன் விசாரணை செய்யவேண்டியது அவசியம்.

அந்த எஸ். டி. காலேஜ் அரசாங்கத்தினுடைய மானியும் பெற்று, நிதி உதவி பெற்று நடத்தக்கூடிய கல்லூரியாகும். அந்தக் கல்லூரியிலேதான், இன்றைக்கு அந்த வகுப்பு வெறியைத் தூண்டக் கூடிய இந்த ஊர்வலத்திற்காக மக்கள் திரட்டப்பட்டிருக்கிறார்கள் என்றால் நிர்வாகத்தினருக்கும் அந்த முயற்சியிலே எந்த அளவுக்குப் பொறுப்பு இருக்கின்றது என்பது மிக ஆழமாக பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயமாகும். கடந்த பல ஆண்டுகளாகவே, கன்னியாகுமரி மாவட்டத்திலே பல பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலேயும் ஆர். எஸ். எஸ். பயிற்சி நடைபெறுகிறது என்பதைப் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கனவே அரசாங்கத்திற்குத் தொடர்ந்து புகார் கூறி வந்திருக்கிறது. இன்றைக்கும் கூட அப்படிப்பட்ட பயிற்சிகள் புளியங்குறிச்சி என்ற இடத்திலே அரசாங்கத்திற்குச் சொந்தமான கோட்டையிலேயும் கூட, நடைபெற்று வருவது என்பது எவ்வளவு விபரீதமானது என்பது உங்களுக்குச் சொல்லாமலேயே விளங்கும்.

(முற்பகல் 10.50)

காவல்துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் சிலர் இன்றைக்கு ஊடுருவியிருக்கின்ற இந்த ஆர். எஸ். எஸ். இயக்கத்திற்கு ஆதரவாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கிறார்கள் என்பதை நான் சென்ற முறையே குறிப்பிட்டேன். அதைப் பற்றி அரசாங்கம் ஆழ்ந்து பரிசீலனை செய்து அப்படிப்பட்ட புல்லுருவிகள் இருந்தால் அவர்களைக் களைந்துவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டும். அங்கே இடிச்சேரி என்ற இடத்திலே அவர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளுடைய கொடிகளை எரித்திருக்கிறார்கள். ஒரு அரசியல் கட்சியினுடைய கொடியல்ல. அதே போன்றுதான் புளியங்குடியிலே அங்கே வகுப்புக் கலவரம் நடந்துபோது பல்வேறு அரசியல் கட்சிகளுடைய கொடிகளை அங்கே எரித்தார்கள். செய்வது யார்? அரசியல் இயக்கங்களை அழித்துவிட்டு ஒரு வகுப்புவாத வெறி பிடித்த ஒரு பாசிச இயக்கத்தினர் தான் மக்கள் மத்தியிலே அதை நிலை நிறுத்தவேண்டுமென்று எண்ணைய கொண்டு அந்த வகுப்பு வெறிக் கூட்டம்தான் இப்படிப்பட்ட ஒரு காரியத்திலே ஈடுபட்டிருக்கிறது. இது ஒரு பாசிச வெறியைத் தூண்டுவதற்கான ஒரு பெரிய முயற்சி என்பதை தமிழ்நாடு ஆழ்ந்து கவனிக்கவேண்டும். அங்கே பெரியவர் தாணுலிங்க நாடார் அவர்கள், 70 வயது அடைந்தவர்கள். அவர் அந்த இந்து முன்னணியினுடைய தலைவராக இருக்கிறார். இன்றைக்கு அந்தப் பெரியவர் ஒரு வேண்டுகோள் விடுக்கிறார்கள். அவர் அந்த நேரத்திலே சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இதற்கு மேலே நீங்கள் ஆர்ப்பாட்டம் செய்தது போதும், நீங்கள் அமைதியாக கலைந்து செல்லுங்கள் என்று அந்தப் பெரியவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலப் பத்திரிகையிலே He was pull down சொல்லப்பட்டிருக்கிறது. அவரைக் கீழே இறங்கு, அவர் பேசவேண்டாம் என்று சொல்லி அந்தக் கூட்டத்திலே அவர்கள் உட்கார வைக்கப்படுகிறார் என்றால், இப்படிப்பட்ட பெரியவர்கள் அந்த ஆர். எஸ். எஸ். இயக்கத்தினுடைய குழியிலே அகப்பட்டுக் கொண்டால் அவர்களை எப்படி ஒரு பிகர் ஹெட்டாக வைத்து, உருவமாக வைத்துக் கொண்டு அந்த ஆர். எஸ். எஸ். இயக்கம் அந்த முயற்சியிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள சாதாரண மக்கள் சமுதாயத்திலே உள்ள அந்த மக்களை தங்களுடைய வகுப்பு வாத வெறிக்கு எப்படி ஆட்படுத்துகிற ஒரு முயற்சியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல, தேசிய விநாயகம் பிள்ளை போன்ற கவிமணிகள் வாழ்ந்த அந்த மண்ணிலே, மார்ஷல் நேசமணி போன்றவர்கள் வாழ்ந்த அந்த கன்னியாகுமரி மாவட்டத்திலே இன்றைக்கு தொழிலாளர்களையும் உழைப்பாளர்களையும் ஒன்று திரட்டி வாழ வைக்க வேண்டுமென்பதற்காக தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்த தோழர் ஜீவானந்தம் போன்றவர்கள் வாழ்ந்த அந்த மண்ணிலே இன்றைக்கு மக்களுடைய ஒற்றுமைக்கும், ஜனநாயகத்திற்கும் விரோதமாகவும் மக்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்ற அந்த எண்ணத்திற்கும் விரோதமாக அசிங்கமான நிகழ்ச்சிகள் இன்றைக்கு, இந்திய நாட்டினுடைய குறிப்பாக, தமிழ்நாட்டினுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே தங்களுடைய வகுப்பு வாத வெறிகளைத்தூண்டி அந்த இயக்கம்

கிறார்கள் என்று நாங்கள் அறிகிறோம். ரெயில்வே ஸ்டேஷன்களிலும், பஸ் ஸ்டாண்டுகளிலும் இருந்தவர்களை எல்லாம் தாக்கியிருக்கிறார்கள். ரெயில்வே தொழிலாளர்களைத் தாக்கி இருக்கிறார்கள். அந்த வகையில் கலவரங்களை எல்லாம் கடுமையாக எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் எல்லாம் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதனுடைய மாவட்டக் குழு உறுப்பினர் ராதா கிருஷ்ணன் அவர்களை போலீசார் கைது செய்திருக்கிறார்கள். என்ன விபரீதம் பாருங்கள். வகுப்பு வாத வெறியை எதிர்த்து தன்னுடைய உயிரை திரணாக நினைத்து அங்கே கம்யூனிஸ்டுகள் அங்கே உள்ள மக்களைத் திரட்டுகின்றார்கள். அவர்களைப் போய் கைது செய்தால் நாம் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. வகுப்புவாத சக்திகளை எதிர்த்துப் போராடுகிற ஜனநாயக சக்திகளை அடக்கிவிட்டால் வகுப்பு வாத சக்திகள் மீண்டும் தலை தூக்கும் என்ற நோக்கத்தைக் கொண்டுள்ளவர்கள் தான் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வார்கள்.

கடைசியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே வேணுகோபால் கமிஷன் அமைத்து, அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கனவே நடந்த கலவரத்தைப் பற்றி விசாரித்துக் கொண்டு வருகிறார்கள். நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது-அந்த வேணுகோபால் கமிஷனிடத்திலேயே இப்போது நடைபெற்று இருக்கும் சம்பவம் குறித்தும் விசாரணை செய்ய கோரவேண்டும். அவர்கள் இதையும் சேர்ந்து விசாரணை நடத்தி, தங்களுடைய தீர்ப்பை அளிக்க வேண்டும் என்று சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஏற்கனவே நடந்த நிகழ்ச்சிகளின் தொடர்ச்சிதான் இதுவும், அந்த கமிஷனின் பதவிக் காலம் ஏற்கனவே நீட்டித்துக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்தக் கமிஷனிடத்திலே இந்தச் சம்பவம் குறித்தும் விசாரிக்கச் சொல்லி இதிலே யாருடைய கை இருக்கிறது. அவர்களுக்கு எங்கிருந்து பணம் வருகிறது. இதனுடைய பின்னணி என்ன போன்ற விஷயங்களையும் விசாரித்து, தீர்ப்பு அளிக்கும்படி கேட்டுக் கொள்ளலாம். இந்தக் கலவரத்தை யார் தூண்டி விட்டார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்தகைய நிலைமைகளை நாம் மேற்கொண்டால்தான் குமரி மாவட்டத்தில் இத்தகைய வகுப்புக் கலவரங்கள் ஏற்படாத நிலை உருவாகும் என்பதைக் குறிப்பிட்டுக் கூறி, இப்படிப்பட்ட பிரச்சினை குறித்து விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்
கோவிலில் நடந்து இருக்கும் சம்பவம் விரும்பத்தகாத ஒன்று.
ஆனால் சென்ற ஆண்டே இதுபோன்ற ஒரு விரும்பத் தகாத
நிகழ்ச்சி அந்த மாவட்டத்திலே நடந்து, இந்தப் பேரவையிலே
கூட இதுபோன்ற ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்து,
அதைப்பற்றி விவாதித்து, அதற்குப் பிறகு அரசாங்கம் நடவடிக்கை
எடுத்தது. இந்து மதத்தைச் சேர்ந்தவர்களும், அதே போன்று
கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து அந்த மாவட்டத்
தில் பின்னர் எடுத்துக் கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் காரண
மாக அந்த விரும்பத்தகாத நிகழ்ச்சி அந்த மாவட்டத்தில் மேற்
கொண்டு நடைபெறாமல் இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டது என்
பதை அறிந்து நாம் எல்லாம் மகிழ்ச்சி அடைந்தோம்.

இந்த மாநிலத்தில் கிறிஸ்துவர்கள் கோவிலுக்குக் கூட இந்துக்
கள் செல்லும் நிகழ்ச்சியை நாம் காண்கிறோம். அதேபோல்
இந்துக்கள் கோவிலுக்கும் கிறிஸ்துவர்கள் சென்று வழிபடும்
நிலைமையை நாம் பார்க்கிறோம். இதிலே நமக்குக் கருத்து
வேறுபாடு இல்லை. எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்
தாலும், அந்த மதத்தில் அவர்கள் முழு உரிமையோடு ஈடுபடவும்
அந்த மத நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் அரசாங்கமும் துணை
யாக இருக்க வேண்டும். ஆனால் எந்த மதத்தைச் சேர்ந்தவர்
களாக இருந்தாலும் மதவெறி தூண்டுகின்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடு
வார்களானால் அரசாங்கம் அதைக் கண்டிப்பதற்கு கடமைப்
பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்து முன்னணியினர் இந்த மாவட்டத்தில் இந்து மறுமலர்ச்சி
மாநாடு நடத்தவும் அல்லது ஊர்வலம் நடத்தவும் அரசாங்கத்தை
அனுமதி கேட்டபோது, அங்கேயிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்கள், நீங்கள் மாநாடு நடத்துவதற்கு இந்தச் சமயம் ஏற்ற
தல்ல என்று சொன்னதாகச் சொல்லப்படுகிறது. மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்கள் இப்படிச் சொல்கிற போது ஏற்
கெனவே சென்ற ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை கவனத்தில்
கொண்டு இருந்திருப்பார்களானால், இந்த மாநாடு நடத்துவதற்
கான அனுமதியை யார் கேட்கிறார்களோ அவர்களுடைய தலை
வரை அழைத்து, இப்போது அத்தகைய மாநாடு நடத்துவதற்குச்
சரியான நேரம் அல்ல என்று சுமுகமான முறையில் கூறியிருந்
தால் இதைத் தடுத்து இருக்கலாம்.

ஆனால் மாநாடு நடத்தத்தடை என்கிற பெயரால் 144 தடை
அங்கே விதிக்கப்பட்டது. ஆனால் 144 தடை விதிக்கப்பட்ட
பிறகு கூட அவர்கள் தடையை மீறுவதாகக் கூட அவர்கள்
அறிவித்து இருக்கிறார்கள். எப்போது தடையை மீறுவதாக
ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது ஒரு கட்சியைச் சேர்ந்த



வர்கள் அறிவிக்கிறார்கள் என்றால் நிச்சயமாக அந்தத்
தடையை அவர்கள் மீறுகிறபோது, அவர்களே அசம்பாவிதம்
விளைவிக்கவில்லை என்றாலும் கூட எப்படியோ ஒரு சூழ்
நிலையில் அசம்பாவிதம் ஏற்படுவதற்கு வழி ஏற்பட்டு விடும்
என்கிற வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது அரசாங்
கத்திற்கு தெரியாமல் இருக்க நியாயமில்லை.

ஆனால் தடையை மீறுவதாக அறிவித்த பிறகும் கூட இன்
னொரு பத்திரிகையில் செய்தி வருகிறது. அன்றைய தினம்
காலையிலிருந்து 10 பேர், 10 பேராக ஒரு பள்ளிக்கூடத்தைச்
சேர்ந்த மைதானத்தில் 10,000 பேர் திரண்டார்கள் என்ற செய்தி
வருகிறபோது, எப்போது 144 தடையை போலீசார் அறிவித்தார்
களோ, அப்போதே அவர்கள் எவ்வளவு கண்காணிப்புடன் இருக்க
வேண்டும் என்பதை நாம் பார்க்க வேண்டும். 10,000 பேர்
ஒரு மைதானத்தில் கூடுகின்ற அளவிற்கு அங்கேயிருக்கும்
நிர்வாகம், போலீஸ் நிர்வாகம், அல்லது மாவட்ட ஆட்சித் தலை
வர் அல்லது அரசாங்கம் என்ன செய்து கொண்டு இருந்தார்கள்
என்பதை நினைக்கிறபோது நமக்குக் கூட இந்தச் செய்தியைப்
படிக்கிறபோது வேடிக்கையாக இருக்கிறது.

[முற்பகல் 11-00.]

குறிப்பாக ஒரு நேரத்தில் தடை விதிக்கப்பட்டு, அந்த
தடையை மீறுவதாக அறிவித்த பிறகு 10,000 பேர்கள் கூடு
கின்ற வகையிலே பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால் சரி
யான நேரத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை
என்பதுதான் காரணம். நிச்சயமாக இது மிக மிகக் கண்டிக்கத்
தக்கஒன்றாகும். உரியநேரத்தில்தகுந்தநடவடிக்கைஎடுக்கத்தவறிய
அதிகாரிகள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காரணம் அவர்கள் அங்கே கூடவில்லை என்றால் பிரச்
சனையே வந்திருக்காது. கூடிய பிறகு கூட கைது செய்திருக்
கிறார்கள். அப்படி கைது செய்த போது கூட எந்தவிதமான
அசம்பாவிதமும் நடைபெற்றதாகக் தெரியவில்லை. பத்தி
திரிகைகளிலும் அப்படிப்பட்ட செய்தி வரவில்லை. அங்கே
கூடியிருந்தவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் எல்
லோரையும் கைது செய்யுங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்
கள். 10,000 பேர்களை அரசாங்கத்தால் கைது செய்ய முடியா
மல் இருந்திருக்கலாம். ஆனால் உரிய முறையிலே பேசி, சுமுக
மாக நடவடிக்கை எடுத்திருக்கலாம், அதைச் செய்ய தவறிவிட்
டார்கள்.

இன்னும் பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கும்போது, இந்து
முன்னணி தலைவர்கள் போலீஸ் அதிகாரிகளுடன் சுமுகமாகப்
பேசினார்கள் என்றுதான் வந்திருக்கிறது. அப்படி வரும்போது
அவர்கள்தான் ஏதோ கலகம் செய்துவிட்டார்கள் என்று சொல்
வதற்கில்லை. அரசியல் கட்சிகளிலே இருக்கின்ற எங்களைப்
போன்றவர்கள் பல்வேறு சம்பவங்களைப் பார்க்கும்போது அங்கே

அமைதியாக இருந்தாலும்கூட போலீசார் சமயம் பார்த்து அல்லது முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணமாக அவர்களை கைது செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, அதிகாரிகளுடைய விருப்பு வெறுப்புகளின்படி நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டு, அதனால் ஒரு விரும்பத்தகாத சம்பவம் அங்கே நடைபெற்றிருக்கிறது; தடியடிப் பிரயோகமும் துப்பாக்கிப் பிரயோகமும் நடந்திருக்கிறது. இது உண்மையிலே வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும்.

இந்த அசம்பாவிதத்தினால் ஒருவர் துப்பாக்கிச் சூட்டினால் இறந்து விட்டார்; 30 பேர்களுக்குமேல் படுகாயம் அடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் பார்த்தால் பஸ்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன, தொடர்ந்து மக்கள் கைது செய்யப்பட்டு வருகிறார்கள், தடியடிப்பிரயோகம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இது உண்மையிலே கண்டிக்கத்தக்க ஒரு சம்பவம்.

எங்களைப் பொறுத்தவரையில் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடைய மதத்தை அவர்கள் பரப்புவதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. இந்த கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமல்ல; தமிழ்நாட்டிலே எங்கு பார்த்தாலும் சமீப காலமாக இப்படிப்பட்ட பல நிகழ்ச்சிகள் பல இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கத்தினுடைய சரியான அணுகுமுறை இல்லாத சூழ்நிலை, முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்காத சூழ்நிலை, போன்றவைகள்தான் இதற்கு காரணம் என்று தெரிகிறது. இந்த அரசாங்கத்தில் இருக்கிற அமைச்சர்களோ அல்லது முதலமைச்சரோ இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்படும்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு சரியான வழிகாட்டாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் மைனாரிட்டி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் நாம் சட்டங்கள் வைத்திருக்கிறோம். ஆனால் ஒரு மதத்தினர் திருவிழா நடத்தும் போது இன்னொரு மதத்தினர் அங்கே அந்த மதத்திற்கு மாறுபட்ட கருத்துக்களைப் பிரச்சாரம் செய்ய அனுமதிக்கக்கூடாது. இந்துக்கள் திருவிழா நடைபெறுகின்றது என்றால் அவர்களுடைய மதத்தின்





கருத்துக்களை அங்கே பிரச்சாரம் செய்ய மற்றவர்கள் இடையூறாக இருக்கக் கூடாது; மற்றவர்களை அங்கே அனுமதிக்கக்கூடாது. இந்துக்கள் திருவிழா நடக்கும்போது, இந்து சமய பக்தர்கள் மனம் புண்படும்படி மற்ற மதத்தினர் அங்கே பிரச்சாரம் செய்கின்ற ஒரு சூழ்நிலை சமீப காலத்தில் பல்வேறு இடங்களில் தெரிந்தோ தெரியாமலோ அனுமதிக்கப்படுகின்றன. அது தடுக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் கண்காணிப்பு சரியாக இருந்தால் இப்படிபட்ட சூழ்நிலை ஏற்படாது.

இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இருந்தாலும் உயிரிழந்தவர்களுடைய குடும்பத்திற்கும் காயம் அடைந்தவர்களுடைய குடும்பத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியிருப்பதைப் போன்று உடனடியாக தேவையான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, அந்த மாவட்டத்தில் இருக்கிற சர்வகட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில், சுமுகமான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இந்தப் பிரச்சினையில் இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி விரிவாகப் பேசி, உரிய பரிகாரம் காணுகின்ற வகையில் விவாதித்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால் பேரவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், மக்களுடைய சுமூகமான வாழ்க்கை நிலையே பாதிக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கடந்த ஆண்டில் கூட அந்த மாவட்டத்தில் இப்படிப்பட்ட மத சம்பந்தமாக தகராறுகள் காரணமாக, சாதாரண மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மிக அல்லல் உற்றார்கள் என்பதை நாம் அறிவோம். அதேபோல இந்த ஆண்டும் இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டதற்கு பிரதானமாக காரணம், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் கூறியது போல, இன்றைக்கு தமிழகம் பூராவும் பரவியிருக்கிற ஆர்.எஸ்.எஸ். யினுடைய மதவெறி நடவடிக்கைகள் மிக தீவிரமாகவும், வேகமாகவும் செயல்படுவதின் மூலமாகத்தான், இப்படிப்பட்ட நிலைமைகள் அடிக்கடி அங்கு ஏற்படுத்தப்படுகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மண்டைக்காடு சம்பந்தப்பட்ட மட்டிலே கடந்த ஆண்டு இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்த நேரத்தில் நாங்கள் அங்கு சென்றிருந்தோம். அப்போது அந்த இடத்திலே இருந்த நியாய உணர்வு உள்ள பொதுநோக்கோடு இருப்பவர்களிடத்திலே கேட்டோம். அவர்கள் சொன்னார்கள், கடந்த காலத்தில் அங்குள்ள மக்கள் பகவதி அம்மன் கோவிலுக்கு வரக்கூடியவர்கள், கிறுஸ்துவ கோவிலுக்கும் சென்று அங்கேயும் காணிக்கை செலுத்திவிட்டு, இங்

கேயும் காணிக்கையை உண்டியலில் போட்டு விட்டு வருவதாகச் சொன்னார்கள். பின்னாலே அங்கே இப்படிப்பட்ட ஒருமோச மான நிலைமையை ஏற்படுத்தி, மதவெறியை ஏற்படுத்தி, சமுக மாக ஒற்றுமையாக இருந்த மக்களை,ஒருவரோடொருவர்மோதிக் கொள்ளக் கூடிய நிலைமைக்கு ஆளாக்குவதற்கு காரணமா இருந்தது ஆர்.எஸ்.எஸ். இயக்கம் என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

இப்படி மதவெறியை ஏற்படுத்துகின்ற அந்த இயக்கமானது தமிழகத்தில் இன்னும் பல இடங்களிலே, முக்கியமான நகரங் களிலே, படிக்கக்கூடிய பள்ளி மாணவர்களிடத்திலேயும், கடைகளிலே, மற்ற இடங்களிலே பணியாற்றக்கூடிய வயது வந்த வாலிபர்களிடத்திலேயும், தனித்தனியாக பயிற்சிகளைக் கொடுத்து, பயிற்சி ஊதியமாக சிறு உதவித் தொகையும் கொடுப்பதன் காரணமாக, இப்படிப்பட்ட வெறியோடு ஒரு இயக்கத்தை நாட்டிலே தோற்றுவிக்கிறது.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் சொன்னது மாதிரி, அந்த இயக்கத்திற்கு தலைமை தாங்கிய நாடார் அவர்களையே அவர்கள் ஒரு முறை கலைந்துச் செல் லுங்கள், யார் யார் கைதாக விரும்புகிறீர்களோ, அவர்கள் எல் லாம் இந்த வழியாகச் செல்லுங்கள் என்று சொல்லக்கூடிய காலத்தில், அவர் சொன்னதையே எதிர்த்து தகராறும் கலகமும் ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் எல்லாம் அங்கே நடந்திருக்கிறது. ஆகவே, அரசியல் கட்சிகளின் செல்வாக்கு எல்லாம் மறைந்து, வகுப்பு வெறி, சாதி வெறி உள்ள ஸ்தாப னங்கள் உருவாக்கக்கூடிய நிலைமை தமிழகத்திலே ஏற் பட்டுக் கொண்டு வருகிறது என்பதை நம்மைப்போன்ற அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி, அரசியல் கட்சி களில் சொல்லக்கூடிய வார்த்தைகளுக்கு மதிப்பு குறைந்து, ஜாதி சம்பந்தமாக மத சம்பந்தமாக செல்வாக்கும் மதிப்பும் வளர்ந்து வருவது நம் எல்லோருக்கும் தெரியும்.

கடந்த ஆண்டு புளியங்குடியில் இப்படிப்பட்ட கலவரம் ஒன்று ஏற்பட்டபோது, எல்லா அரசியல் கட்சிகளின் கொடிகளையும் இறக்கிவிட்டு, இந்து முன்னணி இதுபோன்ற இன்னொரு மத சம்பந்தமான கொடியை மட்டும் ஏற்றவேண்டும் என்கிற நிலைமையும் ஏற்பட்டதை பார்த்தோம். ஆகவே இப்படி பட்ட ஸ்தாபனங்களை வளரவிடாமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஆலோசிக்க வேண்டும்.



அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சிலர் மறைமுகமாக இதற்கு ஆதரவு தரும் உணர்வை காட்டுவதன் காரணமாகவும், சில அதிகாரிகளும் அவர்கள் மீது அதே உணர்வோடு செயல் படுவதன் காரணமாக, சிறு சிறு காரியங்கள் கூட மிகப் பெரிய காரியமாக தோற்றுவிக்கப்படுவதன் விளைவாக பெரிய மோதல்கள் வரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை தவிர்ப்பதற்கு, எல்லா அரசியல் கட்சி தலைவர்களுக்கும் கடமை இருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மண்டைக் காட்டிலே கிறிஸ்தவர்களின் திருவிழா நடக்க இருக்கிறது. ஆகவே தான் இன்றைக்கு இப்படிப்பட்ட நிலைமை அங்கே ஏற்பட்டுள்ளது. ஏனெனில் மக்களிடத்திலே பிளவு உண்டாக்கி அதன் மூலம் ஆதாயம் தேடுவதற்காகத்தான் இப்படி மத வெறியோடு காரியங்களைச் செய்கிறார்கள் என்பதை நாம் உணருகிறோம். அந்தப் பகுதியிலே இன்றைக்கு சாதாரண மக்கள் கூட பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ரெயில் வேயிலே வேலை பார்க்கக்கூடிய ஊழியர்கள் சிலரை போலீஸ் காரர்கள் தாக்கியதன் காரணமாக காலையிலே 8½ மணிக்கு புறப்பட வேண்டிய டிரெயின் மாலை 3 மணிக்குத்தான் புறப்பட முடிந்தது. அது மட்டும் அல்ல 3 பஸ்கள் கொளுத்தப் பட்டிருக்கின்றன. இன்னும் பல இடங்களில் அங்கே பதட்ட மான நிலைமை இருந்துக் கொண்டிருக்கிறது. இது இன்னும் மோசமான நிலைமைக்கு போகாத அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இதற்கு பிரதானமான காரணம் நாட்டிலே இருக்கக்கூடிய இப்படிப்பட்ட பிரச்சாரங்கள், மத, ஜாதி போன்ற பிரச் சாரங்களை யார் செய்தாலும், எப்படி செய்தாலும் அதைத் தடுக்க என்ன செய்யலாம் என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும் அல்லது இது இப்படி வளர்ந்துக் கொண்டே போனால், எந்த அரசியல் கட்சியும் நிலைத்து நிற்க முடியாது. யார் ஜாதியைச் சொல்லுகிறார்களோ, யார் மதத்தைச் சொல் கிறார்களோ அவர்களுக்குத்தான் செல்வாக்கு என்ற நிலை நாட்டிலே வந்தது என்று சொன்னால், சாதாரண மக்கள் நல்ல படியாக, நிம்மதியாக வாழமுடியாது. முன்னேற்றமும் அடைய முடியாது. இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் என்ன என்பது குறித்து ஒரு கமிஷன் நியமித்து விசாரணை நடத்த வேண்டும். ஏற்கனவே ஒரு கமிஷன்—வேணுகோபால் கமிஷன் போடப் பட்டிருக்கிறது.

ᵔயக்கம் என்றும் தயங்காது. அதேநேரத்தில் புளியங்குடியில் நடந்த நிகழ்ச்சிகளை பார்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர்கள், குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள் போலீஸ் பாதுகாவல் மூலம் ஊர்வலமாகச் சென்று அடுத்த இனத்தவர்களை வசை மாறி சென்றிருக்கிறார்கள். அதற்கு பின்னால் தான் அந்தச் சம்பவம் நடந்து இருக்கிறது. என்பது அரசுக்கு நன்றாக தெரியும். அப்படிப்பட்ட விஷமத்தனமான செயலில் ஈடுபடுபவர்கள் போலீஸ் பாதுகாப்போடு ஊர்வலங்கள் நடத்த அனுமதித்ததன் காரணமாக அன்று புளியங்குடியில் இப்படி ஒரு நடக்கக்கூடாத சம்பவம் நடந்தது.

இப்போது இந்து முன்னணி மாநாடு நடத்துவோம் என்று சொல்வது—இந்து மத கருத்தை சொல்வதற்கு அமைதியான ஒரு மாநாட்டை நடத்தி இருக்கிறார்கள். அந்த மாநாட்டுக்கு தடை விதிப்பதன் காரணமாக இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அது கண்டிக்கத்தக்கது. ஆகவே இந்த சம்பவத்திற்கு பின்னால் தொடர்ந்து விஷமிகள் நேற்றைய தினம் கூட 3, 4 பேரூந்துகளை எரித்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட விஷமிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுப்பதிலே எங்களுக்கு எந்த கருத்து வேறுபாடும் இல்லை. அந்த மதப் பிரச்சாரத்தில் தடை என்று சொன்னால் ஒரு மதத்திற்கு மட்டும் தடை விதிக்கும் தன்மை இருக்கக் கூடாது. அத்தனை மதங்களின் ஊர்வலங்களையும், மாநாடு நடத்துவதையும் தடை செய்தால் எங்களுக்கு அக்கரை இல்லை. ஆனால் ஒரு பிரிவினரை மட்டும் மெஜாரிட்டி இருக்கிறார்கள் என்பதற்காக தடை செய்வது அவ்வளவு நல்லது அல்ல. அதன் மூலம் ஏற்பட்ட சம்பவங்கள் விரும்பத்தகாதது இறந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். அது பாராட்டுக்குரியது. அதேபோன்று காயம் அடைந்த மற்றவர்களுக்கும் நிதி உதவி செய்ய வேண்டும் என்று கேட்டு இந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்த சம்பவத்தை விரிவாக விவாதிக்க அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 13—2—1983 அன்று நாகர் கோவிலில் நடந்த துப்பாக்கிச் சம்பவம் துர்பாக்கிய வசமானது. அதிகாரிகள் சற்று சாதுர்யமாக நடந்து அந்த சம்பவத்தை தவிர்த்து இருக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். கூட்டம் நடத்துவதற்கு ஊர்வலத்திற்கு திடீர் என்று தடை என்று விதிப்பதை தவிர்த்து தகுந்த போலீஸ் பாதுகாப்புடன் அவற்றை ஒழுங்குப்படுத்திஇருக்க முடியும் என்பதுஎன்னுடையகருத்து. இப்போது ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்த தலைவர்களும் சட்டத்தை மீறி ஊர்வலத்தை நடத்துவதற்கு முனைகிறபோது அசம்பாவிதங்கள் இயல்பாக ஏற்படும் என்பதை அவர்களும் எதிர்பார்த்து இருக்க



முடியும். அங்கே அந்த தலைவர்களும் தவறு இழைத்து விட்டார்
கள் என்று நான் எண்ணுகிறேன். இப்போது தொடர் நிகழ்ச்சி
கள் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் முடிந்து ஒரு இளைஞர் உயிர்
பலியிடப்பட்டு இருக்கிறது. 3 பேர் காயம் அடைந்து இருக்
கிறார்கள். போலீஸ் தரப்பிலும் பலருக்கு காயம் ஏற்பட்ட
தாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. நடந்துவிட்ட
சம்பவத்தைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் செய்திகளின்
வாயிலாக வந்துக்கொண்டிருக்கின்றன.

மாவட்ட ஆட்சியாளர் அவர்கள், அவர்களுடைய உதவி
யாளரை வைத்து விசாரணை நடத்துவதற்காக உத்தரவிட்
டிருக்கிறார் என்று செய்தி வந்திருக்கிறது. இத்தகைய விசாரணை
நிச்சயமாக மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தாது.
எனவே உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு நீதி விசாரணை
வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். அல்லது ஏற்கனவே
ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற வேணுகோபால் கமிஷனை வைத்து
நீதி விசாரணை நடத்தினால் சிறந்ததாக இருக்கும் என்பது
என்னுடைய கருத்து.

இறந்து விட்டவர் ஒரு ரிக்ஷா தொழிலாளி என்று செய்தி
கள் வருகின்றன. அவருடைய குடும்பத்திற்கும், துப்பாக்கிச்
சூட்டினால் காயம் அடைந்தவர்கள் குடும்பத்திற்கும் அரசு
தாராளமாக உதவி செய்ய இப்போது முன்வரும் என்று நாங்கள்
எதிர்பார்க்கிறோம். இப்போது அங்கு பதட்ட நிலை நிலவி
வருவதாக தெரியவருகிறது. அரசாங்கமும், அதிகாரிகளும் மிக
தீவிரமாக செயலாற்றவேண்டிய சந்தர்ப்பம் வந்துகொண்டிருக்
கின்றன. சென்ற காலங்களில் நடந்துவிட்ட அசம்பாவிதங்கள்,
விரும்பதகாத செயல்கள் தொடர்ந்து ஒரு தொடர் கதையாக
வந்துவிடக்கூடாது என்று நாங்கள் அஞ்சுகிறோம். அரசாங்கத்
தினுடைய, போலீஸினுடைய பொறுப்பு மிக அதிகமாக
இருக்கிறது. விரும்பதகாத சம்பவங்கள் தொடர்ந்து விடாமல்
மிகதீவிரமாக கண்காணிப்பு வேலைகளில் அரசாங்கமும், போலீ
ஸிம் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸார்
நடவடிக்கைகள் எடுக்கிறபோது சில நிரபராதிகளும் தாக்கப்
பட்டதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எந்தவித
சம்பவத்திலும் ஈடுபடாமல் வீடுகளில் ஒதுங்கியிருக்கிறவர்களை
போலீஸார் வீடுகளுக்குள் நுழைந்து அவர்களை தாக்கியதாக
செய்திகள் வந்துகொண்ருக்கின்றன. இவற்றை தவிர்க்க
வேண்டும் என்று இந்ந சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்பு
கிறேன்.

அங்கு இருக்கின்ற எல்லாத் தரப்பினரையும் இந்த சந்தர்ப்பத்
தில் பணிவோடு வேண்டிக்கொள்வது நல்ல சூழ்நிலையில் சுமுக
மாக வாழ்ந்து வந்த மக்கள் மத்தியில் பதட்ட நிலை ஏற்படாமல்
இருக்க எல்லா மதத்தைச் சேர்ந்த சகோதரர்களும் நல்ல சூழ்
நிலை ஏற்படுவதற்கு தங்களால் ஆன ஒத்துழைப்பை தரவேண்டும்

(முற்பகல் 11–10)

அது என்ன ஆயிற்று என்பது பற்றி இன்னும் தெரியவில்லை. மண்டைக்காடு பிரச்சினை தோன்றுவதற்கு மூலகாரணம் என்ன ? இதற்கான நிலைமைகள் எங்கே இருந்து வருகின்றன? இப்படிப்பட்ட இயக்கங்களை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் எப்படி நடத்தப்படுகின்றன ? மூல காரணம் என்ன என்பனவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். எத்தகைய உணர்வுகளோடு அது தோற்றுவிக்கப்பட்டது என்பதை ஆராய்ந்து இனிமேல் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்கிற வகையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாநாடு நடத்துவதற்கு முதல்நாள் தடை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி இருந்தும் மாநாடு நடத்தப்பட்டது. அப்படி என்றால் அசம்பாவிதங்கள் ஏற்படும் என்பதை முன்கூட்டியே உணர்ந்து அதன்படி அந்த மாநாட்டை நடக்காமல் இருப்பதற்குரிய வகையிலே என்ன செய்திருக்கலாம் என்பதைப்பற்றி எல்லாம் விவாதிக்கவேண்டும். இனிமேல் மத சம்பந்தப்பட்ட, ஜாதி சம்பந்தப்பட்ட மோதல்கள் ஏற்பட மூல காரணம் என்ன என்பதை ஆராய்ந்து காலா, காலத்தில் நடவடிக்கை எடுக்கின்ற வகையிலே அரசாங்கமும் அரசியல் கட்சிகளும் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் தீவிரமாக விவாதிக்கவேண்டும் என்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர் :** மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, 13–2–1983 அன்று நாகர் கோவிலில் நடக்க இருந்த இந்து முன்னணி மறுமலர்ச்சி மாநாட்டுக்கு தடை செய்யப்பட்டது. ஆனால் அதன்பிறகும் அவர்கள் மாநாட்டை நடத்துவோம், தடையை மீறுவோம் என்று சொல்லி அதன் பிறகு ஏற்பட்ட நிலைமைகளைத் தொடர்ந்து போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி அதிலே ஒருவர் இறந்திருக்கிறார். எனவே நடக்கக் கூடாத சம்பவம் நடந்திருக்கிறது இது எந்த முறையிலே நடந்திருக்கின்றது? அதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த நாட்டிலே அரசியல் சட்டம் வைத்திருக்கிறோம். மைனாரிட்டி பாதுகாப்பு என்று சொல்கிறோம். ஒவ்வொரு மதத்தினரும் தன்னிச்சையாக இயங்கலாம், வழிபடலாம் என்ற கொள்கையை வைத்திருக்கிறோம். இப்போது இந்துக்கள் மாநாடு நடத்தியிருக்கிறார்கள். மண்டைக்காட்டிலே சென்ற ஆண்டு சம்பவத்திற்குப் பிறகு அங்கே சுமுகமான சூழ்நிலை



இருக்கின்றது. கிறிஸ்தவர்களும் மண்டைக்காட்டிலே வழிபாடு நடத்தி இருக்கிறார்கள் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் ஒத்துக் கொள்கிறார்கள். அவர்கள் நடத்துவதை அனுமதித்திருக்கிறார்கள். இந்துக்கள் நடத்துவதை அனுமதிக்கக்கூடாது என்று அந்த முறையிலே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தடை விதித்தார்கள். அப்படி என்றால் இந்துக்கள் மாநாடு நடத்தக் கூடாது என்று சொல்கின்ற அளவுக்கு அரசின் கொள்கை இருக்கின்றது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஒருசில கருத்துக்களைச் சொன்னார்கள். இன வெறி, மத வெறி என்று சொன்னார்கள். மத வெறியினை நாம் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. ஆனால் அவரவர்கள் தங்கள் மதத்திற்குரிய வழிபாடுகளைச் செய்வதற்கும் மதக் கருத்துக்களைப் பரப்புவதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏன் தடை விதிக்கவேண்டும். அப்படி ஒரு சூழ்நிலை இருந்தாலும் மாநாடு நடத்துவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக அரசியல் கட்சிகளை அழைத்துப் பேசி அதனை நிறுத்துவதற்கு முயற்சித்திருக்கலாம். ஆனால் மாநாட்டிற்கு முதல்நாள் அப்படிப்பட்ட தடையை விதித்திருக்கிறார்கள். ஆகவே அதிகாரிகள்தான் இந்த நிலையினை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்துக்கள் மாநாடு நடத்தக்கூடாது என்ற நிலையில் கிறிஸ்தவர்கள் நடத்தினாலும் மற்றவர்கள் மாநாடு நடத்தினாலும் அவர்களுக்கெல்லாம் உரிமை இருக்கின்றது.

மாநாடு நடத்தக் கூடாது என்று சொல்லப்பட்ட இந்துக்கள் தடையை மீறுவோம் என்று சொல்லி 10 ஆயிரம் பேர் அமைதியாக கூடி இருக்கிறார்கள். அப்படி 10 ஆயிரம் பேர் கூடுவது வரை அங்கே உள்ள காவல் துறை பார்த்துக்கொண்டிருக்கின்றது. இந்து மக்கள் 10 ஆயிரம் பேர் அமைதியாக இருந்து பேசி இருக்கிறார்கள். போலீசார் கைது செய்வதற்கு பிறகும் இன்னும் இருப்பவர்களைக் கைது செய்யுங்கள் நாங்கள் அமைதியாக இருக்கிறோம் என்று சொல்லி போலீஸ் வருமா என்று பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்று பத்திரிகையிலேவந்திருக்கின்றது. ஆகவே அசம்பாவிதங்களில் இந்துக்கள் ஈடுபடவில்லை. இருந்தாலும் துப்பாக்கிச்சூடு நடந்திருக்கிறது. நான் இங்கே கூறிக்கொள்வது எல்லாம், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள் சென்ற ஆண்டு நடந்த புளியங்குடி சம்பவத்தைப்பற்றி. அங்கே அனைத்துக் கட்சிகளின் கொடிகள் இறக்கப்பட்டது. நானும் நேரில் போய்ப் பார்த்தேன் இப்போது நாகர்கோவிலில் அதேபோல் அனைத்துக் கட்சிகளின் கொடிகளும் இறக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆர். எஸ். எஸ். ஊடுருவல் என்று சொல்கிறார்கள் அப்படிப்பட்ட விஷமிகளை கண்டிப்பதற்கு எங்களுடை

என்று கேட்டுக்கொள்வதோடு இந்த விஷயங்களைப் பற்றி
எல்லாம் பூர்ணமாக விவாதம் நடத்துவதற்கு இந்த அவையின்
இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

[முற்பகல் 11-20]

திரு. ஏ. சாகுல் ஹமீது
தலைவர் அவர்களே, இன்றைக்கு கன்னியாகுமரி மாண்புமிகு பேரவைத் துணைத்
நாகர்கோவிலில் பகுதியிலே ஒரு பெரிய மாவட்டம்,
திட்டமிட்ட வன்முறை செயல் நடப்பதற்குரிய அசம்பாவிதமான
ஏற்பட்டு அதன் விளைவாக ஒரு உயிர் பறிக்கப்பட்டு சூழ்நிலை
நபர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். பல்வேறு
மண்டைக்காட்டிலே நடைபெற்ற சம்பவம் கடந்த ஆண்டு
இறித்துவ சிறுபான்மைச் சமுதாயத்தைச் ஏற்பட்ட போது
பறிக்கப்பட்டு அவர்களுடைய சொத்துக்கள் சேர்ந்த உயிர்கள்
இஸ்லாமிய சமுதாயத்தினருடைய சொத்துக்கள் சேதமாக்கப்பட்டு
பட்ட வரலாறுகளை யெல்லாம் கடந்த சட்டமன்றக் சேதமாக்கப்
திலே நாம் அலசி ஆராய்ந்து இருக்கின்றோம். கூட்டத்
குடியிலே நடந்த சம்பவம். இரண்டு சமுதாயத்தைச் அடுத்து புளியங்
வர்கள் ஒன்று கூடி கண்ணியம் நிறைந்த காயிதே சேர்ந்த
அவர்களுடைய பிறந்த தின விழாவையும், சட்ட மில்லத்
குரிய அம்பேத்கார் அவர்களுடைய பிறந்த மேதை மதிப்பிற்
கொண்டாடுவதற்காகச் செல்கிற நேரத்திலே, தின விழாவையும்
நேரத்திலே தாக்கப்பட்டார்கள். அதன் ஊர்வலம் சென்ற
தினம் 9 அரிசன உயிர்களும், ஒரு விளைவாக அன்றைய
பட்டன. இப்படி சிறுபான்மையோர் இஸ்லாமிய உயிரும் பறிக்கப்
காலத்திலே நடந்த வரலாறுகளை சமுதாயத்திற்கு கடந்த
தமிழகத்திலே ஏற்பட்டுள்ள சூழ்நிலையை எண்ணிப்பார்க்கிறபோது
நேரத்திலே இன்றைக்கு மைனாரிட்டி மக்களுக்குப் பார்க்கிற
பற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை பாதுகாப்
வேண்டும். சிந்தித்துப் பாக்க

அதே நேரத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே
எழுச்சி மாநாடு நடக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இந்து
காரணமாக அந்த மாவட்ட ஆட்சித் அந்த மாநாடு
காவல் துறையைச் சேர்ந்தவர்களும் சரியான தலைவர் அவர்களும்
களைச் செய்திருந்தும் அதே நேரத்திலே பாதுகாப்பு ஏற்பாடு
நடத்தப்படுமானால் அதனால் ஏற்படும் அந்த ஊர்வலம்
பார்த்து புலனாய்வுச் செய்திகளைக் விளைவுகளை எண்ணிப்
கொண்டு அந்த ஊர்வலத்தை நடத்தக் கணக்கில் எடுத்துக்
தோடு முயற்சிகள் செய்திருக்கிறார்கள். கூடாது என்ற எண்ணத்
அங்கே ஊர்வலம் தடையை மீறி அதற்குப் பிறகு தான்
விளைவாக வன்முறைகள் நடத்தப்படுகிறது. அதன்
அதன் விள்ளவாக தூண்டப்பட்டு நடைபெறுகின்றன
பட்டிருக்கிறது. சர்ச்சுகள் அந்தோனியார் சிலை உடைக்கப்
நிலையம் தாக்கப்படுகிறது. தாக்கப்படுகின்றன. காவல்
பேருந்துகள் எரிக்கப்படுகின்றன,





ரயில் நிலையங்கள் தாக்கப்படுகின்றன, ஊழியர்கள் தாக்கப்படுகிறார்கள், அது மட்டுமல்ல, சத்துணவு கூடங்களுக்கு கூடத் தீயிடப்பட்டு எரிக்கப்படுகின்றன என்றால் எந்த அளவுக்கு வன்முறை அங்கே பரவியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல, ஊர்வலத்திலே வருகிறவர்கள் காவடி தூக்கி வந்தார்கள் என்று கேள்விப் படுகிறோம், ஆனால் அந்தக் காவடியிலே அதைப் பிரித்துப் போட்ட நேரத்திலே, கம்பைச் சுற்றி வைக்கோலைப் போட்டு சுற்றி அந்த வைக்கோலுக்கு மேல் துணியை வைத்து கட்டி ஊர்வலத்திலே கொண்டு வருகிறார்கள் என்றால் இது திட்டமிடப்பட்டு முன் கூட்டியே செய்த ஏற்பாடு அல்லவா? அதை அறிந்துதானோ என்னவோ காவல் துறையினர் தீவிரமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். ஊர்வலத்திலே கம்பைச் சுற்றி வைக்கோல் வைத்து துணியைச் சுற்றிக் கொண்டு வருவதன் மர்மம் என்ன ? இதை ஆராய்ந்து பார்த்தால் அந்தத் தடை சரியான நேரத்திலே போடப் பட்டிருக்கிறது என்று கருத வேண்டும். தமிழகத்திலே 3,4 ஆண்டுகளாக ஆர். எஸ். எஸ். இயக்கம், இந்து முன்னணி இயக்கம், விஸ்வ இந்து பரிஷத் இயக்கம் போன்ற இயக்கங்கள் தமிழகத்தினுடைய எல்லா மக்களுடைய சுமுக உறவுகளையும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே இந்து மக்கள் எல்லாம் சிறுபான்மை சமுதாயத்தோடு அன்யோன்யமாய்ப் பழகி வருகிறார்கள். எல்லா இந்து மக்களும் அப்படிப்பட்ட எண்ணம் கொண்டிருக்கவில்லை, ஒரு சில வகுப்புவாத விஷமிகள் வேண்டாத விஷவித்தை விதைக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்கம், இந்து முன்னணி, விஸ்வ பரிஷத் இயக்கம், போன்ற இயக்கங்கள் தமிழகத்திலே விஷ வித்தை விதைத்து பாசிஸ இயக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதன் விளைவாக கடந்த மண்டைக்காடு சம்பவம், புளியங்குடி சம்பவம் நடந்தன. இன்றைக்கு நாகர்கோவிலிலே நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்திலே முன்னால் ஆட்சி புரிந்தவர்கள் ஆட்சியிலே இல்லாத சூழ்நிலை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 3, 4 ஆண்டுகளாக வகுப்பு வாத பாசிஸம் வளர்க்கப்படுகிறது. வளர்ந்து வருகிறதோ என்ற ஐயம் சிறுபான்மையோர் மத்தியிலே பலமாக வேரூன்றி இருக்கிறது.

அவர்கள் இன்றைக்கு வீடு வீடாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். அவர்கள் பத்திரிகை வாயிலாக சிறுபான்மை மக்களை தாக்கி எழுதுகிறார்கள், அந்தச் செயல்கள் எல்லாம் பரப்பப் பட்டும் கூட இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் இந்த ஆட்சியிலே சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு இல்லையா இந்த ஆட்சியிலே சிறுபான்மை மக்களுக்கு நிம்மதி, இல்லையா என்ற கிலேசம் ஏற்பட்டு இருக்கிறது. இந்த நாட்டிலே மாற்றாந்தாய் மனப்பான்மையோடு இரண்டாவது தர மக்களாக அவர்கள் நடத்தப்படுகிறார்களோ என்ற எண்ணம் சிறுபான்மையோரிடத்திலே ஏற்பட்டிருக்கிறது.

அந்த எண்ணம் வலுவாக ஊன்றிக் கொண்டிருக்கிறது.
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை கேட்டுக்கொள்
கிறேன். இந்த மாதிரி பாசிச இயக்கம் மற்றும் எந்த இயக்கமா
னாலும் சரி, ஆர்.எஸ்.எஸ். இயக்கம், இந்து முன்னணி இயக்கம்
விஸ்வ இந்து பரிஷத் இயக்கம் போன்றவைகள் இந்த விஷ
வித்தை பரப்பாத அளவிற்கு தடையை போட்டாக வேண்டும்.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டில் மண்டைக்
காடு சம்பவம் நடந்த போது தமிழகத்தில் ஆர்.எஸ். எஸ். பயிற்சி
போன்றவைகள் தடை செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்
தார்கள். ஆனால் அந்த வாக்குறுதி வழக்கம் போலாகி விட்டது.
இன்றைக்கு பள்ளிக் கூடங்களில், கல்லூரிகளில் இந்த பயிற்சி
அளிக்கப்பட்டு, வன்முறை தூண்டப் படுகிறது என்று சொன்
னால் இந்த அரசு என்ன செய்யப் போகிறது ? சிறுபான்மை
மக்களுக்கு என்ன பாதுகாப்பை இந்த அரசு தரப் போகிறது ?
கிறிஸ்தவ சமுதாய மக்களும், முஸ்லீம் சமுதாய மக்களும்,
மற்றைய இந்து சமுதாய மக்களோடு ஒன்றாக அணைத்து வாழ
வேண்டிய நாட்டிலே எங்களை பாகுபாடு படுத்துவதற்காக
இந்த இயக்கம் நடத்தப்படுகிறது என்றால் அந்த இயக்கத்தை
தடை செய்வதற்கு இந்த அரசு தீவிரமாக முயற்சி எடுக்க
வேண்டும். அப்படியில்லையென்றால் சிறுபான்மை மக்களுக்கு
எந்தவிதமான பாதுகாப்பும் இருக்காது. (மணியடிக்கப்பெற்றது)
இன்றைக்கு ஞான ரதம் போன்றவற்றில் பிரச்சாரம் நடை
பெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு மதத்தினுடைய பிரச்சாரத்தை
செய்வதற்கு இந்த நாட்டிலே உரிமை இருக்கிறது. அமைதியான
முறையில் அவற்றை செய்வதற்கு நாங்களும் எங்களுடைய ஒத்து
ழைப்பைத் தருகிறோம். விஷ வித்தை ஊன்றுகிற போது,
பாசிசத்தை உருவாக்குகிறபோது இந்த அரசு கவனித்து நட
வடிக்கை எடுக்காமல் வாளாயிருக்கிறது என்பது எங்களுடைய
குற்றச்சாட்டு. சிறுபான்மை மக்களுடைய நம்பிக்கையை இந்த
அரசு பெற்றாக வேண்டும். அந்த அளவிற்கு இந்த அரசு
தீவிரமான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இப்போது
கூட பேசிக் கொள்கிறார்கள். இந்த மாமன்றத்திலே சபாநாயகர்
மூலமாக அதிகாரிகளுக்கு தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.
தென்காசிப் பகுதியில், கடையநல்லூர் பகுதியில் பேசப்படுவ
தாக சில வதந்திகள் வருகின்றன. மண்டைக் காட்டில் அடித்
தோம், புளியங்குடியில் அடித்தோம். அண்மையில் வருகிற
காலங்களில் கடையநல்லூர், தென்காசி பகுதிகளையும் அடிப்
போம் ; அடித்துக் காட்டுவோம் என்ற பேச்சு அங்கே பரவலாக
பேசப்படுகிறது என்பதை முன்னெச்சரிக்கையாக இந்த மாமன்
றத்திலே வைக்க விரும்புகிறேன். அரசு அதை விவாதிக்கிற
வகையில் எல்லா அலுவல்களையும் ஒத்தி வைத்து, வாய்ப்பு
தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக நாகர்கோவிலில்
நடை பெற்றிருக்கும் நிகழ்ச்சிகள் மிக்க துரதிர்ஷ்டவசமானது.
அமைதி குடியிருந்த அந்த மாவட்டத்திலே சில மாதங்களாக
இது போன்ற சம்பவங்கள் நடை பெற்று அந்த மாவட்டம்
இன்றைக்கு ரணகிளரியாகிக் கொண்டிருக்கிறது என்பது தமி
ழகம் முழுவதிற்கும் அதிர்ச்சியை அளித்திருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டம் மத சகிப்புத் தன்மைக்கு பெயர்
போன ஒரு மாவட்டம். இந்துக்கள் ஆனாலும், முஸ்லீம்கள்
ஆனாலும், கிறிஸ்தவர்கள் ஆனாலும் ஒன்றாக இருந்து வாழ்ந்த
ஒரு மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். அந்த மாவட்டத்
தினை நம்முடைய தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்ற
ஒரு போராட்டம் கடந்த காலத்தில் நடந்த போது இந்துக்கள்,
முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் ஒன்று பட்டு அவர்கள் தமிழர்கள்
என்ற உணர்வோடு அன்றைக்கு போராடினார்கள். அப்படி
ஒற்றுமைக்கு நிலைகளனாக விளங்கிய அந்த மாவட்டத்திலே
இன்றைக்கு தமிழ் சமுதாயத்திலே இந்துக்கள், கிறிஸ்
தவர்கள், முஸ்லீம்கள் என்ற பேதா பேதங்கள் புகுத்தப்பட்டு
ஒரு ரண களறி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதை நாங்கள்
வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த சூழ்நிலை அந்த மாவட்டத்
தில் ஏற்பட்டதற்கு எவை எவை அடிப்படையான காரணங்கள்
என்பதை நாம் ஆராய வேண்டும்.

முதலாவதாக 'டோட்டல் பெயிலியர் ஆப் தி போலீஸ்
இண்டலிஜென்ஸ்' என்று குற்றம் சாட்டுகிறேன். போலீஸ்
புலனாய்வுத் துறை இது போன்ற நிகழ்ச்சிகள் வரக் கூடும் என்
பதை கண்டறிந்து இந்த அரசுக்கு எடுத்துச் சொன்னதா ?
இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில்
விளக்குவார்கள் என்று எதிர் பார்க்கிறேன். மாவட்டத்தில்
இந்த கலவரங்கள் வந்த பின்னால் தான் போலீஸ் தகவல் தெரி
விக்கிறது, முன்பே இதை கண்டறிந்து விஷமிகளை முன்
கூட்டியே சிறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை போலீஸ்
இலாக்கா செய்யவில்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்பு
கிறேன். விவேகானந்தா பாறைக்கு படகு விடுகிற பிரச்சினை
யாக இருந்தாலும் சரி, கன்னியாகுமரி மாவட்டத்தில் போக்கு
வரத்து கழகத்திற்கு பெயர் வைக்கிற பிரச்சினையாக இருந்
தாலும், இந்த அரசிற்கு உறுதியான நிலை இல்லாத காரணத்
தால், ஜாதி மத பூசல்கள், ஒற்றுமையாக இருந்த மக்கள் மத்தி
யிலே முளைத்து எழுவதற்கு வழி வகுத்திருக்கிறது என்பதை
சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தேசத்தின்
தந்தை மகாத்மா காந்தியடிகள் இந்தியாவிலே வகுப்பு ஒற்றுமை
நிலவ வேண்டுமென்பதற்காகத் தன்னுடைய இன்னுயிரையே
தியாகம் செய்த உன்னதமான நிகழ்ச்சி இந்த நாட்டிலே
நடந்தது. தேசத் தந்தையையே அதிலே நாம் இழந்துவிட்
டோம். காந்தியடிகள் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகத் தன்
னுடைய இன்னுயிரையே தியாகம் செய்தார்கள். அப்படிப்பட்ட
உன்னதமான தியாகத்தைக் காந்தியடிகள் செய்த பின்னாலும்
கூட இந்தத் தேசத்திலே வகுப்புகளின் பெயராலும், மதத்தின்
பெயராலும், ஜாதிகளின் பெயராலும் கலவரங்கள் நடக்கின்றன
என்றால், அது தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும், இந்தி
யனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் அவமானம் என்பதை இந்த
நேரத்திலே நான் நினைவூட்டி, மத ஒற்றுமையையும், மத
சகிப்புத் தன்மையையும் தமிழகத்திலே நிலைநிறுத்தும் வகை
யிலே இதைப்பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின்
கூட்டத்தை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்
தின் நாகர்கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சி எவ்வளவு வருந்தத்
தக்க ஒன்று என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே
சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். சென்ற ஆண்டு மண்டைக்காடு
என்ற பகுதியிலே நிகழ்ந்த திருவிழாவை ஒட்டி சமய வேறுபாடு
உடைய, மாறுபட்ட சமயத்தினரிடத்திலே ஏற்பட்ட அந்த
கலவரம் எந்த அளவிற்கு நம்மையெல்லாம் வாட்டி
வருத்தத்திற்கு உள்ளாக்கியது என்பதையும் மன்றத்திலே அப்
பொழுதே எடுத்துப் பலரும் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப்
பிறகு பல்வேறு முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்ட வகை
யிலேயும், அங்கேயுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளைச்
சேர்ந்தவர்களெல்லாம் அங்கு ஒரு சுமுகமான நிலையை ஏற்
படுத்தி, மனிதப் பண்புக்கும் மனித மாண்புக்கும் மதிப்பளிக்க
வேண்டுமென்ற முறையில் எடுத்துக் கொண்டமுயற்சிகளின்காரண
மாகவும், மாண்பு மிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் குறிப்
பிட்டதைப் போன்று மதத் தலைவர்களை ஒன்றாக இணைந்து
அமைதியைக் காப்பதற்கான பெருமுயற்சியை எடுத்ததினுடைய
விளைவாக அண்மைக் காலங்களில் நாமெல்லாம் மகிழத்தக்க அள
விற்கு சென்ற ஆண்டு ஏற்பட்ட மாச்சர்ய நிலைமைகள் மாறி ஓர
ளவுக்கு சுமூக உறவு நிலை ஏற்படுகிறது என்ற சூழ்நிலை
நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியை அளித்தது.

ஆனால், இப்பொழுது நாகர்கோவிலில், ஏற்பட்டது!
இரண்டு சமயங்களைச் சேர்ந்த மக்களிடத்திலே கலவரம்ஏற்
பட்டு மாச்சரியங்கள் ஏற்பட்டு, ஒருவரையொருவர் தாக்குகின்ற
நிகழ்ச்சியின் அத்தகைய விளைவு அல்ல நாகர்கோவிலில்
இப்பொழுது ஏற்பட்டிருப்பது.





மக்களைப் பொறுத்த வரையில் கிறித்தவ மக்களாக இருந்
தாலும், இஸ்லாமிய மக்களாக இருந்தாலும், இந்து மக்களாக
இருந்தாலும் கூட மக்கள் மாச்சர்யம் கொண்டு ஒருவரையொரு
வர் தாக்குகின்ற சூழ்நிலை யால் ஏற்பட்டது அல்ல இந்த நிலை.

மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப்
போன்று, ஒரு மத வெறியை ஊட்டி, அதன் மூலமாக ஆதாயம்
தேட வேண்டுமென்று கருதுகின்ற சில பிரிவினரும், சில குழு
வினரும், திட்டமிட்டுச் செய்த விளைவுகளினுடைய விளைவாக,
தடுத்து நிறுத்தப்பட்டு, அதற்குப் பிறகு 144,ஐ மீறி, 144-ஐ
மீறுவதன் காரணமாக ஏற்பட்ட, அந்தக் கலவரத்தின்
காரணமாக தடியடிப் பிரயோகம் , கண்ணீர்ப் பிரயோகம்,
துப்பாக்கிப் பிரயோகம், என்று வந்து விட்டதே தவிர, இரண்டு
மதச் சார்புடைய மக்களுடைய, மண்டைக் காட்டிலே ஏற்
பட்டது போன்ற ஒரு சூழ்நிலை இப்பொழுது ஏற்படவில்லை.
ஆனாலும் கூட இதனுடைய விளைவுகளை மாண்புமிகு உறுப்
பினர்கள் இங்கே தெளிவுபடச் சுட்டிக் காட்டினார்கள்.

சென்ற ஆண்டு மண்டைக்காடு திருவிழா நடைபெற்றபொழுது
ஏற்பட்ட கலவரத்திற்குக் காரணமே, அதற்குச் சில பல நாட்
களுக்கு முன்னால், இப்படிப்பட்ட ஒரு மகாநாடு நடைபெற்று,
அந்த மகாநாட்டிலே ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்தவர்களும், மற்ற
வர்களும் தூண்டிவிட்டதனுடைய விளைவு, அது பொங்கி
எழுந்து, அது மண்டைக் காட்டிலே வெடித்தது என்பதற்கான
காரணங்களைச் சொன்னார்கள். அதற்குப் பிறகு எல்லாத்
தரப்பினரும் சேர்ந்து, எல்லா சமயத்தைச் சேர்ந்த தலைவர்கள்,
மற்றவர்களெல்லாம் சேர்ந்து அங்கு ஒரு அமைதியான சூழ்
நிலையை ஏற்படுத்திக் கொண்டு வரும் நேரத்தில், அண்மையில்
மண்டைக்காடு திருவிழா மறுபடியும் வரவிருக்கிறது, முறைப்
படி, வழக்கப்படி, ஆண்டு தோறும் நடைபெறுகின்ற தன்மையின்
படி.

அதையொட்டி, மீண்டும் இந்தத் திருவிழா நடைபெறுவதற்
குச் சில பல நாட்களுக்கு முன்னால், ஒரு மகாநாட்டைக் கூட்ட
வேண்டுமென்ற உணர்வோடு, மகாநாட்டைக் கூட்டுவதற்கான
முயற்சிகளை நாகர்கோவிலிலே எடுத்த போதுதான், மாவட்ட
ஆட்சித் தலைவரவர்களும், காவல் துறை கண்காணிப்
பாளர் அவர்களும், ஊர்வலத்தையும், மாநாட்டையும் இப்
பொழுது கூட்ட வேண்டாமென்றும், சென்ற ஆண்டு மண்டைக்
காட்டிலே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டதற்கு இந்த
மாநாட்டில் தூண்டி விடப்பட்ட உணர்ச்சி காரணமாக இருந்தது
என்றும், மண்டைக்காடு திருவிழா முடிந்ததற்குப் பிறகு நீங்கள்
இந்த மாநாட்டையும் கூட்டலாம். ஊர்வலத்தையும் நடத்த
லாம், தக்க பாதுகாப்பை நாங்களே தருகிறோம் என்று மாவட்ட
ஆட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சேதம் விளைவிக்கப்பட்டது. வழக்குகள் பதிவு செய்யப்பட்
டுள்ளன. இந்தக் கலவரத்தின் போது ஏற்பட்ட தடியடிப்
பிரயோகத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் அவர்கள் குறிப்
பிட்டதைப் போன்று கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே
மாநாடு கூட்டுவதற்காக விண்ணப்பம் போடவோ அதற்கான
முயற்சிகளைப் பண்ணவோ அந்தத் தன்மையோ எதுவும் இல்லை.
மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் குறிப்பிட்டார்
கள். கிருத்துவர்கள் ஒரு மாநாடு போட அவர்கள் அனுமதி
கேட்டார்கள். அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.
அவர்களுக்கு அனுமதி கொடுக்கும்போது இவர்களுக்கும் கொடுத்
தால் என்ன என்று, இவர்கள் கூட்டுகிற ஒரு முயற்சியில் ஈடு
படவில்லை. அதற்கான ஒரு மாநாடு கூட்டப்படவில்லை. அது
நடைபெறவும் இல்லை. ஆனால் இந்த ஆர்.எஸ்.எஸ். தான்,
மற்றவர்கள்தான், மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் கூறுவது
போன்று ஒருவர் மத உணர்வை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள்
மனக் கொள்கையை வளர்க்கிறார்கள் என்றால் அந்த
மத உணர்வையும் பெறுவதற்கு இடம் தருகிறது. அரசியல்
அமைப்புச் சட்டம் கொண்ட நாடு இது. அவரவர்கள் தங்களுடை
டைய கருத்துக்களை அமைதியான முறையில் எடுத்துச்சொல்
வதற்கு தடையில்லை. இன்னொரு மனப்பான்மையை உடைய
வர்களை அழித்து, அதை ஒழித்துவிட்டு கலவரம் செய்து அவர்
களுடைய ஆக்கத்தையும் மற்றவற்றையும் அழித்துவிட்டு தங்
களுடைய ஆக்கம் வளரவேண்டும் என்ற உணர்விலே மாண்பு
மிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களும் மற்றவர்களும் கூறு
வது போன்று, ஆர்.எஸ்.எஸ். சங்கம் காஷ்மீரிலிருந்து கன்னியா
குமரி வரையில் வளர்ந்து கொண்டு வருகிறது பயங்கரமாக என்
பதை டெல்லியும் உணர்கிறது, நாமும் உணர்கிறோம். ஆகவே
தான் அவர்கள் எடுத்துச்சொல்லிய மாதிரி அதற்கு ஒரு முற்றுப்
புள்ளி வைக்கிற மாதிரி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டு
மென்று சொன்னார்கள். அதற்கான தன்மைகளை நாம் ஆராய்
ந்து அறிந்து இப்படிப்பட்ட கலவரத்தை துவக்கி சாதாரண
மக்களை, அவர்களுடைய உடைமைகளை அழித்து உயிர் இழக்
கச்செய்ததன் காரணமாக, அமைதியான வாழ்க்கை கெடுகின்ற
அளவிற்கு இருக்கின்ற தன்மைகளை எல்லாம் தடுத்து நிறுத்த
வேண்டியதுதான். ஆனால் இதில் துப்பாக்கிச்சூட்டின் காரண
மாக இறந்துபட்டவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய், அந்தக் குடும்பத்
திற்கு பாதுகாப்பாக, அந்த இறந்து போன குமார் என்பவரை
இழந்துவிட்டதன் காரணமாக, அவருடைய குடும்பத்திற்கு 10
ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டுமென்று மாவட்டத் தலைவர் அவர்
கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள், என்பதையும், அதை வழங்க
வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.
அந்தக் குடும்பத்திற்கு ஒரு 10 ஆயிரம் ரூபாய் வழங்க அரசு
ஆணையிட்டிருக்கிறது. மற்ற காயம் பட்டவர்களுக்கும், அவர்
களையும் கவனிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதையும்



பரிவோடு பரிசீலனை செய்வோம். இந்த கலவரத்தினுடைய
தன்மைகளை மற்றவைகளை எல்லாம் ஆராய்ந்து அறிந்து எதிர்
காலத்தில் இப்படிப்பட்ட கலவரங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு
தடுத்து நிறுத்துவதற்கு இந்தக் கமிஷன் விசாரிக்க வேண்டுமென்று
கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். சங்
கரய்யா அவர்களும் தெரிவித்தார்கள். வேணுகோபால் கமிஷன்
இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இப்போது உடனடியாக
ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகளைக் கண்டறிந்து உடனடி
யாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பார்க்கவும்.
ஆர். டி. ஓ. மேஜிஸ்ரேட்டு அதிகாரம் பெற்று இருப்
பவர்களை விசாரிக்கும்படியாகவும் நாம் உத்தரவிட்டு
இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சங்ரய்யா அவர்கள்
கூறியதைப்போன்று ஏற்கனவே அதுபற்றி வேணுகோபால்
கமிஷனால் ஆராய்ந்துகொண்டு இருப்பதன் காரண
மாகவும் அதையொட்டி இந்தப்பிரச்னை வருவதன் காரணமாக
வும், அவர்கள் கூறுகின்ற கருத்தையும் பரிசீலனை செய்து, அவரி
டத்திலே விட்டு அதையும் சேர்த்து ஆராயலாமா என்பதை
பற்றி அரசு ஆலோசிக்கும் என்பதை நான் இப்போது குறிப்பிட
விரும்புகிறேன். ஆனால் உடனடியாக எடுக்கவேண்டிய நட
வடிக்கைகளாக, ஆர்.டி.ஓ. உத்தரவு நமக்கு மிக மிகத் தேவைப்
படுகிறது. இப்போது உயர் அதிகாரிகளை மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள் அங்கே அனுப்பியிருக்கிறார்கள். ஆக, அங்கே
இருக்கிற சூழ்நிலைகளைக் கண்டறிந்து எடுக்கவேண்டிய நட
வடிக்கைகள் என்ன என்பதையும் இந்த நேரத்திலே உணர்ந்து
மேலும் மேலும் தூண்டுவதற்கு எது எது காரணமாக இருக்கிறது
என்பதையும் கண்டறியும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.
அவர்களுடைய அறிக்கை வந்தபிறகு, ஆர்.டி.ஓ. அறிக்கை வந்த
பிறகு அதற்கான நடவடிக்கைகளையும் ஆராய்ந்து தக்க நட
வடிக்கை அரசு எடுத்துக்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது
போன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்திரவிடப்
பட்டு இருக்கிறார்கள். கூடுமான வரையிலும் மாவட்டத் தலை
வர்கள் அல்லது எல்லாத் தரப்பினரையும் அழைத்து நிகழ்ச்சி
நடந்த இடத்திலே அமைதி நிலவவேண்டும், அவர்கள் பாது
காக்கப்படவேண்டும் என்ற உணர்வின்காரணமாக, சர்வ கட்சித்
தலைவர்களையும் அழைத்து அவர்கள் மூலமாக மக்களுக்கு எடுத்
துச்சொல்லி—அதிகாரிகள் எடுத்துச்சொன்னால், காவல்துறை
அதிகாரிகள் எடுத்துச்சொன்னால் அது எடுபடாமல் போகும்—
ஆகவே மக்களிடத்தில் நம்பிக்கை பெற்ற தலைவர்கள் போய்
ஒரு குழுவாக போய் ஆங்காங்கே எடுத்துச்சொல்வார்கள், அதன்
மூலம் நல்ல விளைவுகள் ஏற்படக்கூடும் என்ற நல்ல எண்ணம் ஒரு
பக்கம் அரசுக்கு இருந்தாலும் பொது மக்களுடைய குழுவிலே
இருக்கின்ற தலைவர்களும் மற்றவர்கள் எல்லா பகுதியைச் சேர்ந்
தவர்களும் மக்களுக்கு விண்ணப்பம் செய்கின்ற முயற்சியை மேற்
கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்

(முற்பகல் 11—30)

அதே நேரத்திலே அந்த மாவட்டத்திலே வகுப்புவாத
ஸ்தாபனங்கள் தொடர்ந்து துவேஷப் பிரச்சாரத்தில்
ஈடுபட்டு அதன் விளைவாக சிறிய நிகழ்ச்சிகள் எல்லாம்
மிகப் பெரிதாக்கப்பட்டு அங்கே கலவரங்களும் துப்பாக்கிச்
சூடுகளும் தொடர்ந்து நடைபெறக்கூடிய ஒரு நிலைமை
ஏற்பட்டிருப்பதையும் அரசாங்கம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அது மட்டுமல்ல, இந்த பிரச்சனைகளிலே அரசாங்கத்
திற்கு உறுதியான நிலைவேண்டும். யார் வகுப்புவாதக்
கலவரங்களில் ஈடுபடுகிறார்கள் என்பதை அறிந்து அவர்கள்
மீது சரியான நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் உறுதி
யான நிலையை எடுக்கவேண்டும். இந்த அரசாங்கத்திடம்
இதைப்பற்றி உறுதியான நிலை இல்லையென்பதையும் நான்
இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது தமிழர்களுக்கு
சோதனையான நேரம். உலகம் பூராவும் வாழ்கிற தமிழர்கள்
எந்த நாட்டிலே வாழ்ந்தாலும் இந்தியாவின் பிறமாநிலங்
களிலே வாழ்ந்தாலும் அவர்களுக்கு சோதனைகளும் அபாயங்
களும் ஏற்படுகின்ற இந்த வேளைகளிலே, வெளிநாடுகளிலே
வாழ்கிற தமிழர்களும், வெளி மாநிலங்களிலே வாழ்கிற
தமிழர்களும், இந்துக்களும், கிறிஸ்தவர்களும், முஸ்லீம்
களும், இவர்கள் எல்லாம் தமிழர்கள் என்ற ஒரே காரணத்
திற்காக, அடக்கி ஒடுக்கப்படுகின்ற வேளையிலே தமிழ
கத்திலே வாழ்கிற தமிழகர்கள் மத்தியிலே ஜாதிமத பேதங்கள்
யாராலேஉருவாக்கப்பட்டாலும் அது வருந்தத்தக்கது, கண்டிக்கத்
தக்கது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது இந்த
அவையிலே உள்ள அனைத்துக் கட்சியினரின் கடமை
அரசாங்கத்திற்கு அதைவிட அதிகமான கடமை உண்டு
என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு மண்டைக்காடு கலவரம் பூண்ட நேரத்
திலே, அங்கே ஒரு சமாதான யாத்திரை நடந்தது. அதை
யும் இந்த அவையிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
மதிப்பிற்குரிய குன்றக்குடி அடிகளார் அவர்கள், ஃபாதர்
ஆரோக்கியசாமி அவர்கள், இங்கே வீற்றிருக்கிற நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் சாகுல் ஹமீது அவர்கள், ஆகிய
இந்த 3 பேரும், இன்னும் இதிலே நம்பிக்கை கொண்ட, மத
ஒற்றுமையிலும், மத சகிப்புத் தன்மையிலே யார், யாருக்கு
நம்பிக்கை இருக்கிறதோ, அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து
அந்தக் கலவரங்கள் நடந்த பகுதியிலே யாத்திரை போனார்கள்.
அதன் விளைவாக அமைதி எற்பட்டது. அந்த
முறையை, இந்தத் தடவை அரசாங்கமே முன்நின்று,
குன்றக்குடி அடிகளார், ஃபாதர் ஆரோக்கியசாமி, நம்முடைய
உறுப்பினர் சாகுல் ஹமீது, மற்றும் சர்வோதயத் தலைவர்கள்,



இன்னும் மத சகிப்புத் தன்மையிலும் மத ஒற்றுமை
யிலும், யார்யாருக்கு நம்பிக்கை இருக்கிறதோ, அந்தத்
தலைவர்களையும், அந்தப் பெரியவர்களையும் அழைத்து,
இந்தக் கலவரப் பகுதிகளிலே நீங்கள் யாத்திரை செல்ல
வேண்டும், மக்கள் மத்தியிலே அமைதியை நிலை நாட்டு
வதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்கவேண்டுமென்று
அரசாங்கமே அவர்களைக் கேட்டுக் கொண்டு, அந்தப்
பகுதிக்கு அனுப்ப வேண்டுமென்று நான் இங்கே அரசாங்கத்
திற்கு யோசனை சொல்லவிரும்புகிறேன்.

அதைப் போல், அண்மையிலே சில ஆண்டுக்காலமாகத்
தொடர்ந்து, தமிழகத்திலே ஜாதி சமய பூசல்கள் அதிக
மாகிக் கொண்டே வருகின்றன. அதற்குரிய காரணங்கள்
என்ன, எவை, என்பதைப் பற்றியெல்லாம் நான் விரிவாக
பேச விரும்பவில்லை. ஆனால், இதற்கு ஒரு நிரந்தரமான
முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இந்தியாவின் பிற பகுதி
களிலே எல்லாம் மதக் கலவரங்கள் நடைபெற்ற காலத்திலே
கூட, தமிழகத்திலே மதக் கலவரம் எந்தக் காலத்திலும்
இல்லையென்ற ஒரு நிலையிருந்து, ஒரு நல்ல பெயர்
தமிழகத்திற்கு இருந்த ஒரு சூழ்நிலையில், இன்றைக்கு தமிழகத்
திற்கு அவப்பெயர் ஏற்படுகின்ற வகையில், இந்தஜாதி மதக்
கலவரங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக இந்து மடாதி
பதிகள், கிறிஸ்தவ சமயத்தவர்கள், பல்வேறு பிரிவுகளிலே இருக்
கின்ற துறவிகள், முஸ்லிம் பெரியவர்கள், ஆகியவர்களைக்
கொண்ட ஒரு நிரந்தரக் குழுவை அரசாங்கம் அமைக்க வேண்
டும். இந்த மத மாற்றங்கள், அல்லது மதப் பூசல்கள், போன்ற
இது சம்பந்தமான பிரச்சினைகளை, அந்தக் குழு அடிக்கடி கூடி,
பேசி, எந்தத் தகராறும் இல்லாமல் ஏற்பாடு செய்வதற்கான
ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு வழங்குகிற வகையிலே இப்
படி ஒரு குழுவை அமைக்க அரசாங்கம் முன் வரவேண்டுமென்
பதையும், நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, குமரி மாவட்டத்திலே மதச் சகிப்பு தன்மை
யிலே யாருக்கு நம்பிக்கையிருக்கிறதோ who are dedicated to the Noble
Cause அப்படிப்பட்ட அதிகாரிகளை அங்கேநியமிக்கவேண்டும். அது
ரெவின்யூ அதிகாரிகளாக இருந்தாலும், போலீஸ் அதிகாரிகளாக
இருந்தாலும், குறைந்தபட்சம் மாவட்ட அளவிலே, அதற்கடுத்த
படியான நிலையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளாக இருப்பவர்
களுக்காவது மதச் சகிப்புத் தன்மை இருக்கவேண்டும்.
அதிலே நம்பிக்கை கொண்ட அதிகாரிகளைத் தயவுசெய்து அங்கே
நியமியுங்கள். அப்பொழுதுதான் மதக் கலவரங்கள் மேலும்
பரவாமல் உறுதியான நடவடிக்கை எடுப்பதற்கு முடியும். அந்த
அதிகாரிகளுக்கும் Please give free hand. அதற்கு மற்றவர்களும்,
நிச்சயமாக, மத ஒற்றுமையிலும் மதச் சீர்திருத்தத்திலும்
நம்பிக்கையுள்ள நாங்கள் அத்தனைபேரும் உறுதுணையாக
இருப்போம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே அந்த இடத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கப்பல் தரைதட்டி உடைந்துவிட்டதன் காரணமாக, அங்கே பெரும் பள்ளம் ஏற்பட்டு, அந்தப் பகுதியிலே குளிக்கிறவர்கள் உயிரிழக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது என்று போலீசாருக்குத் தெரிந்திருந்தும் சரியான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதுகாப்பு போட்டிருந்தோம் என்று அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். அந்த இடத்தைச் சுற்றி பாதுகாப்பை ஏற்படுத்தியிருந்தால் நிச்சயமாக மக்கள் அதற்கு உடன்பட்டிருப்பார்கள். சாதாரணமாக அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களே , மற்றவர்களோ கோட்டைக்கு ஊர்வலம் வந்தால் போலீசார் எங்கோ தடுத்து நிறுத்திவிடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை இங்கே எடுக்கப்படவில்லை.

குளிக்கச் சென்றவர்கள் இறந்துவிட்டார்கள். போலீஸ் தலைமை அதிகாரி அதுபற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்றால் குடித்துவிட்டுப் போனவர்கள் இறந்துவிட்டார்கள் என்று அவர்கள் மீது ஒரு குற்றச்சாட்டை சுமத்தி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அவர் அந்த அறிக்கையை ஏன் விட்டார், எப்படி வெளியிட்டார்?

அதுமட்டுமல்ல, இறந்தவர்களுடைய உடலை பிரேத பரிசோதனை செய்தவர்கள் அவர்கள் குடித்துவிட்டு இறந்தார்கள் என்று சொல்லவில்லை. தண்ணீரில் மூழ்கிய காரணத்தால் இறந்தார்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புவது, அந்த இடத்தில் பெரிய கப்பல் ஒன்று மூழ்கிய காரணத்தால் மிகவும் ஆழமாக இருக்கிறது. அதனால் அந்த இடத்துக்குச் செல்கிறவர்கள் இறந்துபோகும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அந்த இடத்தில் யாரும் குளிக்க வேண்டாம் என்று எழுதி வைக்கவும், விளம்பரம் செய்யவும், அங்கே தடுப்புச் சுவர் கட்டுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதை விவரமாக அறிக்கையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு கடல் மிகவும் கொந்தளிப்பாக இருந்தது. குறிப்பாக காவல் துறையினர் பாதுகாப்பும் இருந்தது. அந்த இடத்திற்குக் குளிக்கச் செல்ல வேண்டாம் என்று காவல் துறையினர் எச்சரித்திருக்கிறார்கள். ஆனால் குளிக்கச் சென்ற இளைஞர்கள் அவர்களை கேலி செய்துவிட்டு குளிக்கச் சென்றிருக்கிறார்கள். கடல் கொந்தளிப்பின் காரணமாக அந்த ஆழமான பகுதிக்கு இழுத்துச்செல்லப்பட்டு, அவர்கள் இறந்திருக்கிறார்கள்.



மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல
அந்தப் பகுதியில் ''எஸ்.எஸ். ஸ்டாமடிஸ்'' என்ற கப்பல்
உடைந்திருக்கிறது. உடைந்த பகுதிகள் அப்புறப்படுத்த முடி
யாத சூழ்நிலையில் அங்கே பெரும் பள்ளம் ஏற்பட்டு, இப்படிப்
பட்ட பரிதாபகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்
பட்ட விபத்துகளைத் தடுப்பதற்கு அதைச்சுற்றி தடுப்புச்
சுவர் கட்டலாமா என்பதை அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.
இதிலே உரிய நடவடிக்கையை அரசு விரைவிலே எடுக்கும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர்
தலைவரவர்களே, 16–1–1983 அன்று நடைபெற்ற இந்த விபத்
தில் ஏறத்தாழ 20 பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். அங்கே
''எஸ்.எஸ். ஸ்டாமடிஸ்'' என்ற கப்பல் உடைந்திருப்பதனால்
தான் இப்படிப்பட்ட விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன என்று
அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த விபத்து
நடந்த மறுதினமே காவல் துறையின் மூத்த அதிகாரிகள் எல்
லாம் ஒரு அறிக்கை விட்டார்கள். குடி போதையிலே போன
வர்கள்தான் இறந்துவிட்டார்கள் என்று அன்றையதினம் அறிக்
கைவிடப்பட்டது. ஆனால் அன்றையதினம் 5 இலட்சம்
பேர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே
போதுமான பாதுகாப்பு இருந்தது என்று அறிக்கையிலே சொல்லி
யிருக்கிறார்கள். 5 இலட்சம் பேர் காணும் பொங்கல் விழா
வுக்கு வருகிறார்கள் என்று தெரிந்திருந்தும், பெரும் கூட்டம்
வரும் என்று தெரிந்திருந்தும் போதுமான பாதுகாப்பு இல்லாதது
உண்மையிலேயே வருந்தத்தக்கது.

இங்கே சொல்லியிருப்பதைப்போல நீந்தி சென்று பிடிக்க
வோ, வேறு பாதுகாப்போ அங்கே ஏற்படுத்தப்படவில்லை என்ற
தகவல்தான் எங்களுக்கு வந்திருக்கிறது. இருப்பினும் இறந்து
போன 20 பேர்கள் குடும்பங்களுக்கும் அரசு உதவி ஏதாவது
வழங்குமா அல்லது முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஏதா
வது உதவி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத்
தலைவரவர்களே, ஆண்டுதோறும், இப்படிப்பட்ட காணும்
பொங்கல் அன்று ஏராளமான கூட்டம் வரும். அதற்கு வேண்
டிய பாதுகாப்புகளும் செய்யப்படும். இந்த குறிப்பிட்ட சம்
பவத்தன்றும் காவல் துறையினர் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு
களைச் செய்திருந்தார்கள். 5 இலட்சம் பேர்கள் அங்கே
வந்தார்கள் என்றால் அவர்கள் அத்தனை பேர்களும் கடலிலே
குளிப்பதற்கு வந்தார்கள் என்று பொருளல்ல. உல்லாசமாக
அமர்ந்திருப்பதும், மகிழ்ந்திருப்பதும், உண்டி அருந்துவதும் ஆன
பல மகிழ்ச்சிகரமான செயல்களில் ஈடுபட்டிருப்பார்கள்.
ஆர்வமிக்கவர்கள், தீரமிக்க இளைஞர்கள் கடலிலே இறங்கி
குளிப்பார்கள். அப்படி குளிக்கச் சென்ற இளைஞர்கள் தான்,

## 7. கவன ஈர்ப்புகள்.

### (அ) சென்னையில், கடலில் குளிக்கச் சென்ற இளைஞர்கள் மரணம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திருவாளர்கள் சு. பாலன், எல். இளையபெருமாள், செ. இராமலிங்கம், கே. ஆர். சுந்தரம், கு. ரமணி, என். வரதராஜன் மற்றும் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதைமாண்புமிகு அவை முன்னவரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. சு. பாலன் : துணைத் தலைவர் அவர்களே, ''சென்னை யில் பொங்கலன்று கடலில் குளிக்கச்சென்ற 30 இளைஞர்கள் மூழ்கி இறந்ததால் மக்களிடையே நிலவும் கவலை குறித்து' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்பு மிகு அவை முன்னவரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.—

#### அறிக்கை

ஒவ்வொரு ஆண்டும், காணும் பொங்கல் தினத்தன்று, சென்னை மெரினா கடற்கரைக்கு பெருவாரியான மக்கள் வருகை தருவது வழக்கம். இந்த ஆண்டும், காணும் பொங்கல் தினத் தன்று (16–1–1983 ஞாயிற்றுக் கிழமை) இதற்கு முன் காணாத அளவிற்கு சுமார் 5 இலட்சம் பேர் கொண்ட கூட்டம் மெரினா வில் அண்ணா சமாதியிலிருந்து காந்தி சிலை வரை கூடியது. இக்கூட்டத்தை ஒழுங்கு படுத்தவும் கடற்கரையில் ரோந்துப் பணி புரியவும், 10 குதிரைப் படையினரும், மேலும் 10 ஆய் வாளர்கள், 15 உதவி ஆய்வாளர்கள், 20 தலைமைக் காவ லர்கள், 200 காவலர்கள் மற்றும் 6 பிரிவு தமிழ்நாடு சிறப் புக் காவல் படையினர் ஆகியோர் நியமிக்கப்பட்டு, விரிவான பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதன் தொடர் பாக மீனவர்களும் படகோட்டிகளும்கூட பணியிலமர்த்தப் பட்டனர்.

2. விடுமுறையை அனுபவிக்கும் கூட்டத்தினர் அண்ணா சமா திக்கு வருகை தந்த பின்னர், கடற்கரையில் ஒவ்வொரு சிலை யாகப் பார்த்துக் கொண்டே நகர்ந்தும், மகிழ்ச்சியில் ஈடுபட் டுக் கொண்டும் இருந்தனர். கடலுக்குள் மக்கள் நீந்திச் செல் வதன் ஆபத்தைப் பற்றி பணியிலிருந்த போலீசார் திரும்பத் திரும்ப எச்சரித்தனர். குறிப்பாக ''எஸ்.எஸ். ஸ்டாமடிஸ்'' என்ற கப்பல் உடைந்து அமிழ்ந்து கிடக்கும் பகுதியின் அருகில் செல்ல வேண்டாமென எச்சரித்தனர். மற்றும் அன்றைய தினம் கடல் கொந்தளிப்பாக இருந்தது பற்றியும் மக்கள் எச்



சரிக்கப்பட்டனர். எனினும் ஆர்வமுள்ள மற்றும் தீரமிக்க இளைஞர்கள் சிலர், உழைப்பாளர் சிலையின் பின் பக்கத்தில் கடலில் குதித்து விளையாடுவதில் ஈடுபட்டனர். அவர்களில் சிலர் கொந்தளிப்பான கடலுடன் ஈடுகொடுக்கமுடியாமல் கடலில் மூழ்கி இறந்தனர்.

3. 16–1–1983 அன்று இரவு டி. 6, அண்ணா சமாதி காவல் நிலையத்தில், 20 நபர்கள் காணாமற் போனதாக புகார் கள் அளிக்கப்பட்டன. 18–1–1983 வரை 19 பிணங்கள் கரை யில் ஒதுக்கப்பட்டு, அவற்றில் 18 அடையாளம் கண்டுபிடிக்கப் பட்டன. விருகம்பாக்கத்தைச் சேர்ந்த திரு. சீனிவாசன் என்ற இளைஞரை இன்னமும் கண்டுபிடிக்கவில்லை. இறந்த உடல் களின் பிரேத பரிசோதனையில், இவர்கள் நீரில் மூழ்கியதனால் மூச்சுத் திணறி இறந்திருக்கலாம் எனத் தெரிய வந்துள்ளது.

4. விரிவான போலீஸ் பந்தோபஸ்து மற்றும் எச்சரிக்கை களும் செய்யப்பட்டிருந்தும், அன்று முன்பின் கண்டிராத பெ ரும் கூட்டம் கூடியதால், இந்த துயர சம்பவம் நடந்ததைத் தடுக்க முடியவில்லை.

5. இனிமேல் இதுபோன்ற துயர சம்பவங்கள் மீண்டும் ஏற் படாமல் பாதுகாக்கும் பொருட்டு, இந்த பழுதடைந்து கிடக் கும் கப்பலைச் சுற்றிலும் தடுப்பு ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. பாலன் : துணைத் தலைவர் அவர்களே, ஒவ் வொரு ஆண்டும் காணும் பொங்கலன்று சென்னைக் கடற் கரையில் வழக்கமாகப் பலர் தங்களுடைய குடும்பத்துடன் சென்று குளிக்கிறார்கள் என்பது போலீசாருக்கும் தெரியும், மற்றவர்களுக்கும் தெரியும். ஆனால் இந்த ஆண்டு என்றுமே இல்லாத அளவிற்கு ஏராளமான இளைஞர்கள் கடலில் குளிக்கச் சென்றிருக்கிறார்கள். ஏறக்குறைய 50-க்கும் மேற்பட்ட இளை ஞர்கள் கடலில் இழுத்துச் செல்லப்பட்டு இருப்பதாக நமக் குத் தகவல்கள் வந்துள்ளன. ஆனால் இந்த அறிக்கையின் படி பார்த்தால், 20 பேர் தான் காணாமற்போனதாக போலீ சில் புகார்கள் வந்தன என்றும், 19 பிணங்கள் வரை கரையில் ஒதுங்கியதில், 18 பேர் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டன என் றும், இன்னும் ஒரு இளைஞர் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது.

இருந்தாலும் அன்றையதினம் காவல் துறையைச் சேர்ந்த 10 குதிரைப் படையினரும், 10 ஆய்வாளர்களும், 15 உதவி ஆய்வாளர்களும், 20 தலைமைக் காவலர்களும், 200 காவலர் களும் மற்றும் 6 பிரிவு தமிழ்நாடு சிறப்புக் காவல்படையினரும் பாதுகாப்பு நடவடிக்கையாக நிறுத்தப்பட்டிருந்தனர் என்று சொல்லியிருக்கிறார்கள்.

3. நம் நாட்டின் சில பகுதிகளில் சரியான கண்காணிப்பு
இல்லாதபடியால், பாம்புத் தோல்கள் கள்ளத்தனமாக கடத்தப்
படுவதாக இந்திய அரசு குறிப்பிட்டு, அத்தகைய கள்ளக்
கடத்தலைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்
கொள்ளுமாறு மாநில அரசை அறிவுறுத்தியுள்ளது. மேலும்,
இந்திய அரசு தனது 4–1–1983 நாளிட்ட கடிதத்தில், பாம்புத்
தோல்களின் ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளதால், தனியார்
வணிகர்களிடம் பாம்புத் தோல்கள் தேக்கமுற்று இருப்பதாகத்
தெரிவித்துள்ளது. இத்தகைய தோல்களின் இருப்பில் பெரும்
பகுதி, சென்னை மற்றும் கல்கத்தாவிலுள்ள தனியார் வியாபாரி
கள் வசம் உள்ளது. எதிர் காலத்திலும் இத்தகைய தோல்களின்
ஏற்றுமதியை அனுமதிக்கக் கூடாது என்பது இந்திய அரசின்
கொள்கையென்பதாலும், மேலும், தேங்கிக் கிடக்கும் தோல்கள்
நம் நாட்டிற்குள்ளேயே விற்கப்படுவதில்லை என்பதாலும்,
இந்திய அரசு நிறுவனமாகிய பாரத தோல் கழகத்தின் மூலம்
இத்தகைய தோல்களை வாங்கச் செய்யலாம் என்று முடிவு
செய்யப்பட்டுள்ளது என இந்திய அரசு தெரிவித்துள்ளது. பாரத
தோல் கழகம், மதிப்பு மிக்கப் பொருட்களைத் தயாரித்து நம்
நாட்டிற்குள்ளேயோ, வெளியிலோ விற்பனை செய்யும் எனக்
கருதப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம், தனியார் வியாபாரி
களிடமுள்ள இருப்புகளைத் தீர்ப்பதாகும். வருங்காலத்தில் இத்
த்கைய தோல்களின் வணிகத்தை முற்றிலுமாகத் தடை செய்
வதற்கு சட்டம் ஒன்று இயற்றுவது குறித்துப் பரிசலித்து வருவ
தாகவும், இதற்கிடையில் உரிமம் பெற்ற வியாபாரிகளிடம் தேங்கி
இருக்கும் தோல்களை வாங்குவதற்கு பாரத தோல் கழகத்திற்கு
மாநில அரசு எல்லாவித ஒத்துழைப்பும் நல்க வேண்டுமெனவும்
இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

4. சென்னையிலுள்ள தனியார் வணிகர்களிடம் தேங்கியிருக்
கும் பாம்புத் தோல்கள் குறித்து முடிவு செய்யும் பொருட்டு,
இந்திய அரசின் சுற்றுப் புற சூழல் துறை இணைச் செயலாளர்
29–1–1983 அன்று தலைமை செயலகத்தில் வனம் மற்றும் மீன்
துறை செயலாளர், வனத்துறை அதிகாரிகள் மற்றும் வனவிலங்கு
பராமரிப்பு உதவி இயக்குநர் ஆகியோருடன் விவாதித்தார்.
விவாதத்தின் போது இந்திய அரசின் இணைச் செயலாளர் கீழ்க்
கண்ட கருத்துக்களை வலியுறுத்தினார் :—

(1) பாம்புகளை வேட்டையாடிப் பிடிப்பது அனுமதிக்கப்
படக்கூடாது. சட்ட விரோதமான முறையில் அவ்வாறு நடை
பெறுவதும் தடுக்கப்பட வேண்டும். சமீப காலத்தில், சென்னை
யிலுள்ள தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் சட்ட விரோதமான
முறையில் பாம்புத் தோல்களின் வணிகம் நடைபெறுவதாக
இந்திய அரசிற்கு அறிக்கைகள் வந்துள்ளன. இது முற்றிலும்
தடுக்கப்பட வேண்டும்;



(2) பதிவு பெற்ற தனியார் வியாபாரிகள் தங்களிடமுள்ள பாம்புத் தோல்களின் இருப்புகளை பாரத தோல் கழகத்திற்கே விற்பதற்கு வழி வகை செய்யலாம். இந்திய அரசின், உதவி இயக்குநரும், பாரத தோல் கழகத்தின் பிரதி நிதிகளும், தலைமை வன விலங்குக் காப்பாளரிடம் இது குறித்து தொடர்பு கொள்வார்கள்.

(3) அறிவிக்கப்பட்டுள்ள இருப்பிலைச் சரிபார்த்தல் அவசியமாகும். இது குறித்து தலைமை வனவிலங்குக் காப் பாளரும் அவரது பணியாளரும் திறமையாகச் செயல்பட வேண்டும்.

இந்திய அரசின் முடிவுகளின்படி, உரிய நடவடிக்கைகள் வனத் துறைத் தலைவர் மற்றும் தலைமை வனவிலங்குக் காப்பாளரால் ஆராயப்படுகிறது. எனவே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப் பிட்டுள்ளபடி, தேங்கியுள்ள பாம்புத் தோல்கள் முழுவதும் பாரத தோல் கழகத்தால் வாங்கிக் கொள்ளப்படும் என்ற காரணத்தால், அத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் கவலையுற வேண்டிய அவசியமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாம்புத் தோல்கள் அதிக அளவில் கள்ளத்தனமாக கடத்தப்படுவதால், அதைத் தடுக்க உறுதியான நடவடிக்கையை மாநில அரசுகள் எடுக்க வேண்டும் என்று மைய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. பாம்பை உயிரோடு பிடிப்பவர் களையோ அல்லது பாம்புத் தோலை கடத்துபவர்களையோ நம்முடைய வனத்துறை அதிகாரிகள் பிடித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்று சட்டத்தை மீறி பாம்புகளையோ அல்லது பாம்புத் தோல் களையோ சேகரிப்பவர்களை பல நேரங்களிலே வனத்துறையினர் பிடித்து, அவைகளை கைப்பற்றி இருக்கிறார்கள். சமீபத்திலே கூட 3 பேர்களிடத்திலேயிருந்து சுமார் 12 ஆயிரத்து 406 பாம்புத் தோல்கள் கைப்பற்றப்பட்டிருக்கிறது. இக்பால் டேனரி, சுகூர் டேனரி, மணி டேனரி என்று சொல்லக் கூடிய 3 நிறுவனங்களிடமிருந்து 12,406 பச்சைப் பாம்புத் தோல்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். இது போன்ற தீவிர நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற அறிக்கையில் பாம்புகளை வேட்டையாடிப் பிடிப்பது அனுமதிக்கக் கூடாது. சட்ட விரோதமான முறையில் அவ் வாறு நடைபெறுவதும் தடுக்கப்பட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்படி பாம்புகளை தடையை மீறிப் பிடிப்ப

அவர்களிலே சிலர் பரிதாபகரமாக இறந்துவிட்டார்கள். இத் தகைய துயர சம்பவம் வருந்தத்தக்க ஒன்றுதான். கருத்து வேறுபாடு இல்லை. அதிலே எப்படிப்பட்டது. மற்ற நிலைகள் எப்படி இருக்கின்றன. அவர்களுடைய குடும்ப நிலை பதை அறிந்து, அவர்கள் அரசின் உதவி தேவை என்று கேட்டால், அதுபற்றி யோசிக்கலாம். இப்போது அதுபற்றிய குறிப்பு எதுவும் இல்லை. அந்தக் குடும்பத்தினர் விண்ணப்பம் போட்டால், ஆராய்ந்து அதுபற்றி பரிசீலிக்கலாம்.

[நண்பகல் 12-00.]

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலிலே இறந்து போனவர்கள் சம்பந்தமாக வைத்திருக்கக் கூடிய விவர அறிக்கையிலே, 5-வது பகுதியாக, ''இனிமேல் இதுபோன்ற துயர சம்பவங்கள் நடைபெறாமல் பாதுகாக்கும் பொருட்டு'' என்று இருக்கிறது. என்ன தெரிகிறது என்றால் இதற்கு முன்னாலே அப்படி உஷார் தன்மை இல்லாமல் இருந்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள முடிகிறது. ஆகவே, இப்படிப்பட்ட அபாயகரமான பகுதிகளில் இளைஞர்கள் துடிப்போடு இறங்கினாலும், அபாயகரமான பகுதி என்று அறிவிப்பதோடு நின்றுவிடாமல், அவர்களை உறுதியோடு தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்யவில்லை என்று தெரிகிறது. அதன் காரணமாகத்தான் நம்முடைய தமிழகத்தின் 20 துடிப்பு உள்ள இளைஞர்களை இழந்து நிற்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அபாயகரமான பகுதி என்றால், அங்கே அதற்கான அறிவிப்புகளைச் செய்வதோடு, மீறிக் கொண்டு யாராவது இறங்கினால் அவர்களை தடுத்து நிறுத்துவதற்கு தக்க உறுதியான காவலையும் அங்கே அரசு ஏற்பாடு செய்யுமா ? அது மட்டு மல்லாமல் மறைந்து போன இளைஞர்களுடைய குடும்பங்களுக்கு ஏதாவது உதவித் தொகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்,

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடைந்து போன கப்பலின் அடிப்பாகத்தை அங்கிருந்து எடுக்க முடியாத நிலை ஏற்பட்டதினால்தான் அதனை விட்டு விட்டார்கள். அபாயகர மான பகுதி என்றுதான் எச்சரிக்கையும் செய்திருக்கிறார்கள். எச்சரிக்கையையும் மீறி இறங்கியதின் காரணமாகத் தான், அலை களினால் அந்த உடைந்த பகுதிகள் இருக்கும் இடத்திற்கு இழுக்கப்பட்டு, மூச்சுத் திணறி இறந்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட துயரமான சம்பவங்கள் நிகழ்ந்ததற்குப் பிறகு அதை படிப்பினையாக வைத்துத்தான், நாம் மேல் நடவடிக்கையை எடுக்க வேண்டும். அந்த உடைந்த கப்பல் பகுதிகளை அந்த இடத்திலிருந்து எடுக்க முடியாத நிலை இருப்பதால், அந்தப் பகுதியில்சுற்றுச்சுவர் கட்டிவிடலாம். வேறு வழியில்லை என்று அரசு ஆராய்ந்து வருகிறது.





இறந்துபட்ட அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு கொடுப் பது குறித்துக் கேட்டார்கள். அவர்கள் விண்ணப்பித்து இருப் பார்களேயானால், அவர்களின் குடும்பச் சூழ்நிலை மற்றவை களைப் பார்த்து, அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதா வது உதவித் தொகை அளிக்கலாமா என்பது பற்றி அரசு தனி யாக பரிசீலிக்க வேண்டும்.

## (ஆ) பாம்புத் தோல் ஏற்றுமதிக்கு மைய அரசு தடை

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''வெளி நாடுகளுக்குப் பாம்புத் தோல் ஏற்றுமதி செய்வதை மைய அரசு தடை செய்துள்ளதால் அத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

விஷமுள்ள மற்றும் விஷமற்ற பாம்புகள் மற்றும் பல்லிகள், விவசாயப் பொருளாதாரத்தில் ஆற்றும் சிறப்பான பங்கினையும் இந்த இனங்கள் பெருமளவில் மிகையாகப் பயன்படுத்தப்பட்டதை கருத்தில் கொண்டு, இவற்றின் தோல்களின் ஏற்றுமதிக்கு இந்திய அரசு தடை விதித்தது. 1972-க்கு முன், விஷமற்ற பாம்புகளின் தோல்களின் ஏற்றுமதிக்குத் தடையேதும் இல்லை. பின்னர், அவை கோட்டா முறையின் கீழ்கொண்டு வரப்பட்டன. அடுத்த சில ஆண்டுகளில், அவை படிப்படியாகக் குறைக்கப்பட்டு, 1975—76-ல் தடை விதிக்கப்பட்டது. ஆனால், 1976-ல் விஷ மற்ற பாம்புகளின் தோல்களை வணிகம் செய்பவர்களிடமிருந்து, தங்களிடம் அதிகமான அளவில் இருப்பு தேங்கியிருப்பதாக முறையீடுகள் வந்தபடியால், அந்தத் தடையை இந்திய அரசு தளர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவ்வாறு தளர்த் தும்போது, இனி மேற்கொண்டு தளர்த்துதல் இயலாதெனவும், தங்களது இருப்புகள் எல்லாவற்றையும் ஏற்றுமதி செய்வதன் மூலம் தீர்ப்பது அவர்களது பொறுப்பு எனவும் இந்திய அரசு தெளிவுபடுத்தியது.

2. கடந்த காலத்தில், பாம்பு மற்றும் இதர ஊர்வன வகை களை வேட்டையாடுவதும், கொல்வதும் மிகப் பெரிய அளவில் இருந்துள்ளது. எனவே, இதனால் நாட்டில் இந்த இனங்களின் நிலை வெகுவாக பாதிக்கப்பட்டதுடன், தனிப்பட்ட வணிகர் களிடம், அவற்றின் தோல்கள் தேங்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இத்தகைய தோல்களின் ஏற்றுமதிக்கான தடையை நீட்டிப்பதே இந்திய அரசின் கொள்கை. இக்காரணத்தினாலும், இத்தகைய தோல்கள் வணிகர்களிடம் தேக்க முறாமல் இருப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதும் அவசியமாகிறது.

வர்களை தண்டிப்பதற்காக அரசாங்கத்திற்கு ஏதாவது சட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன். அத்தோடு பாம்பு கடிக்க வந்தால் அதனைக் கொன்றுவிட்டால் அதுவும் தண்டனைக் குரியதாக கருதப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தை மீறி பாம்பு களை கொல்பவர்களுக்கு 2 ஆண்டுகள் வரையில் சிறை தண் டனை வழங்க வேண்டும் என்று சட்டத்திலே வகைசெய்யப் பட்டிருக்கிறது.

## 8. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு பயிரிடு குத் தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித் தல்) சட்டமுன்வடிவினை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனு மதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற் றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (ஆ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : ''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோரு கிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடி வைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



## 9. தனித் தீர்மானம்.

### மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல்—(தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து தனி யார் அலுவல்கள். தனித் தீர்மானங்கள். மாநிலங்களுக்கு கூடு தல் அதிகாரம் வழங்குதல் விவாதம் தொடர்ச்சி. திரு. என். வரதராஜன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வேண்டும் என்பதில். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் இதுவரை 50 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். எனவே பத்து நிமிடத்தில் முடித்து விடுங் கள். ஐந்தாறு உறுப்பினர்கள் பேச வேண்டி இருக்கின்றது. தீர் மானம் விரைவிலே வரவேண்டும் என்றால் சீக்கிரமாகப் பேசி முடித்துக்கொள்வது நல்லது.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வேண் டும் என்ற தீர்மானத்தின் மீது தொடர்ச்சியாக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தத் தீர்மானத்திற்கு விரைவிலே இந்த அவை வாக்களித்து மத்திய அரசிடம் வற்புறுத்த முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நாம் இந்த அவையிலே இந்தத் தீர்மானத்தை விவாதித்துக் கொண்டிருக்கும் போது மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வேண்டும் என்ற எண்ணப்போக்கு நம்முடைய மாநிலத்தைப் போல் பிற மாநிலங் களிலும் அதிகமாக வளர்ந்து வருகின்ற காட்சியைப் பார்க்கி றோம். ஆனால் மத்திய அரசிலே இருப்பவர்கள் இந்த உணர் வினை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக நாட்டிலே உள்ள மக்களின் எண்ணப் போக்குகளை ஆராய்ந்து புரிந்துகொண்டு அதற்குத் தகுந்த மாதிரி சட்டங்களை மாற்றியமைப்பதற்கு பதிலாக பல் வேறு விதமான கருத்துக்களை நாட்டிலே பரப்புவதற்கு மத்திய ஆட்சியிலே இருப்பவர்கள் முயற்சிப்பார்கள். மேலும் இந்த நாட்டிலே பிராந்திய உணர்ச்சிகள் வளர்ந்துகொண்டு வருகின் றது என்றும் அது இந்த நாட்டினுடைய ஒற்றுமையைக் குறைக் கும் என்றும் மத்திய ஆட்சியிலே இருப்பவர்கள் கூறுகிறார்கள். இன்றையதினம் நாட்டிலே இருக்கக்கூடிய மக்கள் தங்களுடைய மாநிலங்கள் முன்னேறவேண்டும், மாநிலங்களின் வளங்கள், அத் தனையும் உபயோகப்படுத்தப்படவேண்டும், தங்களுடைய மாநி லத்திலே இருந்து வருகின்ற வருவாயின் பெரும்பகுதி தங்களுடைய மாநிலத்திற்குத் தேவை என்று வற்புறுத்தினால் அது பிராந்திய வாதம் என்று கூறி நொறுக்கி எறிய மத்திய ஆட்சியிலே இருப்ப

வற்புறுத்தி வருகிறார்கள். சண்டிகர் என்ற ஒரு தலைநகரை
தங்களுக்குச் சொந்தமான தலைநகராக இருக்கவேண்டும், அது
தங்களுடைய மொழி பேசும் மக்கள் நிறைந்து இருக்கக்கூடிய
ஒரு தலைநகராக இருக்கிறது. அது எங்களுக்கு தேவை என்று
வற்புறுத்தியிருக்கிறார்கள். எதிலும் நாங்கள் செவி சாய்க்க
மாட்டோம். எங்களுடைய அரசியல் அதிகாரத்தை தவறாக
உபயோகித்து நாங்கள் நிலையாக ஏதாவது ஆட்சியை ஸ்தா
பித்துக் கொள்வதற்காக எங்களுடைய அணுகு முறையை தவறாக
உபயோகிப்போம் என்று மத்திய ஆட்சியாளர் கையாண்டதன்
விளைவு தான் இன்றைக்கு காலிஸ்தான் என்ற இயக்கத்திற்கு
வலுவூட்டுவதற்கு மத்திய ஆட்சி இன்று முயற்சி செய்யக்கூடிய
அபாயத்தை நாடு சந்தித்துக்கொண்டிருக்கிறது என்பதை நாம்
பார்க்கிறோம். அதிலிருந்து நாம் புரிந்து கொள்வது என்ன?
நாட்டின் பிரிவினைவாத சக்திகள், பிளவு வாத சக்திகள், பிற்
போக்கு சக்திகள் வலுவாவதற்கு இன்றையதினம் மத்திய ஆட்சி
தன்னுடைய கொள்கையில் முக்கியமான பங்கை வகிக்கிறது என்
பதை நாம் பார்க்கிறோம்.

இன்று ஆதி பூர்வகுடி மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கக்
கூடிய வட கிழக்கு மாநில மக்கள் 1947 ஆம் ஆண்டுக்கு
பின்னாலே அன்று இருந்த நிலையில் தான் இருக்கிறார்கள்.
அதனுடைய தொழில் வளர்ச்சி என்ன? மொழி வளர்ச்சி என்ன?
கலாச்சார வளர்ச்சி என்ன? அவர்களுடைய வறுமையை
போக்குவதற்கு திட்டங்கள் என்ன? 6-வது ஐந்தாண்டு திட்டங்கள்
நிறைவேற்றி, 20 அம்ச திட்டத்தைபிரகடனபடுத்தியும் கூட இன்
றைக்கு வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கக்கூடிய மக்களுடைய
எண்ணிக்கை வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஆகவே தான்
அப்படிப்பட்ட துயர் நிலையில் அந்த மக்களை திசை திருப்பி விட
அந்நிய மிஷனரிகள் அங்கே நுழைவதை நாம் பார்க்கிறோம்.
அதில் கூட ஒரு உறுதியான போக்கை மத்திய அரசு எடுக்க
வில்லை. நமது நாட்டுக்கு அந்நிய செலாவணிகள் வருகின்றன.
கள்ளத்தனமாக வருகின்றன. மத்திய அரசுக்குத் தெரிந்தே வரு
கின்றன. பலமிஷனரிகள் செயல்படுகின்றன. இந்த மத்திய அரசினு
டைய பொருளாதாரதன்மையினுடையபலவீனத்தின் காரணமாக
தெரிந்தே, புரிந்தே இவற்றை அனுமதித்துக்கொண்டிருக்கிறது.
வெளிப்படையாக மத்திய அரசு கண்டிக்க வரவில்லை. எதை
வைத்து கண்டிக்க வருகிறார்கள். அந்த அந்த மாநில மக்கள்
கர்நாடகத்தில், ஆந்திராவில், தமிழகத்தில், கேரளாவில், மேற்கு
வங்காளத்தில் இன்னும் பிற மாநிலத்திலுள்ள மக்கள் எழுச்சி
கொண்டு நியாயமான உரிமைகளை வலியுறுத்தி போராடுகிற
போது அதை கண்டு பிரிவினை வாதம், பிளவு வாதம், பிராந்திய
வாதம் என்று எல்லாம் சொல்வது சொத்தையான வாதம், அது
மட்டும் அல்ல சத்து அற்ற வாதம், அது திசை திருப்பக்கூடியது
என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



அதற்குக் காரணம் மத்திய அரசு தங்கள் கையில் இருக்கும்படியான அதிகாரத்தைக்கூட எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். சமீப காலத்திலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நாம் விவாதித்துக் கொண்டிருக்கின்ற இந்த இடைக்காலத்திலே நடைபெற்றதை நான் சொல்கிறேன். நீண்ட கால வரலாறுகள் நமக்குத் தெரியும். தமிழகத்தினுடைய ஆட்சி அதன் ஆயுட்காலததிலேயே இடையில் எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லாமல் கலைக்கப்பட்டது என்ற வரலாறு இருக்கிறது. கேரள ஆட்சி 1959ஆம் ஆண்டிலே எப்படி தூக்கியெறியப்பட்டது என்ற வரலாறு இருக்கிறது. வேறு சில சட்ட மீறல்களை எப்படிச் செய்தார்கள் என்று நமக்குத் தெரிகிறது. இப்படி அவநம்பிக்கையோடு மத்திய ஆட்சியை மக்கள் பார்க்கிறார்கள். நான் அதற்குள்ளே எல்லாம் போக விரும்பவில்லை. சமீபகாலத்திலே கூட நடந்த வரலாற்றினுடைய உண்மை என்ன என்பதைச் சொல்கிறேன். அரியானாவிலேயே சட்டப் பேரவைக்குத் தேர்தல் நடந்தது. மத்திய ஆட்சியில் ஆளுங் கட்சியாக இருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சி அங்கே மைனாரிட்டியாக மாற்றப்பட்டது. ஆனால் அந்த மாநிலத்திலே உள்ள ஆளுநர் மைனாரிட்டியாக இருந்த காங்கிரஸ் கட்சித் தலைவரை அழைந்து நீங்கள் மந்திரிசபை அமையுங்கள் என்று அழைக்கிறார். அப்படியானால் கட்சி மாறி என்று கூப்பாடு போடுகிறீர்களே, அந்தக் கூப்பாடுகளின் பிரநிதிகள் நீங்கள்தானே? மத்திய ஆட்சியைக் கையில் வைத்துக்கொண்டு ஒரு மைனாரிட்டியாக இருக்கும்படியான கட்சியை அதிகாரத்தை வரும்படி நீங்கள் அழைப்பு விடுவதும் உங்கள் கையில் ஆளுநர் சிக்கிக் கிடப்பதும் அரசியல் சட்டத்தை நீங்கள் உங்களுக்குத் தகுந்த மாதிரி நீட்டி வளைத்துக்கொள்வதும் மாநில அதிகாரத்திற்கு குறுக்கே நிற்பவைதானே. மத்திய ஆட்சியைக் கையில் வைத்துக் கொண்டு உங்களுடைய சொந்தநலனுக்காகப் பயன்படுத்துகிறீர்கள் என்ற அவநம்பிக்கை இன்று வளர்ந்து வருகிறது.

நான் ஒன்றைச் சொல்வேன். ஆந்திர மாநிலத்திலே கடுமையான அடியை இந்திரா காங்கிரஸ் வாங்கி இருக்கிறது. ஆனால் இந்தச் சபையில் இந்தத் தீர்மானத்தை விவாதிக்கிறபோது இடைக்காலத்திலே என்ன பார்த்தோம். ஆந்திராவிலே இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சியினுடைய முதலமைச்சர் விமான நிலையத்திலே ராஜீவ் காந்தியை வரவேற்பதிலே அவமானப்படுத்தப்பட்டார் என்ற உணர்வு ஆந்திர மக்களிடத்திலே இருக்கிறது. அவர் இந்திரா காங்கிரஸ் முதலமைச்சராக இருக்கலாம், ஆனால் அந்த மாநில முதலமைச்சர். அந்த முதலமைச்சர் எவ்வாறு அவமானப்படுத்தப்பட்டார் என்ற உண்மை ஆந்திரச் சட்டப் பேரவைத் தேர்தலிலே மிகப் பலமாக அடிபட்டது, ஆந்திர மக்களின் உள்ளத்திலே அது எழுந்தது. அதனுடைய அடியாகத்தான் மத்திய ஆட்சியிலே இருக்கும்படியான கட்சி ஏற்கவேண்டி இருந்தது.

வர்கள் முயற்சிப்பது அபாயகரமான போக்கு. இந்த நிலையில்
கூட இவ்வளவு சூழ்நிலை வளர்ந்த பிறகும் கூட மத்திய அரசு
ங்களுடைய கொள்கையை மாற்றாமல் திசை திருப்பும்படியான
போக்கு இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும்.

இதுபற்றி இன்னும் தொடர்ச்சியாகச் சொல்ல வேண்டும்
என்றால் பிரிவினை வாதம், பிற்போக்கு வாதம், பிளவு வாதம்
என்பதை இன்றைக்கு இந்தியாவிலே உள்ள சில மாநிலங்களிலே
இருப்பவர்கள் பின்பற்ற முயற்சிக்கிறார்கள் என்பதையும் பார்க்
கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள்
ஆங்காங்கே நின்றுகொண்டிருக்கக் கூடாது. இருக்கைகளுக்குச்
செல்லவேண்டும்.

**திரு. என். வரதராஜன் :** துணைத் தலைவர் அவர்களே,
நிச்சயமாக நாம் ஒன்றைத் தெரிந்துகொள்ளவேண்டும். இன்
றைக்கு பிரிவினை வாதமும், பிற்போக்கு வாதமும் பல்வேறு
மாநிலங்களில் தலைவிரித்தாடுவதை நாம் அபாயகரமானதுஎன்று
கூறுகிறோம். அதுபற்றி கவலைப்படுகிறோம். இந்த நாட்டி
னுடைய அரசியல் இயக்கத்தில் அப்படிப்பட்ட போக்குகள் இருப்
பதை அப்புறப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்
கிறோம். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அதிலே உறுதியாக
இருக்கின்றது. இன்றைக்கு வட மாநிலங்களிலே அப்படிப்பட்ட
அபாயத்தை நாடு சந்தித்துக்கொண்டிருக்கின்றது, அசாமில்,
மேகாலயாவில், மிசோராமில் இப்படிப்பட்ட நிலைமைகள்.......

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ப. பொன்னுரங்கம்):**
மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கே நின்றுகொண்டிருக்கக்
கூடாது. அவரவர்கள் இருக்கைகளுக்குச் செல்லுமாறு கேட்டுக்
கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன் :** மாற்றுத் தலைவர் அவர்களே,
வட கிழக்கு மாநிலங்களிலே இன்றையதினம் ஒரு பிரிவினை
வாதம், பிற்போக்கு வாதம் தலைவிரித்து ஆடுவதைப் பார்க்கி
றோம்.

[பிற்பகல்—12-10]

அதேபோல் இன்றைக்கு பஞ்சாப் மாநிலத்திலே காலிஸ்தான்
என்ற ஒரு பிரச்சனையை முன்கிளப்பி சிலவிதமான சக்திகள்
இன்றையதினம் அங்கே சீக்கியர்களுக்கும் இந்துக்களுக்கும் ஒரு
கடுமையான மோதல்களை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள் என்
பதை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட முயற்சிகளுக்கு பின்
னாலே அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் இந்த சந்தர்ப்பத்தை
உபயோகித்துக்கொண்டு ஊடுருவி நின்று அப்படிப்பட்ட சக்திகள்



தங்களுக்கு ஆதரவு திரட்டிக்கொண்டு இந்திய ஜனநாயகத்திற்
கும், இந்தியாவின் ஒற்றுமைக்கும், இந்தியாவின் முற்போக்குத்
தன்மைக்கும் இன்று உலை வைக்க முயற்சிக்கிறார்கள் என்ற
ஆபத்தை நாம் பார்க்கிறோம். அதை அப்புறப்படுத்த வேண்
டும் என்று நாம் உறுதியாக எண்ணுகிறோம். இந்த அடிப்படை
யான ஊனங்கள் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதையும்
இந்த நாடு கண்டு கொண்டிருக்கிறது. இதற்கும் மத்திய ஆட்சிக்
கும் என்ன பொறுப்பு என்பதையும் நாம் பார்க்க வேண்டி இருக்
கிறது என்று நாம் உணர்த்த வேண்டியிருக்கிறது. உண்மையில்
சொல்லப்போனால் ஆசாம் போன்ற மாநிலத்தினுடைய தேச
விடுதலைப் போராட்டத்திலே அது வகித்த பங்கை நாம் இன்றைக்
கும் பெருமைப்பட நாம் பார்க்கிறோம். இந்த மாநிலத்தினு
டைய ஆளுநர் மாண்புமிகு திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள்
ஒரு காலத்தில் இங்கு தலைமை ஏற்றார்கள். அப்படிப்பட்ட
தேச பக்தர் நிறைந்த மாநிலம் தான் ஆசாம் மாநிலம். ஆனால்
இன்றையதினம் திசைத் திருப்பி அங்கே சுவரொட்டிகளில் நாம்
என்ன பார்க்கிறோம். இந்தியாவில் இருக்கக்கூடிய மக்களைப்
பற்றி இந்திய நாய்களே ஆசாமிலிருந்து வெளியேறுங்கள் என்று
சுவரொட்டிகளில் போடுகின்ற அளவுக்கு அந்த மக்கள் ஈடுபட்டி
ருக்கக்கூடிய காட்சியை நாம் பார்க்க முடிகிறது. அந்த மாநில
மக்களுடைய துன்ப துயரங்களை புறக்கணித்து அவர்களுடைய
தொழில் வளர்ச்சிக்கு அவர்களுடைய வளங்களை புறக்கணித்து
மத்திய ஆட்சி ஒருதலைப்பட்சமான போக்கு இன்று வளர்ந்து
அந்த மக்களை இன்று வேறு சில சக்திகள் திசை திருப்பி அமைதி
அற்ற ஒரு போக்கை ஆசாமில் உருவாகுவதற்கு மத்திய அரசினு
டைய கொள்கை தான் காரணம் என்பதை அடிப்படையிலே
எடுத்துக்காட்டவேண்டிய பொறுப்பு நம்முடைய தமிழக மக்
களுக்கு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி சால்ல விரும்பு
கிறேன்.

பஞ்சாபில் இருக்கக்கூடிய மக்களுக்கு காலிஸ்தான் பிரச்சனை
ஒன்று கவலைத் தரக்கூடிய ஒரு பிரச்சனை என்று சொன்னால்
கூட சமீபத்தில் கையாண்ட முறைகளினால் அது வலுவு அடை
யும் என்ற ஆபத்தை வளர்த்து வருகிறது. எத்தனை முறை
டெல்லியிலே பேச்சு வார்த்தைகள் நடந்து அது முடிவு அடை
யாமல் அனுமார் வால் போல் நீண்டு கொண்டு இருக்கிற காட்
சியை நாம் பார்க்கிறோம். சமீபத்தில் அரியானாவில் நடந்த
சட்டமன்ற தேர்தலிலே அந்த 'ரவி பியாஸ்' நதியினுடைய
நீரை அந்த மக்களை கலந்துகொள்ளாமல் பஞ்சாப், ராஜஸ்தான்,
அரியானா மக்களுக்கு பொதுவான நதி நீரை அந்த 3 பகுதி
மக்களையும் கலந்து கொள்ளாமல், அந்த 3 மாநில கட்சிகளை
யும் கலந்துகொள்ளாமல், அங்கு இருக்கும்படியான அரசியல்கட்சி
களை கலந்துகொள்ளாமல், அரியானா தேர்தலில் வெற்றிபெற
வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக அந்த 'ரவி பியாஸ்'
நதி நீரை திருப்பி விட்டதன் காரணமாக இருந்த கோபமும்
அதற்குள் அடங்கி நிற்கிறது. நீண்ட காலமாக பஞ்சாப் மக்கள்

போட்டு ஊறு வைக்கிறீர்கள். சிலவற்றை நிராகரிக்கிறீர்கள் அதுவே தேசத்தினுடைய அபிவிருத்தியிலே குறுக்கே நிற்பவர்கள் நீங்கள்; மாநில மக்களுடைய உரிமைகளுக்கு குறுக்கே நிற்பவர்கள் நீங்கள். உங்கள் கையில் இருக்கிற அதிகாரங்களை ஓரவஞ்சனையாக உபயோகப்படுத்துகிறவர்கள் நீங்கள் என்ற அவநம்பிக்கை இந்த நாட்டில் பரவியிருக்கிறது. அது பலப்பட்டுக் கொண்டு வருகிறது. அது வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது என்ற உண்மையை இந்த நாடு அறியும்; மத்திய ஆட்சியிலே இருப்பவர்கள் அறியாமல் கண்ணை மூடிக்கொண்டு, அதிகாரங்களை வைத்துக்கொண்டு மிரட்டலாம், திசை திருப்பலாம் என்று இருக்கிறீர்கள், அதேபோலத்தான் கையில் இருக்கக்கூடிய அதிகாரங்களை வைத்துக்கொண்டு நம்மை பழிவாங்குவதை போலவே நம் நாட்டிலுள்ள செல்வாதாரங்களை கூட (மணியடிக்கப்பெற்றது) எவ்வாறு உபயோகப்படுத்துகிறார்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். நம்முடைய கையிலே இருக்கும் படியான செல்வாதாரங்களைத் திரட்டும்படியான கொள்கை அவர்கள் மத்திய அரசிற்கு உண்டா என்று பார்க்க வேண்டும். இந்த அவைக்கு நான் சொல்ல விரும்புவது, சோவியத் யூனியன், சோஷலிஸ்ட் புண்ணிய பூமியில்தான் இன்றைக்கு சமத்துவம் நிறைந்த ஒரு ஆட்சியை பலமொழிகள் பேசுகிற மக்கள், பல்வேறு கலாச்சாரம் கொண்ட மக்கள்—இன்றைக்கு ஜார்ஜியா போன்ற வளர்ச்சி அடைந்த மாநிலமும், அஜர்ஜிட்டான் போன்ற மாடு மேய்க்கும் நாகரிகத்தைக் கொண்டிருக்கும் மாநிலமும் தொழில் வளர்ச்சியில், விஞ்ஞான வளர்ச்சியில், கலாச்சார வளர்ச்சியில், கல்வி வளர்ச்சியில் ஒன்றிணைந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சோவியத் பொருளாதாரத்தை நீங்கள் கொண்டு வரமுடியாது. ஆனால் இன்றைக்கு உங்களுடைய கொள்கை என்ன? இந்த நாட்டு மக்களுடைய துன்பத்திற்குண்டான அடிப்படையான காரணம் என்ன? இந்த நாட்டிலே ஏகபோக செல்வம் வளர்ந்து கொண்டிருக்கிறது. பெருகிக் கொண்டிருக்கிறது; அதன் காரணமாக மாநில உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அதனுடைய கொள்கை என்ன? தமிழ்நாட்டிலே எனது அன்பிற்குரிய நண்பர், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் இங்கே குரல் கொடுத்து வருவதை நான் மகிழ்ச்சியோடு பார்க்கிறேன். அவருடைய தொகுதி வளம் நிறைந்தது அல்ல; வானம் பார்த்த பிரதேசம்; பாலைவனம் போன்ற பகுதியில் மூலப் பொருள்கள் கிடைக்கின்றன; ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால் ஆயிரம் குறுக்கீடுகள்; இல்லாத பொல்லாத காரணங்கள் சொல்லப்படுகின்றன. யாரோ ஏகபோக மூலதனக்காரர் அங்கே தலையிட்டால் நிலையே வேறு; ஒரு மாநில அரசே நியாயம் என்று வற்புறுத்தினால் கூட அதற்கு தடை விதிக்கப்படு



கிறது என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்? முதலில் ரெயில் பாதையை காரணம் காட்டினார்கள். இப்போது நிலக்கரி இல்லை என்று காரணம் காட்டி அந்த மக்களுடைய சிறந்த வாழ்க்கைக்கு உதவி செய்யக்கூடிய தொழிற்சாலைக்கு இன்று தடை விதிக்கிறார்கள். இப்படி நீங்கள் செல்வாதாரத்தை பயன் படுத்துகிறீர்கள். இங்கே பொருள் கிடைக்கிறது; இங்கு மின்சாரம் கிடைக்கிறது; இங்கே தண்ணீர் கிடைக்கிறது; இங்கே வறுமை இருக்கிறது; இந்த நான்கையும் எப்படியும் இணைத்து தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்ற கொள்கை இந்த நாட்டினுடைய மத்திய அரசிற்குண்டா? அல்லது ஏகபோக முதலாளிகளுக்கு உண்டா? அவர்கள் எவ்வளவு சுலபமாகத் தங்களுடைய இலாப நோக்கத்தைப் பெருக்கிக் கொள்ள முடியுமோ அங்கு தொழில்களை ஆரம்பிப்பார்கள்; மூலதனத்தைப் போடுவார்கள். அதற்கு இசைவை மத்திய அரசாட்சி தெரிவிக்கும். இல்லையென்றால் எப்படி அவர்களது மூலதனம் கூடியிருக்க முடியும்? 1947 ஆம் ஆண்டு கணக்கை நீங்கள் பார்ப்பீர்களேயானால் டாடாவுக்கும், பிர்லாவுக்கும் மொத்தமாகச் செல்வாதாரச் சொத்து ரூ. 50 கோடி என்பது தெரியும். இன்று அவர்களுடைய சொத்து ரூ. 1,800 கோடி. அப்படியானால், தமிழ்நாடு வறுமையில் துடிக்காமல் என்ன செய்யும்? அல்லது மற்ற மாநிலங்கள் இன்று வறுமையில் துடிக்காமல் என்ன செய்யும்? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வற்புறுத்துவதெல்லாம் மாநிலங்களின் அதிகாரம், மாநில மக்களுடைய நல உரிமைகள் பாதுகாக்கப்படுவது இந்த ஏகபோகக் கொள்கையோடு இணைந்திருக்கிறது. மாநில அதிகாரங்களுக்கு நாங்கள் போராடுகிறோம். என்று சொன்னால் ஏகபோகக் கொள்கையை எதிர்த்துப் போராடுகிறோம் என்று அதற்கு முழு அர்த்தம் கொள்ள வேண்டுமென்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதனுடைய ஒரு பகுதிதான் இந்த மாநிலத்திலே ஆளும் கட்சிக்கும், இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய பிரதான எதிர்க்கட்சிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பாக, இதய பூர்வமாக எடுத்துக் காட்ட விரும்புவது எல்லாம், இந்த மாநிலத்தினுடைய நல உரிமைகளைப் பாதிக்கும்போதே, அவர்களுடைய கையிலே இருக்கிற செல்வாதார உரிமையை ஓர வஞ்சகமாகப் பிரயோகப்படுத்துகிறார்கள். நம்முடைய நாட்டுக்குத் தேவையான செல்வாதாரத்தை எடுக்க வேண்டிய இடத்தில் எடுக்க மறுக்கிறார்கள். நாம் ஏதாவது சீரிய கொள்கையைச் சொன்னால் கூட அதைப் புறக்கணிக்கிறார்கள். இன்று நிலப் பிரபுத்துவத்தைக் கட்டுப்படுத்தாமல், ஏகபோக மூலதனத்துக்குத் தடை விதிக்காமல், அந்நியச் சுரண்டலுக்கு உள்ள வழியைக் கட்டுப்படுத்தாமல், இருந்தால் இந்த நாட்டினுடைய செல்வாதாரம் விரைவில் ஏறுமா? அப்படிப் பட்ட ஒரு மாற்றுக் கொள்கையினை இன்றைக்கு நாம் முன்வைக்க வேண்டும். மாநிலங்களுக்குக்

இன்றைக்கு வேறு ஒன்றைப் பார்க்கிறோம்.
நதிநீரை எதற்காகப் பயன்படுத்தினீர்கள்? ரவி-பியாஸ்
சனையாக அரியானா மாநிலத்திற்குக் கொடுத்து அரசியல் ஓரவஞ்
ஓட்டைப் பெறுவதற்காக பஞ்சாப் மாநில மக்களின் அவர்களுடைய
எதிராக செயல்படவில்லையா? அதேபோன்று நலன்களுக்கு
பிரச்சினையிலே தஞ்சை மாவட்டத்தை நாம் காவிரி
இந்த மாநில மக்கள் ராஜராஜசோழன் பார்க்கிறோம். நீர்ப்
யாக்கிய மாநில மக்கள், அங்கே 30 தஞ்சையை தஞ்சை
தண்ணீர் வரவேண்டும் என்பதற்காக லட்சம் ஏக்கர் நிலத்திற்கு
இன்றைக்குப் பாதிக்கப்படுகிறபோது கடுமையான வறட்சியால்
உள்ள அரசை நிர்பந்தப்படுத்தி கர்நாடக மாநிலத்திலே
அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறபோது தன் கட்சியினுடைய ஆட்சி
யிட்டு இந்த மாநிலத்திற்குத் தேவையான நியாயமாகத் தலை
கொடுப்பதற்கான முன்முயற்சியை மத்திய தண்ணீரைப் பெற்றுக்
இந்த உண்மையை தமிழகம் உணர்ந்து அரசு எடுக்கவில்லை.
பித்து, பிரிவினைபித்து என்ற வாதத்திலே இருக்கிறது. பிரிவினைப்
உண்மையிலேயே அந்த ஆட்சி விரும்பியிருந்தால் ஒரு பொருளும் இல்லை
லமைச்சர்களைக் கூப்பிட்டு அல்லது தமிழ்நாட்டிலே மாநில முத
அனைத்துக் கட்சிகளையும் அழைத்துப் பேசி கர்நாடகத்திலே உள்ள
னியா அல்லது வேறு அணைகளில் எவ்வளவு நீர் இருக்கிறது என்று
பார்க்கட்டும், சமத்துவம் நிறைந்த முறையிலே பேச்சுவார்த்தை கபி
நடத்தி வாடிக்கொண்டிருக்கக்கூடிய 10 லட்சம் ஏக்கர் சம்பா
பயிரைக் காப்பாற்றுவதற்காக ஏதாவது தண்ணீர் கொடுக்க
யுமா என்று பார்க்கவேண்டாமா? நாம் 30 டி.எம்.சி. தண்ணீர் முடி
கேட்கிறோம். அதிலே எது கொடுக்கமுடியும் என்ற உண்மையை
சொல்வார்களானால் தமிழக மக்களின் மனம் நிறைந்திருக்கும்.
தமிழக விவசாய மக்களும் சரி, இருப்பதைப் பிரித்துக் கொடுக்
கிறார்கள் என்று நினைக்கமுடியும். ஆனால் அதற்கு மாறாக
இந்தத் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக ஓரவஞ்சனையாக
தமிழக மக்களை புறக் ணித்தது என்ற காரணத்தினால் ஏற்
பட்ட அபாயத்தை இன்றைக்குத் தமிழ்நாடு அனுபவித்துக்கொண்
டிருக்கிறது. இது மத்திய ஆட்சியினுடைய ஓரவஞ்சனையான
கொள்கையல்லவா? இன்று தமிழ்நாட்டின் உணவுத் தேவை
அதிகமாக இருக்கிறது. நாம் வசதியில்லை, இங்கே கொடுக்க
வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். மாநில சர்க்காரின் கொள்
முதல் கொள்கையிலே தவறு செய்திருக்கிறது என்று சொல்
லுங்கள் அல்லது மத்திய தொகுப்புக்கு காலாகாலத்திலே கொடு
க்கவில்லை என்று சொல்லுங்கள், இதில் உண்மை என்ன, பொய்
என்ன என்பதை நாடு கண்டறியும், தவறை திருத்திக்கொள்ளட்
டும். இன்றைக்கு அரிசி கிலோ 5 ரூபாய், 6 ரூபாய் என்று
விலையேறிக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு நம்மிடமுள்ள
கையிருப்பைக்கொண்டு உணவு தானியத்தைக் கொண்டு
நியாயவிலைக் கடைகளில் கொடுத்துவருகிறோம் என்று சொல்லப்
படுகிறது. இந்த நிலையிலே மக்களின் வறுமையையும் துன்பத்
தையும் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கக்கூடாதா?





நீங்கள் மத்திய தொகுப்புக்குக் கொடுக்கவில்லை என்ற விதண்டாவாதத்தைப் பேசிக்கொண்டு காங்கிரஸ் அல்லாத ஒரு மாநில அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் முயற்சியில் மத்திய அரசு தன் கொள்கையைக் கையாள்கிறதா என்பதுதான் கேள்வி.

[பிற்பகல் 12-20]

ஆகவே நீங்கள் கையாள்வது எல்லாம் நியாயத்தின் அடிப்படையில் இல்லை. அரசாங்க அதிகாரங்களை உங்கள் கையில் வைத்துகொண்டு ஓரவஞ்சையாக நடவடிக்கை எடுப்போம்; அப்படிப்பட்ட நடவடிக்கையின் ஒரு பகுதிதான் தமிழ்நாட்டிற்கு அரிசி கொடுக்க மாட்டோம்; உணவு தானியங்கள் கொடுக்க மாட்டோம் என்று சொல்லும்படியான ஒரு காட்சியை நாம் பார்த்தோம்.

மின்சார நெருக்கடியில் தமிழகம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. நாம் நிலக்கரிக்கு தவம் கிடக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய ஏற்றத் தாழ்வுகள் உங்களுக்குத் தெரியும். 22 மாநிலங்களும் ஒன்று போல வளரவில்லை. சில மாநிலங்களில் வளம் நிரம்ப இருக்கிறது; சில மாநிலங்களில் வளம் குறைவாக இருக்கிறது. சில மாநிலங்களில் நதி நீர் அதிகமாக இருக்கிறது; சில மாநிலங்களில் நதி நீர் இல்லை. இந்த வளங்களை ஒன்றுபடுத்துவது தான் மத்திய ஆட்சியினுடைய கொள்கை என்று கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்பதை தான் நம்முடைய அனுபவத்தில் பார்க்கிறோம். ஆகவே ஐந்தாண்டுத் திட்டங்களாக இருந்தாலும் இதே நிலை தான். இங்கேயிருந்து அமைச்சர்கள் டெல்லிக்கு ஓடவேண்டும். பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டும். ஆகவே 50 கோடி ரூபாய் கொடுத்து விட்டோம் என்று அவர்கள் சொன்னால், நம்முடைய அமைச்சர்கள் கூட ஏதோ யாரோ கொடுத்து விட்டார்கள் என்பதில் சந்தோஷமாக விமானத்தில் பறந்து வந்து பத்திரிகைகளுக்கு அறிக்கை விடவேண்டியது என்ற நிலையில் தானே நம்முடைய தமிழகமும் மற்ற மாநிலங்களும் இருக்கின்றன. ஆகவே நம்முடைய செல்வாதாரத்திலிருந்து கிடைக்கும்படியான வரி தானே இது; ஆகவே அந்த மாநில மக்களுக்கு பெருவாரியான அளவிற்கு தங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற இந்த நிதியை பங்கீடு செய்து கொடுக்கக் கூடிய கொள்கை இல்லாத காரணத்தால் நீங்கள் அதிகாரங்களை கையில் வைத்துக்கொண்டு கையில் வைத்திருக்கிற நிதி ஆதாரங்களைக் கொண்டு மாநிலங்களை ஏமாற்றுகிறீர்கள். அல்லது ஒன்றுக்கு விரோதமாக இன்னொன்றை திசை திருப்பி விடுகிறீர்கள். வரவேண்டிய தொழிற்சாலைகளுக்கு தடை விதிக்கிறீர்கள். போட்டு அனுப்புகிற சட்டங்களைக் கூட ஊறுகாய் பானையில் போட்டு வைத்துக்கொள்கிறீர்கள். இந்த மாமன்றம் தானே போட்டு அனுப்பியது, பினாமி நிலங்களை கைப்பற்ற வேண்டுமென்ற சட்டம். இன்றைக்கு பல்வேறு மாநிலங்களில் சட்டத்திருத்தங்கள் செய்திருக்கிறார்கள். நிலச் சட்டத்திலே பல திருத்தங்கள் செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் மத்திய கிடங்கிலே ஊறுகாய் பானையில்

அனைத்து தேசிய மொழிகளும் சம அந்தஸ்துடன் வளர்
வதற்கான புதிய கொள்கையை உருவாக்கிட வேண்டும். இதற்கு
மேலே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை இந்த வழியிலே
திருத்துவதற்கான முயற்சிகளைக் கொண்ட ஒரு பொது மாநாட்
டினை மத்திய சர்க்கார் கூட்டிட வேண்டும். மாநில சர்க்கார்
களும், மாநிலங்களினுடைய ஜனநாயக இயக்கங்களும் இதற்
காகக் குரல் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி, இந்தத்
தீர்மானத்தை முன்மொழிந்த மாண்புமிகு உறுப்பினர் திரு.
உமாநாத் அவர்களுடைய தீர்மானத்தை நான் வழி மொழிந்து
இதற்கு இந்த அவை ஆதரவு தர வேண்டுமென்று கேட்டு,
என்னுடைய பேச்சை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு
பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாநிலங்களுக்கு அதிக
அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அனைத்து
மாநிலங்களிலேயும் வலுத்துக் கொண்டிருக்கக் கூடிய இந்தச்
சூழ்நிலையில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படு
வதற்கு மாநில முதலமைச்சர்களுடைய கூட்டத்தைக் கூட்ட
மைய அரசு முடிவெடுத்தாக வேண்டுமென்ற விவாதத்தை நாம்
நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தச் சூழ்நிலையிலே மற்ற
மாநிலங்களிலே உள்ள அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்
அல்லது அரசியல் பொறுப்பு வகிக்கின்றவர்கள் என்று இல்லாமல்,
பல்வேறு மாநிலங்களிலே இருக்கின்ற மக்களே தங்களுடைய
உணர்வை, அந்தந்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்
பட்டாக வேண்டும். எங்களுடைய மாநில வளர்ச்சி பாதிக்கப்
படுகிறது என்கின்ற மக்கள் உணர்வுகளைத் தேர்தல்கள் மூலமாக
ஆந்திரத்திலேயும், கர்நாடகத்திலேயும் வெளிப்படுத்தியிருக்
கின்ற சூழ்நிலையிலே நாம் கேட்டுக் கொண்டிருப்பது, கூடுதல்
அதிகாரம் வேண்டும். கொடுங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்
கின்ற இதே சூழ்நிலையிலே மைய அரசானது இருக்கின்ற
அதிகாரங்களையே, இப்பொழுது மாநிலங்களுக்கு இருக்கின்ற
கொஞ்ச நஞ்ச அதிகாரங்களையே எடுக்கின்ற ஒரு சூழ்
நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. அந்தக் காரணத்
தினால் இந்தத் தீர்மானத்தை விரைவாக நிறைவேற்றி, மைய
அரசை வற்புறுத்தும் பணியை, மற்ற மாநிலங்களையும்
ஒருங்கிணைத்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட
வேண்டுமென்ற கோரிக்கையினை வற்புறுத்துகின்ற வகையிலே
மற்ற மாநிலங்களையும் இணைத்து, அதற்குத் தலைமை தாங்கு
கின்ற பொறுப்பினைத் தமிழகம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
இன்றைய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்து
நான் ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விழைகின்றேன்.



1935-ஆம் ஆண்டுச் சட்டம் அந்நியர்கள் ஆண்ட சட்டம்.
அந்தச் சட்டத்தினையே அன்றைக்கு இந்திய நாட்டின் விடு
தலைக்காகப் போராடிய காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்
கள், 1935-ஆம் ஆண்டினுடைய சட்டத்தையே காலனி ஆதிக்கச்
சட்டம் என்று கூறினார்கள். கடுமையான ஆதிக்கம் செலுத்து
கிறது, மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்கள் கிடைக்கவில்லை.
அந்நிய நாட்டுச் சட்டம், அந்தச் சட்டம் ஆதிக்க உணர்வைக்
கொண்ட சட்டமாக இருக்கிறது என்று 1935-ஆம் ஆண்டுச்
சட்டத்தையே அன்றைய அரசியலமைப்புச் சட்டத்தையே, இந்த
நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய காங்கிரஸ் இயக்கத்
தைச் சேர்ந்தவர்கள் விமர்சித்தார்கள். ஆனால், இன்றைக்கு
உள்ள நிலைமை என்ன ?

1935-ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்திலே மாநிலங்
களுக்கு என்னென்ன உரிமைகள் கொடுக்கப்பட்டிருந்தனவோ
அவைகளிலே சில உரிமைகள்கூட இன்றைக்கிருக்கின்ற அரசிய
லமைப்புச் சட்டத்திலே பறிக்கப்பட்டிருக்கின்றன. 1935-ஆம்
ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, சிறுசிறு இரயில்
வேக்களைக்கூட நடத்தவும், மருந்து தயாரிப்பது போன்ற அதி
காரங்களும் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால்,
இப்பொழுது உள்ள சூழ்நிலை என்ன ? 1935-ஆம் ஆண்டுச்
சட்டத்தை, காலனி ஆதிக்கச் சட்டம் என்றும், மாநிலங்களை
அடிமைப்படுத்துகின்ற சட்டம் என்று வர்ணிக்கப்பட்டதே, அந்த
அந்நியர்கள் இந்த நாட்டை ஆள்வதற்காக வைத்திருந்த சட்டத்
திலேயிருந்த அளவிற்குக் கூட உரிமைகள் இன்றைக்கு மாநிலங்
களுக்கு வழங்கப்படவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்
மையாகும்.

அதிலே இருக்கின்ற அதிகாரங்களே மிகச் சொற்பமானவை
என்பதைவிட, அற்பமான அதிகாரங்கள் என்று சொல்லலாம்.
அதையும் பிடுங்குகின்ற முயற்சி நடக்கிறது. இந்தக் குரலைத்
தமிழகத்தில் மட்டுமல்ல; பல்வேறு மாநிலங்களிலும் அதிக அதி
காரங்கள் வழங்கப்பட வேண்டும், இருக்கின்ற அதிகாரங்களைக்
கூராக்க வேண்டும், மைய அரசினுடைய அதிகாரங்களைப் பகிர்ந்
தளிக்க வேண்டும் என்கின்ற குரல் ஓங்கிக்கொண்டிருக்கின்ற சூழ்
நிலையிலே, இருக்கின்ற அதிகாரங்களையும் பிடுங்குவது, உண்
மையிலேயே இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற மக்க
ளுடைய உணர்வினை மதிக்காத நிலையிலேதான் மைய அரசு
நடந்து கொண்டிருக்கின்றது என்கின்ற கருத்தை நான் வலியுறுத்
திக் கூறவிரும்புகிறேன்.

சமீபத்திலே பல்வேறு மாநிலங்களிலேயும், மாநிலங்களுக்கு
அதிக அதிகாரங்களைக் கொடுங்கள் என்று மக்கள் போராடு
கின்ற ஒரு சூழ்நிலை உருவாயிருக்கின்ற நிலையில், இருக்கின்ற
அதிகாரங்களையும் எடுக்கின்ற காரணத்தினால்தான் கடந்த
வாரம் '' டெலகிராப் '' என்கின்ற பத்திரிகையிலே எழுதப்
பட்டிருக்கிறது, இந்திய நாட்டின் பிரிவினை வாதிகள் மாநிலத்

தில் இல்லை : டெல்லியில்தான் இருக்கிறார்கள் என்று தெளி
வாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. மாநிலத்திலே
கட்சிகளோ அல்லது மாநிலத்திலே இருக்கின்ற இருக்கின்ற
களோ, மற்ற நபர்களோ பிரிவினைவாதிகள் அரசியல் கட்சி
யிலேயே இந்தியத் துணைக் கண்டத்தைத் அல்ல, உண்மை
கான திட்டங்களுக்கு உறுதுணையாக துண்டு போடுவதற்
ணத்திலே இருக்கின்ற டெல்லி தலைமைச் இருப்பது டெல்லிப்பட்ட
மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. செயலகம்தான் என்று

"As is usual these dıys the reıortage in the newspapers is all
wrɔng. The secessionists who are conspiring to slice up the
co nt.y are not necessarily the ones in the No.th Eastern States,
or in Assam or in Punjab, they are, most of thcm, in New Delhi
iıvesting sıch structures as the Udyog Bh.van o. Y.jana Bhavan"

இந்த நிலையிலே இன்றைக்கு மத்திய அரசு இருந்துகொண்
டிருக்கிறது. மாநிலத்திற்கு வழங்குவதற்கான அதிகாரங்கள் மிக
சொற்பமானது. அதைக்கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. உமா
நாத் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிகின்றபோது மிகத்
தெளிவாகக் குறிப்பிட்டார்கள். மாநிலத்திற்கு இருக்கிற அதி
காரங்கள்—சொல்லப்போனால் மிகத் தெளிவாக அரசியல்
அமைப்புச் சட்டத்தைப் பயன்படுத்தினால் மாநிலத்திற்கு என்று
எந்த ஒரு அதிகாரமும் கிடையாது. கூடுதல் அதிகாரம் கொடுக்க
வேண்டும் என்று சொல்லியிருக்கிற தீர்மானத்தைக்கூட என்னு
டைய கருத்தின்படி மாற்ற வேண்டும் என்று கருதுகிறேன்.
அரசியல் அமைப்புச் சட்டத்தின் 249 பிரிவினை மைய அரசு
பயன்படுத்த ஆரம்பித்தால் ஒரு அதிகாரம் கூட இல்லை. மாநில
அரசு ஒரு முனிசிபாலிடி என்பதைவிட அரசியல் அமைப்புச்
சட்டம் 249-ஐ மைய அரசு பயன்படுத்தினால் எந்த ஒரு அதி
காரமும் மாநிலத்திலே கிடையாது என்கிற சூழ்நிலைதான். இப்
பொழுது இருக்கின்ற அதிகாரம் என்ன ? பள்ளிக்கூடம் கட்டு
வது அது மாநில அரசினுடைய பொறுப்பு. சாலை போடுவது
அது மாநில அரசின் பொறுப்பு. கல்வி சொல்லித்தருவது மாநில
அரசின் பொறுப்பு. ஆஸ்பத்திரியில் மருந்து கொடுப்பது இது
நம் செலவு. சட்டம் ஒழுங்கை நிறைவேற்ற வேண்டும் என்பது
மாநில சர்க்காரே செய்ய வேண்டும். இது மிகப் பெரிய
பொறுப்பு. செலவை எல்லாம் நமது மாநில சர்க்கார் தலை
யிலே. சிறைச்சாலையா அது மாநில சர்க்கார் தான் கவனிக்க
வேண்டும். மற்றும் வயதானவர்களைக் கவனிக்க வேண்டுமா,
அதையும் மாநில அரசே கவனிக்க வேண்டும். பழங்கால மியூ
சியம் பாதுகாக்கப்பட வேண்டுமா ? அதையும் நாமே காக்க
வேண்டும். சூதாட்ட விடுதிகளை கண்காணிக்க வேண்டுமா ?
அதையும் நாமே பார்க்க வேண்டும். இறுதியாக போகின்ற
சுடுகாட்டை காக்கின்ற பொறுப்பு அவைகள் எல்லாம் மாநிலத்
திற்கு கிடைத்து இருக்கின்றன. செலவு என்ன என்ன செய்ய
வேண்டுமோ அந்த பொறுப்புகள் மட்டும் மாநில அரசிடம்



இன்றைய பட்டியலில் 97 அதிகாரங்கள் மத்திய அரசுக்குப் பொதுப்பட்டியலில் 47, மாநில அரசின் பட்டியலிலே 66 என்று இருந்தாலும்கூட ஒட்டுமொத்தமாக மாநிலத்திற்கு வழங்கியிருக்கின்ற அதிகாரங்கள் செலவு செய்ய வேண்டியவைகளுக்கு மட்டும் தான். வருவாய் வருகின்ற அத்தனையும் மத்திய அரசுக்கு.

இன்கம் டாக்ஸ், மத்திய அரசு ; எக்ஸைஸ் மத்திய அரசு; கஸ்டம்ஸ் மைய அரசு ; சென்டிரல் சேல்ஸ் டாக்ஸ் மைய அரசு ; கார்ப்பரேஷன் டாக்ஸ் மைய அரசு ; எஸ்டேட் டூட்டி மைய அரசு ; வருவாய் வருகின்ற இரயிலே மைய அரசு ; கப்பல் மைய அரசு ; பாங்குகள் மைய அரசு ; இன்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்புயூட் மைய அரசு; வைத்து இருக்கிறது. மைய அரசு செயல்படுத்தாத ஒரே ஒரு திட்டம் இருக்கிறது என்றால் இது தான். 262 அரசியல் அமைப்புப் பிரிவிலே இருக்கிறது என்றாலும் கூட அது ஒன்றைத்தான் மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் தெளிவாக குறிப்பிட்டார்கள். மைய அரசிடம் சட்டம் இருந்தும் கூட மாநிலத்தைப் புறக்கணிக்கின்ற வகையிலே இவைகளை செயல்படுத்தவில்லை.

இப்படி மிக அற்பமான அதிகாரங்கள் இருக்கிற சூழ்நிலையிலே, இதையும் கூட அரசியல் அமைப்புச் சட்டம் 240-ஆவது பிரிவின்படி இராஜ்ய சபை நினைத்தால் அதிலே வந்திருக்கின்றவர்களிலே 3-இல் 2 பங்கு பேர்கள் சொன்னால் தேசீய நலன் கருதி இந்த அதிகாரங்கள் பூராவும் எடுத்துக்கொள்ளலாம், என்ற சூழ்நிலைதான் இருக்கிறது.

ஆகவே, உண்மையிலேயே ஒட்டுமொத்தமாக சொல்ல வேண்டும் என்றால் இன்றைய நிலையிலே மாநிலங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அற்பமான அதிகாரங்கள் கூட மைய அரசினுடைய தயவிலே இருக்கின்ற அதிகாரங்கள்தான். மைய அரசு இராஜ்ய சபையிலே அங்கே வந்துள்ளவர்களிலே 3-இல் 2 பேர்கள் நினைத்தால் கொடுக்கப்பட்டிருக்கிற 66 அதிகாரங்கள்——அதை முழுவதும் சட்டம் இயற்றி எடுத்துக்கொள்இன்ற சூழ்நிலை இருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த அற்ப அதிகாரங்களை வைத்தாவது மாநில சர்க்கார் ஏதாவது சில சமுதாய நல திட்டங்களை செயல்படுத்த முடிகிறதா என்றால் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் நில சீர்திருத்தச் சட்டம் பற்றி மிகச் தெளிவாக சொன்னார்கள். மாநில பட்டியலிலே இருக்கிறது என்றாலும் கூட அவர்கள் விரும்பினால் செயல்படுத்தலாம். ஆனால், மாநில சர்க்கார் விரும்பினாலும் அதை செயல்படுத்த முடியாது. அதே நேரத்திலே அவர்கள் நினைத்தால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பது நிதர்சனமான உண்மையாக இருந்து கொண்டிருக்கிறது.

கூடுதல் அதிகாரம் என்று சொல்லும்போது அப்படி ஒரு மாற்றுக்
கொள்கையை மத்திய சர்க்கார் கடைப் பிடிக்க வேண்டுமென்று
கொள்கையினை நம்முடைய மாநில அரசும் மாநிலத்தினுடைய
பிரதான எதிர்க் கட்சியிலே இருக்கக் கூடியவர்களும் அதை
கவனத்திலே கொண்டு செயலாற்ற வேண்டும். இது நம்முடைய
மாநிலத்தினுடைய பிரச்சினை அல்ல; அது எல்லைகளைக்
கடந்து வருகிறது, மொழிகளைக் கடந்து வருகிறது. இன்றைக்கு
பல்வேறு மாநில மக்கள் இன்றைய தினம் இந்த இயக்கத்திற்கு
ஆதரவாக திரும்பியிருக்கக் கூடிய காட்சியினை, மாட்சியினை
இந்த நாட்டிலே நாம் பார்க்க முடிகிறது. ஆகவே, அவர்களை
ஒன்றிணைக்கும்படியான பொறுப்பும் மத்திய ஆட்சிக்குண்டு.
இன்றைக்கு பிரபுத்துவவாத, ஒரு சார்பான, ஏகபோக முத
லாளிக்கு ஆதரவான கொள்கையைப் பின்னுக்குத் தள்ளவும்
அப்படிப்பட்ட ஜனநாயக ஒற்றுமையினைப் பாதுகாக்கக் கூடிய
கொள்கையை இந்த மாநில அரசு கையாள வேண்டும். மாநிலத்
திலே ஆளும்படியான கட்சி இதற்குப் பிரதான வடிவம் கொடுக்க
வேண்டும். அதற்கு முக்கியத்துவம் இருக்கிறது என்று சொல்
கிறேன். இல்லாவிட்டால் என்ன வரும்? இப்பொழுது கூட
பார்க்கிறோம். நாம் தொழிற்சங்கங்கள் நடத்துகிறோம்.
அந்தத் தொழிற்சங்கங்களை நடத்துவதிலே கஷ்டங்களை அனு
பவிக்க வேண்டி இருக்கிறது. ஒரு பெரிய தொழிற் சங்கத்தை
நடத்தும்போது அந்தத் தொழிற் சங்கத்தினுடைய தலைமை
எல்லா பகுதி தொழிலாளர்களுடைய உணர்வுகளையும் கவனத்
திலே எடுத்துக் கொண்டு செயலாற்றாவிட்டால் என்ன நடக்கும்?
நம்முடைய நாட்டில் அகில இந்திய ரெயில்வே தொழிலாளர்கள்
சங்கத்தைப் பார்க்கிறோம். (மணியடிக்கப்பெற்றது).

அந்தத் தொழிற்சங்க இயக்கத்திலே என்ன பார்க்க முடி
கிறது? அகில இந்திய ரெயில்வே தொழிலாளர்களின் மத்திய
அமைப்பு எல்லா தொழிலாளர்களுக்கும் தலைமை தாங்க
முடியவில்லை. அங்கே கேட்டகரி வாரியாக யூனியன் வருகிறது.
ஸ்டேஷன் மாஸ்டர்ஸ் எங்களைக் கவனிக்கவில்லை என்கிறார்
கள். 'இன்ஜினியரிங் செக்ஷனில் உள்ளவர்கள் எங்களைக்
கவனிக்கவில்லையென்கிறார்கள்!' மத்திய சங்கம் எல்லா தொழி
லாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்காவிட்டால் இவ்வாறு
வரும். மத்திய ஆட்சியோடும், மற்றவர்களோடும் இருப்பவர்கள்
என்ன செய்கிறார்கள்? இந்தச் சங்கங்கள் இருப்பதை,
ஒருவருக்கொருவர் விரோதமாக உபயோகப்படுத்துகிறார்கள்.
அதைத்தான் நாம் பார்க்க முடிகிறது. ஆகவே, நாம் வேறு
ஒரு கொள்கையை வரையறுத்துச் சொல்லிவிட்டால், அது
சிறப்பாக இருக்கும். இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்
சாலையில் கலர் பிலிம்ஸ் தொழிற்சாலை இங்கே வேண்டுமென்று
வற்புறுத்தினாலும் அதை ஏதாவது ஒரு மாநிலத்திற்கு மாற்றி
விட்டு, அந்த மாநிலத்திற்கும் நமக்கும் விரோதத்தை உண்
டாக்கக் கூடிய காரியத்தை மத்திய சர்க்கார் மிகச் சாதுர்யமாகக்
கையாள்கிறது. கர்நாடகம், கேரளம், ஆந்திரம் சம்பந்தப்



பட்ட காவிரி நீர்ப்பிரச்சினையிலே மூன்று மாநிலங்களுடைய நலன்களை, ஒற்றுமைகளை, பாதுகாக்கக்கூடிய கடமை மத்திய ஆட்சிக்கு இல்லாததாலே ஒரு பகுதி மக்களுக்கு விரோதமாக இன்னொரு பகுதி மக்களைத் தூண்டி விடுகிற காட்சியினை நாம் பார்க்க முடிகிறது. ஆகவேதான் ஒரு மாற்றுக் கொள்கை இன்றைக்கு நமக்குத் தேவைப்படுகிறது என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

அதற்கடுத்தது நம்முடைய முக்கியமான கோரிக்கைகளிலே ஒன்று, மத்திய ஆட்சி இப்படிப்பட்ட கொள்கைகளைக் கடைப் பிடித்ததன் காரணமாக, இன்று இந்தத் தீர்மானத்தை இந்த அவை ஏற்கிறபொழுது, நம்முடைய மாநிலங்களுடைய முதல் அமைச்சர்கள் அனைத்து அரசியல் கட்சிகளுடைய தலைவர்கள், அரசியல் ரீதியான அறிஞர் பெருமக்கள், இவர்களைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு பொது மகா நாட்டினைக் கூட்டிட வேண்டுமென்ற அந்தத் தீர்மானத்தை இந்த அவை ஏற்க வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன். அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தின் வாயிலாக இந்தத் தமிழ்நாட்டினுடைய உரிமைகளையும் பாதுகாக்கிறபொழுதே, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரத்தை நாம் கொடுக்கிற பொழுதே பிற மாநில மக்களுடைய உணர்வுகளையும், ஒற்றுமைகளையும், ஜனநாயக சக்திகளையும் வளர்ப்பதற்கு நாம் முன்முயற்சி எடுத்தவர்கள் ஆவோம். அந்த ஜனநாயகக் கடமையை நிறைவேற்றியவர்கள் ஆவோம். இன்றைக்கு எந்தக் கொள்கையாக இருந்தாலும், அல்லது இந்தக் கோரிக்கையை ஆதரித்தவர்கள் கூட திசை திருப்பி விட்டாலும் சரி, இன்றைக்கு இந்திய நாட்டினுடைய பெரும் பகுதி மக்கள் தங்களுடைய நல உரிமைகளுக்காக எழுந்து வருகிறார்கள் என்ற காட்சியை நாம் பார்க்க முடிகிறது. அதுதான் சமீபத்தில் நடந்த தேர்தல்.

[பிற்பகல் 12–30]

அதுதான் ஆந்திரத்தினுடைய தேர்தல். அதுதான் இந்தியாவின் பல பகுதிகளிலேயும் எதிரொலித்துக் கொண்டிருக்கிற இயக்கத்தினுடைய உணர்வுகள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நான் வற்புறுத்த விரும்புவது என்னவென்றால், மாநிலங்களின் வருவாயில் பெரும்பகுதியை மாநிலங்களுக்கே தந்திட வேண்டும்; அதைப் போலவே, இருக்கின்ற செல்வாதாரங்களைச் சரியாகப் பங்கிட வேண்டும். அந்நியக் கொள்ளை, ஏகபோகக் கொள்ளை, நிலப் பிரபுத்துவக் கொள்ளை, ஆகியவைகளை ஒரு கட்டுத் திட்டத்திற்குக் கொண்டு வந்து, அந்தச் செல்வங்களைத் திரட்டுவதில் புது முயற்சிகளை நாம் நாட்டில் உருவாக்கிட வேண்டும். அதற்கு மாறாக, இன்றைக்கிருக்கும் கொள்ளைகள் நிராகரிக்கப்பட வேண்டும்.

நாம் கொண்டு வந்த பினாமி ஒழிப்புச் சட்டத்தைப் பொ
றுத்த வரையில் இங்கே அனைத்துத் தரப்பினரும் பாராட்டி
னார்கள். அனைத்து தரப்பினருடைய ஆதரவைப் பெற்று அந்த
சட்டம் இயற்றப்பட்டது. 1961-ஆம் ஆண்டு அந்த சட்டம்
எந்த நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கம்
நிறைவேறவில்லை. அந்த சட்டத்தை ஏமாற்றுகின்ற வகை
யிலே பல ஆயிரக்கணக்கான பேர்களால் ஆயிரக்கணக்கான நிலங்
கள் மறைக்கப்பட்டு இருக்கிறது. அந்தச் சட்டம் கொண்டு
வருகிறபோது 4 இலட்சம் ஏக்கர் உபரி நிலங்கள் கிடைக்கும்
என்று கருத்து இருந்தாலும் 1 இலட்சம் ஏக்கர் கூட எடுக்
முடியவில்லை. ஆகவே, இந்தச் சட்டம் நியாயமான சட்டம்.
அதற்கு மைய அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்று இங்கே
கட்சி பேதம் இல்லாமல் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்
களும் வலியுறுத்தினார்கள். மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட
சட்டம் 14 மாதங்களுக்குப் பிறகு மறுக்கப்படுகிறது. என்ன
காரணத்திற்காக மைய அரசு மறுக்கிறது. 20 ஆண்டுகளுக்கு
முன்னால் போனதை நீங்கள் பிடிக்கிறீர்கள் ஆகவே இது செல்
லாது. இந்தச் சட்டம் செல்லாது என்கிறார்கள். ஏன், 20
அம்ச திட்டத்திலே கூட மைய அரசிலே ஆட்சி பொறுப்பிலே
இருக்கிற இந்திரா காங்கிரஸ்காரர்கள் சொல்கிறார்கள் நில சீர்
திருத்தச் சட்டத்தை அமுல் படுத்த வேண்டும் என்று. அரசியல்
அமைப்புச் சட்டத்தின் 9-ஆவது ஷெடியூலிலே இன்று தமிழக
அரசின் சட்டத்தை சேர்த்தால் அந்தச் சட்டம் செல்லும் என்
கிற நிலை இருக்கிறது. ஆனால், அதற்கு அவர்களுடைய தயவு
தேவை. 14 மாதங்களாக காக்கவைத்து திருப்பி அனுப்பினார்
கள். 20 ஆண்டுகளுக்கு முன்பு போனதை நீங்கள் நிறைவேற்ற
முடியாது. 20 ஆண்டுகளுக்கு முன்பு எழுதி வைத்ததை பினாமி
என்று நீங்கள் சொல்வதற்கு சட்டத்திலே இடம் இருக்காது
என்கின்ற காரணம் காட்டி மறுக்கப்படுகிறது. இதையே மைய
அரசு நினைத்தால் செய்யலாமாம்.

**[பிற்பகல் 12-40]**

ஃபிரிடம் ஆஃப் பிராப்பர்டி என்று 1961 ஆம் ஆண்டு சட்டத்
திலே விதி விலக்கு கொடுத்திருக்கிறார்கள். அதை மாற்று
வதற்கு சட்டத் திருத்தம் கொண்டு வாருங்கள் என்று 1981 ஆம்
ஆண்டு பாராளு மன்றத்திலே அமைச்சர் அவர்கள் சொல்கிறார்
கள். இந்த மாநில அரசு 20 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டு
மக்களுக்கு, இந்த மாநில மக்களுக்காக நிலச்சீர்திருத்தத்தைக்
கொண்டு வந்து உண்மையிலே அமுல்நடத்தி காண்பிக்க வேண்டு
மென்ற உணர்வுடன் அனைத்துத் தரப்பினரும் பாராட்டி,
அனைத்து தரப்பினரும் வரவேற்கக் கூடிய அளவிலே அனுப்பிய
சட்டத்தை 20 ஆண்டுகள் முன்பே ஏற்பட்டவைகளுக்கு நீங்கள்
சட்டத் திருத்தம் கேட்க முடியாது என்று காரணம் காட்டி
மறுக்கிறது மத்திய அரசு. அது விரும்பினால் ஃப்ரிடம் ஆஃப்
பிராப்பர்டி பற்றி 1961 ஆம் ஆண்டு சட்டத்திலே நீங்கள் ஒரு
திருத்தம் கொண்டு வாருங்கள் என்று பாராளுமன்றத்திலே



வைத்திருக்கிறார்கள். இது எந்த வகையிலே நியாயம் என்று
தெரியவில்லை. இப்படிப்பட்ட சட்டங்கள் எல்லா மாநிலங்
களுக்கும், 1961 ஆம் ஆண்டு மேற்கு வங்கத்திலே 1961
ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்திலே ஏமாற்றி நிலச்
சீர்திருத்தத்தை, அதை அமுலாக்கமுடியாது என்று ஒரு சூழ்நிலை
ஏற்பட்டது. அன்றைய நிலச்சீர்திருத்தச் சட்டத்திலே பழத்
தோட்டங்கள், மீன் பிடிக்கின்ற குளங்களுக்கும் விதி விலக்கு
என்று மேற்கு வங்க அரசிலே 1961 ஆம் ஆண்டிலே ஒரு சட்டம்
கொண்டு வந்தார்கள். மிகத் தெளிவான காரணம் சொல்லி,
நாம் இந்தப் பேரவையில் இயற்றியது, மாதிரி அவர்கள் 1980ஆம்
ஆண்டு இயற்றினார்கள். 1961 ஆம் ஆண்டு மீன் பிடிக்கின்ற
குளங்களுக்கும், பழத்தோட்டங்களுக்கும் விதி விலக்கு என்றும்
சட்டத்தை வைத்து, அங்கே இருக்கின்ற நிலப் பிரபுக்கள், 4
எலுமிச்சம் செடிகளை வைத்துவிட்டு, இதுதான்
பழத் தோட்டம் என்று சொல்லி ஏமாற்றி விட்டார்கள். வயல்
களிலே தண்ணீரை நிறுத்தி மீன் பிடிக்கின்ற குளங்கள், ஆகவே
விதிவிலக்கு வேண்டுமென்று ஏமாற்றிவிட்டார்கள். ஆகவே
இவைகளையெல்லாம் 1961 ஆம் ஆண்டிலே முறையாக கண்
காணித்து, நிலங்களை எடுக்க வேண்டும் என்று மேற்கு வங்க
அரசு சட்டம் இயற்றியது. நமக்கு 14 மாதங்கள் காக்க வைத்து
தரமுடியாது என்று திருப்பி அனுப்பினார்கள். அவர்களுக்கு
4 மாதம் சேர்த்து 18 மாதம் வைத்திருந்து திருப்பி அனுப்பினார்
கள். இதுதான் வித்தியாசம். மாநில அரசுக்கு இருக்கின்ற
உரிமைகளை வைத்து மாநில அரசுக்கு அற்பசொற்ப அதிகாரங்
களை வைத்துக்கூட இந்த மாநிலத்தில் முற்போக்குத் திட்டங்
களை செயலாக்கலாம் என்றால் அதற்கு அணை போடுகின்ற வகை
யிலே மத்திய சர்க்காருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்
கள் இடையிலே வந்துவிடுகிறது. இது உண்மையிலே இந்த மாநில
சட்டங்களை, நிலச்சீர்திருத்தச் சட்டங்களை மாநில சர்க்கார்
செய்திருக்க முடியும் என்றால், 9-வது செட்யூலிலே சேர்த்தால்
பிரச்னை இல்லாமல் போய்விடுகிறது. அப்படித்தான் ஒவ்வொரு
பிரச்னையும், காவிரி நீர்ப் பிரச்னையைப் பொறுத்தமட்டிலும்,
அரசியல் அமைப்பின் 262-வது பிரிவிலே மிகத் தெளிவாக
இருக்கிறது. அதன் அடிப்படையிலே 1956 ஆம் ஆண்டு இன்டர்
ஸ்டேட் வாட்டர் டிஸ்ப்யூட் ஆக்ட், 2 மாநிலங்களுக்கு இடையே
ஏற்படும் தண்ணீர்த் தகராறை தீர்ப்பதற்கு ஒரு சட்டம் நிறை
வேற்றப்பட்டது. ஒரு முறையாவது அந்தச் சட்டத்தை மத்திய
அரசு உபயோகித்து இருக்கிறதா என்றால் கிடையாது. ஆனால்
356வது பிரிவிலே இருக்கக்கூடிய மாநிலங்களைக் கலைக்கும் அதி
காரத்தை, என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால்,
இதுவரை 40 முறையாவது உபயோகித்து இருப்பார்கள். இந்த
இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற, அங்கம் வகிக்கின்ற
மாநிலங்களினுடைய வளம் பெருக வேண்டும் மாநிலங்கள் வள
மாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான்
அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்படுத்தினார்கள். அரசியல்
சட்டத்தில் பிரிவு 262-வது பிரிவின்படி அதிகாரத்தை மத்திய

'கன்சைன்மென்ட் டிரான்ஸ்பர்' என்ற வகையில் வியாபாரி
கள் பொருள்களை வாங்கிக்கொள்கிறார்கள். அதனாலே விற்
பனை வரி மூலம் வருகின்ற வருமானம் போய்விடுகிறது. ஆகவே,
அதைத் தவிர்க்கும் வகையில் சட்டத்தைத் திருத்துங்கள் என்று
முதலமைச்சர்கள் மாநாட்டில் எடுத்துச் சொன்ன ஆலோசனை
யின்படி, அதை ஆய்வு செய்வதற்காக கமிட்டி அமைக்கப்பட்டது.
ஆனால், மாநில முதலமைச்சர்கள் மாநிலத்திற்கு வருகின்ற
வருமானம் போய்விடுகிறது, அதற்காக சட்டத்தில் உள்ள
ஓட்டையை அடைக்க வேண்டும், அதற்காக திருத்தம் கொண்டு
வரவேண்டும் என்று கேட்டு, ஆலோசனை சொல்லியதை அடிப்
படையாக வைத்து, மாநிலத்திற்கு கூடுதல் வருமானம் வரும்
வகையில் அந்தச் சட்டம் திருத்தம் செய்யாமல், மத்திய அரசுக்கு
வருமானம் வருகின்றன வகையில் அந்தத் திருத்தத்தை அவர்கள்
செய்து, அதனை 92 (பி) )(ஐ) செவன்த் ஷெட்யூலில் மாற்றிக்
கொண்டுவிட்டார்கள்.

அதைப்போலவே, மாநிலங்களுக்கு திட்டங்களுக்காக ஒதுக்
கப்படுகின்ற பணம் மக்கள் தொகையின் அடிப்படையில் செய்யப்
படுகிறது. காட்கில் விதிப்படியின் அடிப்படையில் என்று சொன்
னார்கள். 90,000 ஜனத் தொகை அடிப்படையில், மராட்டிய
மாநிலத்திற்கு 1,500 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.
ஆனால், அதைவிட 10 சதவீதம் ஜனத்தொகை குறைவாகவே
உள்ள மேற்கு வங்காளத்திற்கு 500 கோடி ரூபாய்தான் ஒதுக்கி
யிருக்கிறார்கள். இது எந்த அடிப்படையில் என்பது நமக்குத்
தெரியவில்லை. 20 ஆண்டு காலத்திற்கு முன்பு ஏற்படுத்தப்
பட்ட விதிமுறைகள்—காட்கில் பார்முலாக்கள் மாற்றப்பட
வேண்டும். ஒரு மாநிலத்திற்கு ஒரு முறையை மத்திய அரசு
பின்பற்றுகிறது என்பதை மேற்கு வங்காளத்திற்கு ஒதுக்கப்பட்ட
நிதியின் அளவும், மகாராஷ்டிர மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி
யின் அளவும் ஒப்பிட்டு நோக்கும்போது நமக்குப்புலனாகிறது. இப்
படி ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மாநிலங்கள் புறக்கணிக்கப்
படுகிறது என்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம். அவர்கள்
போட்ட விதியை அவர்களே மீறுகிறார்கள். நாடாளுமன்றத்
தில் இருக்கின்ற திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் ஜனதா கட்சி
ஆட்சியில் இருக்கின்றபோது, பாராளுமன்றத்தில் புள்ளி விவரங்
களோடு, தென் மாநிலங்கள் புறக்கணிக்கப்படுகிறது என்பதைத்
தெளிவாகத் தெரிவித்து இருக்கிறார்கள். மத்திய அரசு
மாநிலங்களைப் புறக்கணிகிறது என்று சொல்கிறபோது அதிலே
கட்சி வித்தியாசம் கிடையாது.



இங்கே மற்ற விவாதங்களில் பேசுகின்றபோது ஏதோ இந்த
அரசு போராடவில்லை, முறையாகப் பேசவில்லை என்றெல்லாம்
கூறுகிறார்கள். நிச்சயமாக அந்த நிலைமை கிடையாது. 1950
ஆம் ஆண்டிலிருந்தே தமிழகம் புறக்கணிக்கடுகிறது. 6-வது
நிதிக் கமிஷன் விமர்சன அறிக்கையிலேகூட மிகத் தெளிவாகக்
கூறியிருக்கிறார்கள். 1950 ஆம் ஆண்டில் இருந்து 1968 ஆம்
ஆண்டு வரையில் மாநிலங்களுக்கு மைய அரசு கொடுத்த உதவி
அடிப்படையில் பார்க்கிறபோது — 1967 ஆம் ஆண்டு வரையில்
காங்கிரஸ் ஆட்சிதான் தமிழகத்தில் இருந்தது—தமிழகம் 13 வது
இடத்தில்தான் வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகம்
ஆட்சியில் இருந்தபோது 15 வது இடத்திற்கு வருகிறது. இது
என்ன கேட்காமல் இருந்ததாலா, அல்லது அக்கறை இல்லாத
தாலா, அல்லது ஊக்கம் இல்லாததாலா, கேட்கத் தவறியது
என்பதாலா, இல்லையில்லை, மைய அரசின் சொள்கைகள்
தான் அதற்குக் காரணம்.

[பிற்பகல் 12—50]

உயர்நீதிமன்ற நீதிபதிகள் விஷயத்தில்
குறைந்தபட்சமாக நாம் சொல்வதைக் கேட்க மறுக்கிறார்கள். மாநில மொழி
கூட தெரியாத ஒருவரை நியமிப்பதிலே தீவிரமாக இருக்கிறார்கள்.
அந்த அந்த மாநில மொழி தெரிந்தவராக இருக்க வேண்டும்;
மாநில மொழி தெரிந்தவர்தான் தலைமை நீதிபதியாக இருக்க
வேண்டும் என்ற கருத்தைக்கூட ஏற்றுக்கொள்ள மத்திய அரசு
தயக்கம் காட்டுகிறது.

இப்படிப்பட்ட சிறிய அதிகாரங்கள் உட்பட, எல்லா அதிகாரங்
களையும் மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கிறது.
மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் சுட்டிக்
காட்டியதைப்போல் சிமின்ட் பற்றாக்குறை இருக்கிறது; சிமின்ட்
தொழிற்சாலை அமைத்துக்கொடுங்கள் என்று கேட்டால் பாராளு
மன்றத்திலே தொழில் அமைச்சர் சொல்கிறார் அதற்குரிய
மூலப் பொருள் இல்லை. மூலப்பொருள் இருந்தால் யுத்த
கால நடவடிக்கை போல் சிமின்ட் தொழிற்சாலையை அமைப்
போம் என்று சொல்கிறார்கள். நான் சார்ந்திருக்கிற தொகுதி
யாகிய வேடசந்தூரில் ஏறத்தாழ 6,000 டன்னுக்குமேல் மூலப்
பொருள், டிபாசிட், இருக்கிறது என்று மாநில அரசு சொல்கிறது.
அதைச் சொன்னதும் முதலிலே ரயில் வசதி இல்லை என்று
சொன்னார்கள். திண்டுக்கல் ரயில் பாதை வந்தவுடன் நிலக்கரி
இல்லை என்று சொன்னார்கள். 32 கோடி ரூபாய் மூலதனத்தில்
வேடசந்தூரில் சிமின்ட் தொழிற்சாலை அமைப்பதற்கு நிலக்கரி
இல்லை என்று சொல்கிறார்கள். நிலக்கரி இல்லை என்றால்
இறக்குமதி செய்ய வேண்டுமென்றால் அதற்கும் அனுமதி கிடை
யாது.

தமிழ்நாட்டுக்கு நிலக்கரி இல்லை என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் கேரளத்தில் 2 இலட்சம் டன் உற்பத்தியாகும் தொழிற் சாலைக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி உத்தரப் பிரதேசத்திற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. எத்தனையோ இலட்சம் டன் சிமின்ட் இறக்குமதி செய்கிறோம். நாம் மட்டு மல்லாமல், அநேகமாக எல்லா மாநிலங்களிலும் இறக்குமதி செய்கிறார்கள். அந்த அளவுக்கு நம்முடைய அந்நியச் செலாவணி வீணாகிறது. இந்தச் சூழ்நிலையில் 70,000 டன் நிலக்கரி இறக்கு மதி செய்தால் 4 இலட்சம் டன் சிமின்ட் உற்பத்தியாகும். இந்த நிலை ஏற்படும் போது ஏறத்தாழ 10,000 குடும்பங்களுக்கு தொழில் கிடைக்கும்; அவர்கள் வளமாக வாழ முடியும். இந்தத் தொழிலை ஆரம்பித்தால் ஓராண்டில் மத்திய அரசுக்கு விற்பனை வரியின் மூலம் மட்டும் 3 கோடி ரூபாய் வரும். எக்சைஸ் வரி இதர வகைகளிலே மத்திய அரசுக்கு 2 கோடி ரூபாய் வரும், என்று நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். போடுகின்ற மூல தனம் 32 கோடி ரூபாய் 8 ஆண்டுகளில் வரியின் மூலமாக மட்டுமே அந்த மூலதனத்தைப் பெற்றுவிட முடியும். அப்படி இருந்தும் இதிலே கூட மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்கிறது மத்திய அரசு.

இப்படி நாங்கள் சொல்லும்போது, அதிகாரம் மத்தியிலே குவிந்து கிடக்கும்போது, இந்த அதிகாரங்களை விரிவுபடுத்த வேண்டும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று நாம் கேட்கும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அதை திசை திருப்பக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஏற்கெனவே அவர்கள் அப்படி திசை திருப்பியிருக்கி றார்கள் என்று குற்றச்சாட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

காரணம் இல்லாமல் நான் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்ல வில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். காவேரி நீர்ப் பிரச்சனையில் தீர்வுகான வேண்டுமென்றால் மத்திய அரசு நினைத்தால்தான் முடியும் என்று 1971 ஆம் ஆண்டில் கூறியிருக் கிறார்கள். நம்முடைய சட்டமன்ற நடவடிக்கை குறிப்பிலே அது இருக்கிறது. மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதை தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில், இந்த நாட்டு மக்களுக்காகப் பாடுபடு கிறோம் என்று சொல்லக்கூடியவர்கள் பாராளுமன்றத்திலே அதை தடை செய்ய வேண்டுமென்று சொன்னால், இந்த முயற்சி திசை திருப்பி விடுவதைத்தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? 1972 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு பணம் கேட்ட போது, அன்றைக்கு முதலமைச்சர் மத்திய நிதி அமைச்சரைக் கண்டித்ததை நாம் தவறு என்று சொல்லவில்லை.



அதற்குப் பின்னாலே வந்த வறட்சிக்கு நாங்கள் பணம் கேட் கும்போது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சி. டி. தண்டபாணி அவர்கள் பாராளுமன்றத்திலே கண்காணிக்க குழு போட வேண்டுமென்று சொல்கிறார். பல்வேறு அதிகாரங்களை மத்திய அரசு பிடுங்கி வைத்துக்கொண்டிருக்கும்போது, மாநில அரசுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டி ருக்கும்போது, அதை திசை திருப்பிவிடுகின்ற முறையிலே அங்கே பேசுகிறார். மாநிலத்திற்கு கொடுக்கிற நிதியை கண்காணிக்க, பணியை கண்காணிக்க குழு போடவேண்டுமென்று, கண்காணிப்பு குழு போட மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல் கிறார். அப்படிச் சொல்கிறார் என்றால் அதற்கு என்ன பொருள்?

Mr. C. T. DHANDAPANI, D. M. K. said, An agency to watch the State performance was urgently called for and some of the programmes for the benefit of the weaker sections have not yet been taken up. The Centre which has given money to the States for the programme of welfare measures is within its rights to appoint such a body.

நான் இதை ஒரு வேண்டுகோளாக விடுக்கிறேன். மாநிலங் களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று நாம் கேட்கிறோம். அது கூடாது என்கிறார்கள் அங்கே, சொல்வது யார்? மாநில சுயாட்சி என்று கேட்பவர்கள். மாநில சுயாட்சி கேட்பவர்கள் மாநில அரசு செலவு செய்யக்கூடிய தொகையை கண்காணிக்க குழு போடவேண்டுமென்று சொல்கிறார்கள். குழு போட மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இது நியாயம்தானா?

அந்தப் பணத்தை மாநில அரசுக்கு மத்திய அரசு எங்கிருந்து கொடுக்கிறது? இங்கே பல்வேறு வகைகளில் வசூல் செய்கின்ற பணத்தைத்தான், அதிலிருந்து 60 சதவீதம் அல்லது 70 சதவீதம் தருகிறார்கள். இந்த மாநிலத்திலிருந்து வசூல் செய்கின்ற பணத் தில் ஒரு பகுதியைத்தான் கொடுக்கிறார்கள். அதை மாநில அரசு செலவிடும்போது, அதைக் கண்காணிக்க மத்திய அரசு குழு போட வேண்டும்; அதற்கு அதிகாரம் இருக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பாராளுமன்றத்திலே பேசு கிறார்கள்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று நாம் கேட்கிறோம். இப்போது இருக்கின்ற அதிகாரங்களையும் எங் களுக்கு வேண்டுமென்று மத்திய அரசு கேட்கிறது. சேல்ஸ் டாக்சை மாநில அரசிலிருந்து மத்திய அரசுக்கு எடுக்க வேண்டு மென்று சொல்கிறார்கள். மின்சாரத் துறையையும் மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படி இருக்கின்ற பல அதிகாரங்களையும் அவர்கள் எடுக்க வேண்டும் என்று சொல்லும்போது நாம் அதிக அதிகரங்களை மாநிலங்களுக்கு

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1983 பிப்ரவரி 15

அரசுக்குக் கொடுத்து, அதற்கும் 1956 ஆம் ஆண்டு ஒரு சட்டம்
இயற்றியதற்குப் பிறகும், அந்தச் சட்டத்தை, இதுவரையிலே
அமுலாக்கப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாகக் கிடையாது.
மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போன்று, உண்மை
யிலே மாநிலங்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று எண்ணி
யிருந்தால், இந்தக் காவிரி நீர்ப்பிரச்னை இத்தனை கடுமையாகி
இருக்காது. நிச்சயமான இது நிதர்சனமாக உண்மை. காவிரி
நீர்ப்பிரச்னையிலே மத்திய அரசுதான் தீர்க்க முடியும், பிற
மாநில அரசு, அது யாராக இருந்தாலும் சரி, எவ்வளவு குரல்
கொடுத்தாலும், அது முடியாதுதான் என்று ஒரு சூழ்நிலை இருக்
கிறது. ஆகவே, முடிகிறதா என்றால் நிச்சயமாக இல்லை.
ஆகவே, இன்றைய காவிரி நீர்ப்பிரச்னை அப்படி.
குறைந்த பட்ச நிவாரணம் கொடுக்க, மின்சாரத்
தைப்பொறுத்தவரையில் 1948ஆம் ஆண்டு இந்த மாநிலத்திற்காக
இந்த மாநிலத்திலே மின்சார உற்பத்தியைப் பெருக்க
வேண்டும், அதற்கு நாங்களே பணம் செலவு செய்கிறோம் என்றா
லும்கூட மத்திய அரசு அனுமதித்தால்தான் முடியும் என்று
சூழ்நிலை இருக்கிறது. 1948 ஆம் ஆண்டு ஏறத்தாழ 35 ஆண்டு
களுக்கு முன்பு, ஒரு கோடியிலே இருக்கின்ற திட்டத்தை மத்திய
அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது
நாம் 1983 ஆம் ஆண்டிலே இருக்கிறோம், இந்த மாநிலத்தினு
டைய வளம் காக்கப்பட வேண்டும். இந்த மாநிலத்திற்கு
மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும், அதற்கு நாங்களே
செலவு செய்கிறோம் என்றாலும்கூட இன்று முடியாத நிலைமை
இருக்கிறது. 1948 ஆம் ஆண்டில் 1 கோடிக்கு மேற்பட்ட திட்டங்
களை மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஆனால் 1983 ஆம்
ஆண்டிலே அது ஒரு 10 கோடியாக ஆக்குங்கள் என்றால் கூட
முடியாது என்ற சூழ்நிலை. மக்களுக்கு மின்சாரத்தைத்
கொடுக்க வேண்டியது மாநில அரசினுடைய பொறுப்பு. அதை
நாங்களே செலவு செய்து கொள்கிறோம், 10 கோடி என்றாலும்
நாங்களே முதலீடு செய்து கொள்கிறோம், சிறிய மின் திட்டங்
களை அமுல்படுத்த அனுமதி தாருங்கள் என்றால், அதற்குக்
காலம் கடத்துகிறார்கள். அதற்காக அனுமதியைப் பெற
வேண்டிய அதிகாரம் மத்திய அரசினுடைய கையிலே குவிந்திருக்
கிறது. இது ஒரு நியாயமான கோரிக்கை. 1948 ஆம் ஆண்டு
பணத்தினுடைய மதிப்பு எவ்வளவு? 1948 ஆம் ஆண்டிலே
மாநிலங்களுக்கு அதனுடைய திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்
கின்ற பஉஙத்திலே இந்த 1 கோடி ரூபாய்க்கும் மத்திய அரசு
அனுமதியை கொடுக்க வேண்டுமென்ற சூழ்நிலை இருந்தது.
இன்று ஏறத்தாழ, 900 கோடி, மகாராஷ்டிராவிலே 1,500 கோடி
திட்ட ஒதுக்கீடு என்று பணம் ஒதுக்குகின்ற சூழ்நிலையில்
இந்த ஒரு கோடிக்கு மேல் இருந்தால் எனக்குத்தான் அனுப்ப
வேண்டும், நீ சொன்னால் நான் மாற்றமாட்டேன் என்று சொன்
னால் இதிலே ஏதாவது நியாயம் இருக்கிறதா என்றால்
இல்லை.



1983 பிப்ரவரி 15] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

எத்தனையோ திட்டங்கள் மத்திய அரசிலே சென்று முடங்கிக்
கிடக்கின்றன. இதிலே கட்சி வித்தியாசங்கள் இல்லை. காங்கிரஸ்
கட்சி இந்த மாநிலத்தில் ஆட்சி நடத்திக்கொண்டிருந்த காலத்தில்
அனுப்பப்பட்ட மின்சாரத் திட்டங்கள் இன்னும் அனுமதிக்கப்
படாமல் அங்கேயே முடங்கிக் கிடக்கின்றன. திராவிட முன்னேற்
றக்கழகம் ஆட்சியில் இருந்த போது அனுப்பி வைத்த, 1971
ஆம் ஆண்டில் அனுப்பி வைத்த, சண்முகா நதித் திட்டம் இன்
னும் அங்கேயே தூங்கிக்கொண்டு இருக்கிறது. 1965 ஆம் ஆண்
டிலே மாநில மக்களின் நலனுக்காக, இந்த மாநிலத்தின் மின்
தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கோரப்பட்ட மின்
திட்டங்கள் எல்லாம் இன்னும் அனுமதியளிக்கப்படாமல் இருக்
கின்றன. கிட்டத்தட்ட 20, 25 ஆண்டுகள் ஆகியும் அந்தத்
திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. அது மைய அர
சின் கையிலே கிடப்பிலே போடப்பட்டது போல் இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் செயல்படுகின்ற மத்திய அரசு தேசிய
ஒருமைப்பாடு என்று பேசுவதில் என்ன நியாயம் இருக்கிறது
என்பதைக் கேட்க நான் ஆசைப்படுகிறேன். இந்தியத் துணைக்
கண்டத்தைக் கூறுபோட வேண்டும் என்ற எண்ணமோ, அல்லது
பிரிவினைப் படுத்த வேண்டும் என்ற எண்ணமோ மாநிலங்
களிடத்திலே இல்லை, மைய அரசின் செய்கைதான் அத்தகைய
நிலைமைகளைத் தூண்டுவதாக இருக்கிறது என்பதை நான்
குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

இந்தச் சூழ்நிலையில், இருக்கின்ற அதிகாரங்களையும்
எடுத்துக்கொள்கின்ற நிலைமையில் மத்திய அரசு இன்றைக்குச்
செயல்பட்டு வருகிறது. மாநிலத்திற்கு இருக்கும் ஒரேயொரு
வருவாய் வாயில் 'விற்பனை வரி' ஒன்றுதான். வேறு எதுவும்
இல்லை. வேறு எந்த வகையிலும் மாநிலத்திற்கு வருவாய்
வரவில்லை.

1972—73 ஆம் ஆண்டில் இந்த மாநிலத்திற்கு விற்பனை வரி
மூலம் கிடைத்த வருமானம், மொத்த பட்ஜெட் தொகையில்
51 சதவீதம். 1975—76 ஆம் ஆண்டில் அது 54 சதவீதம் என்ற
வகையில் கிடைக்கிறது. 1979—80 ஆம் ஆண்டில் 56 சதவீதம்
என்ற வகையில் அது உயர்கிறது. 1980—81 ஆம் ஆண்டிலேயே
மாநிலங்களுக்கு வரும் மொத்த வருவாயில் விற்பனை வரியின்
பங்கு மட்டும் ஏறத்தாழ 57·8 சதவீதம், 1982—83-லே
இது 58 சதவீதம் என்ற அளவிற்கு இருக்கிறது. இப்படி மாநிலத்
தின் மூலவருவாய் விற்பனை வரியில்தான் இருக்கிறது என்ற
நிலைமையில் இந்த விற்பனை வரியையும் மத்திய அரசு எடுத்துக்
கொள்ளலாமா என்று முயற்சித்துக் கொண்டு இருக்கிறது. திரு.
கமலபதி திரிபாதி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட
எக்ஸ்போர்ட் கமிட்டி பரிந்துரையின் அடிப்படையில் இன்றைக்கு
மாநிலத்திற்கு வருகின்ற விற்பனை வரியின் ஒரு பங்கை மத்திய
அரசு எடுத்துக்கொண்டு இருக்கிறது.

பகிர்ந்தளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கும்போது மாநில அரசு செலவிடுகின்ற பணத்தைக் கண்காணிக்க மத்திய அரசு குழு போட வேண்டும்; அதற்கு அதிகாரம் இருக்கிறது என்று சொன்னால், நம்முடைய நோக்கத்தை தடைசெய்ய வேண்டுமென்ற நோக்கத்திலே பேசினால் அது திசை திருப்பு வதாகத்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே அதை தவிர்க்கவேண்டும் என்கிற வேண்டுகோளை வைத்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். என்னைப் பொறுத்தவரையில் இருக்கிற கொஞ்ச நஞ்ச அதிகாரத்தையும் அரசியலமைப்புச் சட்டத்தினுடைய 245 ஆவது பிரிவின்படி எந்த நேரத்திலும், வேண்டுமானால் பிடுங்கிக்கொள்ளலாம் என்ற சூழ்நிலை இருப்பதைக் கருத்திலே கொண்டு, உடனேயே மாநில முதல்வர்களுடைய மாநாடு கூட்டி, கூடுதல் அதிகாரத்தை கொடுக்க வேண்டும் என்ற வகையில் மைய அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை முன் வைத்து இந்த தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, தான் எடுத்துக் கொண்ட பொருளில் மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்கள் மிகத் தெளிவாக பேசிக் கொண்டிருந்தார்கள், ஆனால் கடைசி கட்டத் தில் மட்டும், சற்று சுருதி பேதத்தை நுழைத்திருந்தார். நான் ஒரு விளக்கம் சொல்லி, அதற்கு அவரிடமிருந்தும் பதில் விளக்கம் பெற விரும்புகிறேன், மாநில சுய ஆட்சி அல்லது மாநிலங் களுக்கு கூடுதல் அதிகாரம் என்ற கருத்தைப் பற்றி, மதிப்பிற் குரிய ஆளும் கட்சியினுடைய ஒப்பற்றத் தலைவர், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அண்மையிலே வெளியிட்ட கருத்து அண்மையிலே என்றால் 5 மாதங்களுக்கு முன்பு, போன ஆண்டு என்று கூட எடுத்துக் கொள்ளலாம். மாநில சுய ஆட்சி பற்றி, மத்திய அரசுக்கு அதிக அதிகாரங்கள் இருக்கின்றன. மாநிலங்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கருத்து பற்றி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கிற வழக்கறிஞர்களை கேட்டுத்தான், நாங்கள் அதைப்பற்றி அபிப் பிராயம் சொல்லவேண்டும் என்று போன ஆண்டு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்திலேதான் நம்முடைய நண்பர் அவர்கள் பேசினாரா? அல்லது வேறு கருத்திலா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்து என்ன? அரசினுடைய கருத்து என்ன என்பதை எல்லாம் அரசின் சார்பிலே பேசுகிறபோது நான் கூறுகிறேன்.



திரு. ஜே. எஸ். இராசு : அரசு பற்றி அல்ல. பார்ட்டியி னுடைய பாலிசியையே அவர்கள் இன்னும் பிரேம் பண்ணவில்லை அதைத்தான்....................

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்கிற இந்தக் கருத்தை 1974-ஆம் ஆண்டு இந்தப் பேரவையிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்தியிருக்கிறது. வற்புறுத்தியதை அன்றைய முதலமைச்சராக இருந்தவர் பாராட்டியிருக்கிறார்கள். அது நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கிறது. ஏப்ரல் மாதம் 16 ஆம் தேதி, 1974 ஆம் ஆண்டு சட்ட மன்ற நடவடிக்கை புத்தகத்தி னுடைய வால்யூம் 64 பக்கம் 39லே கலைஞரே பாராட்டி யிருக்கிறார்கள். என்ன சொன்னார்கள் என்றால், 'எங்களை எதிர்க்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே, மாநிலங் களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கோருகிறது' என்று எதிர்க் கட்சித் தலைவருக்குப் பதில் சொல்லுகிறபோது, கலை ஞரே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பாராட்டி யிருக்கிறார்கள்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற தலைப்பின் அடிப்படையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைக் கூற முன்வருகிறேன். இன்றைக்கு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்கிற குரல், மாநிலங்களை ஆளுகின்ற எதிர்க்கட்சிகளிடமிருந்து மட்டும் அல்லாமல், இதுவரை இந்திய துணை கண்டத்தை ஆண்டுக்கொண்டு வருகிற காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயிருந் தும் வரக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையில்தான், தமிழகத்திலே இருக்கக்கூடிய நம்முடைய மாமன்றம், இந்தக் கருத்தை இன்னும் வலுப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில், இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

பொதுவாக இன்றைக்கு நம்முடைய மத்திய அரசிடம் பொரு ளாதாரம் நிதி, நிர்வாகம் என்று சொல்லக்கூடிய மிகப் பெரிய மூன்று அதிகாரங்கள் குவிந்துக் கிடக்கின்றன. ஆகவே தான் மாநில அரசுகள் தங்களுடைய மாநிலங்களிலே நல்ல தொழில் திட்டங் களை, சமூக மேம்பாடு திட்டங்களை உருவாக்கவேண்டும் என்ற எண்ணினாலும்கூட, அந்த எண்ணங்களைச் செயல்படுத்த விரும் பினாலும்கூட, மத்திய அரசாங்கத்தின் தயவையும், கருணையையும் எதிர்பார்த்துத்தான் செயல்படுத்த வேண்டிய கட்டாய சூழ் நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆகவேதான் இன்றைக்கு பல்வேறு மாநிலங்களில், மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதிகாரத் தைப் பெற்றிருக்கக்கூடிய சூழ்நிலையில், சில முரண்பாடுகள் ஏற்

வரக்கூடிய காலம் தாழ்ந்து இருக்கிறது என்ற குற்றச்சாட்டை
இங்கே நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்
அதே போன்றுதான் இன்றைக்கு நம்முடைய மின்சாரத்துறை.
தமிழகம் மின்துறையில் தன்னிறைவு பெற வேண்டும்.
மின்சார நிலையங்கள், அணுமின் நிலையங்கள் அமைப்பதற்கு
மத்திய அரசாங்கம் தடையாக இருப்பதாலும் அனல்
சோதனைகள் ஒரு பக்கம் தடையாக இருந்தாலும் இயற்கை
இருக்கக்கூடிய குறைந்தபட்ச புனல் திட்டங்களை இங்கே
அந்த திட்டங்களை உருவாக்கலாம், நடைமுறையில் நிறைவேற்ற
லாம் என்று எண்ணினால், அவைகளுக்கு கூட 10 கோடி
ரூபாய்க்கு அதிகமாக திட்டங்களை தீட்டக்கூடாது என்ற
அடிப்படையில் இன்றைக்கு குடியரசு சட்டத்தை நீட்டிக் காட்டி
மத்திய அரசு சொல்கிறது. மின்சாரத் துறையிலே புதிய புற மின்
நிலையங்களை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை இன்றைக்கு
தடுத்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த நிலையிலும் இந்த
சட்டங்களை, ஊனமாக இருக்கக்கூடிய அதிகாரங்களை மாநில
அரசுகள் பெறுவதற்கு இந்த சட்டங்களை திருத்தவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று நம்முடைய மத்திய
திட்டக் கமிஷன். இந்த திட்டக் கமிஷனுக்கும், அரசினுடைய
திட்டக் கமிஷனுக்கும் எந்த விதமான மாநில அரசின்
கிடையாது. எந்தவிதமான உறவும் கிடையாது. இணக்கமும்
டைய விளைவுதான் இன்றைக்கு மாநிலத்தில் அதனு
கூடிய அரசாங்கங்கள் தங்களுடைய மாநிலத்தில் இருக்கக்
இயற்கை வளங்களை வைத்துக் கொண்டு இருக்கக்கூடிய
வைத்துக்கொண்டு தொழில்களை துவங்க மூலாதாரங்களை
படுகின்றபோது அந்த மூலாதாரங்களுக்கு வேண்டும் என்று முற்
இன்றைக்கு இருக்கக்கூடிய ரயில்வே, உகந்த முறையில்
இப்படிப்பட்ட பிரச்சினைகள் மத்திய மின்சாரம், போக்குவரத்து
இல்லாத காரணத்தால் குறிப்பாக அரசுக்கு ஒரு இணக்கமும்
என்றால் அகல ரயில் பாதை நான் சுட்டிக்காட்டவேண்டும்
கப்பட்டதன் காரணமாக இன்றைக்கு தமிழகத்தில் புறக்கணிக்
பெரிய கனரக மிகப்பெரிய தொழிற்சாலைகள் மிகப்
திறுவுவதற்கும் இயந்திரத் தொழிற்சாலைகள் தமிழகத்தில்
முடியாமல் அதற்கான மூலாதாரங்களை உருவாக்குவதற்கும்
திட்டக் கமிஷன் போய்விட்டது. ஆகவே இந்த மத்திய அரசின்
நிலையை அகற்றி தன்னிச்சை மூப்பாக செயல்படக்கூடிய சூழ்
இணைந்து மாநில அரசுகளின் திட்டக் கமிஷன்களோடு
இருந்தால்தான் செயல்பட வேண்டும். அப்படிப்பட்ட இணைப்பு
ஒரு நிலையை தொழில் வளம் பெற முடியும். அப்படிப்பட்ட
இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.



அதேபோன்று நம்முடைய கலைஞர் அவர்களும் தி.மு.க.
நண்பர்களும் அன்றைக்கு சொல்வார்கள் பேரறிஞர் அண்ணா
அவர்கள் சொல்வார்கள் ஆட்டுக்கு தாடி எதற்கு நாட்டிற்கு
கவர்னர் எதற்கு என்று எல்லாம் கேட்டார்கள். ஆனால் இன்று
வரைக்கும் இந்த நாட்டில் கவர்னர் உரை இருந்து கொண்டு தான்
இருககிறது. அது ஒரு புறம் இருந்தாலும், இன்றைக்கு கவர்
னரைப் பொறுத்த வரையில் அவர் மாநில அரசுக்கு உட்பட்டவ
ராக இருக்கவில்லை. அவர் மத்திய அரசின் ஏஜெண்டாக
இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அந்த நிலை
நீக்கப்படவேண்டும், போக்கப்பட வேண்டும் என்று நான் எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன்.

அதேபோன்று நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில்
356-வது ஷரத்தில் மக்களால், மாநில மக்களால் இந்த ஜயநாயக
அமைப்பு முறையில் வாக்குகளைப் பெற்று ஆட்சியில் இருக்கக்
கூடிய அதிகாரங்களை, ஆட்சிகளை கலைத்து விடுவதற்கான
ஒரு ஷரத்துதான் இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356
ஷரத்து. இதன் மூலம் மாநில அரசுகளின் அதிகாரங்கள் பறிக்கப்
படுகிறது. மத்திய அரசினுடைய ஏதேச்சதிகார தன்மையால்
இந்த நிலைக்கு வழி செய்யப்படுகிறது. இதே நிலை தான்.
1976-ல் இந்த நாட்டில் அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டது
நமக்கு ஒரு காலத்தில் எச்சரிக்கையாக இருந்ததை நாம் கண்டு
கொண்டிருக்கிறோம். ஜனநாயக உரிமைகளை பறிக்கக்கூடிய
அதிகாரம் கூட மக்களின் உணர்வுகளை மதிக்கக்கூடிய அதிகாரம்
கூட இன்றைக்கு மத்திய அரசிடம் குவிந்து இருக்கிறது. இத
னுடைய விளைவுதான் இன்றைக்கு மைனாரிட்டிகள் எல்லாம்
மெஜாரட்டிகளாகிக் கொண்டிருக்கிற்ரார்கள். மெஜாரட்டிகள்
மைனாரட்டிகளாகக்கூடிய ஒருகால சூழ்நிலை சமீபத்தில் நடை
பெற்ற அரியானா தேர்தலின் அலங்கோல நிலையை இன்றைக்கு
நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே ஜயநாயக உரிமை
களைக் கூட ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பறிக்கக்கூடிய, அழிக்கக்
கூடிய அதிகாரம் கூட இன்றைக்கு மத்திய அரசிடம் குவிந்து
இருக்கின்ற காரணத்தால் ஜனநாயக உறவுகள் அழிக்கப்படு
கின்றது. அதனுடைய எழுச்சிகள் இன்றைக்கு நாட்டில் ஏற்
பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ஏதேச்சதிகாரத் தன்மை
களை குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று குடியரசுத் சட்டத்தில் 18-வது அத்தியாத்தில்
352 ஷரத்தில் இன்றைக்கு நம்முடைய நாட்டில் ஒரு அமைதி
யான சூழ்நிலை. அந்த நாட்டில் இருக்கக்கூடிய, மாநிலத்தில்
இருக்கக்கூடிய மக்கள் உரிமைக்காக போராடினார்கள், உணர்வு
களை சுட்டிக்காட்ட வேண்டும் என்று போராடினார்கள். இவை
களை எல்லாம் வைத்துக் கொண்டு அன்றைக்கு அவசர நிலை
பிரகடனம் படுத்தப்பட்ட ஒரு சூழ்நிலையை பற்றி இந்திய
கம்யூனிஸ்டுகட்சியின் சார்பாக நாங்கள் தெளிவாக ஒரு கருத்தைச்
சொல்ல விரும்புகிறோம்,

படுகின்ற காரணத்தால், தங்களின் அரசினுடைய கொள்கை
கள், தங்களை நியமிக்கின்ற மக்களுடைய உணர்வுகளை தேவை
களை சமூக எழுச்சிகளை, நிறைவேற்றுவதற்கு அதிகாரம்
தேவைப்படுகிறது.

[பிற்பகல் 1—00]

இன்றைக்கு நம்முடைய குடியரசுச் சட்டம் உருவாக்கப்பட்டு
32 ஆண்டுகள் முடிந்துவிட்டன. இந்த 32 ஆண்டுகளுக்குப்
பிறகும் நம்முடைய நாட்டில் குறிப்பாக மத்தியில் ஒரே கட்சியின்
ஆட்சி நடைபெற்றாலும் கூட அந்த ஆட்சியினுடைய பாதை
முதலாளித்துவத்தை நிலப்பிரபுத்துவத்தைக் காப்பாற்றக்கூடிய
பாதையாக இருப்பதால் சீரான ஒழுங்கான ஒரு கொள்கை
கிடைக்காத காரணத்தால், இந்த நாட்டிலுள்ள மாநில மக்களின்
அடிப்படை உணர்ச்சிகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைமை
யினைப் பல்வேறு மாநிலங்களில் காண முடிகின்றது. நம்முடைய
நாடு ஒரு மிகப் பெரிய நாடு. இங்கே மத்திய அரசிலே இருப்ப
வர்கள் நல்ல திட்டங்களை வகுத்துத் தேவையான முறையில்
கடைப்பிடிக்காத காரணத்தால் இன்றைக்கு முரண்பாடுகள்
முட்டி மோதுகின்றன. இதை கார்ல் மாக்ஸ் அவர்கள்
The negation of negation—முரண்பட்ட சமுதாய அமைப்பு முறை
யில் முரண்பாடுகள் முட்டி மோதும் என்று சொல்வார்கள்.
அந்த அடிப்படையில் காங்கிரஸ் கட்சி ஆண்ட மாநிலமானாலும்
காங்கிரஸ் கட்சி ஆண்டுகொண்டிருக்கின்ற மாநிலங்களானாலும்
கூட திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிமைலையில் பிரச்சினை
கள் பீரிட்டு எழுந்திருக்கின்றது என்பதை நாம் பார்க்கிறோம்.
அந்த அடிப்படையிலேதான் பஞ்சாப் மாநிலத்திலே இருக்கக்
கூடிய காங்கிரஸ் கட்சியும், ஹரியானா மாநிலத்திலே இருக்கக்
கூடிய காங்கிரஸ் கட்சியும் அகில இந்திய அளவில் காங்கிரஸ்
கட்சியும் சேர்ந்து பியாஸ் நதிப் பிரச்சினையில் ஒரு தீர்வான
கொள்கையை எடுத்து அங்கே நடைமுறைப்படுத்த முடியாத
நிலைமையைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

எனவே இன்றைக்கு மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்
பதன் காரணத்தாலும், மத்திய அரசின் ஆதிக்கத்தின் காரண
மாகவும் மாநிலங்களில் நேர் எதிரான விளைவுகள் ஏற்படு
கின்றன. குறிப்பாக அஸ்ஸாமில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்
கூடிய மிகப் பெரிய பிரச்சினைக்குக் காரணம் அங்கே இதுவரை
ஆண்ட காங்கிரஸ் கட்சியும் இப்போதும் மறைமுகமாக ஆட்சி
நடத்துகின்ற காங்கிரஸ் கட்சியும் அந்த மாநில மக்களின் வளர்ச்
சிக்கு உகந்த முறையிலே காரியங்கள் செய்யாததுதான். ஆகவே
அந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத
காரணத்தால் தான் இன்றைக்கு அங்கே அன்னிய நாடு என்ற
கோஷங்கள் எழுப்பப்படக்கூடிய ஒரு அச்சமான சூழ்நிலைக்குச்
சென்று கொண்டிருக்கின்றது.



அதேபோன்று பஞ்சாப் மாநிலத்திலே கலிஸ்தான் பிரச்சினை
இன்றைக்கு கிளர்ந்து எழுந்திருக்கின்றது என்று சொன்னால்
அதற்குக் காரணம் மத்திய அரசிலே அதிகாரங்கள் குவிக்கப்
படுவதுதான். எனவே மாநிலங்களின் வளர்ச்சிக்கான திட்டங்
களை உருவாக்குவதற்குரிய சூழ்நிலையை உருவாக்காமல் இந்தப்
பிரச்சினையைத் தீர்க்க முடியாது. மாநிலங்களுக்கு அதிக
அதிகாரம் வேண்டும் என்று கோருகிறோம். மாநிலங்களில் பல்
வேறு அரசியல் கட்சிகள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிறார்
கள். அப்படிப்பட்ட கட்சிகள் எல்லாம் மாநிலங்களில் போது
மான வருவாயினைப் பெருக்கவேண்டும் என்று முற்படுகிறபோது
அவர்கள் மத்திய அரசின் அனுமதியினைக் கோருகிறார்கள்.
எனவே மாநிலங்களில் எந்தவிதமான திட்டங்களையும் உரு
வாக்க முடியவில்லை. மத்திய அரசினை எதிர்நோக்கித்தான்
எந்தத் திட்டங்களையும் உருவாக்க வேண்டிய நிலைமை இருக்
கின்றது.

அதேபோன்று வரி விதிப்பு. இன்றைக்கு மிகப் பெரிய
வருமானம் வரி விதிப்பின்மூலம் வருகின்றது. சுங்கவரி, ஏற்று
மதி வரி, வருமான வரி, தொழில் வரி போன்ற இப்படிப்பட்ட
வரிகளை வசூலிக்கின்ற அதிகாரம் எல்லாம் மத்திய அரசினிடத்
திலே குவிந்து கிடக்கின்றன. எனவே இன்றைக்கு மாநிலங்களுக்கு
இருக்கக்கூடிய இரண்டே இரண்டு வருவாய் நிலவரியும், விற்பனை
வரியும்தான். மத்திய அரசு நிதியாதாரங்களிலிருந்து மாநிலங்
களுக்குக் கொடுப்பது 20 சதவீதமாகத்தான் இருக்கின்றது.
அதனை 50 சதவீதமாக உயர்த்தினால்தான் மாநிலங்களினுடைய
நிதியாதாரத்தினைப் பெருக்க முடியும். அதேபோன்று நம்முடைய
குடியரசுச் சட்டத்தில் மூன்று வகையான அதிகாரங்கள் குறிப்
பிடப்பட்டிருக்கின்றது. மாநில அரசுக்கான பட்டியல், மத்திய
அரசுக்கான பட்டியல், இரண்டுக்கும் பொதுவான பட்டியல்
என்று மூன்று வகையில் அதிகாரங்கள் உருவாக்கப்பட்டிருக்
கின்றன. அப்படி உருவாக்கப்பட்டிருந்தாலும் கூட மாநில
அரசுக்குள்ள அதிகாரத்தில் மத்திய அரசு தலையிடுகின்ற
நிலைமையில் தொழில் வளத்தினைப் பெருக்க மாநில அரசு
முற்படுகின்றபோது பப்ளிக் இண்டரஸ்ட், அதாவது பொது நலன்
என்று கூறி அவற்றைத் தடுத்து நிறுத்தக்கூடிய அதிகாரத்தையும்
இன்றைக்கு மத்திய அரசு பெற்றிருக்கின்றது. அந்த அடிப்
படையில் இன்றைக்கு குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால்
தமிழகத்தில் இன்றைக்கு தொழில் வளம் 67-ல் இருந்ததைவிட
குறைந்துவிட்டது என்று சொல்லி இங்கே இருக்கக்கூடிய
காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் சொல்லலாம்.
அந்த அடிப்படையில் பார்க்கிறபோது நம்முடைய தமிழகம்
முன்னேறுவதற்கு உலகத்திலேயே மிகப் பெரிய ஒரு சர்வதேச
துறைமுகமாக வளர வேண்டிய ஆற்றலும் அதற்குண்டான
வாய்ப்புகளும் பெற்று இருக்கக்கூடிய தூத்துக்குடி துறைமுகம்
பல்வேறு மத்திய அரசின் திட்டங்களினால் புறக்கணிக்கப்படுவ
தால் தமிழகத்தில் இன்றைக்கு மிகப் பெரிய தொழிற்சாலைகள்

குறிப்பாக அவசரச் சட்டங்களைக் கொண்டு வரக்கூடிய காலச் சூழ்நிலை அன்னியப் படையெடுப்புகள் போன்ற நாட்டைப் பாதிக்கக்கூடிய நிலைமையைத் தவிர உள்நாட்டில் மக்கள் உரிமைகளுக்காக நல்வாழ்விற்காக உணர்வுகளை எடுத்துச் சொல்கின்ற நேரத்திலே நடத்துகின்ற போராட்டத்திற்கு விரோத மான முறையிலே அவசரச் சட்டங்களைக் கொண்டு வருவதைக் கண்டிப்பதோடு மட்டுமல்லாமல் அந்த ஷரத்துக்களை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்—எல்லாம் அரசுத் துறை அதிகாரிகள் எல்லாம்—மத்திய அரசினுடைய அதிகாரிகளாக இருந்துகொண்டு இங்கே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை, நல்லவர்களை இங்கே வைத்துக் கொள்ளவும் முடிய வில்லை. அந்த அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத் திடம் இருக்கின்றன. அதன் மூலம் மாநில அரசுக்குக் கட்டுப் படாதவர்களாக மாநில அரசினுடைய திட்டங்களுக்குக் கட்டுப் படாமல் செயல்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று மாநில அரசுகள் நிதி ஆதாரங்களைப் பெறு வதற்கு, கடன்களைப் பெறுவதற்கு, திட்டங்களை நிறைவேற்று வதற்கு மத்திய அரசினுடைய தயவைத்தான் நாட வேண்டி யிருக்கிறது. அதிகமாகக் கடன் பெறவேண்டுமென்றால் அவர் கள் நல்ல எண்ணங்கள், தயவு தாட்சண்யம் பெற்றுத்தான் பெற வேண்டிய துர்பாக்கியமான நிலை இருக்கிறது. அதைத் தான் வேஸ் அன்ட் மீன்ஸ் என்று சொல்வார்கள், வழிவகை முன் பணம் என்று சொல்வார்கள். இன்று தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய நல்வாழ்விற்கான திட்டங்களை உருவாக்க வேண்டு மென்று எண்ணினால் கூட மத்திய அரசுத் தலைவர்களை எட்டிப் பார்த்து அவர்களுக்கு விஸ்வாசமாக நடந்து கொள்கிற விதத்திலே தான் அதிகாரங்கள் இன்றைக்கு செயல் படுத்தப்படுகின்றன. அவைகளை மாற்றுகின்ற விதத்தில் மாநில அரசுகளுக்கு நிதி ஆதாரங்களைப் பெருக்கக்கூடிய முறையிலே அதிக அதிகாரங் களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குறிப்பாக தமிழக மாமன்றத்திலே அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற குரலைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கருத்தில் தி.மு.க.-வுக்கும் எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் கருத்து மாற்றம் கிடையாது. ஆனால் நான் இந்த மாமன்றத்தின் மூலமாக தி.மு.க. நண்பர் களையும் அண்ணா தி.மு.க. நண்பர்களையும் கேட்கிறேன். இ[illegible] றைக்கு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தமிழ் மக்[illegible]

வாழ வைப்பதற்காக தமிழகத்திலே தொழில் வளம் ஏற்படுவதற்காக, இந்த நாலரைக் கோடி தமிழ்மக்களும் உன்னதமான வாழ்வைப் பெறவேண்டுமென்பதற்காக, ஆதாரங்களைத் தாருங்கள் என்று கேட்கிற அதே நேரத்திலே இன்றைக்கு மத்திய அரசாங்கம் பல்வேறு மாநிலங்களுக்கும்—சுதந்திரம் பெற்று 36 ஆண்டு காலமாகியும்—குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை, குடியிருக்க மனை யில்லை, விலைவாசி ஏற்றங்கள் வேலையில்லாத் திண்டாட்டங்கள், சமூகக் கொடுமைகள் அவைகளை யெல்லாம் எதிர்த்து கருத்தாலும் கரத்தாலும் உழைக்கக் கூடிய உழைப்பாளி மக்கள் போராடுகிற போது அது தேச நலனுக்கு விரோதமான காரியம் என்று சொல்லி மத்திய அரசு, திருமதி இந்திரா காந்தி அரசாங்கம், இன்றைக்கு மிஸா என்றும் எஸ்மா என்றும் சொல்லக்கூடிய அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டு வந்தார்களே அந்த சட்டங்களை பாராளுமன்றத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஆதரிக்கலாமா அந்த நிலையை உருவாக்கலாமா என்று நான் இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக நம்முடைய இந்திய நாடு, ஒரு மாபெரும் நாடு, பல்வேறு இனங்களையும் மொழிகளையும் கொண்ட நாடு, யூனிட்டி இன் டைவர்ஸிட்டி என்று சொல்வார்கள். வேற்றுமையில் ஒற்றுமை............

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த அருமை நண்பர் நாடாளுமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் இந்திராகாங்கிரஸ் சர்க்கார் கொண்டு வந்த தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்ததாகக் குறிப்பிட்டார்கள். அந்த மசோதா விவாதத்தில் கலந்து கொண்டு மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இதை நாங்கள் ஆதரிக்க வில்லை, திரும்ப பெறவேண்டுமென்று கூறியபோது அமைச்சர் அவர்கள் நாங்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்த மாட்டோம் என்று சொல்லியபோது திரும்பவும் சொன்னார்கள், இதை ஆதரிப்பதற்கு இல்லை என்ற முடிவோடு தான் தன்னுடைய பேச்சை அவர்கள் முடித்திருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் தவறான ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அதே நேரத்தில் இந்திரா காங்கிரஸ் சர்க்காரை எதிர்க்கக் கூடிய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் இந்திரா காந்தி அம்மையார் நிறுத்திய வேட்பாளர் திரு. வி. வி. கிரியை ஆதரித்தது ஏன்?

இந்திரா காந்தி மந்திரிசபை மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்த போது உதாரணமாக அஸ்ஸாமில் அவர்கள் அமைதி காத்தது ஏன் என்பதைத் தெரிய விரும்புகிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இந்த மாமன்றத்தில் கூட பல்வேறு சட்டங்கள் வரு
கிற போது நாங்கள் எதிர்த்து சொல்கிறோம், ஒட்டெடுப்பு
நடந்தபோது, அந்த அவசர சட்டத்தின் மீது வாக்கெடுப்பு
நடந்தபோது அனைத்து எதிர்க்கட்சிகளும், திராவிட முன்னேற்றக்
கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தவிர, அனைத்து
எதிர்கட்சிகளும் வெளிநடப்பு செய்தார்கள் என்பதை மாண்புமிகு
உறுப்பினருடைய ஞாபகத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.
இதே இந்திரா காந்தி அவர்களை 1969-ம் ஆண்டு பெருந்தலைவர்
காமராஜர், அதுல்யா கோஸ், எஸ். கே. பாட்டீல், நிஜலிங்கப்பா
போன்ற அத்தனை பேரும் சேர்த்து கட்சியிலிருந்து நீக்குகிறோம்
என்று சொன்னபோது இந்திரா காந்தி அவர்களை பாராளு
மன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் ஆதரித்து நின்றது கம்
யூனிஸ்ட் கட்சி என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்
கிறேன். நாங்கள் எதிர்ப்பதும், ஆதரிப்பதும் மக்களுக்காக
தானே ஒழிய தனிப்பட்ட நபர்களுக்காகவோ. தனிப்பட்ட
பிரச்னைகளுக்கோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத்
தலைவர் அவர்களே, இங்கே போலீஸ் கமிஷனருக்கு ஊர் கடத்து
கின்ற அதிகாரம் கொடுக்கப்பட்டு, அது மாநில அளவிலே எல்லா
அதிகாரிகளுக்கும் இருக்க வேண்டுமென்று ஒரு சட்டம் வந்த
போது நாங்கள் எதிர்த்தோம். கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்
களும் எதிர்த்தார்கள். ஆனால் கம்யூனிஸ்ட் நண்பர்கள் வெளி
நடப்பு செய்தார்கள். நாங்கள் வெளிநடப்பு செய்யவில்லை;
ஆக வெளிநடப்பு செய்யாததால் இந்தச் சட்டத்தை ஆதரிப்
பதாகப் பொருள் இல்லை.

திரு. மு. அப்பாதுரை ; பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, இறுதியாக யூனிட்டி இன் டைவர்சிட்டி என்று சொல்
வார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய நாட்டில் எத்தனை
வேற்றுமைகள் இருந்தாலும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.
தேசிய உணர்வுகள் நிரம்பிய நாடு இந்திய நாடு ; அப்படிப்பட்ட
தேசிய உணர்வுகளை மதித்து ஒற்றுமையாக இருப்பது என்பது
ஒருவருக்கொருவர் அடிமையாக இருத்தல் அல்ல ; எல்லோரும்
எல்லா வளமும் பெற்று, இந்த நாடு சுபிட்சமாக இருப்பதற்கு
ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதை மீறக் கூடாது அப்படி
பட்ட ஒற்றுமை இன்றைக்கு உலகத்தில் பல தேசிய இனங்களைக்
கொண்ட சோவியத் நாடு பெற்றிருக்கிறது. மக்களுக்கு எல்லா
அதிகாரங்களையும் கொடுத்து உலகத்திற்கே ஓர் எடுத்துக்காட்
டாக விளங்குகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையைப் பெறுவதற்கு
இன்றைக்கு மத்திய சர்க்காரிடம் குவிந்து இருக்கக் கூடிய அதி
காரங்கள், மாநிலங்களுக்கு பிரித்து மக்களுக்கு கொடுக்க வேண்டு
மென்ற இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.



திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தில் பேசுகின்ற வாய்ப்பு
கிடைத்தமைக்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தக்
கொள்கையை உருவாக்கியவர் அறிஞர் அண்ணா என்றால் இதை
உயர்ந்த லட்சியமாக்கி உலவ விட்டவர் டாக்டர் கலைஞர்
அவர்கள் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாநில
சுயாட்சி குறித்து எண்ணுவதே தவறு என்று இருந்த நிலையில்
முதன்முதலாக சட்ட மன்றத்திலே நிபுணர் குழு அமைத்து அகில
இந்தியாவிற்கே, இன்னும் சொல்லப்போனால் கூட்டாட்சித் தத்து
வத்தில் அகில உலகிற்கே சிந்தனை விருந்து அளிக்கக்கூடிய ஒரு
சிறந்த படைப்பாக நிபுணர் குழு அறிக்கை திகழ்கிறது. திராவிட
முன்னேற்றக் கழகம் எழுப்பிய சிந்தனைகள் காரணமாக,
தொடர்ந்து மாநில சுயாட்சிக் கொள்கையை திராவிட முன்
னேற்றக் கழகம் தன்னுடைய ஐந்து மூல முழக்கங்களில் ஒன்றாக
வைத்து வந்திருப்பதன் காரணமாக, இன்றைக்கு மத்திய அரசே
ஒரு நிபுணர் குழு அமைக்கலாமா என்று யோசித்து வருகிற
செய்தியை நீங்கள் 5, 6 நாட்களுக்கு முன்பு பத்திரிக்கைகளில்
படித்திருக்கிறீர்கள். 'இந்து' பத்திரிக்கை செய்தி வெளியிட்டிருக்
கிறது.

The Prime Minister, Mrs. Indira Gandhi is reported to be
looking into the demand for the appointment of a Committee of
experts including some eminent jurists to go into all aspects of
Central-State relations and suggest how these links could be
strengthened within the present Constitutional framework, in the
light of the experience gained since independence.
1969 ஆம் ஆண்டு இந்த மாமன்றத்தில் கலைஞர் அவர்கள்
குரல் கொடுத்தபோது மத்தியிலே இருப்பவர்கள் அதை காதில்
போட்டுக்கொள்ளவில்லை. ஏறத்தாழ 14 ஆண்டுகள் பொறுத்து
இன்றைக்கு இதைப் பற்றி குழு அமைக்கலாமா என்று இந்திரா
காந்தி அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள், சிந்தித்துக்
கொண்டிருக்கிறார்கள் என்றால் இது திராவிட முன்னேற்றக்
கழகத்தின் மாநில சுயாட்சிக்கு, அறிஞர் அண்ணா அவர்கள் உரு
வாக்கிய கொள்கைக்கு கலைஞர் அவர்கள் உருவாக்கிய
கொள்கைக்கு கிடைத்த பெரும் வெற்றி என்பதை
தொடக்கத்தில் மகிழ்ச்சியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20)

இங்கே பேசும்பொழுது அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் வேட
சந்தூர் பாலசுப்பிரமணியன் அவர்கள் நல்ல கருத்துக்களைக்
கூறிக் கொண்டே வந்தவர், இறுதியிலே ஒன்றைச் சொன்னார்.
அவருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், கலைஞர்
அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது மாநில சுயாட்சி
தீர்மானத்தை இந்த மாமன்றத்திலே கொண்டுவந்த பொழுது
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச்

சேர்ந்த மாண்புமிகு ஆலடி அருணா அவர்களும்,
எட்மண்ட் அவர்களும் எதிர்த்துப் பேசினார்கள். மாண்புமிகு
சுயாட்சியைப் பற்றி, அண்ணா அவர்கள் ஒன்றுமே சொல்ல மாநில
வில்லையென்று சொன்னார்கள். இப்பொழுது திசை திருப்ப
வேண்டாம் என்று எங்களைப் பார்த்துச்சொல்கின்ற திரு.
வேடசந்தூர் பாலசுப்பிரமணியன் அவர்களைக் கேட்டுக் கொள்
கிறேன், அப்பொழுது திசை திருப்பியவர்கள் யார் என்பதைச்
சபைக் குறிப்பைப் படித்துப் பார்த்தால் மாண்புமிகு உறுப்
பினர் வேடசந்தூர் பாலசுப்பிரமணியன் அவர்களுக்குத் தெளி
வாகத் தெரியும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்பு
கிறேன். பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. டி. தண்டபாணி
அவர்களின் பேச்சைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு.
பாலசுப்பிரமணியன் பேசினார். நான் கூறவிரும்புகிறேன், மாநில
சுயாட்சி கேட்பது என்பது வேறு; ஆனால் ஆட்சிப்பீடம்
செய்யும் தவறுகளைக் கண்காணிப்பது என்பது வேறு. அப்படி
யானால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத் தலைவர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எதிராக மகஜரைத் தூக்கிக்
கொண்டு ஏன் டெல்லிக்கு ஓடினார் என்று நான் கேட்க
ஆசைப்படுகிறேன். தவறைச் சுட்டிக்காட்டுவது என்பது வேறு.
தத்துவத்தைப் பற்றி பேசுவது என்பது வேறு....

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாநில
சுயாட்சி என்பது வேறு, மாநிலங்களுக்கான கண்காணிப்புக்
குழுவைப் போடுவது என்பது வேறு என்று சொல்கி றார்மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள். அப்படியென்றால், 1975 ஆம் ஆண்டு
வறட்சி நிவாரணத்திற்குக் கொடுத்த தொகையை நாங்கள் கண்
காணிக்கப் போகிறோம் என்று அன்றைய நிதியமைச்சர் திரு.
சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னபொழுது எனக்கு வயிற்றை
விட மானம்தான் பெரிது, அந்த நிதியை வாங்கவேமாட்டேன்
என்று சொன்னார்களே, அப்பொழுது சொன்னதற்கும்
இப்பொழுது சொன்னதற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்
திடம் முரண்பாடு இருக்கிறதோ, அதை விளக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : அன்றைக்கு அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்
என்ன சொன்னார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பு
கிறேன்.



திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : அன்றைக்குப்
பிரிவினை அல்லது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்
வேண்டுமென்று அரசால் முன்மொழியப்பட்ட தீர்மானத்
திற்குத் திருத்த தீர்மானத்தை அன்று அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த திரு. சீனிவாசன் என்ற
உறுப்பினர் கொடுத்துப் பேசி உள்ளார். அன்று அதை முதலமைச்
சராக இருந்த கலைஞரும் பாராட்டியிருக்கிறார்கள். அதற்குத்
தான் நான் பக்கம்கூடச் சொன்னேன், வால்யூம்கூடச் சொன்
னேன். கலைஞரே பாராட்டியிருக்கிறார், எதிர்க்கட்சிகளுக்குப்
பதில் சொல்லுகிறபொழுது, திருத்தத் தீர்மானம் கொடுத்த
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே
மாநிலத்திற்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்பதை
வரவேற்கிறார்கள் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

திரு. என். வி. என். சோமு : யார் வேண்டுமானாலும்
தவறைச் சுட்டிக்காட்டலாம். தவறைச் சுட்டிக்காட்டுகின்ற
காரணத்தாலே தத்துவத்தை எதிர்க்கிறோம் என்று சொல்வது
தவறான கருத்து என்பதை நான் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்னும் சொல்லப் போனால், அதே 'இந்து' பத்திரிகை
எழுதியிருக்கிறது. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால்,
மாநில சுயாட்சி என்று இன்றைக்கு அகில உலக அளவிலே
பேசப்படுகிறது என்றால் இன்றைக்கு கே. சி. ஐயர் போன்ற
பெரும்பெரும் நல்லாசிரியர்கள், பெடரேஷன் எக்ஸ்பெர்ட்
என்று சொல்லக்கூடிய அறிஞர்கள் எல்லாம் வீசிய சிந்தனை இந்த
மாநில சுயாட்சி என்ற தீபத்தை அணையாமல் பாதுகாத்துக்
கொள்ளக்கூடிய ஒரு பேரியக்கமாக திராவிட முன்னேற்றக்
கழகம் அன்றையதினம் பணியாற்றியது. அன்று டாக்டர்
பி. வி. இராஜமன்னார், ஏ. எல். முதலியார், சந்திர ரெட்டி
போன்றவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, பெரிய
விவாத அலையை, எண்ண அலையை, சிந்தனை ஓட்டத்தை
இந்திய அரசியலிலே எழுப்பினார்கள். இன்றைக்கு மாநில சுயாட்சி
தீர்மானத்தை எல்லா தரப்பிலேயும் ஆதரிக்கிறார்கள். அன்
றைக்குக் கேலி பேசியவர்கள், ஒரு காலத்தில் திராவிட நாடு
திராவிடர்களுக்கே என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி,
அந்தத் திராவிட நாடு பிரச்சி னயிலே பல்வேறு காரணங்களைச்
சுட்டிக்காட்டிய நேரத்திலே, எல்லோரும் கேலி பேசினார்கள்.
ஆந்திரம் ஆதரித்ததா, கர்நாடகம் காது கொடுத்ததா, கேரளம்
கேட்டதா, என்று வக்கனை பேசினார்கள். ஆனால், அண்ணா
அவர்கள் ஒரு சிந்தனையின் பின்னாலே செல்பவரே தவிர, அவர்
இது போன்ற சில்லறைக் குழப்பத்திற்கு ஆளாகமாட்டார்
என்பதை மிகத் தெளிவாக, 1962–ஆம் ஆண்டு சீனா யுத்தம்

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் ஏதும் இன்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1983).

2. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண். 12/1983).

3. தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு சட்டமன்றத் (தகவின்மை தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/1983).

4. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 14/1983).

## 3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"பேரவை விதி 25 (1)-ன் கீழ், பேரவை இன்று ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் மார்ச் திங்கள் 3ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10·00 மணிக்கு கூடலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் கூட்டம் இன்று ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் 3–3–1983, வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

147. 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளைச் சேர்ந்த 7-ஆவது விதியில் சில திருத்தங்கள் செய்வது தொடர்பாக மது விலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 16–8–1982 ஆம் நாளிட்ட 616 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ், பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

148. ஒக்கியம் துரைபாக்கம் கிராமத்தைச் சேர்ந்த நி.அ.ப. எண் 209-2ஏ மற்றும் இதர நி.அ.ப. எண்களிலுள்ள சென்னை பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது தொடர்பாக வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 19–7–1982 ஆம் நாளிட்ட 635 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

149. கீழம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த நி.அ.ப. எண் 208/4, 209-1-லிருந்து 209/5ஏ வரையிலுள்ள சென்னை பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது தொடர்பாக வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 19–7–1982ஆம் நாளிட்ட 637ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

150. இசாபல்லாவரம் கிராமத்தைச் சேர்ந்த நி.அ.ப. எண் 2, 3, 4, 6/2 (பாகம்) 12/2 மற்றும் 11/2-லுள்ள சென்னை பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது தொடர்பாக வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20–7–1982 ஆம் நாளிட்ட 658 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

151. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் எட்டாம் ஆண்டறிக்கையும் கணக்குகளும், 1981–82 (தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

38. உடுக்குறியிடாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 201-லிருந்து 400 வரை).

இங்கே வந்த நேரத்திலே, திராவிட நாடு பிரச்னையைக் கை
விட்டுவிட்டேன், தேசத்தின் ஒற்றுமையை நான் பாதுகாப்
பேன், எனக்குத் தேவை தேச ஒற்றுமைதானே தவிர வேறு
பிரச்னை அல்ல என்று சொல்லி, அறிஞர் அண்ணா அவர்கள்
திராவிட நாடு பிரச்னையைக் கைவிட்டுவிட்டுப் பிறகு
சொன்னார்கள். திராவிட நாடு பிரச்னையை நான் கைவிட்டு
விட்டாலும் அதற்கான காரணங்கள் இன்னும் அப்படியே இருக்
கின்றன என்று 1962—ஆம் ஆண்டு அண்ணா அவர்கள்
சொன்னார்கள்.

இன்றைக்கு 1982ஆம் ஆண்டு நடக்கிறது. இருபதாண் )க்
காலமாகியும் இருபத்தோராண்டுக் காலமாகியும், இன்றைக்கும்
அதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்பதை
ஒப்புக்கொள்ளுகின்ற வாக்குமூலங்கள்தான் இந்தத் தீர்மானத்
தை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்
திருப்பதும், மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் ஆதரித்துப்
பேசுவதும், மாண்புமிகு உறுப்பினர் அப்பாதுரை ஆதரித்துப்
பேசுவதும் ஆகும். ஒரு காலத்திலே, திராவிட இயக்கத்திற்குச்
சொந்தமாக இருந்த இந்தக் கருத்தை இன்றையதினம் எல்லோ
ருமே ஆதரிக்கிறார்கள். ஏற்கிறார்கள் வரவேற்கிறார்கள் என்
றால் அது அண்ணாவினுடைய தனித் தன்மைக்கு அண்ணா
வைத் தொடர்ந்து பின்பற்றி வருகின்ற கலைஞருடைய தலை
மைக்குக் கிடைத்த வெற்றிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு என்
பதை இந்த நேரத்திலே நான் இங்கே குறிப்பிட்டுக் கொள்ள
விரும்புகிறேன்.

அவசரம் அவசரமாக, சென்ற வாரம் ஜி.கே. ரெட்டி என்
பவர் எழுதி இருக்கிறார். 'இந்து' பத்திரிகையிலே எழுதி
யிருக்கிறார்.

But there are differing opinions on the subject within the inner circles of the Central Government, especially on the timing of the proposed decision, because of the apprehension that the opposition parties which have been pressing for such a review would regard it as a triumph for their campaign for greater devolution of powers to the States.

இந்த மாநில சுயாட்சி குறித்து மத்திய அளவிலே
ஒரு நிபுணர் குழுவை அமைத்தால் அது எதிர்க்கட்சிகளுக்குக்
கிடைத்த வெற்றியாகிவிடும் திராவிட முன்னேற்றக் கழகம்
என்று எழுதுவதற்கு அவர்களுக்கு மனம் வரவில்லை—மத்திய
எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்துவிட்ட வெற்றியாக ஆகிவிடுமே,
ஆகவே, அதை எப்படி நாம் அனுமதிப்பது என்ற பிரச்சனையை
'இந்து' பத்திரிகையிலே எழுதுகிறார்கள்.





நான் மாண்புமிகு பிரதம அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதைப்போன்ற பிரச்சனைகளிலே நாம் நேரத்தைச் செலவிடுவதைவிட, சிந்தனையைச் செலவிடுவதைவிட, யாருக்கு வெற்றி என்று கித்தாப்பு பார்ப்பதை விட, அறிஞர் அண்ணாவுக்கு வெற்றியா, கலைஞருக்குக் கிடைத்த வெற்றியா என்று பார்ப்பதைவிட அல்லது மற்ற எதிர்க்கட்சிகளுக்குக் கிடைக்கும் வெற்றியா என்று பார்ப்பதைவிட, தேச ஒற்றுமையைத்தான் பார்க்க வேண்டும். எனவே, உடனடியாக அரசியல் சட்டத்தை நாம் திருத்தினால்தான் இது முடியும். இந்திய அரசியல் சட்டத்தைப் பல்வேறு காரணங்களுக்காக, இன்னும் சொல்லப்போனால், தேவையில்லாத காரணங்களுக்கெல்லாம் பலமுறை திருத்தியிருக்கக்கூடிய இந்திய அரசிலமைப்புச் சட்டத்தை மிக விரைவாகத் திருத்தினால் தான் நம்முடைய தேச ஒற்றுமையைக் காப்பாற்ற முடியும்.

எனக்குமுன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னதைப்போல, இன்றைக்குத் தேச ஒற்றுமையைச் சின்னாபின்னப்படுத்தக் கூடியவர்கள், சிக்கல் செய்யக் கூடியவர்கள் மாநிலங்களிலே இல்லை, மத்தியிலேதான் இருக்கிறார்கள் என்று சொன்னார்களே, அதைப் போன்ற மனப்பான்மை கொண்டவர்கள் இன்றைக்கு யாருக்கு வெற்றி ஏற்படும் மத்தியக் குழுவை அமைப்பதால் என்பதில் நேரத்தைச் செலவிடாமல், சிந்தனையைச் செலவிடாமல், நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், உடனடியாக ஒரு நிபுணர் குழுவை அமையுங்கள், ஏற்கனவே இந்தியாவில் மட்டுமல்ல, மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு உலகத்திலே எங்குமே அமைக்காத ஒரு குழுவைக் கலைஞர் அவர்கள் அமைத்தார்களே, அதைப் போன்ற ஒரு குழுவையோ அல்லது மாநிலத்திலுள்ள எல்லாப் பிரிவினர்களுக்கும் வாய்ப்பளிக்கின்ற வகையில் ஒரு குழுவையோ அமைத்து இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, 1947ஆம் ஆண்டு இந்தியா விடுதலை அடைந்தது. அவசரம் அவசரமாக .....................(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் அடுத்த தொடர் கூட்டத்திலே தனியார் தீர்மானத்தின்மீது தொடர்ந்து பேசலாம்.

## இணைப்பு

(371 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 296-க்கான விடையைக் காண்க).

### தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியத்தினரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

(1) 1974 ஆம் ஆண்டு மத்திய நீர்மாசு தடுப்புச் சட்டத்தின்
25 வது பிரிவின்படி புதிய அல்லது மாற்றம் செய்யப்பட்ட வடி
காலை, தொழிற்சாலை அல்லது பிற கழிவு நீரை வெளியேற்ற
பயன்படுத்தும் முன்னர், வாரியத்தின் முன் அனுமதி பெற வேண்
டும். சட்டத்தின் 26 வது பிரிவின்படி, தொழிற் சாலைக் கழிவு
நீர் அல்லது பிற கழிவு நீரை வெளியேற்ற தற்போது பயன்படுத்
தப்படும் வடிகால்களுக்கும் வாரியத்தின் அனுமதி பெற வேண்டும்.
அனுமதி கோரி, வாரியம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று
மாதத்திற்குள் விண்ணப்பம் செய்ய வேண்டும். மேற்கண்ட விதி
களை 13—3—1982-ல் தினத்தந்தி, தினமலர், இந்தியன் எக்ஸ்
பிரஸ் மற்றும் 17—3—1982-ல் இந்து முதலிய பத்திரிகைகளில்
வெளியிடப்பட்ட பொது அறிவிப்பு மூலம் வாரியம் அறிவித்
துள்ளது.

(2) தொழிற் சாலைகளும், உள்ளாட்சிகளும் அனுமதி பெறு
வதற்கான தனித் தனியான விண்ணப்ப படிவங்களை, வாரியம்
தயாரித்துள்ளது.

(3) தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியம்
தனது 31—3—1982 நாளைய கடிதத்தில் கழிவு நீரை அகற்று
வதற்கான வாரியத்தின் முன் அனுமதி பெறும்படி தங்கள் ஆளு
கைக்குட்பட்ட உள்ளாட்சிகளை அறிவுறுத்துமாறு எல்லா
மாவட்ட ஆட்சியாளர்களிடமும் கேட்டுக்கொண்டுள்ளது.

(4) சட்டத்தில் உள்ள விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு
தங்களது சார்நிலை அலுவலகங்களுக்கு பொருத்தமான அறி
வுரைகள் வழங்குமாறு, நகராட்சிகள் இயக்குநர், ஊரக உள்
ளாட்சித்துறை இயக்குநர், ஊராட்சி மன்ற இயக்குநர், சென்
னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலர்,
சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகளின் ஆணையாளர்கள்
ஆகியோரை தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு
வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், பெரிய தொழிற்



சாலைகளும், மாசு ஏற்பட ஆதாரமான தொழிற்சாலைகளும் தங்கள் கழிவு நீர் அகற்றுவதற்காக வாரியத்தின் அனுமதியினைப் பெறும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI), தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT), சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO), தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனம் (TAPCO), தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் ஆகியவை களின் நிர்வாக இயக்குநர்களும் சட்டத்தின் விதிகளைப்பற்றி அறிவுறுத்தப்பட்டனர்.

(5) இதுவரை, ஏற்கனவே உள்ள மற்றும் புதிதாக தொடங்க் உள்ள 970 தொழிற்சாலைகளுக்கு, அனுமதி விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் 280 தொழிற்சாலைகள் வாரியத்தின் அனுமதி கோரி விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளன. தொழிற்சாலைகள் அனுமதி விண்ணப்பத்தில் கொடுத்துள்ள தகவல்கள் தொடர்பாக சென்ற இரண்டு மாதங்களில் 30 தொழிற்சாலைகள் பார்வையிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவையில் 15—2—1983 ஆம் தேதியன்று வைக்கப்பெற்ற உடுக்குறியிடாத் வினாக்கள்—விடைகள் பட்டியலிலுள்ள அச்சுப்பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ii | 30 | திரு. தீர்த்தராமன் | திரு. ப. தீர்த்தராமன் |
| ii | 31 | திரு. பு. எஸ். துரைசாமி | திரு. பி. எஸ். துரைசாமி |
| | 22 | திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் | திரு. ப. வெங்கட்ட சுப்பிரமணியன் |
| iii | 14 | ரூ. 5,000 | ரூ. 3,000 |
| i | 18 | G. VISVANATHAN | G. VISWANATHAN |
| 1 | 19 | Minlster | Minister |
| 1 | 20 | expansion in the St te | expansion in the State |
| 1 | 34 | பக்கம் 809 | பக்கம் 100 |
| 3 | 2 | கண்கமாய்கள் | கண்மாய்கள் |
| 3 | 16 | வினா 3982 | வினா 3892 |
| 7 | 22 | Commissione | Commissioner |
| 11 | 16 | நெர்யாற்றில் | நொய்யாத்தில் |
| 15 | 2 | கிராமத்திலிள்ள | கிராமத்திலுள்ள |
| 15 | 18 | சுப்பிரம்ணியர் | சுப்பிரமணியர் |
| 15 | 19 | திரு. என். எஸ். வி. சிந்தன் | திரு. என். எஸ். வி. சித்தன் |
| 16 | 8 | எட் பகுதியில் | உட்பகுதியில் |





| | | | |
|---|---|---|---|
| 19 | 14 | திரு. பி. வெங்கடசுப்பிரமணியன் | திரு. பி. வெங்கட்டசுப்பிரம்ணியன் |
| 19 | 32 | திரு. பி. வெங்கடசுப்பிரமணியன் | திரு. பி. வெங்கட்ட சுப்பிரமணியன் |
| 22 | 21 | ஆலையத்தை | ஆலயத்தை |
| 23 | 15 | பல்லாதத்திலுள்ள | பல்லா நத்தத்திலுள்ள |
| 23 | 16 | திரு. வி. பி. பாலசிப்பிரமணியன் | திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் |
| 30 | 27 | திரு. என். எஸ். பி. சித்தன் | திரு. என். எஸ். வி. சித்தன் |
| 31 | 2 | 160 (a) | 160 (o) |
| 35 | 2 | தேர் | தேர்வு |
| 37 | 3 | குடும்பத்தினருக்கு முன்னுரிமை | குடும்பத்தினருக்கு வேலையில் முன்னுரிமை. |
| 38 | 9 | (Eucal ptas treey) | (Eucalyptus trees) |
| 38 | 28 | சென்னிமலை என்கிற பி. எஸ். கந்தடாமி. | சென்னிமலை என்கிற பி. எஸ். கந்தசாமி |
| 42 | 10 | திரு. இரா. தாமாரைக்கனி | திரு. இரா. தாமரைக்கனி |
| 42 | 23 | திரு. ச. கணேசன் | திரு. சி. கணேசன் |
| 44 | 14 | 286 | 288 |
| 45 | 23 | பொன்னாகரம் | பெண்ணாகரம் |
| 45 | 49 | பொன்னாகரம் | பெண்ணாகரம் |
| 47 | 22 | Bink os closure of brickkilns in th State ouring to shart supply of coal | Brink of closure of brickkilns in the State owing to short supply of coal |
| 48 | 8 | 245 | 295 |
| 48 | 9 | நாரிலிருந்து | நாரிலிருந்து |
| 51 | 19 | மண்டபம் ராமேஸ்வரம்த்தை | மண்டபம்—ராமேஸ்வரத்தை |
| 54 | 22 | திரு. பெ. கு. திருவேங்கடம் | திரு. பெ. சு. திருவேங்கடம் |
| 56 | 1 | 31 | 310 |

| பக்கம் (1) | வரி (2) | பிழை (3) | திருத்தம் (4) |
|---|---|---|---|
| 61 | 15 | 320 | 321 |
| 62 | 22 | 322 | 323 |
| 66 | 3 | திரு. இரா. இராசமாணிக்கம் | திரு. இரெ. இராசமாணிக்கம் |
| 66 | 6 | மேக்கரி | மேக்கிரி |
| 66 | 16 | திரு. இரா. இராசமாணிக்கம் | திரு. இரெ. இராசமாணிக்கம் |
| 72 | 30 | வினா. 11926: திரு. கா. கோபாலகிருஷ்ணன் என்பதனை சேர்த்து வாசிக்கவும். | |
| 73 | 6 | (அ) | (ஆ) |
| 73 | 8 | வரிசை எண். 345-ஐ சேர்த்து வாசிக்கவும். | |
| 73 | 9 | " கொடைக்கானல் பகுதியில் பேரி மரங்களுக்கு நோய் தடுப்பு மருந்து அடிக்கும் திட்டம் " என்ற தலைப்பினை சேர்த்து வாசிக்கவும். | |
| 73 | 11 | வினா 11927—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா என்பதனைச் சேர்த்து வாசிக்கவும். | |
| 74 | 19 | திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொர்ணம். | திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம். |
| 75 | 24 | வரிசை எண் 350 என்பதனை சேர்த்து வாசிக்கவும். | |
| 76 | 6 | வினா 122205 | வினா 12205 |
| 78 | 3 | திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் | திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் |
| 78 | 21 | பெண்றையாற்றில் சாத்தூர் அறைண | பெண்ணையாற்றில் சாத்தனூர் அணை |
| 85 | 15 | உரிலையாளர்கள் | உரிமையாளர்கள் |
| 85 | 20 | செங்கல்பட்டு மாவட்டத்துல் | செங்கல்பட்டு மாவட்டத்தில் |
| 86 | 2 | மருத்துவ தொடங்குதல் | மருத்துவமனை தொடங்குதல் |





| | | | |
|---|---|---|---|
| 87 | 21 | உருமகாலத்தை | உரிமகாலத்தை |
| 89 | 20 | குடுமியர்ன்மலையில் | குடுமியான் மலையில் |
| 89 | 23 | திரு. இரா. தாமரைப்க்கினி | திரு. இரா. தாமரைக்கனி |
| 91 | 19 | "Scheme for giving incentives and awards to the best maintained wards in the Hospitals தலைப்பினை சேர்த்து வாசிக்கவும். | |
| 91 | 21 | வினா எண். 13232-ஐ சேர்த்து வாசிக்கவும். | |
| 91 | 23 | (a) Whether the Government have any scheme to give incentives and awards to the best maintained wards in rhe Hospital under the District Medical Officer. | (a) Whether the Government have any scheme to give incentives and awards to the best maintained wards in the Hospitals under the District Medical Officer. |
| 91 | 30 | சேத்துயாதோப்பு | சேத்தியாதோப்பு |
| 92 | 2 | நிர்பாசனத் | நீர்ப்பாசனத் |
| 92 | 3 | கிளைவு கால்வாய் | கிளைக்கால்வாய் |
| 94 | 2 | குசமுத்தரத்தில் | அழகு சமுத்திரத்தில் |
| 95 | 7 | கொல்லிமாலயில் | கொல்லிமலையில் |
| 95 | 16 | 319 | 391 |
| 95 | 17 | இராகிபுரம் | இராசிபுரம் |
| 96 | 3 | திரு. வி. பி. ாபலசுப்பிரமணியன் | திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் |
| 96 | 25 | மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர். | மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர். |
| 98 | 10 | 397 | 398 |
| 99 | 18 | விபனா 13981 திரு. அண்ண தாசன் | வினா 13981 திரு. எம். அண்ணா தாசன் |
| 113 | 2 | திரு. சின்னசாமி | திரு. எம். சின்னசாமி |

மேற்குறிப்பிட்டுள்ள பட்டியலிலுள்ள வரிசை எண்கள் : 218 221 281 302 332 ஆகியவைகளுக்கான வினாக்கள் விடைகளுக்கான பகுதிகளை நீக்கி வாசிக்கவும்.

சட்டமன்றப் பேரவை நூலகம் சென்னை-600 009
13598
D
1811, 31 N83
N83-42-3 F4